# ஏழாலைக் கிராமத்தின் நவமணிகள்

## ஏழாலைத்தாய் பெற்றெடுத்த ஒன்பதின்மரின் வாழ்க்கை வரலாறும் சாதனைகளும்



ஆக்கம்:-
மு.இந்திராணி

2012

3A - 12

# ஏழாலைக் கிராமத்தின் நவமணிகள்

## ஏழாலைத்தாய் பெற்றெடுத்த ஒன்பதின்மரின்
## வாழ்க்கை வரலாறும்
## சாதனைகளும்

ஆக்கம் : மு.இந்திராணி

வெளியிடுவோர் :-
ஆத்மஜோதி தியானமணி மண்டபம்,
ஏழாலை.
தொ.பே : 077 8923469

கருணாகரன் என்னும் நாமத்தோடு உறைகின்ற ஐங்கரனே
கருணை பொழிந்து அடியவரைக் காக்கும் கணபதியே
அருணோதயத்தின் முன் அதிகாலைப் பூசை கொள்பவனே
தருணமிதில் உன் பக்தர்களை இரட்சித்து அருள்வாயே.

விலை :- 500/=

# முகவுரை

உங்கள் கரங்களை அலங்கரிப்பது "ஏழாலைக் கிராமத்தின் நவமணிகள்" என்னும் நன்னூல். அந்நூலை ஆக்கியவர் திருமதி.மு.இந்திராணி என்பவர்.

திருமதி.இந்திராணி இதுபோன்ற பல நூல்களைப் படைத்தவர். எழுத்தாற்ற லில் அனுபவம் பெற்றவர்.

வீரகேசரி, தினகரன் போன்ற பிரபல்யமான பத்திரிகை வார இதழ்களில் எத்தனையோ சிறுகதைகளைச் சிருட்டித்தவர்.

சிறுகதைக் கற்பனை உலகத்தில் சஞ்சரித்த இந்திராணியினுடைய புந்தி மெய் உலகத்தில் சஞ்சரித்ததன் விளைவினால் வெளிவருவது "ஏழாலைக் கிராமத்தின் நவமணிகள்" என்னும் விவரண நூல்.

இந்நூலில் ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒன்பதின்மர்களைப் பொறுக்கி எடுத்து அவர்களுக்கு "மணிகள்" என்று மகுடம் புனைந்துள்ளார்.

இராவ்பகதூர் சி.வை.தாமோதரம்பிள்ளை, சித்தாந்தப் பேரறிஞர் ஐயம்பிள்ளை பொன்னையா, சித்த வைத்தியப் பேரறிஞர் ஐயம்பிள்ளை பேரம்பலம், ஆசிரியமணி சி.முருகேசு உபாத்தியாயர், சித்தாந்த வித்தகர் மு.ஞானப்பிரகாசம், நவீன இலக்கிய முன்னோடி சி.வைத்திலிங்கம், ஆக்க இலக்கிய கர்த்தா இலங்கையர்கோன், இலக்கிய கலாநிதி மு.கந்தையா ஆத்மஜோதி நா.முத்தையா என்பவர்கள் அந்த ஒன்பதின்மர்கள்.

மேலே கூறப்பட்ட சிந்தனையாளர்கள் மாத்திரம் அல்லாமல் ஏழாலையில் குளிக்கும் போது இன்னும் பல நவமணிகள் சிந்திப்பார் அவர் சிந்தையில் சிக்குண்ணலாம்.

அவற்றுக்கு ஏழாலைக் கிராமத்தின் நவமணிகள் முன்னோடியாக வழி விளக்காகத் திறவுகோலாக அடைபட்ட மதிலுக்குத் திறந்த வாயிலாக அமையும் என்பதில் ஐயமின்று.

தமிழ் மக்கள் இந்நூலை ஆதரிப்பதன் மூலம் திருமதி.மு.இந்திராணி அவர்களுடைய சிந்தனைக் கருவூலம் தொடர்ந்து சிறப்பதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் பெருமைக்குரியவராவீர்கள் என்பது நிச்சயம்.

**வாழ்க தமிழ்மொழி**
**வளர்ப்பவர் வாழியவே**

**ஏழாலை மேற்கு, சுன்னாகம்.** — **இவ்வண்ணம்**
**05.06.2012** — **சிவ.சண்முகவடிவேல்**

# முன்னுரை

"ஏழாலைக் கிராமத்தின் நவமணிகள்" என்ற இந்நூலில் இடம்பெறுகின்ற நவமணிகளை ஆத்மஜோதி நா.முத்தையா அவர்களின் "ஏழாலை" என்ற நூலில் தான் கண்டெடுத்தேன். 1977ஆம் ஆண்டு "ஏழாலை"யின் முதற்பதிப்பு வெளியான காலத்திலேயே எமது கிராமம் பெற்றெடுத்த இந்த மாமணிகளைப்பற்றி வாசித்து அறிந்து கொண்டேன். "ஏழாலை" என்ற நூலில் அவர்களைப் பற்றிய விபரங்கள் சுருக்கமாகவே எழுதப்பட்டிருந்தன.

அதற்குப் பின்னர், அதிஷ்டவசமாக, ஏழாலைக் கிராமத்தின் இந்த மாமணி களில் பலரையும் தரிசிக்கும் சந்தர்ப்பங்களும், அவர்களது சாதனைகளையும், பணிகளையும் நேரில் காணும் வாய்ப்புக்களும், அவர்களது வாழ்வியலையும், திறமைகளையும் அறிந்து வியக்கக்கூடிய தருணங்களும் எனக்குக் கிடைத்தன.

அதன் காரணமாக, அப்பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகளையும் அவர்களுடைய சேவைகளையும், வியத்தகு திறமைகளையும் விரிவாக எழுத வேண்டுமென்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது.

எனது எண்ணம் செயற்பட ஊக்கம் தந்தவர் எனது நெருங்கிய உறவினரும் பல நூற்பதிப்புக்களை வெற்றிகரமாகச் செய்தவருமான நாகலிங்கம் முருகையா அவர்களாவார்.

ஏழாலைக் கிராமத்திலே பெரியோர்கள், சாதனையாளர்கள் என்ற வரிசையிலே பலர் இருக்கின்றார்கள். ஆயினும், ஏழாலை என்னும் நூலிலே நான் கண்ட இந்த நவமணிகளை நான் நன்கு அறியக்கூடியதாக இருந்தது. அதனால் இவர்களே என் நூலின் நவமணிகள் ஆகின்றார்கள்.

இந்த நூலின் முதல் மணியாக இடம்பெறும் சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களைப் பற்றி நாலாம் ஐந்தாம் வகுப்புக்களில் பாடப்புத்தகத்திற் படித்திருக்கிறேன். இவ் வருட ஆரம்பத்தில் வெளியீடு செய்யப்பட்ட சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களின் செந்தமிழ்ப்பணிகள்" என்ற நூலிலிருந்தும் பல தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

சித்தாந்தப் பேரறிஞர் ஐ.பொன்னையா அவர்கள், சித்த வைத்தியப் பேரறிஞர் ஐ.பேரம்பலம் அவர்கள், ஆசிரியமணி சி.முருகேசு உபாத்தியாயர் அவர்கள், சித்தாந்த வித்தகர் மு.ஞானப்பிரகாசம் அவர்கள், ஆத்மஜோதி நா.முத்தையா அவர்கள் ஆகியோர் எனது உறவினர்களாக இருப்பதால் அவர்களைப் பற்றிய விபரங்கள், தகவல்களை அவ்வப்போது அறிந்து சேகரித்து வைத்திருந்தேன்.

சிறுகதை இலக்கிய ஆக்கப்படைப்புகளில் நானும் ஈடுபட்டிருப்பதால் ஈழத்துச் சிறுகதை இலக்கிய முன்னோடிகளான சி.வைத்திலிங்கம் அவர்கள், இலங்கையர்கோன் அவர்கள் ஆகியோரின் இலக்கியப் படைப்பு விபரங்களும் ஏற்கெனவே சேகரித்திருந்தேன்.

இலக்கிய கலாநிதி பண்டிதர் மு.கந்தையா அவர்கள் எனக்கு அயல் வீட்டுக்காரராக இருந்ததால் அவரது ஆக்க இலக்கியப் பணிகள் பற்றி நேரிலேயே கேட்டுத் தொகுத்து வைத்திருந்தேன்.

ஏழாலையின் பெருமைக்குரிய நவமணிகளை அவர்கள் பிறந்த ஆண்டின் ஒழுங்கில் வரிசைப்படுத்தி எழுதியிருக்கிறேன்.

சிறுகதை முன்னோடிகளில் முதலாமவரின் பெயர் வைத்திலிங்கமா, வைத்தியலிங்கமா என்ற சர்ச்சை இருந்தது. அவரது மனைவியார் அவரைப்பற்றி எழுதும் கட்டுரைகளில் வைத்திலிங்கம் என்றே குறிப்பிட்டு எழுதுவார். எனவே, நானும் அவரது பெயரை வைத்திலிங்கம் என்றே எழுதியிருக்கிறேன்.

இலங்கையர்கோன் பற்றிய பல விபரங்களை அறியக்கூடிய நூல்களைத் தந்துதவிய சித்திவிநாயகர் நூல் நிலையத்தவர்க்கு என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலினைப் பதிப்பித்த நாகலிங்கம் முருகையா அவர்களுக்கும், அழகாக அச்சிட்டு உதவிய சிவரஞ்சனம் ஓவ்செற் அச்சகத்தாருக்கும், இந்நூலுக்கு ஆதரவு வழங்கிய அன்பு நெஞ்சங்களுக்கும் எனது நன்றிகள்.

முகவுரை தந்த கலாபூஷணம் சிவ.சண்முகவடிவேல் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

**நன்றி.**

**இவ்வண்ணம்**
**மு.இந்திராணி**

**ஏழாலை மேற்கு,**
**சுன்னாகம்.**
**24.08.2012**

# பதிப்புரை

ஏழாலை பெற்றெடுத்த நவமணிகளை மு.இந்திராணி அவர்கள் தேடி எடுத்து அவர்கள் இல்லாவிட்டாலும் அவர்கள் செய்த தொண்டையும் அவர்களுடைய சேவையையும் சுருக்கமாக வெளியிட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பெரியோர்களை வருங்கால மாணவ சமுதாயமும் ஆசிரிய சமுதாயமும் அறியவேண்டும். இப்படிப்பட்ட நூல்கள் ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டும். அவர்களுடைய உயிர் மறைந்தாலும் அவர்களுடைய புகழ் வளர்ந்து கொண்டே இருக்கிறது.

ஒவ்வொருவரும் நூலை வாங்கி எழுத்தாளரை ஊக்குவிக்கும் முகமாக நீங்கள் கொடுக்கும் பணம் பெரிதல்ல. அவர் எழுதிய நூல் பொன்னை விட பெறுமதியானதாகும்.

**அன்பே சிவம்**

**சிவதொண்டன்**
**நா.முருகையா**

# பொருளடக்கம்


நவமணிகள் 01

நவமணிகளைப் பெற்றெடுத்த ஏழாலை 02

இராவ்பகதூர் சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்கள் 03

சித்தாந்த பேரறிஞர் ஐயம்பிள்ளை பொன்னையா அவர்கள் 17

சித்தவைத்திய மூதறிஞர் ஐ.பேரம்பலம் அவர்கள் 31

திரு.சி.முருகேசு உபாத்தியாயர் 45

சித்தாந்த வித்தகர் மு.ஞானப்பிரகாசம் அவர்கள் 63

ஈழத்துச் சிறுகதை முன்னோடி சி.வைத்திலிங்கம் அவர்கள் 81

ஈழுத்து தமிழ்ச் சிறுகதை மூலவர், ஆக்க இலக்கிய கர்த்தா
இலங்கையர்கோன் அவர்கள் 95

இலக்கிய கலாநிதி பண்டிதர் மு.கந்தையா அவர்கள் 109

ஆத்மஜோதி நா.முத்தையா அவர்கள் 125

# நவமணிகள்

"நவ" என்பது ஒன்பது என்ற எண்ணைக் குறிக்கும். நவரசங்கள், நவக்கிரகங்கள், நவதானியங்கள், நவரத்தினங்கள் இந்த வரிசையிலே, எமது ஊரில் பிறந்து, அறிவொளி வீசும் அற்புத மணிகளாகத் திகழ்ந்து அரும்பெரும் பணிகள் செய்த ஒன்பது பேரை "நவமணிகள்" என்று குறிப்பிடுகிறோம்.

"தோன்றிற் புகழோடு தோன்றுக" இது ஆன்றோர் வாக்கு. இத்தொடரானது, இந்தப் பூமியில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் செயற்கரும் செயல்களைச் செய்து செம்மையாக வாழ்ந்து புகழடைய வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. ஆயினும் அத்தகையதொரு நிலையை அடைவதற்கான வாய்ப்பும், தகுதியும் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. ஒரு சிலரே தோன்றிற் புகழோடு தோன்றுக என்ற தொடருக்கு இலக்கணமாக வாழ்கிறார்கள். இத்தகையவர்கள் பலர் எம்மூரில் இருந்திருக்கிறார்கள்.

வைத்தியத்துறையில் மிகப்பிரபலமாகிப் பெயர் பெற்றவர்கள், ஆன்மீகத் துறையில் அரியபணிகள் செய்து சமயம் வளர்த்தவர்கள் இலக்கியத்துறையில் எழுத்துப்பணியால் சாதனை புரிந்தவர்கள், கல்வித்துறையில் பெரும்சேவை செய்தவர்கள், தமிழ்மொழிக்குத் தம்மை அர்ப்பணித்துப் பணியாற்றியவர்கள் என்று பற்பலதுறைகளிலும் புகழ்பெற்றவர்களில் முதன்மை நிலையில் இருக்கும் ஒன்பது பேர் நவமணிகள் ஆவர்.

**ஏழ்தலப் பெருமைகொண்ட ஏழாலைக் கிராமத்தின் நவமணிகள் இவர்கள் :-**

| | |
|---|---|
| *இராவ்பகதூர் சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்கள்* | *(1832 – 1901)* |
| *சித்தாந்தப் பேரறிஞர் ஐயம்பிள்ளை பொன்னையா அவர்கள்* | *(1867 – 1948)* |
| *சித்த வைத்தியப் பேரறிஞர் ஐயம்பிள்ளை பேரம்பலம் அவர்கள்* | *(1889 – 1990)* |
| *ஆசிரியமணி முருகேசு உபாத்தியாயர் அவர்கள்* | *(1891 – 1981)* |
| *சித்தாந்த வித்தகர் மு.ஞானப்பிரகாசம் அவர்கள்* | *(1911 – 1996)* |
| *நவீன இலக்கிய முன்னோடி சி.வைத்திலிங்கம் அவர்கள்* | *(1911 – 1991)* |
| *ஆக்க இலக்கிய கர்த்தா இலங்கையர்கோன் அவர்கள்* | *(1915 – 1961)* |
| *இலக்கிய கலாநிதி மு.கந்தையா அவர்கள்* | *(1917 – 2001)* |
| *ஆத்மஜோதி நா.முத்தையா அவர்கள்* | *(1918 – 1995)* |

“இந்துமா ஆழியில் இலங்குகின்ற முத்தென வந்துபோன வெள்ளையர் வாழ்த்தி நின்ற தீவடா” மதிப்பிற்குரிய இந்த விமர்சனத்தைப் பெற்றிருந்தது எமது தாய் நாடான இலங்கைத் தீவு. முத்து என்பது விலைமதிக்க முடியாத அற்புதப் பொருள். அப்பொருளாக எமது நாடு வர்ணிக்கப்பட்டது சிறப்புக்குரிய விஷயமாகும்.

மலைகளும், அருவிகளும், ஆறுகளும் கொண்ட இயற்கை அழகும், தேயிலை, இறப்பர், தென்னை முதலான பெருந்தோட்டங்களின் பசுமையும், இதமான சுவாத்தியமும் எமது நாட்டிற்குக் கிடைத்த கொடையாகும். இத்தகைய பெருமையும், சிறப்பும்மிக்க எமது இலங்கைத் திருநாட்டின் வடபால் அமைந்திருப் பது தமிழ் மணம் கமழும் யாழ்ப்பாணக் குடாநாடு. எண்சாண் உடம்புக்குத் தலையே பிரதானம் என்பர். எமது தாய்நாட்டின் தலையாக விளங்கும் பெருமையைப் பெற்ற யாழ்ப்பாணம் தமிழ் பண்பாடுகளையும், பாரம்பரியங் களையும், கலாச்சார விழுமியங்களையும் தன்னகத்தே கொண்டது.

இனிமையாக யாழ் என்னும் இசைக்கருவியை மீட்டியதற்காகப் பரிசாகப் பெற்றுக்கொண்ட இடமாதலால் யாழ்ப்பாணம் என்று பெயர்பெற்ற இந்த மண்ணின் பிரசித்தி பெற்ற கிராமங்களில் ஒன்றாக விளங்குவது ஏழாலைக் கிராமம்.

ஆன்மா இறைவனுடன் லயப்பட்டு நிற்றல் என்னும் கருத்தினைக் காட்டும் ஆலயம் என்ற வார்த்தை இக்கிராமத்தின் பெயருக்குள் அடங்கி இருக்கிறது. எல்லா ஊர்களிலும் ஆலயங்கள் இருக்கின்றன. ஆயினும், இந்த ஊரின் பெயரில் ஆலயம் இணைந்திருப்பதற்கு ஒரு சிறப்புக் காரணமுண்டு. அதாவது ஏழு ஆலயங்கள் ஒரே இடத்தில் அடுத்தடுத்து அமைந்திருக்கின்ற சிறப்பு. அதன் காரணமாகத்தான் ஏழு + ஆலயம் = ஏழாலயம் என்று பெயர் பெற்று பின்னர் ஏழாலை என்று மருவிற்று.

இந்த ஏழு ஆலயங்களை விட, ஊர் முழுவதும் உலாவிப் பார்த்தால் முப்பதுக்கு மேற்பட்ட ஆலயங்களைக் காணலாம். இந்த ஆலயங்களில் நடைபெறும் நியமமான பூசை வழிபாடுகளும் இவ்வாலயங்களின் வளர்ச்சியும் இந்த ஊர் மக்களின் பக்திப் பெருக்கையும் ஆன்மீக நாட்டத்தையும் பறைசாற்று கின்றன. வலிகாமம் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என அமைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணப் பிரதேசத்தின் நிர்வாகப் பகுதிகளுக்குள் வலிகாமம் தெற்கு என்ற

பிரிவில் காணப்படுவது ஏழாலை. இக்கிராமமானது பதினைந்து சதுர மைல் பரப்பையும், பத்தொன்பது வட்டாரப் பிரிவுகளையும் கொண்டது. வடக்கே கட்டுவனையும், கிழக்கே புன்னாலைக்கட்டுவனையும், தெற்கே சுன்னாகத்தை யும், மேற்கே மல்லாகத்தையும் எல்லைக் கிராமங்களாகக் கொண்டுள்ளது. பேரூந்து செல்லும் இரு பெருந்தெருக்களை உள்ளடக்கியுள்ளது.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்ற மகாகவியின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் வாழ்பவர்கள் இவ்வூர் மக்கள். இங்கே கைத்தொழிலும், கமத்தொழிலும் மிக உயர்ந்த நிலையில் பேணப்பட்டு வருகின்றன. கைத்தொழில்களாக தச்சுவேலை, இரும்புவேலை, நெசவு, பன்ன வேலை முதலான தொழில்கள் நடைபெற்று வருகின்றன. இத்தொழில்களினால் இங்கு உருவாகும் பொருட்களுக்கு உள்ளூரிலும், வெளியூர்களிலும் மிகுந்த மதிப்பு உண்டு.

ஏழாலையில் உழவுத் தொழிலும் மிக உன்னதமான நிலையில் இருக்கிறது. அதற்குக் காரணம் கூறுவதென்றால் இந்த மண்ணின் வளம், வற்றாத நீரூற்று, மக்களுக்கு வேளாண்மையிலுள்ள பற்று, திறமை முதலானவற்றைக் குறிப்பிட லாம். இந்த மண்ணில் பயிரிட்டு அறுவடை செய்த விளைபொருட்கள் யாவும் தரமும், சுவையும் கூடியவை என்று வெளியூர் பாவனையாளர்களால் பாராட்டப் பட்டவை. அந்தச் சிறப்புக்கு மண்ணின் தன்மை மட்டுமன்றி நீரின் வளமும் ஒரு காரணமேயாகும்.

ஏழாலைக் கிராமத்தின் மத்தியிலே இயற்கைக் காட்சிகளுக்கு மெருகூட்டும் வகையில் மருத மரங்களுக்கு மத்தியிலே குளம் ஒன்று இருக்கிறது. அந்தக் குளத்தின் நீரிலும் பார்க்க இங்கே கிணற்று நீரின் பாவனையே கூடுதலாக இருக்கிறது. இவ்வூரிலுள்ள கிணறுகளில் சுரக்கும் நீரை வேற்று ஊரவர்கள் அருந்தும்போது இதனை அமுதபானம் என்று பாராட்டுவார்கள். அவ்வளவு சுவையாக இருக்கும். சுவை மட்டுமன்றி அள்ள அள்ளக் குறையாது நீர் சுரந்து கொண்டேயிருக்கும்.

தற்காலத்தில் ஒவ்வொரு வீட்டுக்கு ஒவ்வொரு கிணறு என்று அமைந்துள் ளது. பதினைந்து, இருபது வருடங்களுக்கு முன் ஒரு குறிச்சியில் ஒரு கிணறு தான் இருக்கும். சுற்றாடலில் இருக்கும் பல குடும்பத்தவர்க்கு அந்தக் கிணறு பங்காக இருக்கும். எத்தனைபேர் தம் தேவைக்காக நீர் எடுத்தாலும் குறைந்து போகாமல் ஊற்றிலிருந்து நீர் சுரந்து கொண்டேயிருக்கும். அத்தகைய நீர்வளம் கொண்டது ஏழாலை.

தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத்தூறும் அறிவு

என்ற திருவள்ளுவனாரின் பொய்யாமொழிக்கிணங்க ஏழாலையில் நன்னீர் ஊறிக் கொண்டிருக்கும் கிணறுகள் இருப்பதைப்போல மெய்ஞானமும், நுண்ணறிவும் பெருகும் கற்றுணர்ந்தோர் பலர் இருந்திருக்கின்றார்கள். பள்ளிக்கூடங்கள் முறைப்படி தோன்றியிராத அந்த பழைய காலத்தில், ஆங்காங்கே அருமையாக அமைந்திருக்கும் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் கல்வி கற்றோ அல்லது ஒரு குருவை நாடிச்சென்று குருகுலவாசம் என்ற முறையில் கற்றோ, அல்லது தம் தந்தையாரிடத்திலேயே கற்கக் கூடியதெல்லாம் கற்றோ மெய்யறிவும் கல்வி ஞானமும் சுடர்விடும் பேரறிஞர்கள் பலர் இவ்வூரில் வாழ்ந்திருக்கிறார்கள்.

பரம்பரை பரம்பரையாக வழிவழியாக வைத்தியமுறைகளைக் கற்று தலை சிறந்த சித்தவைத்திய நிபுணர்களாக விளங்கியிருக்கிறார்கள். குருவின் வழிகாட்ட லினூடாக குரு, சீடன் என்ற வழிமுறையில் ஞானம் பெற்று சமய உண்மைகளை உணர்ந்த சித்தாந்த சாகரங்களாக விளங்கியிருக்கிறார்கள்.

மேலும், பன்மொழிகளிற் பாண்டித்தியம் பெற்ற பன்மொழிப் புலவர்களாக, காவியம் படைப்போராக, கலாவித்தகர்களாக, அறியாமை இருள் நீக்கி அறிவு வொளி பரப்பும் நல்லாசிரியர்களாக, பண்டிதர்களாக, வித்துவான்களாக, கலை விஞ்ஞானப் பட்டதாரிகளாக, பேராசிரியர்களாக, கணித மேதைகளாகத் திகழ்ந் திருக்கிறார்கள்.

அரிதாகக் கிடைத்த மானுட வாழ்க்கையை எப்படி வாழவேண்டுமென்று அறியாத பாமர மக்களுக்கு இப்படித்தான் வாழவேண்டுமென்று வாழ்ந்துகாட்டி வழிகாட்டிகளாய் விளங்கிய சைவச்சான்றோர் பலர் இருந்திருக்கிறார்கள். அத்தகைய மாமனிதர்களை நாம் நினைவு கூருதல் வருங்கால சமுதாயம் வளம்பெற ஓர் ஏதுவாக இருக்கும். அந்த வகையில், ஏழாலையின் முதல் மைந்தன் என்று போற்றப்படும் சி.வை.தமோதரம்பிள்ளை அவர்களின் ஏற்றமிகு பணிகளை முதலில் ஆராய்வோம்.



இராவ் பகதூர்
சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்கள்

இயற்கை எழில்மிக்க ஏழாலை எனும் ஊரானது அதன் விசாலமான பரப்பளவு காரணமாக வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என நான்கு பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. பயிர்கள் பச்சைப்பசேல் என்று வளரக்கூடிய செக்கச்செவேல் என்ற சிவந்த மண்ணும் குறையாத நீர் வளமும் கொண்டது வடக்குப்பகுதி. இப்பகுதி யிலே, இற்றைக்கு நூற்றெண்பது வருடங்களுக்கு முன் நிலச்சுவாந்தாரும் கல்வி மானுமாக புகழ்பெற்றிருந்த மயில்வாகனன் தம் மனைவியுடன் வாழ்ந்து வந்தார். அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு பெருந்தேவி என்று பெயர் சூட்டினர். ஓர் அரசகுமாரிக்கு பெருந்தேவி என்று பெயர் இருந்ததாக நன்னூலில் காணக்கூடியதாக இருக்கிறது. மயில்வாகனரும் தம் குழந்தைக்கு பெருந்தேவி என்று பெயர் சூட்டி அரசகுமாரி போல் வளர்த்து படிக்கவும் வைத்தார்.

பெருந்தேவி மணப்பருவம் எய்தினார். யாழ்ப்பாணத்தின் சிறுப்பிட்டி என்ற ஊரைச் சேர்ந்த மாப்பாணமுதலி என்பவரின் பரம்பரையைச் சேர்ந்த குருநாதர் வைரவநாதபிள்ளை அவர்களுக்கு பெருந்தேவியை மணம் பேசி வந்தனர்.

தமிழை நன்கு கற்றுப் பாண்டித்தியம் பெற்று வித்தியாசிரியத் தொழில் செய்து வந்த வைரவநாதப்பிள்ளையவர்கள் படித்த பெண்ணே தமக்கு மனையாளாக வரவேண்டுமென்ற விருப்பத்தில், அந்தக் காலத்திலேயே படித்த பெண்ணாக விளங்கிய பெருந்தேவியைப் பெண்கேட்டு வந்து திருமணம் செய்துகொண்டார்.

இவர்களது இல்லறம் என்னும் பூங்காவில் ஏழு ஆண்பிள்ளைகள் பிறந்தனர். அவர்களில் மூத்தவரே தாமோதரம்பிள்ளை ஆவார். தாமோதரம்பிள்ளை 1832ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி பிறந்தார். முதலாவது பிள்ளையாதலால் சீரும் சிறப்புமாக வளர்க்கப்பட்டார். உரிய வயதில் தந்தையாரே இவருக்கு வித்தியாரம்பம் செய்து, வாக்குண்டாம், நன்னெறி, மூதுரை முதலிய நூல்களைக் கற்பித்தார். எண்ணும் எழுத்தும் கற்பதற்காக ஏழாலையின் தெற்குப் பிரதேசத்தில் மயிலங்காடு என்னும் பகுதியில் இயங்கிக் கொண்டிருந்த திண்ணைப்பள்ளியிலே சேர்க்கப்பட்டார். திண்ணைப்பள்ளியின் ஆசிரியரான பண்டிதர் நீலயினார் என்னும் சட்டம்பியார் இறைபக்தியும், சைவஞானமும் உடையவராக விளங்கிய தால் அவரிடம் கல்வி கற்ற தாமோதரம்பிள்ளையும் சைவப்பற்றும் சமய ஞானமும் உள்ளவராகத் திகழ்ந்தார்.

**உயர்கல்வி**

தமிழ்க் கல்வியிலே சிறந்த முறையில் பாண்டித்தியம் பெறவேண்டுமென்ற ஆர்வத்தில், தன் பெற்றோரின் வழிகாட்டலுக்கமைய சிறந்த வித்துவான்களில் ஒருவரான சுன்னாகம் முத்துக்குமார கவிராயரை நாடிச்சென்று அவரிடம்

நைடதம், இராமாயணம், பாரதம், கந்தபுராணம் முதலிய அரிய நூல்களைக் கற்றும், இலக்கணப் பயிற்சி பெற்றும் வந்தார். வரதராச பண்டிதரிடமும் இலக்கண, இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார்.

தமிழ்க் கல்வியில் புலமைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் ஆங்கிலம் கற்கவேண்டுமென்ற விருப்பம் தாமோதரம்பிள்ளைக்கு ஏற்பட்டது. பாரதியாரின் கூற்றுக்கிணங்க, பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் கற்கவேண்டுமென்ற ஆர்வத்தில் ஏழாலைக்கு அண்மையிலுள்ள ஊரான தெல்லிப்பளையிலுள்ள அமெரிக்கமிஷன் பாடசாலையில் சேர்ந்து ஆங்கிலம் கற்றார்.

பின்னர் உயர்தரக்கல்வி கற்பதற்காக வட்டுக்கோட்டை ஆங்கிலக் கல்லூரியில் சேர்க்கப்பட்டார். அப்போது அவருக்கு வயது பன்னிரண்டு. கல்லூரியில் சேர்க்கப்பட்ட காலம் 1844ஆம் ஆண்டு அக்டோபர் மாதம். அங்கே அவர் ஒரு நிமிடத்தையும் வீணாக்காது கண்ணும் கருத்துமாய்க் கற்று வந்தார். கல்லூரிப் பரீட்சைகளில் அவர் கணித சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம், ஆங்கிலம் முதலிய பாடங்களில் முதன்மைச் சித்திபெற்று பாராட்டுகளும் பரிசில்களும் பெற்றார். கல்லூரியில் இவருக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர்கள் நெவின்ஸ்கறல் விசுவநாதபிள்ளை, வித்துவான் கதிரவேற்பிள்ளை ஆகியோர். நெவின்ஸ் ஆசிரியர் தாமோதரம்பிள்ளையின் தமிழ்ப்பாண்டித்தியத்தைப் பெரிதும் புகழ்ந்து, பண்டிதன் என்னும் பட்டம் சூட்டி, "இவரால் தமிழ்ப்பாஷை பெருமையடையும்" என்று தீர்க்க தரிசனமாகக் கூறினார். அவருடைய திருவாக்கின்படி தாமோதரம்பிள்ளையால் தமிழ் மிக மிகப் பெருமையடைந்தது சிறப்புற்றது என்பதை யாவரும் அறிவர்.

எட்டு வருடங்கள் வட்டுக்கோட்டை ஆங்கிலக் கல்லூரியில் கல்வி பயின்று 1852ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 23ஆம் திகதி திறமை வாய்ந்த மாணவன் என்ற பெரும் கீர்த்தியோடு விடை பெற்றார்.

தாமோதரம்பிள்ளையவர்கள் உத்தியோக நிமித்தம் சென்னையில் இருந்த காலத்தில், 1857ஆம் ஆண்டு சென்னை சர்வகலாசாலை ஸ்தாபிக்கப்பட்டது. அச் சர்வகலாசாலை நடத்தும் பரீட்சைகளிற் தோற்றி சித்தியடைய வேண்டுமென்ற விருப்பம் இவருக்கு ஏற்பட்டது. எனவே இவர் 1857ஆம் ஆண்டு அங்கு நடாத்தப் பட்ட பிரவேச பரீட்சைக்குச் சென்று சித்தியெய்தினார். நான்கு மாதங்களின் பின் அங்கு நடாத்தப்பட்ட கலைமாணி பட்டப் பரீட்சையிலும் (B.A) தோற்றிச் சித்தியெய்தினார். சென்னை சர்வகலாசாலை நடாத்திய முதலாவது பீ.ஏ பரீட்சையில் முதல் மாணவனாகத் தேறி தம் தாய்நாட்டிற்கும், தாம் பிறந்த ஊரான ஏழாலைக்கும் பெருமை தேடித்தந்த தாமோதரம்பிள்ளையின் கல்வி கற்கும் ஆவல் மேலும் தொடர்ந்தது. 1871ஆம் ஆண்டு சட்டநூற் புலமையில் தேர்ச்சி பெற்று

பி.எல் பட்டம் பெற்று வழக்கறிஞர் ஆனார். அவருடைய கல்வித் திறனும் சித்தியடைந்த பரீட்சைகளும், பெற்ற பட்டங்களும் சிறந்த உத்தியோகங்களை வகிக்கவும், தமிழன்னைக்குப் பெரும்பணி புரியவும் தூண்டுகோலாக இருந்தன.

**வகித்த பதவிகள்**

1852ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை ஆங்கிலக் கல்லூரிக் கல்வியை முடித்து வெளியேறியதுமே தாமோதரம்பிள்ளைக்குக் கோப்பாய் போதனா வித்தியாசாலையின் ஆசிரியராக நியமனம் கிடைத்தது. இதுவே அவர் பொறுப்பேற்ற முதலாவது பதவியாகும்.

அவரது சமகாலத்திலே வாழ்ந்த ஆறுமுகநாவலருக்கு ஆங்கிலம் கற்பித்தவரும், நாவலரிடம் தமிழ் கற்றவருமான பார்சிவல் பாதிரியார் தாமோதரம்பிள்ளை வட்டுக்கோட்டையில் படித்தபோது அவரது திறமைகளையெல்லாம் தெரிந்து வைத்திருந்தார். அப்பாதிரியார் இங்கிருந்து சென்னைக்குச் சென்று "தினவர்த்தமானி" என்னும் தமிழ்ப் பத்திரிகையை நடத்திக் கொண்டிருந்தார். தாமோதரம்பிள்ளையின் திறமைகளைத் தாம் பயன்படுத்திக்கொள்ள விரும்பிய பார்சிவல்துரை தினவர்த்தமானியின் பத்திரிகையாசிரியராக கடமையாற்ற வரும்படி அவரிடம் பலமுறை வேண்டிக் கொண்டார். அவரும் கோப்பாய் போதனா வித்தியாசாலையின் ஆசிரிய பதவிலியிருந்து விலகி சென்னைக்குச் சென்று தினவர்த்தமானியின் ஆசிரியரானார். அவர் ஆசிரியரான சில நாட்களிலேயே தினவர்த்தமானி சென்னை முழுவதும் பிரபலமடையத் தொடங்கியது. திறமையான ஆக்கங்களும் சிறந்த தமிழ் நடையும், அலங்காரமான வார்த்தைகளுமாக மக்களுக்கு நலம் விளைவிக்கக்கூடிய கட்டுரைகளும் அவரால் எழுதப்பட்டதால் நல்ல வரவேற்புப் பெற்று பத்திரிகை பிரசித்தி பெற்றது.

பத்திரிகையாசிரியராய் இருந்தபோதே தாமோதரம்பிள்ளை ஆங்கிலேயருக்குத் தமிழ் கற்பிக்கும் பணியையும் செய்து வந்தார். பெரிய பதவிகளிலிருந்த ஆங்கிலேயப் பிரபுக்களும், துரைமாரும் இவரிடம் தமிழ்மொழியைப் பயின்றனர். பேர்ணல், சேர்.உவால்றர் எலியெற், லஷ்சிங்டன் முதலானோர் தமிழை ஆர்வமாய்க் கற்றவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

தாமோதரம்பிள்ளை அவர்கள் இவர்களுக்கு ஆசிரியராய் தமிழ் கற்பித்ததோடு அப்பிரபுக்களின் அன்பையும், மதிப்பையும் பெற்றார். தமிழ்மொழியில் இவருக்கிருந்த விசேட தகைமை அந்நாளில் ஆட்சிசெய்து கொண்டிருந்த ஆங்கிலேய அரசாங்கத்தினருக்குத் தெரிந்தமையால் சென்னை இராசதானிக் கல்லூரியின் தமிழ்ப் பண்டிதராய் பணி புரியுமாறு கேட்டுக் கொண்டனர். அவரும் சம்மதித்து அப்பதவியை ஏற்றுச் சேவை புரிந்த காலத்திற்றான் சென்னை சர்வ

கலாசாலையின் பி.ஏ பரீட்சையில் முதல் மாணவனாய்த் தேறியதையடுத்து கள்ளிக் கோட்டையிலுள்ள அரசாங்க வித்தியாசாலையில் உதவி ஆசிரியராக நியமிக்கப்பட்டார். தாமோதரம்பிள்ளை பதவியேற்ற அரை ஆண்டிலே அவ் வித்தியாசாலை மிகவும் முன்னேற்றமடைந்தது. வித்தியாதரிசியாக இருந்த கர்னல் சி.ஏ.பீயோர்ஸ் துரையவர்கள் அவ்வித்தியாசாலைக்கு விஜயம் செய்தபோது அங்கு ஏற்பட்டிருக்கும் முன்னேற்றங்களைக் கண்டு வியந்து தாமோதரம்பிள்ளை யைப் போற்றிப் புகழ்ந்ததோடு, வித்தியாசாலையைப் பற்றி எழுதும் அறிக்கைப் பத்திரத்தில் அவரைப் பலவாறு புகழ்ந்து எழுதியிருக்கின்றார். இவ்வாறு அவர் பிரபல்யம் பெற்று வரும் காலத்தில், அவரிடம் தமிழ்க்கல்வி கற்றவரும் அவரிடத்து மிக்க அன்புள்ளவருமான லஸ்விங்டன் துரை அவருடைய திறமைகளையுணர்ந்து, சென்னையிலுள்ள அரசாங்க வரவு, செலவுக் கணக்குச்சாலையில் மிக உயர்ந்த உத்தியோகத்தில் அமர்த்தினார். அவருடைய அலுவலகப் பணிகளின் திறனைக் கண்டு எல்லோரும் வியந்தனர். அந்த அலுவலகத்திலே ஒரு கணக்கை விரைவில் உடனடியாக முடிக்க வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்டது. தாமோதரம்பிள்ளையே அதை விரைவாகச் செய்வார் என்ற நம்பிக்கையில், பத்து நாட்களில் அதை முடித்துத் தருமாறு அவரிடம் ஒப்படைத்தனர். அவரோ நாலு நாட்களில் அதைச் செய்து முடித்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார். இத்தனை அற்புதமாக அலுவலகப் பணிகளை ஆற்றிக்கொண்டே 1871ல் சட்டநூற் புலமையில் தேர்ச்சி பெற்று வழக்கறிஞரானார்.

தாமோதரம்பிள்ளையவர்கள் திருக்குடந்தையில் வசித்த காலத்தில் புதுக்கோட்டை மகாராஜாவின் மந்திரியும், பிரதி காவலருமாகிய அ.சேஷையா சாஸ்திரியார் அவர்களை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. கலித் தொகை என்னும் நூலைப் பதிப்பிக்கும் விஷயமாக அவர்களிடையே ஏற்பட்ட நெருக்கமான தொடர்பினால் தாமோதரம்பிள்ளையின் அரும்பெரும் குணங்களை அறிந்துகொள்ளும் சந்தர்ப்பங்கள் சேஷையசாஸ்திரியாருக்குக் கிடைத்தன. தாமோதரம்பிள்ளையின் தமிழ்ப்பாண்டித்தியம், ஆங்கிலக் கல்வித்திறன், நீதி நியாயங்களில் அவர் கொண்டுள்ள அக்கறை, நியாய அநியாயங்களைப் பகுத்தறியும் ஆற்றல், கூர்மையான புத்தி, திடசித்தம், பெருந்தன்மை, உண்மை, பொய்களை உணர்ந்தறியும் தன்மை முதலான அருங்குணங்களைக் கண்டு வியந்த சேஷையசாஸ்திரியார் புதுக்கோட்டை சமஸ்தானத்தின் நீதிமன்றத்து நீதிபதியாக அவரை நியமித்தார்.

இப்பதவியால் மேலதிகமாக வரும் ஊதியத்தை தமிழ்நூற் பதிப்புக்குப் பயன்படுத்தலாம் என்ற ஆவலோடு தாமோதரம்பிள்ளையும் 1887ஆம் ஆண்டு புதுக்கோட்டைக்குச் சென்று நீதிபதிப் பதவியை ஏற்றார். இப்பதவி கிடைத்தை யிட்டு அவரது உறவினர், நண்பர் யாவரும் மகிழ்ந்தனர். இயல்பாகவே அவரிடம்

குடிகொண்டிருந்த நற்குணங்களாலும், திறமையாலும் நீதிபதிக்குரிய கடமையைச் செவ்வனே ஆற்றி வந்தார். நடுவுநிலை தவறாது அவர் ஆற்றிய நீதியரசர் சேவையைக் கண்டு மக்கள் அவரை நியாயவான் தர்மவான் என்று போற்றிப் புகழ்ந்தனர்.

நான்கு வருடங்கள் சிறந்த முறையில் இப்பதவியை வகித்த தாமோதரம்பிள்ளையவர்கள் தேக ஆரோக்கியத்தின் பொருட்டு தாம் பிறந்த நாட்டிற்கு வர எண்ணியதால் **1890**ஆம் ஆண்டு அப்பதவியிலிருந்து விலகினார்.

கோப்பாய் போதனா வித்தியாசாலையில் ஆசிரியராக தம் உத்தியோகத்தினை ஆரம்பித்த தாமோதரம்பிள்ளையவர்கள் தம் கல்விப் புலமையாலும், செயற்திறனாலும், தினவர்த்தமானியின் பத்திரிகையாசிரியராகி, பின் சென்னை இராசதானிக் கல்லூரியின் பேராசிரியராகி சென்னை வரவு, செலவு கணக்குச் சாலையில் பெரும் பதவி வகித்து ஈற்றில் புதுக்கோட்டை சமஸ்தானத்து நீதிமன்றத்தில் நீதிபதிப் பதவியையும் பெற்றுப் பெருமையடைந்தார்.

**குடும்ப வாழ்க்கை**

சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்கள் ஏழாலைக் கிராமத்துக்கு அழியாப் புகழ் சேர்க்க அவதரித்தவர். பிறந்த ஊருக்கு மட்டுமன்றி தம் குடும்பத்திற்கும் அவர் ஓர் தவப்புதல்வனாகவே விளங்கினார். பெருந்தேவி அம்மாவின் வயிற்றில் சிரேஷ்ட புத்திரனாக அவர் தோன்றினார். அவருக்குத் தம்பிமாராய் பிறந்தவர்கள் ஆறு பேர்.

அவர் சிறுவயதினராய் இருக்கும்போதே தந்தையார் இறந்துவிட்டார். ஆதலால் குடும்பப் பொறுப்பை இவரே தாங்க வேண்டியதாயிற்று. தமது கல்விப் பொறுப்போடு, தம்பிமாரைப் படிக்க வைத்தல் மற்றும் தேவைகளையும், பொறுப்புணர்வோடு நிறைவேற்றி வைத்தார். இவருடைய தம்பிமாரில் சி.வை.இளையதம்பிப்பிள்ளை பிரதம கணக்காளராகவும், சி.வை.சின்னப்பாபிள்ளை சிற்பசாஸ்திர நிபுணராகவும், கவிஞராகவும், இளைய சகோதரர் சி.வை.நல்லதம்பிப்பிள்ளை வைத்தியராகவும் விளங்குபடியாக அவர்களைப் படிக்க வைத்தார் மூத்தவரான தாமோதரம்பிள்ளை அவர்கள்.

தம் குடும்பப் பொறுப்போடு, தமது உத்தியோகத்திலும் உயர்வு பெற்றுச் சிறப்போடு விளங்கிய தாமோதரம்பிள்ளையை திருமணம் செய்யுமாறு அவரது உறவினராகிய பெரியோர் சிலர் வற்புறுத்தினர். “இல்லறமல்லது நல்லறமன்று” என்பதையுணர்ந்திருந்த அவரும் திருமணம் செய்யச் சம்மதித்தார். தெல்லிப்பழையைச் சேர்ந்த க.பிள்ளையினார் அவர்களுடைய மகளான வள்ளியம்மையைத்

திருமணம் செய்து வைத்தனர். கலாசாலையில் அவருக்கு மிக நெருக்கமான நண்பராக இருந்த அம்பலவாணபிள்ளையின் சிற்றன்னையின் மகளான வள்ளியம்மையைத் திருமணம் செய்தது தாமோதரம்பிள்ளைக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது.

ஆயினும் அவரது மகிழ்ச்சி நீடிக்கவில்லை. அவரது இல்வாழ்வில் சோதனைகள் ஏற்பட்டன. இரண்டு பிள்ளைகளைப் பெற்று மனைவி நோய்வாய்ப்பட்டிறந்தார். சிறிது காலத்திற்குள் இரண்டு பிள்ளைகளும் இறந்தனர். கல்வியாலும், உத்தியோகத்தாலும், நற்குணங்களாலும் சிறந்து விளங்கிய அவர் தம் வாழ்க்கைத் துணையை இழந்து தவிப்பதைக் கண்டு உற்றார் உறவினர் துயருற்றனர். தமிழ் மொழிக்கும், சைவசமயத்திற்கும் இன்னும் எவ்வளவோ பணியாற்ற வேண்டிய தாமோதரம்பிள்ளைக்கு வாழ்க்கைத் துணையாக ஒரு மங்கை இருக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி, அவரது காலம்சென்ற மனைவியான வள்ளியம்மையின் சகோதரியான நாகமுத்தம்மாளை **1860**ஆம் ஆண்டு மணம் செய்து வைத்தனர். கணவனைத் தெய்வமாகப் பாவித்து அவரது வார்த்தைக்கு எதிர் வார்த்தை பேசாத பதிவிரதையாய் விளங்கிய நாகமுத்தம்மாளுடன் இனிதான இல்லறம் நடத்தி ஆறு புத்திரச் செல்வங்களைப் பெற்றெடுத்தார் அவர். கனகரத்தினம்பிள்ளை, பொன்னம்மாள், அமிர்தலிங்கம்பிள்ளை, சோமசுந்தரம்பிள்ளை, அழகுசுந்தரம், சிவபாக்கியம் ஆகிய ஆறு பிள்ளைகளில் அமிர்தலிங்கம்பிள்ளை தந்தையாரைப் போல் தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் கல்விமானாகி எல்லோராலும் மதிக்கப்பட்டு, “சாலை விநாயகர் பிள்ளைத்தமிழ்” என்னும் பிரபந்தத்தைப் பாடி வெளியிட்டு தந்தைக்குப் பெருமைதேடித் தந்தார். பெண்பிள்ளைகளாகிய பொன்னம்மாள், சிவபாக்கியம் ஆகியோருக்கும் உரியவயதில் திருமணம் செய்து வைத்தார். அழகுசுந்தரம் சென்னைப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராய் இருந்தார்.

அருமையான மனைவி நாகமுத்தம்மாளுடன் ஆறு பிள்ளைகளுக்குத் தந்தையாகி ஆனந்தமாக வாழ்ந்தார் சிலகாலம். மீண்டும் சோதனைகளேற்பட்டன. மூத்தமகன் கனகரத்தினம்பிள்ளை சிறுவயதிலேயே இறந்தார். அடுத்த மகன் அமிர்தலிங்கம் திருமணம் செய்து இரண்டு பிள்ளைகளையும் புத்திரராக அடைந்தபின் இருபத்தாறாவது வயதில் காலமானார். மகள் சிவபாக்கியமும் பிரசவ வேளையில் ஏற்பட்ட நோய் காரணமாக இறந்தார். **1882**ஆம் ஆண்டு மனைவியும் மூன்றாவது மகன் சோமசுந்தரம்பிள்ளையும் இறந்தனர். தாமோதரம்பிள்ளையின் சொந்த வாழ்க்கையில் இப்படிப் பல சோதனைகள் ஏற்பட்ட போதும், அவர் தமிழன்னைக்குச் செய்ய வேண்டிய பணிகளிலிருந்து விலகவில்லை.

நான்காவது மகன் அழகுசுந்தரமும், பேரப்பிள்ளைகளும், மருமக்களும் அவரோடு இருந்தார்கள். அன்றியும், அவரது உயர்வான வாழ்க்கையினால் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் அவருக்கு அனுசரனையாக இருந்தார்கள். எல்லாருக்கும் உதவிசெய்து பொதுநலம் பேணி வாழ்ந்ததினால் ஊர்மக்களும், துணையாக இருந்தார்கள். அத்தோடு ஆங்கில நாட்டுப் பிரபுக்க ளின் அரவணைப்பும் இருந்ததால் பொதுவாழ்வில் மிக உயர்ந்த இடத்தில் இருந்து அரும்பணிகள் புரிந்தார்.

**ஆற்றிய பெரும் பணிகள்**

பதினெட்டாம் நூற்றாண்டிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தி லும் ஆங்கிலேயரின் வருகையால் அந்நியநாட்டுக் கலாச்சாரமும், பழக்க வழக்கங்களும் எம்மிடையே ஊடுருவி எமை அடிமைப்படுத்த எங்கள் தமிழ்ப் பண்பாடும், சைவப்பழக்கங்களும் தளர்வுற்று சிதைந்து கொண்டிருந்த காலகட்டத் தில்தான் அவற்றைத் தூக்கி நிமிர்த்த நல்லூரில் ஆறுமுகநாவலர் தோன்றினார். பத்து வருடங்களின் பின் அதே பணியினைச் செய்ய ஏழாலையிலே தாமோதரம்பிள்ளை அவர்கள் தோன்றினார்.

ஒரு மொழியின் வளத்தைக் காட்டுவது அம்மொழியிலுள்ள சிறந்த நூல்களே. தமிழ்மொழியிலும் அதன் இனிமையையும், பெருமையையும், தொன்மையையும் எடுத்துக் காட்டும் பல இலக்கண, இலக்கிய நூல்கள் பழம் பெரும் புலவர்களாலும், முனிவர்களாலும் ஆக்கப்பட்டிருந்தன. ஆனால் அவை ஏட்டுச்சுவடிகளாகவே இருந்தன. ஏட்டுச்சுவடிகள் காலாதி காலத்திற்கு நிலைத்து நிற்கக் கூடியவை அல்ல. காலகெதியில் அவை சிதைவுற்று அழிந்துபோகக் கூடியன.

எமது தமிழ்மொழியின் அரும்பெரும் செல்வங்களான புராதன நூல்கள் ஏடாகவே அழிந்து போனால் எம் தமிழுக்குப் பின்னர் பெருமை ஏது. அதுவும் உத்தியோக மோகத்தினால் ஆங்கிலேயரிடம் உத்தியோகம் பெறுவதற்காக ஆங்கிலம் கற்ற பலர் தம் தாய்மொழியை அலட்சியப்படுத்தி ஆங்கில வார்த்தை களையே வீட்டிலும் பயன்படுத்தி அதை நாகரீகமென்று நம்பிய நிலையும் இருந்தது.

தமிழ் மீது உண்மையான பற்றுக்கொண்டிருந்த எவருக்குமே இத்தன்மை சகித்துக்கொள்ள முடியாததாகவே இருக்கும். இந்நிலையில்தான், சிறுவயதிலி ருந்தே தமிழார்வமும், மொழிப்பற்றும் கொண்டிருந்த தாமோதரம்பிள்ளை யவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்பட்டது. தமிழ்மொழியின் புராதனச் செல்வங்களான பண்டைய இலக்கிய, இலக்கணங்களை ஏடுகளிலிருந்து அச்சிலே பதித்து

நூல்களாக வெளியிட வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டார். அதன் பொருட்டு ஏடுகளைத் தேடி எடுத்துப் பார்த்த போது அவரது உள்ளம் கொதித்தது. அந்தக் கொதிப்பிலே தமிழ்ப் பெரியோர்களுக்கு வேதனையுடன் ஒரு வேண்டுகோள் விடுத்தார்.

"சீமான்களே, பழைய சுவடிகள் யாவும் கீலமாய் ஒன்றொன்றாய் அழிந்து போகின்றன. ஏடு எடுக்கும் போது ஓரம் சொரிகிறது. கட்டு அவிழ்க்கும் போது இதழ் முறிகிறது. ஒற்றை புரட்டும் போது துண்டு துண்டாய்ப் பறக்கிறது. எழுத்துக்களோ மங்கிக் கிடக்கின்றன. புது ஏடுகளில் அவற்றை எழுதி வைப்பாரும் இல்லை. திருவுடையீர், நுங்கருணை இந்நாட் தவறினால் பின்பு தவம் புரிந்தாலும் அழிந்த தமிழ் நூல்களை மீட்டல் அரிது. யானை வாய்ப்பட்ட விளாம்பழத்தை இலண்டத்துடன் எடுத்துமென்ன? ஓடன்றோ கிட்டுவது. காலத்தின் வாய்ப்பட்ட ஏடுகளைப் பின் தேடி எடுப்பினும் கம்பையும் நாராசமுந்தான் மிஞ்சும். எத்தனையோ திவ்ய மதுரகிரந்தங்கள் காலாந்தரத்தில் ஒன்றன்பின் ஒன்றாய் அழிகின்றன. தமிழ்மாது நம் தாயல்லவா. இவள் அழிய நமக்கென்னென்று வாளா இருக்கிறீர்களா. இதனைத் தயைகூர்ந்து சிந்திப்பீர்களாக" என்று எழுதி வேண்டுகோள் விடுத்தார்.

ஆறுமுகநாவலர், மகாலிங்கஐயர் முதலானோர் ஒரு சில நூல்களை மட்டும் பதிப்பித்ததோடு நிறுத்திவிட்டார்கள். தாமோதரம்பிள்ளையவர்கள் பண்டைத் தமிழ்ச் செல்வப்புதையலைத் தோண்டியெடுத்துப் பாதுகாக்கும் முயற்சியில் தம் இறுதிக்காலம் வரை ஈடுபட்டார். இது மிகவும் சிரமமான காரியமாகவே இருந்தது.

முதலாவதாக ஏட்டுப் பிரதிகளைத்தேடிப் பெறவேண்டும். அதற்காக பரம்பரை வித்துவான்களின் வீடுகள் தோறும் சென்று கெஞ்சிக் கேட்டுப் பெற்றுக் கொள்வார். சிலர் இருந்தும் கொடுக்க மறுத்தனர். எப்படியோ எங்கெங்கோ தேடிப் பெற்றுக் கொண்டார். கிடைத்த ஏடுகளை ஆராய்ந்து பிழையின்றிப் பிரதி செய்வதும் சுலபமல்ல. அந்தக் காலத்தில் ஏடு பார்த்து வாசித்தல் என்பது தக்க பாண்டித்தியம் உடையோரால்தான் செய்யக்கூடியதாக இருந்தது. அப்படியான வர்கள் கிடையாததால் தாமே ஏடு பார்த்துப் பிரதி செய்யும் பணியையும் செய்தார் தாமோதரம்பிள்ளை. அடுத்ததாக, நூல்களைப் பதிப்பிடுவதற்குப் பணச் செலவும் இருந்தது. சில பெரியோர் உதவியபோதும் பெரும்பாலும் தம் பணத்திலேயே பதிப்பித்தார். எவ்வளவோ சிரமங்கள் இருந்தாலும், தமிழ்த்தாய் மீது உண்மையான பற்றுதல் கொண்டு தமிழ்த்தொண்டு புரிதல் தமிழ்மகனான் தமது பெருங்கடமை என்ற உணர்வோடு செயற்பட்டதால் அவர்தம் பதிப்பிக்கும் பணியில் வெற்றி கண்டார். பல நூல்களைப் பதிப்பித்து தமிழன்னைக்கு அருங்கலமாக அணிவித்து அழகு பார்த்தார். தமது இருபத்திரண்டாவது வயதில் இவர் ஆரம்பித்த நூற்பதிப்பானது அவரது இறுதிக்காலம் வரை தொடர்ந்தது.

தாமோதரம்பிள்ளையவர்கள் கோப்பாய் போதனா பாடசாலையில் ஆசிரியராக முதன்முதல் உத்தியோகம் பார்க்கத் தொடங்கியதுமே நூற்பதிப்பையும் ஆரம்பித்து விட்டார். 1854ஆம் ஆண்டு குமரகுருபரர் இயற்றிய நீதிநெறி விளக்கத்தை மானிப்பாய் அமெரிக்கன்மிஷன் அச்சகத்தில் அச்சடித்துப் பதிப்பித்துள்ளார். இதுவே அவரது கன்னிப் பதிப்பாகும். திருக்குறளின் சாரமாக அமைந்து நூற்றிரண்டு இனிமையான வெண்பாக்களால் ஆன நீதிநெறி விளக்கத்தைப் பதிப்பித்த பின் நேரமின்மை காரணமாக உடனடியாக அடுத்த பதிப்பைச் செய்ய முடியாமல் இடைவெளி ஏற்பட்டது. ஆயினும் அந்த இடைவெளிக்குள் ஆறுமுகநாவலரின் நூற்பதிப்புக்கு தன்னாலான உதவிகளைச் செய்தார்.

மீண்டும் அவர் 1868ஆம் ஆண்டு தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனாவரையத்தைப் பதிப்பித்தபோது ஆறுமுகநாவலர் ஏடுகளைப் பரிசீலித்து உதவி செய்தார். நாவலரின் உதவியோடு 1868 புரட்டாதி மாதம் தொல்காப்பியம் சேனாவரையத்தைப் பதிப்பித்து வெளியிட்டபோது தொல்காப்பியத்தை முதன்முதலாகப் பதிப்பித்தவர் இவரே என்ற பெருமையை தாமோதரம்பிள்ளை பெற்றுக்கொண்டார். தொல்காப்பியத்தை தொடர்ச்சியாக வெளியிட உடனே முடியவில்லை.

சில வருடங்களின் பின் 1881ஆம் ஆண்டு சித்திரை மாதம் வீரசோழியம் என்னும் இலக்கண நூலை பெருந்தேவனாரின் உரையோடு சென்னை வித்தியாவர்த்தனி அச்சுக்கூடத்தில் பதிப்பித்து வெளியிட்டார். பல வித்துவான்கள் "வீரசோழியம் என்ற பெயரை மட்டும் அறிந்திருக்கிறோம். ஆனால் அந்நூலைப் பற்றி எதுவும் தெரியாது" என்று தம்மிடம் கூறியதால் கிடைத்த வரைக்கும் ஏடுகளைத் தேடிப்பெற்று இந்நூலைப் பதிப்பித்ததாக தாமோதரம்பிள்ளை கூறியிருக்கிறார். வீரசோழியம் இரண்டு பதிப்புக்கள் 1881ஆம் ஆண்டிலும் 1895ஆம் ஆண்டிலும் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்தன.

வீரசோழியம் பதிப்பித்த பின்னர் நூற் பதிப்பிலே முழுமூச்சாக ஈடுபட்டார். அடுத்தடுத்து பல பதிப்புகள் வெளிவந்தன. 1883ல் கச்சியப்பர் இயற்றிய திருத்தணிகைப் புராணம் பதிப்பிக்கப்பெற்றது. 3161 செய்யுள்களைக் கொண்ட, சங்க நூற் கருத்துக்களும், சைவசித்தாந்த தத்துவமும் செறிந்திருக்கும் நூலாகும்.

அதே ஆண்டிலேயே (1883) இறையனாரகப் பொருள் என்னும் நூலை நக்கீரருரையுடன் தாமோதரம்பிள்ளை பதிப்பித்தார். இது ஓர் அகப்பொருள் இலக்கண நூல்.

*1885*ஆம் ஆண்டு சென்னையிலிருந்து திருக்குடந்தைக்குச் சென்ற போது தொல்காப்பியம் பொருளதிகாரத்தை நச்சினார்க்கினியர் இயற்றிய உரையோடு அதன் ஏடுகளைச் சேகரித்து சென்னை ஸ்காட்டிஷ் அச்சகத்தில் பதிப்பித்தார். இந்நூலைப் பதிப்பித்தபோது அதிக அளவில் செலவு ஏற்பட்டது, அதனை ஈடுசெய்யும் பொருட்டு "இந்து" பத்திரிகையில் விளம்பரம் செய்தார். அதனால் தமிழறிஞர் பலர் பொருளுதவி செய்ய முன்வந்தனர். அதனால் ஊக்கமடைந்த தாமோதரம்பிள்ளை அடுத்த நூற்பதிப்புக்கு ஆயித்தமானபோது கலித்தொகைப் பிரதியொன்று கிடைத்தது. அதனை, புதுக்கோட்டை மகாராசாவின் மந்திரியான அ.சேஷையசாத்திரிகளின் நிதியுதவியோடு *1887*ஆம் ஆண்டு ஆடி மாதம் பதிப்பித்தார்.

*1889*ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் இருபது பக்கப் பதிப்புரையுடன் இலக்கண விளக்கத்தைப் பதிப்பித்தார். இது சாதாரண மாணவர்க்கும் புலப்படும் தன்மை கொண்ட இலக்கண நூல். இது குட்டித் தொல்காப்பியம் என்று சான்றோரால் குறிப்பிடப்படும்.

அதே ஆண்டு கார்த்திகை மாதம் சூளாமணியை சென்னை வித்தியா நுபாலன அச்சுக்கூடத்தில் பதிப்பித்துள்ளார்.

*1891*ஆம் ஆண்டு தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தையும், *1892*ல் தொல்காப்பியத்தின் சொல்லதிகாரத்தையும் பாரத்துவாசி நச்சினார்க்கினியரின் உரையோடு பதிப்பித்தார்.

*1897*ஆம் ஆண்டு அகநானூறு என்னும் நூலை பதிப்பிக்க எண்ணி மணி மிடை பவளம் வரை ஏடுகள் பரிசோதிக்கப்பட்ட நிலையில் தாமோதரம்பிள்ளை யவர்கள் நோய்வாய்ப்பட்டார். அதனால் அந்நூற் பதிப்பு தடைப்பட்டது. தமிழன்னையின் திருமேனியில் திகழும் ஆபரணங்களாக விளங்கும் தொல்காப்பியம் சொல்லதிகாரம், எழுத்ததிகாரம், பொருளதிகாரம் மற்றும் வீரசோழியம், இறையனாரகப் பொருள், இலக்கண விளக்கம் ஆகிய இலக்கண நூல்களையும், நீதி நூல் விளக்கம், தணிகைப்புராணம், கலித்தொகை, சூளாமணி ஆகிய இலக்கிய நூல்களையும் பதிப்பித்து அவற்றை அழியாமல் பாதுகாத்த பெருமைக்குரியவரே தாமோதரம்பிள்ளையாவார். அவர் அழியும் தறுவாயிலிருந்த தமிழ்த்தாயின் அருங்கலங்களான பழம்பெரும் நூல்களைப் பதிப்பிப்பதிலே தம் பொழுதையும், பணத்தையும் கூடுதலாகத் செலவழித்தபோதும், சில நூல்களைத் தாமே இயற்றி வெளியிட்டிருக்கிறார். அவை நட்சத்திரமாலை, ஆதியாகம கீர்த்தனம், ஆறாம், ஏழாம் வகுப்பு வாசக நூல்கள், கட்டளைக் கலித்துறை, சூளாமணி வசனம், சைவ மகத்துவம் முதலியனவாகும்.

கவி பாடுவதிலும் அவர் வல்லவராயிருந்தார். 1879ஆம் ஆண்டு ஆறுமுகநாவலர் இறைவனடி சேர்ந்தபோது ஐந்து இரங்கற்பாக்களை இயற்றி அவரைப் போற்றினார். அவற்றுள், "நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல், சொல்லுதமிழெங்கே சுருதியெங்கே எல்லவரும் ஏத்து புராணாகமங்க ளெங்கே பிரசங்கமெங்கே, ஆத்தனறிவெங்கே அறை" என்ற வெண்பா நாவலர் பற்றிப் பேசப்படும், எழுதப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவரைப் பற்றிய சிறந்த மதிப்பீடாகக் காட்டப்படும்.

தாமோதரம்பிள்ளையவர்கள் தமிழ்மொழிக்கு ஆற்றிய நூற்பதிப்புப் பணிக்காகவும், சென்னை சர்வகலாசாலையின் பரீட்சகராக விளங்கிய திறமையையும் கண்டு 1895ஆம் ஆண்டு அரசாங்கத்தினர் "இராவ் பகதூர்" என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தனர். ஆங்கிலேயப் பிரபுக்கள், மடாதிபதிகள் ஆகியோராலும் புகழ்ந்து கொண்டாடப்பட்டார்.

**சி.வை.தாமோதரம்பிள்ளை ஸ்தாபித்த பாடசாலை**

ஆயிரத்து எண்ணூற்று எழுபதுகளில் இங்கேயிருந்த சூழ்நிலையானது தாமோதரம்பிள்ளைக்கு ஒரு சைவப் பாடசாலையை நிறுவும் எண்ணத்தை ஏற்படுத்தியது. வேற்றுமதப் பிரசாரம், வேற்றுமதப் பாடசாலைகளின் தோற்றம் இவைகளால் சைவம் வளம் குன்றியிருந்த வேளையில் சைவச்சிறார்கள் சைவச் சூழலில் சைவப்பண்பாடுகளோடு கல்வி கற்க வேண்டுமென்ற விருப்பத்தில் நாவலரின் வழியைப் பின்பற்றி சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற பெயரில் 1876ஆம் ஆண்டு ஆவணி பத்தாம் நாள் ஏழு ஆலயங்கள் அமைந்துள்ள சூழலிலே ஸ்தாபித்தார். சுன்னாகம் முருகேச பண்டிதர் தலைமை ஆசிரியராகவும், குமாரசுவாமிப் புலவர் உதவி ஆசிரியராகவும் நியமிக்கப்பட்டனர். நாளடைவில் குமாரசுவாமிப் புலவரே தலைமை ஆசிரியராகவும், உதவியாசிரியராகவும் இருந்து திறம்பட நடத்தினார். ஆரம்பத்தில் நூறு மாணவர்கள் அங்கு கல்வி கற்றனர். முதல் வருட முடிவில் ஆறுமுகநாவலர் பரீட்சையை நடத்தினார். அடுத்தடுத்த வருடங்களில் முருகேச பண்டிதர், கொக்குவில் சபாரத்தின முதலியார், நல்லூர் பொன்னம்பலபிள்ளை முதலானோர் நடத்தினர். பரீட்சை முடிந்ததும் அதன் அறிக்கையை தாமோதரம்பிள்ளைக்கு அனுப்பி வைப்பார்கள்.

வினவிய வினாக்களுக்கு மாணவர்கள் திறமையாகப் பதில் அளிப்பதாகவும், குமாரசுவாமிப்புலவர் மிகுந்த அக்கறையோடு கல்வி கற்பித்ததாகவும் அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது. பெரும் கவிஞராக விளங்கிய சிவானந்தையர், சித்தாந்தப் பேரறிஞரும், கவிஞருமாகிய ஏழாலை ஐ.பொன்னையா முதலானோர் இப் பாடசாலையின் மாணவராவர். தாமோதரம்பிள்ளையவர்களின் கடிதங்களின்படி, ஆசிரியராகக் கடமையாற்றிய குமாரசுவாமிப் புலவருக்கு முதலில் மாதந்தோறும் 10 ரூபாவும் பின்னர் 15 ரூபாவும் சம்பளமாகக் கொடுத்ததாக அறிய முடிகிறது.

*1892ஆம் ஆண்டு தாமோதரம்பிள்ளை சென்னையிலிருந்து யாழ்ப்பாணம் வந்தபோது ஒரு முதல் திரட்டி ஒரு சபையிடம் பாடசாலையை ஒப்படைக்க முயன்றார். அது கைகூடவில்லை. பின்னர் அவர் சென்னை சென்று, நோய்வாய்ப் பட்ட நிலையில் 1896ஆம் ஆண்டு மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு வந்து நோய் முற்றியதால் தம்மால் எதுவும் செய்யமுடியாத நிலையில் சபையிடம் ஒப்படைக்க முயன்று தோல்வி கண்டு 1898ஆம் ஆண்டு சைவப்பிரகாச வித்தியாசாலையை மூடினார். 22 ஆண்டுகளாக தமிழுக்கும், சைவத்திற்கும் பெருந்தொண்டு புரிந்து பல தமிழறிஞர்களை உருவாக்கிய இப்பாடசாலை மூடப்பட்டாலும் இதன் தொடர்ச்சியாகத்தான் பெரியோர்களின் முயற்சியால் சைவ மகாஜன வித்தியாலயம் உருவானது எனலாம்.*

*தாமோதரம்பிள்ளையின் உடற்சுகம் நாளுக்குநாள் குறைந்து வந்தது. 1901ஆம் ஆண்டு தைமாத முதல்நாள் வைகுந்த ஏகாதசி என்னும் புனிதமான தினத்தில் இவ்வுலக வாழ்வை நீத்து இறைவனடி சேர்ந்தார்.*

*இருபதாம் நூற்றாண்டின் முதல்நாளின் புதிய விடியலில் தமிழ்மாது தன் அருமை மைந்தனை இழந்து கண்ணீர் வடித்தாள்.*

*அவருடைய உடல் அழிந்தாலும் அவர் ஆற்றிய உன்னத பணிகளும் தமிழுக்கும், சைவத்திற்கும் ஆற்றிய அருந்தொண்டுகளும் என்றும் அழியாதவை. என்றும் நாம் நினைவுகூர வேண்டியவை. அதன் வெளிப்பாடாகத்தான் அவர் மறைந்து நூற்றுப்பதினொரு வருடங்கள் நிறைவாகும் வேளையிலே 01.01.2012 அன்று அவருடைய பணிகளை நினைந்து அவரது பிறந்த ஊரான ஏழாலையில் அருள்மிகு கண்ணகை அம்பாள் தேவஸ்தான வளாகத்தில் அவரது உருவச்சிலை திறப்பு விழாவும் அவரைப்பற்றிய நூல் வெளியீடும் பிரமாண்டமான முறையில் கொண்டாடப்பட்டது. ஏழாலை பெற்றெடுத்த பேரறிஞர் இராவ்பகதூர் சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்கள் சிறந்த உரையாசிரியராய், கவிஞராய் விளங்கிய போதும் பண்டைத்தமிழ் நூல்களைப் பதிப்பித்துப் பாதுகாத்த பெருமை யினால் பதிப்பாசிரியர் என்ற புகழே மேலோங்கியது. அத்தன்மையை அவரது பிரிவு குறித்து உ.வே.சாமிநாதையர் பாடிய இரங்கற்பா காட்டுகிறது.*

தொல்காப்பிய முதலாம் தொன்னூல்களைப் பதிப்பித்து
ஒல்காப் புகழ் மேவி யுய்ந்த பண்பி - னல்காத
தாமோதரச் செல்வன் சட்டகநீத் திட்ட துன்பை
யாமோ தரமியம்ப வே.



ஐயம்பிள்ளை பொன்னையா
(அருளானந்தசிவம்) அவர்கள்

# சித்தாந்தப் பேரறிஞர் ஐயம்பிள்ளை பொன்னையா அவர்கள்

*"கிழக்கு" என்பது மகத்துவமும் சிறப்பும் மிக்க ஒரு திசையாகும். உலகில் கவிந்திருக்கும் இருளைப்போக்கி ஒளிதர சூரியன் உதிப்பது கிழக்குத் திசையில் தான். அவ்வாறேதான் ஞான சூரியனாக விளங்கிய ஐ.பொன்னையா அவர்களும் ஏழாலையின் கிழக்குப் பகுதியிலே தோன்றினார். சூரியன் கிழக்கு வானில் உதித்து பின்னர் மேற்கு வானில் ஒளி சிந்துவது போலவே, பொன்னையாவும் ஏழாலையின் கிழக்கிலே பிறந்து வளர்ந்து, ஏழாலையின் மேற்குப் பகுதிக்கு வந்து அங்கே ஞான தீபத்தை ஏற்றி வைத்தார்.*

*ஏழாலையின் கிழக்குப் பகுதியிலே மிகப் பிரபல்யமான குடும்பமாக விளங்கியது சித்த வைத்தியர் ஐயம்பிள்ளை அவர்களின் குடும்பம். அவர் சித்த வைத்தியத்தில் மட்டுமன்றி ஆன்மீகத் துறையிலும் ஈடுபாடு கொண்டவராகவும் சக்தி உபாசகராகவும் விளங்கினார். ஏடுகளைப் பார்த்து மந்திர உச்சாடனம் செய்து தேவியைப் பூசிப்பாராம்.*

*உரிய வயதில் பெற்றோர் அவருக்குத் தெய்வானை என்னும் அழகும் பண்பும் மிக்க மங்கையைத் திருமணம் செய்து வைத்தனர். ஐயம்பிள்ளை தெய்வானை ஆகியோரின் இனிமையான இல்லறத்தில் சிரேஷ்ட புத்திரராகப் பிறந்தார் பொன்னையா. அதே இடத்தைச் சேர்ந்த தாயார் தெய்வானைக்கு மூன்று தம்பிமார் இருந்தனர். அவர்களை சின்னத்தம்பி அம்மான், சுப்பம்மான், அகத்தி அம்மான் என்று ஆசையோடு அழைப்பார் பொன்னையா. மூன்று மாமன்மாரி னதும் பெற்றோரினதும் அரவணைப்பில் வளர்ந்த பொன்னையா, நாகலிங்கம், சுப்பிரமணியம், பேரம்பலம் ஆகிய சகோதரர்களையும் சின்னாச்சிப்பிள்ளை விசாலாட்சி ஆகிய சகோதரிகளையும் உடன் பிறப்புக்களாக அடையும் பாக்கியத்தைப் பெற்றார்.*

*1867ஆம் ஆண்டு பிறந்த பொன்னையா தந்தையின் வழியைப் பின்பற்றி சிறுபிராயத்திலேயே ஆன்மீக நெறியைக் கடைப்பிடிப்பவராகவும், தேவிஉபாசகரா கவும் விளங்கினார். தந்தையார் ஐயம்பிள்ளை மூத்த புத்திரனுக்கு வித்தியாரம்பம் செய்துவைத்து, தாம் கற்றிருந்த சித்த வைத்தியக்கலையின் சிகிச்சை முறைக ளையும், மருந்துகள் தயாரிக்கும் செய்முறைகளையும் கற்பித்தார். தந்தையும், மகனும் சித்தவைத்தியத்துறையில் பெயர் பெற்று விளங்கினார்கள்.*

தந்தையாரிடமே தமிழ்மொழிக் கல்வியைக் கற்றுக்கொண்டிருந்த பொன்னையாவுக்கு ஒன்பதாவது வயதில் கல்வியை விருத்தி செய்வதற்கு ஓர் அரிய வாய்ப்புக் கிடைத்தது. 1876ல் சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களால் சைவப்பிரகாச வித்தியாசாலை நிறுவப்பட்டது. பொன்னையாவின் வீட்டுக்கு மிக அண்மையாக இருந்த ஏழு கோயிலடி என்ற இடத்தில்தான் அப்பாடசாலை நிறுவப் பட்டது. பொன்னையா அங்கே கல்வி கற்கச் சென்றார். அப்பாடசாலையின் தலைமையாசிரியராகக் கடமையாற்றிய சுன்னாகம் முருகேச பண்டிதரிடமும், ஆசியராக இருந்த குமாரசுவாமிப் புலவரிடமும் தமிழிலக்கண, இலக்கியங்களை ஐயம் திரிபறக் கற்று கவித்துவம் மிக்க புலவராகவும், பேரறிஞராகவும் உருவானார்.

இந்நிலையில் பொன்னையா அவர்களுக்கு ஏழாலையின் மேற்குப் பகுதியி லிருந்து மணம்பேசி வந்தனர். ஏழாலை மேற்கிலே தற்போது கருணாகரப் பிள்ளையார் மடாலயம் அமைந்திருக்கும் மரங்கள் அடர்ந்த காணிக்குள் சக்தி உபாசனை செய்து வந்த கந்தர் என்பவருடைய பேரனான இராமலிங்கத்தின் மகள் செல்லமுத்து பொன்னையாவின் வாழ்க்கைத் துணையானார். கந்தர் "பரிகாரி கந்தர்" என்று அழைக்கப்படுவார். பரிகாரியாகவும் அம்பாள் உபாசகராகவும் விளங்கிய கந்தரின் பூட்டப்பிள்ளையான செல்லமுத்து சித்த வைத்தியராகவும் சக்தி உபாசகராகவும் திகழ்ந்த பொன்னையாவுக்கு மிகப் பொருத்தமானவராகவே இருந்தார். செல்லமுத்துவை மணம் செய்து ஏழாலை மேற்கில் மனைவியின் வீட்டை வசிப்பிடமாகக் கொண்டு பொன்னையா வாழ்ந்த போது அவருடைய ஆன்மீகத்துறையின் பணிகளுக்கும் சமயத்தொண்டுகளுக்கும் மனைவியும் அவரது உறவினரும் உறுதுணையாக இருந்தனர்.

பொன்னையா வாழ்ந்து கொண்டிருந்த இடத்திற்கு அண்மையாக "விழிசிட்டி" என்னும் குறிச்சி இருந்தது. அங்கே "மலடியார்" என்று அழைக்கப்படும் ஒரு சாமி அம்மா இருந்தார். அவருடைய கணவர் பண்டிதர் கார்த்திகேசர் திருவாரூரில் ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்தில் அங்கு அவருடன் இருந்தபோது மலடியார் தகுந்த குருவிடம் சென்று உபதேசம் பெற்று வேதாந்த ஞானியாகத் திகழ்ந்தார்.

அவர் மீண்டும் இங்கு வந்து விழிசிட்டியில் வாழ்ந்த காலத்தில் அவருடைய வேதாந்த ஞானத்தால் ஈர்க்கப்பட்டு ஆன்மீக ஞானம் பெற பலரும் அந்த அம்மை யாரை நாடிச் சென்றனர்.

மலடியாரின் சகோதரர் ஒருவர் பால்கட்டும் டாக்டராகப் பணிபுரிந்து கொண்டிருந்தவர். அவர் பொன்னையா அவர்களின் தங்கையாரான சின்னாச்சிப்

பிள்ளையைத் திருமணம் செய்திருந்ததினால் மலடியார் பொன்னையாவுக்கு உறவினராகவும் இருந்தார். அத்துடன் ஞானமார்க்கத்திலும் மிக ஈடுபாடுள்ள வரான பொன்னையா மலடியாரிடமிருந்த வேதாந்த ஞானத்தாலும் கவரப்பட்டு மலடியாரின் வேதாந்த விசாரங்களில் பங்கு கொள்ளளானார். பொன்னையா தம் குருவைக் கண்டுகொள்வதற்கான இடமாகவும் அமைந்தது மலடியார் வீடு.

**குரு தரிசனம்**

அச்சுவேலியில் பிறந்தவரும், உசன் பொன்னம்மா சாமியின் சீடரும் பெரும் ஞானியுமாகிய சடைவரதர் ஏழாலைக்கு, மலடியார் வீட்டில் நடைபெறும் வேதாந்த விசாரங்களுக்கு வரவேண்டிய காரணமென்ன? அதற்குப் பதில் திருஞானசம்பந்தருடைய தேவாரப்பதிக வரிகளில் இருக்கிறது.

ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதி மாண்பும்
கேட்பான் புகில் அளப்பில் கிளக்க வேண்டாம்.

பொன்னையா பரிகாரியார் ஒரு பக்குவ ஆன்மா. அவர் ஆரம்பத்தில் கைவல்ய நவநீதம், ஞானவாஷிஸ்டம் முதலான வேதாந்த பரமான நூல்களைக் கற்று முழு வேதாந்தியாக விளங்கினார். அன்னாரை ஓர் உண்மைச் சித்தாந்தி யாக்க வேண்டுமென்பது இறைசித்தமாக இருந்திருக்க வேண்டும். அவரைக் கொண்டு சித்தாந்த நூல்களுக்கான உரையாக்கங்களும் சித்தாந்தப் பணிகளும் செய்விப்பதோடு. பிரபல்யமாய் விளங்கப்போகும் பிள்ளையார் ஆலயமொன்றும் ஸ்தாபிப்பதற்கு இறைவன் திருவுளம் கொண்டார். அதன் காரணமாகத்தான் இறைவன் சடைவரதரை ஏழாலைக்கு அனுப்பினாரோ!

குரு சடைவரதரும் சீடர் பொன்னையாவும் ஒருவரையொருவர் சந்தித்து தம் தொடர்பை அறிந்தபின் அவர்களது ஆன்மீகச் செயற்பாடுகள் இங்கே விரிவடைந்தன. ஆன்மீக ஆய்வுகள் யாவும் பொன்னையாவின் வீட்டுக்கு இடமாற்றம் செய்யப்பட்டன. பொன்னையா வாழ்ந்துகொண்டிருந்த மாமனார் இராமலிங்கத்தின் வீட்டில் குடும்ப அங்கத்தவர் கூடுதலாக வசித்த காரணத்தினால், அங்கே சித்தர்கள், சிவனடியார்கள் கூடி வேதாந்த விசாரங்கள் செய்தவற்கு இட வசதிகள் குறைவாக இருந்தமையால், இராமலிங்கம் தமக்கு முதுசமாகக் கிடைத்து, பயன்பாடின்றிப் பற்றையும் புதருமாகக் கிடந்த அக்குறிப் பிட்ட இடத்தை இதற்காகப் பயன்படுத்துமாறு மருமகன் பொன்னையாவிடம் கேட்டுக் கொண்டார்.

இந்த இடமானது பல வருடங்களுக்கு முன் இராமலிங்கத்தின் பாட்டனான பரிகாரி கந்தர் தேவியுபாசகராயிருந்து தமது மந்திர சாதனைகளுக்கு நிலைக்கள

மாகப் பயன்படுத்திய இடம். கந்தரின் மறைவுக்குப்பின் அவர் நடத்திய பூசைகளும் வழிபாடுகளும் நின்று போயின. பின் இக் காணியில் தேவதைகளின் நடமாட்டங் களும், ஆரவாரங்களும் இருப்பதாக உணர்ந்து யாரும் அக்காணிப்பக்கம் செல்வ தில்லை. இந்நிலையில் ஏழாலை மேற்கில் கடந்த நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் தங்கியிருந்த "திருகோணமலை அம்மா" என்று அழைக்கப்பட்ட பெண்மணி யொருவர் வேப்பமரங்களும் பற்றையுமான அக்காணிக்குள் புகுந்து மறைந்திருந் தார். யாரோ அவரைத் தேடி வந்தவர்கள் அந்த அம்மாவைக் கண்டபோது "இந்த இடத்தில் பெரியதோர் தலம் அமையப் போகிறதென்று" உரத்துச் சத்தமிட்டவாறு அருள்வாக்குக் கூறிவிட்டு வெளியேறினார். அந்த அம்மாவின் அருள்வாக்கு நிறைவேறும் காலமும் சூழ்நிலையும் ஏற்படவே இராமலிங்கம் அக்காணியை மடம் அமைக்கும்படி பொன்னையாவிடம் ஒப்படைத்தார்.

அக்காணியை ஓரளவு துப்பரவு செய்து வேப்ப மரங்களின் கீழ் கொட்டகை அமைத்து அங்கே வேதாந்த விசாரம் அமைதியாக ஆர்வமாக நடைபெற்றது. பற்றையும் புதருமாய் ஆள்நடமாட்டமின்றி அச்சப் பிரதேசமாய் இருந்த இடம் 1910ஆம் ஆண்டுகளில் ஐயம்பிள்ளை பொன்னையா அவர்களால் சடைவரத சுவாமிகளின் வழிகாட்டலுடனும், ஆசியுடனும் சாதுசங்கமடம் ஸ்தாபிக்கப்பட்ட பின் பற்பல இடங்களிலிருந்தும் ஆன்மீகவாதிகளும் அடியவர்களும் சித்தர்களும் சிவனடியார்களும் தேடிவரும் தெய்வச்சாலை ஆயிற்று. சடைவரத சுவாமிகள் இடையிடையே இவ் வோதந்த பீடத்துக்கு எழுந்தருளி தன் அடியவர்களுக்கு நயன தீட்சையளித்து அவர்களுக்கு தீட்சாநாமமும் வழங்குவார். பொன்னையாவுக்கு அருளானந்தசிவம் என்றும் அவரது மனைவி செல்லமுத்துவுக்கு அகிலாண்டம் என்றும், அவரது சகோதரர் பேரம்பலத்துக்கு மகாலிங்கமென்றும் நாமங்கள் சூட்டி யிருந்தார். அதனைத் தொடர்ந்து ஒரு தடவை உசன் மடத்திலிருந்து சடைவரதரின் குருவான பொன்னம்மாசாமி இங்கு வந்து இங்கிருந்த அனைவருக்கும் பரிசதீட்சை பாலித்தருளி அன்றிலிருந்து அனைவரையும் சைவசித்தாந்திகளாக மாற்றிவிட்டுச் சென்றார்.

இதனைத் தொடர்ந்து அவ்விடம் தெய்வீகக் கோலம் கொண்டு அண்டை அயலவர்களைக் கவர்ந்திருக்கும் ஆன்மீக நிலையமாயிற்று. ஓலைக் கொட்டகை யாக இருந்த அந்த இடம் சொற்ப காலத்திலே மாற்றம் பெற்றது. 1917ஆம் ஆண்டு பெரிதளவான சாந்துக்கற் கட்டிடமொன்று எழுந்தது. அங்கு வருவோரின் வழிபாட்டிற்காக கடையிற் சுவாமிகள் கையிலிருந்து அவர் தம் சீடர் பரம்பரை வழியாக வந்த பிள்ளையார் திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. விக்கிரகம் சிறியதாக இருந்தாலும் திருவருட்சக்தி கூடியதாக இருந்ததால் பெரும் பக்தர் குழாமை அங்கே ஈர்த்துக் கொண்டதோடு, இதுவரை காலமும் அச் சூழலிலே

யிருந்த தேவதைகளின் நடமாட்டமும் ஆரவாரங்களும் முற்றாக விலகிப் போயின. சிறிது காலத்திலேயே, நீண்ட துதிக்கையும் பரந்த நெற்றியும், பேழை வயிறுமாய் பெரிய அளவினாலான பிள்ளையார் விக்கிரகமொன்றைப் பிரதிஷ்டை செய்யக் கூடியதாக திருவருள் கைகூடியது. பிள்ளையாருக்கு காலையும், மாலையும் அருளானந்தசிவம் என்னும் தீட்சாநாமம் பெற்ற பொன்னையா பூசை செய்தார். அடியார்கள் நடமாட்டமும், நாம சங்கீர்த்தனமும், திருமுறைப் பாராயணங்களும், புராணபடனமும், சித்தாந்த ஆய்வுகளுமாய் அந்த இடம் தெய்வீக மணம் கமழும் பேரின்ப சாகரமாயிற்று.

பொன்னையா அவர்கள் இந்த இடத்திலேயே ஐக்கியப்பட்டு, மடத்தின் தென்கிழக்குத் திசையாக கொட்டில் ஒன்று அமைத்து அங்கேயே தங்கி அந்நிலத்தைத் தூய்மை செய்து பண்படுத்தி சோலையாக மாற்றுவதில் தம் ஓய்வு நேரத்தைத் செலவழித்தார்.

பற்றையும் புதருமாக பரதேவதைகளின் நடமாட்டமுமாக இருந்த இடம் பக்தர்களின் வசிப்பிடமாகவும் அருட்சக்திமிக்க மடாலயமாகவும் மாறிய பெருமை பொன்னையா அவர்களையே சாரும். இதில் அவருக்கு உறுதுணையாக மனைவியார் செல்லமுத்துவும் தம்பியார் பேரம்பலம் பரிகாரியாரும் இருந்தனர். சடைவரத சுவாமிகள் இச் சாதுசங்க மடத்திற்கு வரும்போதெல்லாம் பொன்னையா தங்கியிருந்த கொட்டிலுக்குள் சாய்மனைக் கதிரையில் படுத்து இளைப்பாறுவார்.

அவ்வாறே 1935ஆம் ஆண்டு ஆடி மாதம் மடத்திற்கு வந்த சடைவரதர் ஓர் அந்திமாலைப் பொழுதினிலே அச்சாய்மனைக் கதிரையில் அமர்ந்தவாறே சமாதி நிலை எய்தினார். இவ்விடத்தில் பிரசித்திபெற்ற மடாலயம் அமைவதற்கு அருள் நோக்குச் செய்த சடைவரதர் இவ்வாலய வளர்ச்சிக்குத் தம் வாழ்த்துக்களை எப்பொழுதும் வழங்கிக் கொண்டேயிருப்பதற்காக இவ்விடத்திலேயே தேக வியோகமடைந்து இறைபதம் எய்தினார். அந்நாள் ஆடி உத்தர நாளாகும். சிவஞான குருவாகவும், வழிகாட்டியாகவும் இருந்து நெறிப்படுத்திய சடைவரத சுவாமிகளின் பிரிவினால் பொன்னையா அவர்கள் துயருற்றபோதும், அவருக்கு பக்குவம் வாய்த்த ஒரு சீடர் வாய்க்கப் பெற்றதால் அவர் நிம்மதியடைந்தார். சிறு வயது முதலே தம் தாயாருடன் மடத்துக்கு வந்து பழக்கப்பட்ட ஞானப்பிரகாசம் இக்காலகட்டத்தில் கல்வி கேள்விகளில் வல்ல இளைஞராக இருந்தார். தாய்ப் பசுவைக் கன்று ஆவலுடன் தேடி வருவதுபோல் தம்மை நாடி வந்த ஞானப்பிரகாசத்தின் பக்குவநிலை கண்டு அவரைத் தம் சீடராக ஏற்று. பிள்ளையாருக்குப் பூசை செய்யும் பொறுப்பையும் அவரிடம் ஒப்படைத்தார்.

சடைவரதரின் ஆசியினால், அவர் சமாதியடைந்த அதே இடத்தில் ஆறு மாதத்திற்குள் அழகியதோர் நால்வர் சந்நிதி அமைக்கப்பெற்று, 1936ஆம் ஆண்டு தை மாதம் உத்தரநாளில் சமயாசாரியர் நால்வரினதும், சேக்கிழாரினதும் தாமிர விக்கிரகங்கள் இனிதே பிரதிஷ்டை செய்யப்பட்டன. இதனையடுத்து பொன்னையா தம் இருப்பிடத்தை மாற்றிக் கொண்டார். மடாலயத்திற்கு அண்மை யாக, கலட்டி என்னும் குறிச்சியிலே தாம் வாங்கிய காணிக்குள் வீடு கட்டி அங்கே தங்கினார். அவ்வீடும் தற்போது கோயிலுக்குரிய வீடாகவே கணிக்கப்படுகின்றது.

சாதுசங்க மடாலயத்தின் ஸ்தாபகரான ஐ.பொன்னையா அவர்கள் அங்கு நால்வர் சந்நிதி அமைக்கப்பட்டபின் இந்நிலையத்திலேயே புராணபடனங்களை விரிவுபடுத்தினார். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருவிக்கிரகத்தை நடுநாயகமாக வைத்துக்கொண்டு வெளிமண்டபத்தில் அமர்ந்து பயன் சொல்லுவார். பயன் சொல்லுவதிலும், பாடுவதிலும் வல்லவராக விளங்கினார் பொன்னையா அவர்கள். திருஞானசம்பந்தரின் புராணம் படிக்கும்போது படிப்பின் நிறைவு நாளன்று வெகுவிமரிசையாக மணவறை வைத்து பந்தர் சோடித்து சம்பந்தப் பெருமானின் திருமணவிழாவைக் கொண்டாடுவார்.

சாதுசங்கமடத்தை ஸ்தாபித்து பின் அது மடாலயமாகப் பரிணமித்தபோது அதற்குரிய பூசை முறைகளை அழகாக ஒழுங்காக நடத்தி ஆன்மீகத் துறையிலே ஏழாலை மேற்குப் பகுதியில் ஓர் எழுச்சியினை ஏற்படுத்திய பொன்னையா எழுத்துப் பணி, கல்விப்பணி, வைத்தியப்பணி முதலான பணிகளிலும் தம்மை முற்றாக ஈடுபடுத்தியவர் ஆவார்.

**எழுத்துத்துறை மூலம் அவர் ஆற்றிய சமய இலக்கியப் பணிகள்**

ஐ.பொன்னையா ஆற்றிய பணிகளாவன ஆன்மீகம், சித்தவைத்தியம் ஆகிய இரண்டையும் அடிப்படையாக வைத்தே செயற்படுத்தப்பட்டுள்ளன. ஆன்மீக பணிகளாவன சமயப்பிரசங்கம், கட்டுரை ஆக்கம், கவிபுனைதல், மடஸ்தாபிதம், ஆலயத்தொண்டு, புராணபடனம், கூட்டுப்பிரார்த்தனை முதலான செயற்பாடுகள் வழியாக ஆற்றப்பட்டவையாகும். வைத்தியப் பணிகளாவன மருந்தாக்கல், தீட்சண்ய நோக்குடன் ஆராய்ந்து நோயறிந்து, மருந்து கொடுத்துப் பிணியகற்றல் மற்றும் வைத்திய நூல்களைப் பதிப்பித்தல் முதலானவை. இவ்விரு துறைப்பட்ட பணிகளுக்காகவும் அவருக்கு அச்சுயந்திரசாலை ஒன்று தேவையாக இருந்தது. எனவே 1930களில் மடாலய வளாகத்திற்குள் திருஞானசம்பந்தர் அச்சுயந்திர சாலையை அமைத்தார். கலாவல்லி என்னும் சஞ்சிகையை சிறந்த ஆக்கங்களுடன் அச்சிட்டு வெளியிட்டு வந்தார். இவரது பாடல்களும் நயம்மிக்கவையாக உள்ளன.

ஏழு ஆலயங்களில் ஒன்றான அத்தியடி முருகமூர்த்தி ஆலயம் பொன்னையா அவர்களின் குடும்பத் தொடர்புடைய ஆலயமாக இருப்பதால் அங்கும் இவருடைய பணிகளும், வழிபாடும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அங்கு எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமான் மீது திருவூஞ்சற் பிரபந்தம் இயற்றி, தம்முடைய அச்சகத்தில் முதற்பதிப்பினை அச்சிட்டு வெளியிட்டார் பொன்னையா அவர்கள். தாம் இயற்றிய பாடல்களை இசையோடு பாடவும் வல்லவராயிருந்தார்.

வருடந்தோறும் அத்தியடி முருகன் ஆலயத்தில் வள்ளியம்மை திருக்கல்யாணப்படிப்பு நடைபெற்று திருக்கல்யாண விழா நிகழும் போது திருவூஞ்சல் பாடப்படும். அன்றைய தினம் திருவூஞ்சலில் வள்ளி தேவயானை சமேதராய் முருகப்பெருமான் அருளும், அழகும் பொழிய வீற்றிருக்க திருவூஞ்சல் பிரபந்தத்தினை இயற்றிய பொன்னையா, மஞ்சள் கயிற்றில் கட்டிய ஒற்றித்த உருத்திராக்கமணியை அணிந்தவராய் நெடிதுயர்ந்த மேனியராய் தெய்வீக சோபையுடன் தூணில் சாய்ந்தவாறு நாதஸ்வர இசையுடன் இப்பாடல்களை மெய்மறந்து பாடுவார்.

பொன்னையா இயற்றிய முருகன் திருவூஞ்சற் பிரபந்தத்திலே காப்புச் செய்யுளுடன் சேர்த்து பதினாறு பாடல்கள் உள்ளன. திருவூஞ்சல், வாழ்த்து எச்சரிக்கை, பராக்கு, ஏலப்பாட்டு, மங்களம் என்ற பிரிவினுள் அவை அடங்கும். அனைத்துப் பாடல்களிலுமே கவித்துவம், சாஸ்திர நூற்புலமை, சுபானுபவப் புலப்பாடு ஆகிய மூன்றும் இழையோடுகின்றன.

“கருமலத்தின் கட்டறுத்துள் ளொளியாய் மேவிக்
கரையறு மானந்தமெனும் கதிதந்தருளும்
பெருநலமே அருணகிரி கீர னாதி
பேரறிவோர் புகழ்ந்த வருட் பெருக்கே”

என்று பொன்னையா அவர்களால் புகழ்ந்து பாடப்பட்ட முருகனுடைய திருவூஞ்சற் பிரபந்தமானது 1962ஆம் ஆண்டில் அவரது உறவினர் ஒருவரால் இரண்டாம் பதிப்பும், 2004ஆம் ஆண்டு சி.முருகவேள் அவர்களால் மூன்றாம் பதிப்புமாக இதுவரை மூன்று பதிப்புக்களாக வெளியாகியுள்ளது. புங்கடியில் வீற்றிருக்கும் புவனேஸ்வரி அம்பாள் மீதும் பொன்னையா அவர்கள் திருவூஞ்சற் பிரபந்தம் இயற்றியுள்ளார். காப்பிலிருந்து மங்களம் ஈறாக 19 பாடல்கள் கொண்டது.

பொன்னையா ஸ்தாபித்த மடமானது சடைவரதரின் குருவான பொன்னம்மா சாமியின் வருகையின் பின் முற்றுமுழுதாக சைவசித்தாந்த நெறியிலேயே இயங்கிக் கொண்டிருந்தது. பொன்னையா, சிவஞானபோதம் சிவஞானசித்தியார் முதலான சித்தாந்தப் புதையல்களிலேயே மூழ்கிக் கிடந்து பேரின்பத்

திளைப்பினை அனுபவித்தார். நாளடைவில், அவருக்கு தாமே வடமொழியைக் கற்று நேரடியாக வேதங்கள் உபநிடதங்களிலுள்ள சித்தாந்த நறுந்தேனை நுகர்ந்து மகிழவேண்டு மென்ற பேரவா ஏற்பட்டது. அதன் காரணமாக வயதான நிலையிலும் சுன்னாகம் பிராசீன பாடசாலையில் அம்மொழியினைக் கற்றார். இதற்கு ஓர் உந்துசக்தியாய் தூண்டுகோலாய் அவருடைய சீடர் இருந்தார் என்றே சொல்லாம். அக்கால கட்டத்தில்தான் சீடரும் சமஸ்கிருத மொழியினைக் கற்றார். எனவே, "குருவும் சீடனும் கூடிக் கலந்து" என்ற பாடல் வரி போல முன்னிரவு வேளைகளில் இருவரும் சிறிய வீட்டின் திண்ணையிலே அமர்ந்து சைவசித்தாந்த சாகரத்துள் மூழ்கித் திளைப்பார்கள்.

இவர்கள் இருவரினதும் சேர்க்கையின் விளைவாய் சம்பாஷணைகளின் பயனாய் சிறந்த சிந்தனை முத்துக்கள் பிறந்தன.

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்றெண்ணினார் பொன்னையா. தாம் படித்துச் சுவைத்த உபநிடதப் பேரமுதத்தை மொழி பெயர்த்து அவற்றிற்கு தமிழில் உரைவிளக்கக் குறிப்புக்களும் எழுதி இந்துசாதனம் என்னும் சமயப் பத்திரிகைக்கு அனுப்பினார்.. சுவேதாசுவதரம், கைவல்யம், பஸ்மஜாலம் ஆகிய உபநிடதங்களின் உரைகள் 1943 – 1945ஆம் ஆண்டுகளில் வாராவாரம் பிரசுர மாகின. சங்கரர் உபநிடதத்துக்கு எழுதிய உரைக்கு இணையாக பொன்னையா வின் உரைகளும் அமைந்துள்ளதாக கற்றோர் போற்றினர்.

அறுபது வருடங்களுக்கு மேலாக அந்த அற்புதமான ஆக்கங்கள் இந்து சாதனம் இதழ்களில் புதையுண்டு கிடந்தன. 2007ஆம் ஆண்டு பொன்னையாவின் வழித்தோன்றலான சி.முருகவேள் அவர்கள் யாழ் பல்கலைக்கழக நூலகத்தி லிருந்து இந்துசாதனப் பிரதிகளில் அவரது கட்டுரை ஆக்கங்களின் புகைப்படப் பிரதிகளைப் பெற்று அவற்றைத் தொகுத்து உரை, பதவுரை, குறிப்புக்கள், பொழிப்புரை என்ற பகுதிகளோடு, "சிவஞானசம்பத்தைப் பெறுவதற்கு இது முதல் நிலை நூல்" என்ற விமர்சனத்துடன் சுவேதாசுவதரம் (மூலமும் உரையும்) உரை ஏழாலை ஐ.பொன்னையா என்ற பெயரோடு அழகிய நூலாகப் பதிப்பித்து பொன்னையா அவர்களின் அறுபதாவது குருபூசைத் தினத்தன்று கொழும்பு தமிழ் சங்கத்தில் வெளியீடு செய்தார். இந்நூலில் ஐ.பொன்னையா அவர்களின் முன்னுரையும் இடம்பெற்றுள்ளது. 1943 – 1945ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்து சாதனப் பிரதிகளில் வெளியான உபநிடத உரைகளுக்காக அவர் எழுதிய முன்னுரை. அதில் "வடமொழி எழுத்துக்கள் இல்லாத குறையினால் உபநிடத மந்திரங்களும் தமிழெழுத்திலேயே பதிப்பிக்கப்படுகின்றன. புத்தக ரூபத்தில் அக்குறை இருக்கமாட்டாது" என்று குறிப்பிட்டிருக்கிறார். அவருக்கு அதனை

புத்தகமாக வெளியிடும் எண்ணம் அப்போதே இருந்திருக்கிறது என்பது இதிலிருந்து தெரிகிறது. ஆயினும் அவரது உடல் நலம்குன்றி இறைபதம் சேர்ந்ததால் அது நிறைவேறவில்லை. ஆனாலும் அறுபது வருடங்களுக்குப் பிறகு அழகான முறையில் "ஓம் ஸஹநாவவது / ஸஹநௌபுநக்து / ஸஹவீர்யம் கரவாவஹை / தேஜஸ்வி நாவதீதமஸ்து / மாவித்விஷாவஹை" என்ற சாந்தி மந்திரத்துடன் ஆரம்பமாகி சிறந்த, பயனுள்ள நூலாக வெளிவந்துள்ளது சைவர்க ளாகிய நாம் செய்த தவப்பயனே ஆகும்.

பொன்னையா அவர்கள் எழுத்தால் மட்டுமன்றி பேச்சாலும் சைவசித்தாந்தப் பணி செய்துள்ளார். பல ஆண்டுகளாக கீரிமலை, காரைநகர், வண்ணார்பண்ணை ஆகிய இடங்களிலே சைவசித்தாந்த விளக்கஉரை நிகழ்த்தியுள்ளார். யாழ் இந்து ஆரம்பப்பள்ளியில் நடைபெற்ற சைவமகா நாடுகளிலும் பிரசங்கம் நிகழ்த்தியிருக் கிறார். சித்தாந்தக் கொள்கைகளுக்கு யாராவது தவறான விளக்கம் கூறும்போது அவர்களைக் கண்டிக்கவும் தயங்கமாட்டார். பிறசமய ஆதிக்கமும், அந்நிய கலாச்சார ஊடுருவல்களும், ஆங்கில உத்தியோக மோகமும் நம்மவரை அமுக்கிக் கொண்டிருந்த காலகட்டத்தில், மிக உறுதியாக நின்று நம் கலாச்சார மரபுகளைப் பேணி சைவத்தின் மிகப்பெரிய காவலனாக செயற்பட்டார். எழுத்தாலும், பிரசங்கத்தாலும், சாதனைச் செயல்களாலும் சைவமத எழுச்சியை ஏற்படுத்திய பொன்னையா, எமது சைவக் குழந்தைகளுக்காக செயற்படுத்திய கல்விப் பணியானது போற்றத்தக்கதாகும்.

**சைவப் பாடசாலை ஸ்தாபிதம்**

பொன்னையா அவர்கள் நெற்றியிலே திருநீறு, சந்தனம், குங்குமம், கழுத்திலே ஒற்றை உருத்திராக்கம் என்று சிவசின்னங்களோடு வாழ்ந்த சைவாசார சீலராக விளங்கியவர். எமது சைவப்பிள்ளைகள் சைவ ஒழுக்கங்களின் வழிநின்று கல்வி கற்கக்கூடிய பாடசாலை இல்லையே என்று பெரிதும் மனம் வருந்தினார். அவர் கல்வி கற்றபோது சி.வை.தாமோதரம்பிள்ளையின் சைவப் பிரகாச வித்தியாசாலை இருந்தது. அப்பாடசாலையும் 22 வருட ஆயுளுடன் மறைந்து விட்டது. எமது ஊரின் வடக்கு, கிழக்கு, தெற்குப் பகுதிகளில் மிஷனரிமாரின் பாடசாலைகளே இருந்தன. எமது பிள்ளைகளுக்கு சைவ ஆசார அனுட்டானங்களை அங்கே எதிர்பார்க்க முடியாது. எனவே தூய சைவப் பாடசாலை ஒன்றினை நிறுவும் எண்ணம் அவருக்கு ஏற்பட்டது.

1910களில் அவர் சாதுசங்க மடத்தை ஏழாலை மேற்கிலே ஸ்தாபித்து அந்தச் சூழலை அடியார் கூட்டமும் சாதுக்கள் வருகையும், மெய்ஞ்ஞானத் தேடலுமாக ஓர் புதிய பரிணாமம் பெற்ற இடமாக ஆக்கியிருந்தார். எனவே பாடசாலை

அமைக்கத் தகுதியாகத் தெரிந்த அந்தச் சூழலிலே, மடாலயத்திற்கு வடக்குப் புறமாக 1919ஆம் ஆண்டில் சுன்னாகம் குமாரசாமிப் புலவரைக் கொண்டு வித்தியாரம்பம் செய்வித்து சைவசன்மார்க்க வித்தியாசாலையை தொடக்கினார். பின்னர் பொன்னையா அவர்களின் தலைமையில் சைவசன்மார்க்க சபை ஒன்று அமைக்கப்பட்டது. சபையின் அங்கத்தவர்கள் இயன்றளவு பணம் சேர்த்து பாடசாலையைப் பரிபாலித்து வந்தனர். ஒருசில வருடங்களில் பணம் சேர்க்கும் முயற்சி சிரமமாகப்பட்டதால், பாடசாலையின் வளர்ச்சி குன்றிவிடுமோ என்று ஏக்கமடைந்தபொழுது இவ்விடத்தைச் சேர்ந்த பெருந்தகையாளர் திரு.நீலயினார் கதிரிப்பிள்ளை அவர்கள் தமது சொந்த வருவாயினால் பாடசாலையைப் பராமரிக்க முன்வந்து அன்றைய பிரதேச முகாமையாளரும் ஆனார்.

பொன்னையாவின் அறிவுசார்ந்த தலைமைத்துவமும், நீ.கதிரிப்பிள்ளையின் முகாமைத்துவமும் இணைந்து செயற்பட்டதில் 1922ஆம் ஆண்டு அரசின் அங்கீகாரம் பெற்றதோடு 1925ஆம் ஆண்டு அரச நன்கொடை பெறவும் தகுதி பெற்றது. இவ்வாறு வளர்ச்சியடைந்த பாடசாலையில் 1928ல் முதன்முதலாக நடைபெற்ற எட்டாந்தரப் பரீட்சையில் அத்தனை மாணவர்களும் திறமையாகச் சித்தியடைந்தனர்.

அடுத்த ஆண்டில் சைவசன்மார்க்கசபை திருத்தி அமைக்கப்பட்டபோது பொன்னையா அவர்களின் சகோதரரான ஐ.பேரம்பலம் அவர்கள் புதிய முகாமை யாளரானார். பின்னர் பாடசாலைக்குப் புதிய கட்டிடமொன்றும் அமைக்கப்பட்டது. 1942ஆம் ஆண்டு வரை கனிஷ்ட பாடசாலையாக இருந்த சைவசன்மார்க்க வித்தியாசாலை அடுத்த ஆண்டு சிரேஷ்ட பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது. 1945ல் இப்பாடசாலையின் 5ஆம் வகுப்பு மாணவர் நால்வர் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தனர். பொன்னையா அவர்கள் தொடக்கி வைத்த இப் பாடசாலையானது இடையில் சிறிது தளர்வுற்றபோது திரு.நீலயினார் கதிரிப்பிள்ளை அவர்கள் தோள் கொடுத்ததின் காரணமாக புத்துயிர் பெற்று வளர்ச்சியிலே எழுச்சி கண்டு இன்று மாடிக்கட்டிடங்களுடன் சகல பௌதிக வளங்களுடன் வருடம்தோறும் இருபது மாணவர்களுக்கு மேல் புலமைப்பரிசில் பெறுபவர்கள் என்ற பெருமையுடன் விளங்குகின்றது.

மடாலய ஸ்தாபகரான பொன்னையா தொடக்கி வைத்த இப் பாடசாலை 1942ஆம் ஆண்டிலிருந்து மடாலயத்தில் சுந்தரமூர்த்திநாயனார் குருபூசையை மாகேசுர பூசையுடன் பாடசாலை ஆசிரியர் மாணவர்களின் உபயமாகச் செய்து வரும் சிறப்பினைக் கொண்டு விளங்குகிறது. மடாலயத்தையும், பள்ளிக்

கூடத்தையும் அருகருகாக அமைத்து இந்தச் சூழலிலே சைவமத கலாச்சாரம் மேலோங்கி நிற்கச் செய்த பொன்னையா அவர்கள் என்றும் போற்றுதற்குரிய வராவார்.

**சித்த வைத்தியப் பணிகள்**

அருளானந்தசிவம் என்னும் தீட்சாநாமம் பெற்ற பொன்னையா பரிகாரியார் தமக்குப் பரம்பரைக் கொடையாகக் கிடைத்த சித்த வைத்தியத்தைப் புனிதமான தோர் பணியாகச் செய்து வந்தார். தந்தையாரான ஐயம்பிள்ளை பரிகாரியாரிட மிருந்து நோயறிதல், மருந்தாக்கல், மற்றும் வைத்திய முறைகளைக் கற்றுக் கொண்ட பொன்னையா அவர்கள் ஈழத்துச் சித்தவைத்திய வரலாற்றில் ஓர் எழுச்சியை ஏற்படுத்த வேண்டும். வளர்ச்சியிலே முன்னேற்றத்தைக் காட்ட வேண்டும் என்ற எண்ணத்தோடு அதற்கு அடிப்படையான ஏடுகளைத் தேடி எடுத்தார். யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதிலும், வன்னிப் பிரதேசத்திலும் தேடி ஏடுகளையும், கையெழுத்துப் பிரதிகளையும் பெற்றுக்கொண்டார். சித்த வைத்தியத்துறை மீது மிகுந்த பற்றும், சமூக நோக்கும் கொண்ட அவர் சிதைவுற்ற ஏடுகளைக் கண்டு மனம் வருந்தி அவற்றைப் பதிப்பித்து நூலாக வெளியிடும் முயற்சியில் இறங்கினார். யாழ்ப்பாணத்து வைத்திய நூல் வெளியீடு என்று ஆரம்பித்து பதின்மூன்று வைத்திய நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டார் என்று சொல்லப்படுகிறது.

1927ஆம் ஆண்டு, இருபாலைச் செட்டியாரால் இயற்றப்பட்ட வைத்திய விளக்கம் என்னும் அமிர்தசாகரம், பதார்த்த சூடாமணி ஆகிய இரண்டு வைத்திய நூல்களையும் யாழ்ப்பாணம் சைவப்பிரகாச அச்சுயந்திரசாலையில் பதிப்பித்து வெளியிட்டார் பொன்னையா. அமிர்தசாகரம் என்னும் நூல் நாடிகளின் தோற்றம், தொழில் ஆகியவற்றையும் சுரவகை, புண், பற்பேத்தை, கபாலம், கயரோகம், நீரிழிவு, சன்னி, சூலை முதலான கொடும் நோய்களையும் அவற்றின் தன்மை களையும், அவற்றிற்குரிய சூரணம், மாத்திரை, தைல வகையிலான சிகிச்சை முறைகளையும் கூறுகிறது. பதார்த்த சூடாமணியில் பஞ்சபூதங்களின் குணங்களும், உடலுக்கேற்ற உணவு வகைகளின் தன்மைகளும், உலோக வகை களின் மருத்துவக் குணங்களும் ஆராயப்பட்டுள்ளன. இவ்விரு நூல்களுக்கும் சிறப்புப்பாயிரம் எழுதிய பிரம்மஸ்ரீ.சி.கணேசையர் பதிப்பாசிரியர் பொன்னையா வின் வைத்தியத்திறமை பற்றிப் பின்வருமாறு கூறுகிறார். பிணிநிலை தெரிந்து தணிவுறப் பெரிது மருந்தருள் வண்மை பொருந்திய பண்பினன்.

இவ்வாறு புகழ்ந்த வித்துவசிரோமணி கணேசையர் “சொக்கநாதர் தன் வந்திரியம்” என்ற வைத்திய நூற் பதிப்பிலே

"ஏழாலை என்று பெயரெய்தியவூரிடை வைத்தியசிகாமணியாகி மருவிய ஐயம்பிள்ளை முன் செய்த தவத்தான் முன் வந்துதித்த நன்மாணிக்கம் இலக்கண இலக்கிய மினிதுணர்புலவன் சுத்தாத்துவித சைவசித்தாந்தி சிற்றம்பலவன் நித்தம் புரிநடம் என்று முளந்தனிலொன்றை

வைத்துணர்பவன்"

என்று போற்றுகின்றார். மாவிட்டபுரம் சொக்கநாதக் குருக்கள் என்பவரால் இயற்றப்பட்ட தன்வந்திரியம் உக்கிரகாண்டம், சௌமியகாண்டம் ஆகிய இரு பிரிவுகளைக் கொண்டுள்ளதாகவும், மானிட, தேவ, அசுரவைத்திய முறைகளும் குழந்தைகள், கர்ப்பிணிகள், முதியோருக்கான எளிமையான சிகிச்சை முறைகளும் காணப்படுவதாகவும் விளங்குகிறது. சொக்கநாதர் தன் வந்திரியம் என்ற இந்நூல் 1933ஆம் ஆண்டு பொன்னையாவின் சொந்த அச்சகமான திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது. பொன்னையா அவர்களால் பதிப்பிக்கப்பட்ட மிகமிகப் பயன்படுத்தப்படும் நூலாகக் கணிக்கப்படுவது "செகராசசேகர வைத்தியம்" என்னும் நூல் வியாதிவரும் வகை, நாடிவிதி, வாதபித்தசுரம், சளிவாதசுரம், விஷசுரம், சன்னி, மூலவியாதி, கசரோகம், குட்டரோகம் முதலான பல நோய்களுக்கான குணங்களும், மருந்துகளும் இந்நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. செகராசசேகர நூலுக்கு பரமேஸ்வராக் கல்லூரியின் தலைமைத் தமிழாசான் நவநீதகிருஸ்ண பாரதியார் இயற்றிய சாற்றுக்கவி, "அகப்புற மருவிய அகலாநோயெலாம் போக்கும் வைத்தியனார்க்குத் திருவினன்" என்று பொன்னையாவைப் புகழ்கிறது. மேலும் அவருடைய ஆன்மீக நெயிறிலமைந்த வாழ்க்கையை நவநீதகிருஷ்ண பாரதியார் பின்வருமாறு போற்றிப் பாடுகிறார்.

"சாரங்கனிந்த சைவசித்தாந்தத்து, ஈரங்கனிந்த வின்றமிழ்ச் சிந்தையன் திருத்தகு தொண்டர் கருத்தொடு நாவினும் பொருந்தி விளையாடும் புண்ணிய வாழ்க்கையன்" கரணவாய் பண்டிதர் செல்வந்திநாத தேசிகர் பாடிய செகராசசேகர சாற்றுக்கவி வரியானது "மக்களுடற் கூறறிந்து மருந்துதவிப் பிணியகற்றும் வன்மையாளன்" என்று பொன்னையாவைப் போற்றுகிறது. அவரால் பதிப்பித்துப் பாதுகாக்கப்பட்ட செகராசசேகரம் என்னும் வைத்தியநூல் மாகாண சுதேச வைத்தியத் திணைக்களத்தால் 2000ஆம் ஆண்டு மறு பதிப்புச் செய்யப்பட்டது.

1930ஆம் ஆண்டு வைத்தியத் தெளிவு (அனுபந்தத்துடன்) என்னும் நூலை பொன்னையா அவர்கள் திருமகள் அச்சுயந்திரசாலையில் பதிப்பித்தார். 500 செய்யுட்களைக் கொண்ட இந்நூலில் 202 செய்யுள்களே பெற்றுக்கொள்ளக் கூடியதாயிருந்ததால் அவற்றையாவது பாதுகாக்கும் எண்ணத்தோடு பதிப்பித்தார். அங்காதிபாதம் என்ற நூல் 1936ஆம் ஆண்டிலும், வைத்தியபூரணம் என்னும் நூல்

1938ஆம் ஆண்டு மல்லாகம் திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலையிலும், வைத்தியசிந்தாமணி 1932ஆம் ஆண்டு ஏழாலை திருஞானசம்பந்தர் அச்சுயந்திர சாலையிலும் பதிப்பிக்கப்பட்டதாக அந்நூல்கள் தெளிவுபடுத்துகின்றன.

1930ஆம் ஆண்டு முதல் 1936ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பொன்னையா அவர்களால் "பரராசசேகரம்" ஏழு பாகங்களாக வெளியிடப் பட்டுள்ளது. 1930ல் முதல்பாகம் பதிப்பிக்க ஆரம்பித்து வருடந்தோறும் ஒவ்வொரு பதிப்பாக ஏழு பாகங்களையும் பதிப்பித்தார். ஐந்தாம் பாகம் 1935ல் மல்லாகம் திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலையிலும் ஏழாம் பாகம் 1936ஆம் ஆண்டு மல்லாகம் திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலையிலும் பதிப்பிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகவல்களை நோக்குமிடத்து பொன்னையா அவர்கள் திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலையை 1932ஆம் ஆண்டு ஏழாலை மடாலய வளாகத்தில் நிறுவி, பின்னர் 1935ஆம் ஆண்டு அதனை மல்லாகம் சந்திக்கு அருகாக இடமாற்றம் செய்திருக்கிறார் என்பது தெரிகிறது. அவருடைய ஒரேயொரு மகனது பெயர் சம்பந்தர். அவரது பெயரைக் குறித்தே அச்சகத்திற்கும் அப்பெயர் சூட்டியிருக்க வேண்டும். மல்லாகத்தில் அச்சகம் இடம்மாற்றி நிறுவப் பட்டபோது, தமது சகோதரி சின்னாச்சியின் மகனான திருநாவுக்கரசு அவர்களை பயிற்றுவித்து அச்சகப் பொறுப்பாளராக அவரை நியமித்தார்.

ஏழாலையின் கிழக்கிலே உதயசூரியனாகத் தோன்றி திருமணபந்தத்தின் காரணமாக ஏழாலை மேற்குக்கு ஞானசூரியனாகப் பிரவேசித்து அங்கே மடாலய ஸ்தாபிதம், சைவசன்மார்க்க வித்தியாசாலை ஸ்தாபிதம், அச்சக ஸ்தாபிதம் என்று பல சாதனைச் செயல்கள் புரிந்து, சித்தாந்தப் பேரறிஞராக, புராணீகராக, பண்ணிசையாளராக, உரையாசிரியராக, பதிப்பாசிரியராக, சஞ்சிகை ஆசிரியராக, சித்தவைத்தியராக, சமய சமூகத் தொண்டராக, பல்வேறுதரப்பட்ட வழிகளில் பெரும் சேவையாற்றிய ஐ.பொன்னையா அவர்கள் 1948ஆம் ஆண்டு தை மாதம் 30ஆம் திகதி இறைபதம் எய்தினார். அச்சம்பவத்தை நேரில் பார்த்த அவரது உறவினரான ஒரு பெண்மணியின் கூற்று இது.

"பொன்னையா அவர்கள் அன்றைய தினம் தமது வீட்டில் சாய்மனைக் கதிரையில் சாய்ந்தவாறு சிறிது உடல்நலம் குன்றிய நிலையில் என்னோடு பேசிக் கொண்டிருந்தார். அவர் திடீரென்று எழுந்து தமது புத்தகங்கள் அடுக்கி வைக்கப் பட்டிருந்த அலுமாரியருகே சென்று அலுமாரியில் சாய்ந்தவாறு சப்பாணிகட்டி அமர்ந்து, இரு கைகளையும் நீட்டி தம் தொடைகளின் மீது வைத்தவாறு கண் களை மூடிக்கொண்டார். அக்கணமே எந்தவித அசைவையும் காணவில்லை. பெரியவர்கள் வந்து பார்த்து அவர் சமாதிநிலை எய்தியதாகக் கூறினர்".

பொன்னையா அவர்கள் தமது குருவான சடைவரதரினால் விசேட தீட்சைகள் அளிக்கப்பட்டு அருளானந்தசிவம் என்ற தீட்சாநாமமும் சூட்டப்பட்டு அதற்குரிய முறையில் வாழ்ந்து சமாதிநிலை அடைந்தவர். எனவே அதற்கேற்ற வகையில் சமாதிநிலையெய்திய அதே கோலத்தில் அவரை வைத்து அபிஷேக ஆராதனைகளுடன் அவருக்குரிய கிரியைகள் செய்யப்பட்டன. அன்றைய தினம் தை மாத உத்தர நட்சத்திரமாகும். அடுத்த ஆண்டு அதே நாளில் பிள்ளையாரின் எழுந்தருளி விக்கிரகம் மடாலயத்தில் பிரதிஷ்டை செய்ததுடன், வருடம்தோறும் இதே தினத்தில் விநாயகருடைய அபிஷேகத்தோடு பொன்னையா அவர்களின் குருபூசையும், மாகேசுர பூசை மற்றும் அன்னதானத்துடன் நிகழ்ந்து வருகிறது. குரு சடைவரதரின் குருபூசையும் ஆடி மாத உத்தரமாகும்.

ஏழாலை மண்ணிலே பிறந்து அதே மண்ணிலே வாழ்ந்து அரும்பெரும் பணிகளாற்றி, ஆங்கிலேய உத்தியோக மோகம் கொள்ளாமல் சுதேச வைத்தியத் திற்குப் புத்துயிரூட்டி வளர்த்து, தூய சைவத்தமிழ்த் திருமகனாக வாழ்ந்து, உடை, நடை, பாவனைகளில் உண்மையான தமிழ்ப்பண்பாடுகளோடு திகழ்ந்து, இந்த ஊர் பெருமையுறும் வண்ணம் வாழ்ந்த பொன்னையா அவர்கள் இம்மண்ணின் மாணிக்கமாவார்.



வைத்திய மூதறிஞர்
ஐயம்பிள்ளை பேரம்பலம் அவர்கள்

கடலிலே முத்துக்கள் விளையும். மண்ணுக்குள்ளே இரத்தினக்கற்கள், வைரம் முதலான விலைமதிப்பற்ற மணிகள் விளையும். எமது ஏழாலைக் கிராமத்து மண்ணிலும் பெறுமதிமிக்க பல மணிகள் உற்பத்தியாகி உள்ளன. ஏழாலையின் கிழக்குப் பகுதியிலே அறுகுபோல் வேரூன்றி ஆல்போல் தழைத்திருந்த பிரசித்தி பெற்ற குடும்பமாகிய ஐயம்பிள்ளை தெய்வானை தம்பதியரின் குடும்பம் சிறப்பு வாய்ந்த நன்மணிகளை இச்சமூகத்திற்கு ஈந்துள்ளது. ஆன்மீகஞான வாரிதியும் சித்தாந்தப் பேரறிஞரும், தமிழ்ப்புலவரும், சித்தவைத்தியருமான ஐ.பொன்னையா அவர்கள் ஐயம்பிள்ளை தம்பதியர் வழங்கிய முதல் மணியாவார். ஐயம்பிள்ளை குடும்பத்தவர் ஏழாலைக் கிராமத்துக்கு உவந்தளித்த மற்றுமொரு மாமணியாக விளங்கினார் ஐ.பேரம்பலம் ஐயா அவர்கள்.

இவர் 1889ஆம் ஆண்டு ஏழாலையின் கிழக்குப் பகுதியிலே ஐயம்பிள்ளை தெய்வானை ஆகியோரின் கனிஷ்ட புத்திரராகப் பிறந்தார். பொன்னையா, நாகலிங்கம், சுப்பிரமணியம் ஆகிய அண்ணன்மார் மூன்றுபேர், சின்னாச்சிப் பிள்ளை, விசாலாட்சி ஆகிய சகோதரிகள் இருவர், தாய் வழியில் மாமன்மார் மூவர். இவர்களெல்லோருக்கும் செல்லப் பிள்ளையாயும், செல்வப் பிள்ளையாயும் வளர்ந்தார்.

பேரம்பலம் அவர்கள் தம் ஆரம்பக் கல்விக்காக திண்ணைப் பள்ளிக் கூடத்தை நாட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அவரது தந்தையார் ஐயம்பிள்ளை அவர்கள் பரம்பரைச் சித்த வைத்தியராகவும், குறைவில்லா தெய்வ பக்தி கொண்டவராகவும், அறிஞராகவும் விளங்கினார். மூத்த தமையனார் பொன்னையா அவர்கள் சகலவிதத்திலும் தமிழ்ப்பாண்டித்தியம் பெற்றவராகவும், ஆன்மீக ஞானியாகவும், சுதேச வைத்தியராகவும் திகழ்ந்தார். முதலாவது மைத்துனர், அவரும் பொன்னையா என்ற பெயர் கொண்டவர்தான். "பால் கட்டும் டாக்குத்தர்" என்ற பதவியை வகிக்கும் தகைமையாளராக இருந்தார். இளைய மைத்துனர் விதானையார் கணபதிப்பிள்ளை புராணபடனம் செய்வதிலும் திருமுறை ஓதுவதிலும் வல்லவர். இந்த வகையில் சிறுவராக இருந்த பேரம்பலத்துக்கு அவரது பிறந்த வீடே கல்விக்கூடமாகவும், வைத்தியபீடமாகவும் அமைந்தது. அந்தச் சூழலுக்கேற்ப அவர் தம் அறிவை வளர்த்து மனதில் பக்குவ நிலையையும் ஏற்படுத்தினார்.

ஆயினும், 1903ஆம் ஆண்டளவில் கந்தரோடை ஆங்கில வித்தியாசாலையில் ஆங்கிலம் கற்பதற்காக பெற்றோரால் சேர்க்கப்பட்டார். ஆனால், அவருடைய மனம் அதில் ஈடுபட மறுத்தது. அந்நிய நாட்டுப் பழக்க வழக்கங்களையும், அந்நியக் கலாச்சாரத்தையும் எம்மிலே திணிக்கக்கூடிய அந்நிய மொழிக்கல்வி

தமக்குத் தேவையில்லை என்று வெறுத்தார். அந்தக் காலகட்டத்திலே, நீளக்காற்சட்டை, சேட் போட்டு உத்தியோகம் பார்க்க வேண்டுமென்ற மோகத்திலே எம்மவரிற் பலர் மிஷனறிப் பாடசாலைகளிலோ அல்லது வேறு பாடசாலைகளிலோ சேர்ந்து ஆங்கிலம் கற்பதில் ஆர்வம் காட்டி வந்தனர். ஆனால், பேரம்பலம் ஆகிய இச்சிறுவரோ சுதேச வைத்தியத் தொழிலிலும், சுதேசப் பழக்க வழக்கங்களிலும், யாழ்ப்பாணத்துக்குரிய ஆன்மீக நெறிகளிலும், எமது கிராமியப் பண்பாடுகளிலும் மனதைப் பறிகொடுத்தவராய், ஆங்கிலக்கல்வி தமக்கு வேண்டாமெனத் துறந்து அதனை விட்டுவிட்டு வந்தார். அவ்வாறு வந்தவரை நமது வாழ்வியலின் பண்பாட்டுச் சீலங்கள் வருகவருக என வரவேற்றன.

**சடைவரத சுவாமிகளின் சந்திப்பு**

பேரம்பலம் அவர்களுடைய சிந்தனைகள், விருப்பங்களுக்கேற்ப அப்போது சூழ்நிலை உருவாகியிருந்தது. அவருடைய அண்ணனார் பொன்னையா அவர்கள் ஏழாலை மேற்கிலே செல்லமுத்துவைத் திருமணம் செய்து அவ்விடத்தையே தம் வாழ்விடமாக்கி வாழ்ந்து கொண்டிருந்த அந்த ஆயிரத்துத் தொளாயிரங்களில், வேதாந்தஞானம் பெற்ற "மலடியார்" என்ற அம்மையாரின் ஆன்மீக ஆய்வுக் கூடல்கள், சம்பாஷணைகளில் பங்குபற்றி மெய்யறிவில் மேன்மை பெற்றுக் கொண்டிருந்த வேளையில் அவ்விடத்துக்கு வருகைதந்த பெரும் ஞானியாகிய சடைவரத சுவாமிகளின் தரிசனம் பெற்று, குருசீட உறவைத் தம்முள்ளே ஏற்படுத்தி, தம்முடைய வீட்டினையே ஆன்மீக மெய்யியல் செயற்பாடுகளுக்குக் களமாக்க, அவ்விடத்தில் ஒரு சித்தர் பரம்பரை உருவாகும் நிலை சாத்தியமாகும் அற்புதமான ஒரு காலகட்டத்தில்தான் ஆங்கிலப் படிப்பை உதறிவிட்டு அண்ணருடைய மெய்ஞ்ஞானச் சூழலை நோக்கி ஓடி வந்தார் பேரம்பலம். வந்த இடத்தில் சடைவரத சுவாமிகளைக் கண்டார். நல்ல வெண்மையான நிறம், உயரம் குறைவான பருத்த உடம்பு, அரையில் ஒரு காவித்துண்டு, வட்ட வடிவமான முகம், அடர்த்தியான கறுப்புநிறத்தாடி, நெற்றி நிறைய விபூதிப்பூச்சு, ஞானம் பொழியும் அருள் வழியும் கூர்மையான கண்கள் ஒரு பார்வையிலேயே இருவருக்குமிடையே பாசப் பரிமாற்றம் நிகழ்ந்தது.

தேடிப்போன மூலிகை காலில் பட்டது போலவும், கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போலவும் மகிழ்ந்து, உணர்ச்சிப் பரவசமானார் பேரம்பலம் அவர்கள். இவரைத்தான் இதுவரை நான் தேடித் திரிந்தேன் என்பது போல கண்ணில் கண்ட பின் சடைவரத சுவாமியின் பின்னால் நிழல்போல, பதின்மூன்று வயதுப் பால்யத் துறவிபோல சுற்றினார். சுவாமியிடமிருந்து அவருக்கு அடிக்கடி ஆன்மீகப் பேரின்ப அனுபவ உணர்வுகள் கிடைத்தன. சுவாமி தமக்குத் திருநீற்றினை அள்ளி வழங்கியதையும், அதனை அணியும் போது தமக்குக் கிடைக்கும் அனுபவங்களையும் கண்கலங்கக் கூறிக்களிப்பார்.


சடைவரத சுவாமிகள்

*1910க்களில் சடைவரதரின் ஆசியுடன் சாதுசங்க மடத்தை ஏழாலையின் மேற்கிலே பொன்னையா அவர்கள் ஸ்தாபித்தார். அந்த இடத்தை நாடி வந்த அடியார் கூட்டத்திலே ஓர் இளம் துறவியாகக் காணப்பட்டார் பேரம்பலம். சித்தர்கள், சிவனடியாார்களுடன் சேர்ந்திருந்து பேரின்ப அனுபவ உணர்வுகளில் திளைப்பதுடன், அங்குவரும் அடியார்களின் தேவைகளை நிறைவேற்றுவதும், தமையனார் பொன்னையாவின் அற்புதமான செயற்பாடுகளுக்கு ஆதரவு நல்குவதும், சடைவரத சுவாமிகளுக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் வேண்டிய உதவிகளைச் செய்வதும், உணவளிப்பதும் பேரம்பலம் அவர்களின் பணியாக இருந்தது.*

*கிட்டத்தட்ட பதினேழு ஆண்டுகள் சாதுசங்க மடத்தில் தோன்றியிருந்த ஆன்மீக ஞான ஒளியில் முற்றுமுழுதாக மூழ்கி, அதன் காரணகர்த்தாவான சடைவரதசுவாமிகளின் பின்னால் திரியலானார்.*

*சடைவரத சுவாமிகள் அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அவருடைய தந்தையார் சுப்பையா தன் மகனுக்கு சரவணை என்று பெயரிட்டு அருமை பெருமையாக வளர்த்து வந்தார். முருகப்பெருமான் போல் மிக அழகான தோற்றம் உடையவர் சரவணை. நீராவியடியைச் சேர்ந்த ஓர் அம்மையார் சரவணையின் சுந்தர ரூபத்தைக் கண்டு, எட்டு வயதுச் சிறுவனாயிருந்தபோது தந்தையின் அனுமதியுடன் அவரைக் கூட்டிக்கொண்டு சென்று தம் வீட்டில் வளர்த்து வரலானார். நீராவியடியில் வளர்ந்து வரும் போது, கடையிற்சுவாமி களைத் தரிசித்து அவருடைய அருளாசியைப் பெற்றுக்கொண்டார் சரவணை. பிறவியிலேயே ஞானப்பேறு பெற்றிருந்த அவர் கொடிகாமத்தில் வாழ்ந்த முருகேசுச்சுவாமியாரை நாடிச்சென்றார். நீண்டகாலம் அவருடன் இருந்து உபதேசம் பெற்று, முருகேசுச் சுவாமியாரால் "சடைவரத சுவாமி" என்று ஞானப் பெயர் சூட்டப்பெற்றார். முருகேசுச்சுவாமி சமாதி அடையும் போது "என் சிஷ்யையான பொன்னம்மாளே இனி உனக்குக் குரு" என்று கூறினார். சடைவரத சுவாமி ஆகிவிட்ட சரவணை பொன்னம்மா சாமியை தம் குருவாகக் கொண்டு உசன் மடத்திலே தங்கியிருந்தார். அருளாளர்கள் எங்கெங்கே இருக்கிறார்களோ, ஆன்மீகம் எங்கெங்கே வளர்கிறதோ, தம் சீடர்கள் எங்கெங்கே இருக்கிறார்களோ என்பதனை ஞானக்கண்ணால் கண்டறிந்து அந்த இடங்களுக்குச் செல்வார் சடைவரதர். அத்தகையதொரு விஜயமாகத்தான் ஏழாலைக்கு சுவாமியின் வருகை நிகழ்ந்தது. முதலில், மலடியாரின் வேதாந்த விசாரணைகளில் பங்குபற்ற வந்தார். அப்படி வந்துபோகும் சந்தர்ப்பங்களில்தான் பொன்னையா அவர்களைக் கண்டார். பேரம்பலம் அவர்களையும் கண்டார். தம் குருவருளை அவர்கள் எதிர் பார்த்து நிற்பதையும் தம்முடைய சீடர்களாவதற்கு அவர்கள் காத்திருப்பதையும் ஞானதிருஷ்டியிலே கண்டார். சாதுசங்கமடம் அமைவதற்கும், மடாலயம்*

உருவாகுவதற்கும் மூலகாரணர் ஆனார். அவர்களை ஆட்கொண்டார். உபதேசம் செய்தார். தீட்சைகள் அளித்தார். தீட்சா நாமமும் கொடுத்தார். பொன்னையாவுக்கு அருளானந்தசிவம் என்றும் அவரது மனைவியாருக்கு அகிலாண்டம் என்றும், பேரம்பலத்துக்கு மகாலிங்கம் என்றும் ஞானப்பெயர் சூட்டி அவர்களது சிவஞானகுருவாகி வழி நடத்தினார்.

சடைவரத சுவாமிகளுக்கும், பேரம்பலத்துக்கும் ஏற்பட்ட ஞானத் தொடர்பானது ஆன்மா சம்பந்தப்பட்ட தொடர்பாக உயிர்த் தொடர்பாக அமைந்திருந்தது எனலாம். சுவாமி "எள்" என்றால் இவர் எண்ணெயாகவே நிற்பார். அப்படி ஒரு ஆத்மார்த்தமான பற்று அவர்களிடையே இருந்தது. சடைவரதர் செல்லும் இடங்களுக்குத் துணையாகச் செல்வதும் அவருக்குத் தேவையானதை நிறைவேற்றுவதையும் தம் உயிர்க்கடமையாகக் கொண்டு செயற்பட்டார் பேரம்பலம் அவர்கள்.

சடைவரதர் தம் சீடர்களைத் துறவிகளாயிருக்கும்படி கூறியதில்லை. சில சீடர்களுக்கு இல்லறத்தில் ஈடுபடவும் வழிகாட்டியிருக்கிறார். அவ்வாறே பேரம்பலம் அவர்களும் திருமணம் செய்து குடும்பஸ்தர் ஆனார். ஆயினும் சுவாமிகளுக்குச் செய்யவேண்டிய கடமையிலிருந்து அவர் சிறிதும் வழுவவில்லை. மேலும் சில கடமைகளைச் செய்ய இல்லறம் அவருக்கு ஏதுவாக இருந்தது. சடைவரதரும் அவருடைய குரு மற்றும் சீடர்களுமாக ஏழாலைக்கு வரும் போதெல்லாம் தம் வீட்டிலேயே சிறந்த வகையில் உணவளித்து மாகேசுர பூஜை செய்திருக்கிறார். விருந்தோம்பல் செய்து மகிழ்வதற்கு அவருக்கு இல்வாழ்க்கையே வழிவகுத்தது. அன்றியும், செல்வச்சந்நிதி, உசன் முதலான இடங்களிலுள்ள சடைவரதருடைய மற்ற மடங்களையும் பொறுப்பேற்று அவற்றைச் சிறந்த முறையில் பராமரித்து வந்தார். சடைவரதரின் குருவான பொன்னம்மாசாமி சமாதியடைந்த பின் உசன் மடத்தின் முழுப்பொறுப்பையும் பேரம்பலம் அவர்களே ஏற்று நடாத்தினார். இன்றும் செல்வச்சந்நிதியிலுள்ள சடைவரதருடைய மடத்திலே பேரம்பலம் குடும்பத்தவர்க்கு தனிமதிப்புண்டு. சடைவரதசுவாமிகள் ஏழாலை மடத்தில் தங்குவது போல் சந்நிதிமடம், உசன் மடங்களிலும் போய் தங்கியிருப்பது வழக்கமாகும். அவருடைய குரு பொன்னம்மாசாமியின் சமாதி அங்கிருப்பதால் உசன் மடத்தில் சிலவேளைகளில் கூடிய நாட்கள் தங்கிவிடுவார்.

1935ஆம் ஆண்டு ஆடி மாதம் உசன் மடத்தில் சில நாட்கள் தங்கப் போகிறேன் என்று சொல்லிவிட்டுப் போயிருந்தார் சடைவரதர். அங்கே அவருக்குச் சிறிது சுகவீனம் ஏற்பட்டிருந்தது.

அவரால் அருளானந்தசிவம் என்று நாமம் சூட்டப்பட்டிருந்த பொன்னையா குருவைத் தரிசிக்க உசன் மடத்திற்கு வந்திருந்தார். சடைவரதசுவாமிகளுடன் உரையாடிவிட்டு பொன்னையா ஏழாலைக்குப் போகப் புறப்பட்டபோது, சுவாமிகள் தம் சிஷ்யையான மங்கையற்கரசி அம்மையாரை நோக்கி, "நானும் தம்பியுடன் ஏழாலை மடத்திற்குப் போகிறேன்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டு விட்டார். சித்தர்கள் யோகிகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு காரண காரியத்தோடுதான் செய்வார்கள். அதைத் தடுக்க யாராலும் முடியாது.

சடைவரதரும் இறுதி நேரத்தில் தம் அருமருந்தன்ன சீடன் பேரம்பலத்தின் பணிவிடையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் ஏழாலைக்கு வந்தார். சுவாமி வந்ததை அறிந்த உடனேயே பேரம்பலம் அவர்கள் அவரைக் காண மடத்திற்குச் சென்றார். அன்றைய தினம் சுவாமிகளின் உடம்பில் வித்தியாசம் ஏதும் தெரியவில்லை. சுவாமியுடன் உரையாடிவிட்டு வீட்டுக்குத் திரும்பினார்.

மடாலயத்தில் தற்போது நால்வர் சந்நிதி அமைந்திருக்கும் இடத்தில் அப்போது ஒரு கொட்டகை இருந்தது. மறுாள் மாலை நான்கு மணியளவில் சடைவரதசுவாமிகள் பால் பருகிவிட்டு அந்தக் கொட்டகைக்குள் ஒரு சாய்மனைக் கதிரையில் படுத்திருந்தார். அந்நேரம் அங்கே வந்த பேரம்பலம் அவர்கள் சுவாமிகளின் காலை இதமாக உருவிவிட்டுக் கொண்டிருந்த போது சுவாமிகள் சடுதியில் மகாசமாதிநிலை எய்தினார்.

அக்காட்சியைத் தரிசிக்கப்பெற்ற பேரம்பலம் அவர்கள் அச்சம்பவம் பற்றி மற்றவர்களுக்குக் கூறியது இவ்வாறு:-

"நாற்காலியிற் சாய்ந்திருந்த சுவாமிகள் என்னைக் கண்டதும் நான் இங்கேதான் சமாதியிருக்கப் போகின்றேன் என்றார். சில நிமிடங்களில் காலுளைகிறது இந்தா ஒருக்கா உருவிவிடு என்றார். நான் உருவுகையில் சுவாமிகள் சட்டெனத் தலைதூக்கி நிமிர்ந்திருந்தார். இருந்தவாறே தேகவியோகமாயினார். சுவாமிகளின் முதல் வார்த்தையைப் பெரிதுபடுத்தாதிருந்த என் மடமை என்னைக் குலுக்கியடிக்கத் தொடங்கிவிட்டது". பேரம்பலம் அவர்கள் இவ்வாறு கவலையடைந்தாலும் குரு சமாதியடையும் போது அவரது காலைப்பிடித்து விடுகிற பாக்கியம் கிடைத்தது அவருக்குக் கிடைத்த பெரும்பேறாகும்.

சடைவரத சுவாமிகள் முத்தியடைந்த நாள் ஆடி மாத உத்தர நட்சத்திர மாகும். அவருடைய குருவான பொன்னம்மாசாமி முத்தி பெற்றதும் அதே உத்தர நட்சத்திரம்தான். சடைவரதர், பொன்னம்மா ஆகிய ஞானிகளின் குருபூசைத் தினத்தன்று பேரம்பலம் அவர்கள் உசன் மடத்திற்குச் சென்று அபிஷேக

ஆராதனைகள், மாகேசுரபூசை என்பவற்றை நடாத்தி குருபூசைத்தினத்தை அனுட்டித்து வந்தார். காலப்போக்கில், பிரச்சனைகளால் உசன் மடத்திற்குச் செல்ல முடியாதநிலை ஏற்பட்டதால், ஏழாலை மடாலயத்திலேயே சடைவரதர் குருபூசையைச் செய்து வந்தார். மடாலயத்திலுள்ள நடேசர் சந்நிதியின் முகப்பில் காட்சிதரும் சடைவரதசுவாமிகளின் திருவுருவப்படத்திற்கு மாலைசூட்டி, தூப, தீப, நைவேத்திய ஆராதனைகள் செய்து, பிள்ளையாருக்கும் அபிஷேக ஆராதனைகள் செய்து, திருமுறை விழாவும் மாகேசுர பூசையுமாக சடைவரதர் குருபூசை கொண்டாடப்பட்டு வருகிறது. பேரம்பலம் அவர்களின் காலத்திற்குப்பின் அவரது குடும்பத்தவர் குருபூசையினைச் சிறப்பாகச் செய்து வருகின்றனர்.

"சடைவரத சுவாமிகளின் திருவடியார் திருநாமாவளி" என்ற தலைப்பிட்டு சடைவரதர் மீது பூமாரி என்பவர் தோத்திரப்பாடல்கள் பாடியுள்ளார். அம்பலத்தரசே அருமருந்தே என்ற பாடலின் மெட்டிற்கமைய திருக்குறள் போல் ஈரடி கொண்ட முப்பத்தெட்டுப் பாடல்கள் அதில் இடம்பெற்றுள்ளன. அதில் சில வரிகள்.

அருளானந்தன் பெருமாளே ஏழாலை அடைந்தா யுத்தரத் திருநாளே
அகிலாண்டம்மா ளருங்குருவே ஏழாலை அடியார் குழுவின் பெருந்திருவே
பேரம்பலவன் சீரன்பே ஏழாலை பெற்றாய் மருளுக் கோரம்பே

என்ற இவ்வரிகள் பேரம்பலம் அவர்களுக்கும், அவரது அண்ணனாராகிய பொன்னையா (அருளானந்தசிவம்) அண்ணனுடைய மனைவியார் அகிலாண்டம் ஆகியோருக்கும் சடைவரதருடன் எற்பட்டிருந்த ஆன்மீக ஞானத் தொடர்பினை எடுத்துக் காட்டுகின்றது.

**இல் வாழ்க்கை**

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்றதுணை"

திருவள்ளுவரின் இக்கூற்றின்படி இல்லறத்தை நல்லறமாகக் கொண்டு வாழ்க்கைத் துணையுடன் வாழ்பவர்தான் துறவியர்க்கும், சிவனடியார்க்கும், இளம் சந்ததியினர்க்கும் உதவி புரிபவராக வழிகாட்டியாக விளங்குகிறார். அத்தகைய தொரு இல்வாழ்க்கையை வாழ்ந்து காட்டியவர் வைத்திய மூதறிஞர் ஐ.பேரம்பலம் அவர்கள்.

இவருக்கு முப்பது வயதில் திருமணம் நடைபெற்றது. ஏழாலை மேற்கைச் சேர்ந்த செல்லப்பா மீனாட்சி தம்பதிகளின் மூத்த புத்திரியான நல்லம்மா இவருடைய வாழ்க்கைத் துணையானார். இல்லறத்தில் ஈடுபட்டபோதும் அவர் இளம் வயதில் உளம்கொண்டுவிட்ட அடியார் கூட்டமும் ஆலயத் தொண்டுகளும் அவரது இதயத்தில் அழியா இடம்பிடித்து அடிக்கடி அவரை அவற்றிலும் ஈடுபடுத்திக் கொண்டேயிருந்தன.

வீட்டுக்கு வீடு வாசற்படி இருப்பது போல வாழ்க்கை என்றால் சோதனைகளும் இருந்தே தீரும். பேரம்பலம் அவர்களின் இல்லறத்தின் முதற்கனியாக ஆண் குழந்தை பிறந்தது. சிவபாதம் என்று பெயரிட்டார். ஆனால் அக் குழந்தை இவர்களுடன் இருக்கக் கொடுத்து வைக்காததால் இறந்து விட்டது. குழந்தைச் செல்வம் வேண்டி மதுரை மீனாக்ஷி சமேத சொக்கலிங்கப் பெருமானிடம் நேர்த்தி செய்தார். ஆலவாயில் அங்கயற்கண்ணியின் அருங்கொடையாக அழகேயுருவான ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு கனகசபாபதி என்று பெயரிட்டார். நேர்த்தியின் படி மதுரை மீனாக்ஷி அம்மன் ஆலயத்தில் குழந்தை கனகசபாபதிக்கு அன்னப்பிராசன வைபவம் நடைபெற்றது. வீட்டிலே செல்வச் செழிப்பும் வேலையாட்களும் அதிகம். அத்துடன் குருவான சடைவரத சுவாமிகளும், மற்றும் பொன்னம்மா சுவாமிகளும் அவரைச் சார்ந்தவர்களும் அவ்வவ்போது இவருடைய வீட்டுக்கு எழுந்தருளுவர். அடியார் கூட்டமும், திருவெண்ணீற்றொளியும், மாகேசுர பூசையுமாக ஒரு தெய்வீகச் சூழலிலேதான் கனகசபாபதி வளர்ந்தார். அவருக்கு அடுத்ததாகப் பிறந்த ஆண்குழந்தைக்கு சிவலிங்கம் என்று பெயர்சூட்டி சிவமயமாகவே வாழ்ந்து வந்தார்.

இந்நிலையில் பேரம்பலம் அவர்களுக்கு பெரும்சோதனையொன்று ஏற்பட்டது. இறைவன் தம் அன்பர்களைச் சோதிப்பது அவர்களைப் புடம் போட்டுப் பார்ப்பதற்காகவே. அவரும் சோதனைகளைத் தாங்கி புடம் போட்ட தங்கமாகத் திகழ்ந்தார்.

அவருடைய அன்புத் துணைவியான நல்லம்மா நோய்வாய்ப்பட்டு காலமானார். அவர் செய்யும் பணிகளான அடியார் உபசரிப்பு, விருந்தோம்பல், மாகேசுர பூசை யாவுமே தடைப்பட்டுப் போயின. இரண்டு பிள்ளைகளை வளர்க்கும் பொறுப்பும் இருந்தது. இந்நிலையில், அவருடைய பணிகளுக்கும், செயல்களுக்கும் வாழ்க்கைத்துணை வேண்டும் என்று பெரியோர்கள் தீர்மானித்து நல்லம்மாவின் சகோதரியான சின்னம்மா அவர்களை மணம் செய்து வைத்தனர். அந்த இல்வாழ்வின் பயனாக மேலும், வாமதேவன், பாலசுப்பிரமணியம், பத்மநாதன், மகாதேவன், புனிதவதி, இராஜராஜேஸ்வரி, சாரதாதேவி ஆகிய பிள்ளைச் செல்வங்களைப் பெற்றெடுத்து மகிழ்ந்தார். அவருடைய இரக்க சிந்தையை பரோபகார பண்பினைக் காட்டும் சம்பவமொன்று அவரது குடும்பத்தில் நிகழ்ந்துள்ளது.

பேரம்பலம் அவர்களின் மனைவியாரின் சகோதரி மகப்பேற்றின் போது காலமாகிவிட்டார். அநாதரவாகிவிட்ட அக்குழந்தை மாலினியை தாமே பொறுப்பேற்று தம் பிள்ளைகளுக்குச் சமமாக வளர்த்து ஆளாக்கினார். அவர் வசித்த இல்லமானது வருவோர் போவோர் அதிகமாகவும், அன்னசத்திரம் போல் வந்து

விருந்துண்டு செல்வோர் அதிகமாகவும், சித்தர் சிவனடியார்களின் சமூகம் அதிகமாகவும் இருந்ததால் எந்நேரமும் களைகட்டி கலகலப்பான இடமாக விளங்கியது.

அவர் தம் இளம்பராயத்திலே உயர்கல்வியை நாடாமல் சடைவரத சுவாமிகள் போன்ற சிவயோகிகளின் பின்னால் திரிந்து அவர்களுக்குச் சேவை செய்வதே உயர்ந்தபேறு என்ற கொள்கையோடு செயற்பட்டவர். அவர் செய்த அந்தத் தவப் பயனே அவருடைய பிள்ளைகளைப் பெரும் கல்விமான்களாக்கியது என்றால் அது மிகையாகாது. அவருடைய பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் கல்வித்தரத்தை நோக்குமிடத்து அவர்கள் பேராசிரியர்களாக, பட்டதாரிகளாக, பொறியியலாளர் களாக, வைத்தியர்களாக விளங்குவதைக் காணக்கூடியதாக உள்ளது.

பேரம்பலம் அவர்களுடைய மூத்த புதல்வர் கனகசபாபதி அவர்கள் பெரும் கல்விக் கடலாக விளங்கினார். வாழைப்பழத்தில் எவ்வளவு சுலபமாய் ஊசி ஏறுமோ அத்தனை சுலபமாய் கல்வியும் இவரது கருத்திலே பதிந்தது. 1939ஆம் ஆண்டு தமது பதினாறாவது வயதில் இலண்டன் மற்றிக்குலேஷன் பரீட்சையில் முதற் பிரிவிற் சித்தியடைந்தார். 1940ஆம் ஆண்டு இலங்கை சர்வகலாசாலைக் கல்லூரியில் சேர்ந்து கற்கும்போது விஞ்ஞானத் தகைமைக்குரிய முதலாண்டுப் பரீட்சையில் தமது திறமையைக் காட்டியதன் மூலம் கணித உயர்கல்விக்கான புலமைப்பரிசில் பெற்று 1943ஆம் ஆண்டு விஞ்ஞானமாணி (B.Sc.) பரீட்சையில் கணிதத்துறையில் முதல் வகுப்பில் தேறியதோடு அவ்வருடம் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவருள்ளும் இவரே மிகக்கூடுதலான புள்ளிகளைப் பெற்றுக் கொண்டார். அவருக்கு இங்கிலாந்தில் மேற்படிப்பு மேற்கொள்வதற்கான அரசாங்கத்தின் புலமைப்பரிசில் கிடைத்தும், அப்போது இரண்டாம் உலக மகாயுத்த காலமானதால் உடனடியாகப் படிப்பை மேற்கொள்ள இங்கிலாந்துக்குப் போகமுடியாததால், இலங்கை சர்வகலாசாலைக் கல்லூரியிலிருந்து முதன் முதலாகத் தேறிய M.Sc பட்டதாரி என்ற பெருமையை 1945ஆம் ஆண்டில் பெற்றார்.

இங்கிலாந்துக்கு உயர்கல்விபெற உபகாரச்சம்பளம் கிடைப்பதென்பது கிடைத்தற்கரிய ஒரு வாய்ப்பு என்பதை உணர்ந்தார் தந்தையார். அதை நழுவ விடக்கூடாது என்று தீர்மானித்தார். ஆனி உத்தரத்திலன்று நடேசருக்கு அபிஷேகம் செய்வதாக நேர்த்தி செய்து, மகனை இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்தார். கனகசபாபதி அவர்கள் கேம்பிறிட்ஜ் சர்வகலாசாலையில் வெற்றிகர மாகத் தம் கணித மேற்படிப்பை நிறைவேற்றி, பரீட்சையில் திறமையாகத் தேறி, கணிதபண்டிதன் (Wrangler) ஆகும் தகைமையும் கேம்பிறிட்ஜ் சர்வகலாசாலையின் புலமைப்பரிசிலையும் பெற்றுக்கொண்டு 1947இல் தாய்நாட்டிற்குத் திரும்பி இலங்கைச் சர்வகலாசாலையில் கணிதவியல் பேராசிரியர் ஆனார்.

*1948ஆம் ஆண்டில் திருமணம் செய்த பின்னரும், குடும்பசகிதராய் 1950, 51இலும், 1963 - 64இலும் கேம்பிறிட்ஜ் சர்வகலாசாலைக்குச் சென்று கணிதத் துறையில் எண்ணியற் கோட்பாடு பற்றி ஆராய்ச்சியில் ஈடுபட்டார்.*

*கற்பதற்குக் கடினமானதுறை கணிதத்துறை. அத் துறையில் இத்தனை அளப்பரும் முன்னேற்றங்களைப் பெற்று புகழ்பூத்த கணிதப் பேராசிரியராக விளங்கினார் கனகசபாபதி அவர்கள்.*

*"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து, முந்தியிருப்பச் செயல்" "மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை, என் நோற்றான் கொல் எனும் சொல்" இந்த இரு திருக்குறள் பாடல்களின் பொருளுக்கிணங்க தந்தையாகிய பேரம்பலம் அவர்களும் மகனாகிய கனகசபாபதி அவர்களும் ஒருவருக்கொருவர் பெருமை சேர்க்கும்படி செயற்பட்டனர். பெருமிதம் கொண்டனர்.*

*பேரம்பலம் அவர்கள் தம்முடைய மற்றப் பிள்ளைகளுக்கும் சிறந்த முறையில் கல்விச்செல்வம் அளித்து அவர்களை அரசாங்க உத்தியோகத்தர் ஆக வழிகாட்டி னார். தம் பரம்பரை வைத்தியத்தொழிலில் ஐந்தாவது மகனை ஈடுபடுத்தி அதிற் பிரபல்யம் பெற வைத்தார்.*

*தமது எல்லாப் பிள்ளைகளுக்கும் உரிய வயதில் திருமணம் செய்து வைத்து பேரன் பேர்த்திகளைக் கண்டு மகிழ்ந்து அறத்தின் வழி நின்று, அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை, பண்பும் பயனும் அது" என்ற வள்ளுவன் வாய்மொழிக்கிணங்க உயர்ந்த நெறியிலமைந்த வாழ்க்கையை வாழ்ந்தார். தென்றல் வீசிக்கொண்டிருக்கும்போது திடீரென்று புயல் அடிப்பது போல அவருடைய இனிமையான வாழ்க்கையிலே சூறாவளியாக ஒரு சோதனை வந்தது. 1977ஆம் ஆண்டு அவர் தம் மூத்த மைந்தனை இழந்தார். தந்தைக்கு பெருமையும் புகழும் பெற்றுத்தந்த தனயன் திடீரென்று காலமானார். கனகசபாபதி அவர்களின் மறைவின்போது அவரது நண்பரொருவர் வழங்கிய இரங்கலுரையில், "மனிதர் மட்டுமல்ல கடவுளும் நல்லனவற்றைத் தமதாக்கிக் கொள்ள அவசரப்படுகிறார் போலிருக்கிறது" என்று குறிப்பிட்டார். அத்தகையதொரு நல்ல மைந்தனை 54 வயதாகும் போது பறிகொடுத்தார்.*

*தங்கமானது புடம்போடப் புடம்போட மேலும் மெருகேறும். அவ்வாறே பேரம்பலம் அவர்களும் துன்பங்கள் வந்தாலும் தம் கடமையிலும், பணிகளி லிருந்தும் வழுவாமல் உதாரண புருஷராய் வாழ்ந்தார்.*

**சித்த வைத்தியச் சிறப்பு**

மனிதர்களுக்குப் பரம்பரைக் கொடையாக ஏதாவதொன்று பிரத்தியேகமாகக் கிடைப்பதுண்டு. சிலருக்கு சங்கீதம், குரல்வளம் போன்றவை பரம்பரைக் கொடையாகக் கிடைக்கும். வேறு சிலருக்கு தோட்டம் துரவு விவசாயம் என்பன கிடைக்கும். ஐ.பேரம்பலம் அவர்களுக்கு பரம்பரைக் கொடையாகக் கிடைத்தது சித்தவைத்தியத் துறையாகும். அவருடைய தந்தையாரோ பெரிய சித்தவைத்திய சிகாமணி மூத்த தமையனாரோ பல வைத்திய ஏட்டுப்பிரதிகளை அச்சுவாகன மேற்றி சித்தவைத்தியத்தில் துறைபோனவர்.

பேரம்பலம் அவர்களின் பிறந்த வீடு வைத்தியப் பெருங்கடலாக விளங்கியது. மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக் கொடுக்க வேண்டியதில்லை. அவருக்கும் சித்த வைத்தியம் என்பது இயல்பாகவே கைவந்த கலையாயிற்று. அத்துடன் அவரது நுண்ணறிவும், விவேகமும் சேர்ந்திட அத்துறையில் மிகுந்த பிரபல்யம் பெற்றவராகத் திகழ்ந்தார்.

மருந்தாக்கலிலே, நோய் கண்டறிவதிலே, நோய் தீர்ப்பதிலே மிக்க சிரத்தை எடுத்துக்கொள்வார். மருந்துக்கான மூலிகைகளைப் பெற்றுக்கொள்வதற்காக உதவியாளர்களுடன் தாமும் சென்று நல்லனவற்றைத் தேர்ந்தெடுப்பார். எண்ணெய் வகைகள், லேகியங்கள் காய்ச்சும் போதும் சூரணம், பஸ்ப்பம் தயாரிக்கும் போதும் குளிகைகள் உருட்டும்போதும் பணியாட்கள் இருந்தாலும் அவருடைய மேற்பார்வையிலே எல்லாம் நடைபெறும். அவருடைய வீட்டிலேயே மருந்து தயாரிப்பதற்கு பிரத்தியேக இடமிருந்தது.

வைத்தியத்தொழிலை அவர் வருமானமீட்டும் ஒரு தொழிலாகக் கருதிச் செய்யவில்லை. அதிலே ஜீவகாருண்யமும், மனிதாபிமானமும், மனிதநேயமும் மிளிர்ந்தன. நோயாளியாகத் தன்னிடம் வருபவன் எந்நிலையிலுள்ளவன் என்பதைக் கவனிப்பார். அவன் மிக வசதியற்றவனாகக் கண்டு கொண்டால் மருந்தோடு அதற்குரிய அனுபானங்களையும் இலவசமாகவே கொடுத்து விடுவார். தூர இடங்களிலிருந்து வைத்தியத்திற்காக வருபவர் கஷ்ரப்படும் ஆளாக இருந்தால் மருந்தும் கொடுத்து, உணவளித்துப் பசியாற்றுவதோடு போக்குவரவுச் செலவிற்கும் பணம் கொடுத்து விடுவாராம்.

அத்தகையதொரு ஜீவகாருண்ய சீலராக விளங்கிய அவர், “ஏழாலை பேரம்பலம் பரிகாரியார்” என்று பல ஊர்களிலுள்ளவர்களாலும் அறியப்பட்டு பிரசித்தி பெற்ற வைத்தியராகத் திகழ்ந்தார். தம் பரம்பரைக் கொடையான வைத்தியத்தை தம் பரம்பரையினர் வருங்காலத்திலும் கைவிடாமல் செய்ய வேண்டுமென்ற விருப்பத்தில் தம் மைந்தனை ஈடுபடுத்தியுள்ளார்.

மேலும் அவருடைய பேர்த்திமார் ஆங்கில வைத்தியத்துறையிலும் சித்த ஆயுர்வேத வைத்தியத்துறையிலும் கற்றுத்தேறி வைத்தியப் பணி புரிகின்றனர். சிறந்த மருந்துச் சரக்குகளையும் தரமான மருந்துகளையும் மக்கள் சுலபமாகப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற பெருநோக்கோடு சுன்னாகத்தில் மருந்துக் கடை ஒன்றினை நடாத்தினார். தற்போதும், அவருடைய நோக்கம், எதிர்பார்ப்புக்கு ஏற்ற வகையில் அவருடைய பிள்ளைகள் வைத்தியப் பணியோடு அக்கடையையும் சிறந்தமுறையில் நடாத்தி வருகின்றனர்.

**ஆலயப் பணிகள்**

பேரம்பலம் அவர்கள் சிறுவயதிலிருந்தே ஆலயப் பணிகளில் ஈடுபடக்கூடிய முறையில் அவருடைய குடும்பப் பின்னணி அமைந்திருந்தது. தந்தையாரும், தமையன்மாரும் இறைபக்திமிக்கவர்களாகவும், ஆசாரசீலர்களாகவும் ஆலயத் தொண்டு புரிபவர்களாகவும் இருந்ததினால் இவருக்கும் இளவயது முதல் அவற்றிலேயே நாட்டம் ஏற்பட்டது. தந்தையாரான ஐயம்பிள்ளை வைத்தியர் சப்தாலயத்தில் ஓராலயமாக விளங்கும் அத்தியடி முருகமூர்த்தி ஆலயத்திலே திருப்பணி செய்து கும்பாபிஷேகமும் செய்வித்தவர். தமையனார் பொன்னையா அத்தியடி முருகன் மீது திருவூஞ்சற் பிரபந்தம் இயற்றி திருவூஞ்சல் உற்சவத்தின் போது அதற்குரிய பண்ணுடன் தாமே பாடும் பேறு பெற்றவர். அவர்களைத் தொடர்ந்து பேரம்பலம் அவர்களும் அத்தியடி முருகன் ஆலயத்தில் தொண்டு களும், திருப்பணிகளும், பூசைகள் விழாக்களும் செய்திருக்கிறார். கொடியேற்ற விழா இன்றும் அவரது குடும்பத்தவரின் உபயமாகவே நடைபெற்று வருகிறது.

பொன்னையா அவர்கள் சாதுசங்கமடம் ஸ்தாபித்தபோதும் மடாலயமாய் அது உருவானபோதும் தமையானாருக்கு மிகுந்த உறுதுணையாக இருந்து செயற்பட்டார். திருக்கேதீச்சர ஆலயத்தோடு சம்பந்தப்பட்டதாகவும் இவரது பணிகள் அமைந்துள்ளன. குருவாக வரித்துக்கொண்ட சடைவரதசுவாமிகளின் ஏனைய மடங்களிலும் முழுப்பொறுப்பேற்று தொண்டாற்றியிருக்கிறார்.

ஆலயங்களில் இவர் செய்த பூசைகள், விழாக்கள் யாவும் அதி அற்புதமாகவும் எழுச்சிமிக்கனவாகவும் அமைந்திருந்தன. சுவாமிக்கு அபிஷேகம் செய்யும் பொருள்கள் யாவுமே மிகத் தரமுள்ளதாகத் தேடிக்கொண்டு வருவார். அபிஷேகத்திற்குரிய பஞ்சாமிர்தத்தை பெயருக்கேற்ற முறையில் அமிர்தமாகவே ஆக்குவார். சுவாமிக்குப் படைக்கும் நைவேத்தியங்களையும் அதிக அக்கறை எடுத்து தேவாமிர்தமாகவே தயாரிப்பார். நாம் செய்யும் தெய்வ காரியங்கள் அத்தனை உயர்வாக இருக்க வேண்டுமென்ற கருத்தினைக் கொண்டிருந்தார்.

பேரம்பலம் அவர்களுடைய சிரேஷ்ட புத்திரனுடைய நட்சத்திரம் உத்தரம். ஒரு தடவை மகனுக்காக நேர்த்தி செய்ததின் காரணமாக ஆனி உத்தர அபிஷேகத்தை மடாலயத்தில் எழுந்தருளியிருக்கும் பிள்ளையாருக்கும் சிவகாமி அம்பாள் சமேத நடேசருக்கும் வெகுவிமரிசையாக ஆண்டுதோறும் செய்து வந்தார். அத்தியடி முருகமூர்த்தி ஆலயத்திலும் அவர் செய்து வந்த பத்தாம் நாள் திருவெம்பாவை பூசை மிக விஷேசமாக அமைந்திருக்கும்.

திருக்கேதீச்சரத்தில் வலி வடக்கு உபயமாக நடைபெற்ற மூன்றாம் சோம வார விழாவை நடத்துவதில் இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக தாமே முக்கிய பங்கை ஏற்றிருந்தார். தற்போது அவரது மகன் அதனைப் பொறுப் பேற்றுள்ளார்.

*1959*ஆம் ஆண்டு பேரம்பலம் அவர்கள் மடாலயத்தில் சைவத்திற்கு எழுச்சி தரும் விழா ஒன்றினை நடாத்தி எல்லோரையும் வியப்புற வைத்தார். அவ்வருடம் தமிழகத்திலிருந்து சித்தாந்தப் பேரறிஞர் C.K.சுப்பிரமணிய முதலியார், முத்துமாணிக்கவாசகம் முதலியோர் மடாலயத்திற்கு வந்திருந்தனர். அன்றையதினம் வைகாசி மூல நட்சத்திரம் திருஞானசம்பந்தருடைய குருபூசைத் தினம். தமிழக அறிஞர்களின் வருகையையொட்டி மடாலயம் விழாக்கோலம் பூண்டது. மடலாயவளவு முழுவதும் தென்னங்கீற்றுப் பந்தர் போடப்பட்டது. வாழைகளும், கமுகுகளும், தோரணங்களும், மலர்மாலைகளுமாய் பந்தர் எங்கும் ஒரே அலங்காரமாயிருந்தது. திருஞானசம்பந்த சுவாமிகள் மின்வெளிச்சத்தால் அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் எழுந்தருளி வெளிவீதியுலா வந்தார். தமிழகத்தி லிருந்து வருகைதந்த சைவப்பெரியார்களும், யாழ்ப்பாணத்துச் சைவப்பெரியார் களும் ஒன்றுகூடி ஒரே வரிசையில் நின்று சம்பந்தப் பெருமானுக்குப் பின்னால் தேவார பஜனை செய்து வந்த காட்சி மடாலயத்தில் நிகழ்ந்த அற்புதத் திருவருட் பெருங்காட்சிகளில் அதிஉன்னதகாட்சி என்று கூறலாம். இவ்வற்புத விழாவை தம் அருளாற்றலால் நெறிப்படுத்தி நடத்திய பெருமை பேரம்பலம் அவர்களுக்கே உரியதாகும். மடாலய வரலாற்றில் அது ஒரு தனித்துவமான நிகழ்வாகும்.

சமய சம்பந்தமான விஷயங்களை வேறு யாராவது தொடக்கினாலும் அதற்கு உதவவும் அவர் பின்னிற்பதில்லை. *1956*ஆம் ஆண்டு திருக்கேதீச்சர பாத யாத்திரை ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பகாலத்தில் அவரே வழிகாட்டியாய் இருந்து அதனை நடாத்தி வைத்தார். அதுபற்றி சித்தாந்த வித்தகர் ஞானப்பிரகாசம் அவர்கள் கூறுவதாவது “பேரம்பலம் பரிகாரியார் அவர்களை ஒரு நம்பிக்கைச் சொத்தாக வைத்துக்கொண்டே திருக்கேதீச்சரப் பாதயாத்திரை ஆரம்பிக்கப் பட்டது. அவரே பிரதான பெரிய தூணாக நின்று தொண்டாற்றினார். பாதயாத்திரை யின் போது ஒரு தினம் மேற்கு வன்னிப் பிரதேசத்திலுள்ள பூநகரி – மன்னார்

வீதியில் 20 மைல் தூரம் தொடர்ச்சியாக நடந்து சென்றோம். எல்லோரும் களைத்து இளைத்துப்போன நிலையில் இலுப்பைக்கடவை என்ற இடத்தை அடைந்து இரவுப்பொழுதில் திக்குத்தெரியாத காட்டில் நிற்பது போல் நின்றோம். பேரம்பலம் அவர்கள் அமைதியாக, தமக்குத் தெரிந்த அவ்வூர் விதானையார் வீட்டிற்கு எங்களை அழைத்துச்சென்று அவ்விடத்தில் இரவு தங்கலாம் எனக் கூறினார்". இவ்வாறாக, வைத்தியத் தொழிலினால் எங்கும் அவருக்குப் பழக்கமான வர்களும், அறிமுகமானவர்களும் இருந்ததால் எத்தகைய காரியங்களையும் அவரால் சாதிக்க முடிந்தது.

இப் பெரியார், இறைவனும் இறைவன் வீற்றிருக்கும் தலங்களும் சில்லென்று குளிர்மையாக இருக்க வேண்டுமென்று விரும்புபவர். எனவே ஆலயத்தின் சூழலிலே குளிர்மைதரும் மரங்களை நாட்டும் தொண்டிலே ஈடுபட்டார்.

இவருடைய மரம் நாட்டும் தொண்டிற்கு முக்கிய களமாக அமைந்தது ஏழாலை மடாலயம். அவ்வாலயத்தின் விரிந்து பரந்த சூழலிலே, மண்ணைப் பண்படுத்தி ஆலயத்தின் பூசைக்குப் பயன்தரும் மரங்களையும், யாகத்திற்கு வேண்டிய சமித்துக்களைப் பெறக்கூடிய மரங்களையும் குளிர்மையும் நிழலும் தரும் மரங்களையும் நாட்டி நீர்பாய்ச்சி கண்ணும் கருத்துமாய் வளர்த்துப் பெருவிருட்சங் களாக்கினார். அவருடைய இந்த மாபெரும் தொண்டிற்கு உற்றதுணையாய். வலது கரமாய் விளங்கி உதவியவர் திரு.சு.பாஸ்கரன். "இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன்" என்ற பாரதியாரின் கவிதை வரிகளை நினைந்து மெய் சிலிர்க்கும்படியாக, உண்மையான அன்பு, பற்று, விசுவாசம், மதிப்பு என்பவற்றுடன் ஏழு வயதிலிருந்து அவருடன் கூடவேயிருந்து, ஆலய சம்பந்தமான, வைத்தியத் தொழில் தொடர்பான அவருடைய செயல்திறமைகளைக் கற்றறிந்து அவருடைய தொண்டுகளும், செயல்களும் முழுமைபெற, சிறப்புற ஒத்துழைத்திருக்கிறார்.

மு.கந்தையா அவர்கள் இயற்றிய "கருணாகரப்பிள்ளையார் திருப்பள்ளி யெழுச்சி" நூலிலே "நாறுபூஞ்சோலை சூழ் நன்மடவளாகம்" என்றொரு வரி இருக்கிறது. மடத்துப்பிள்ளையார் ஆலயத்தை சோலை சூழ்ந்த இடமாகச் செய்த பெருமை பேரம்பலம் அவர்களுக்கே உரியது. மடாலயத்தின் சோலையிலே வானளாவ வளர்ந்து நிற்கும் பலாசுமரம், பன்னீர்மரம், மகிழமரம், புன்னை மரம், தேக்குமரம், பாலைமரம், முதிரைமரம், வேப்பமரம் மற்றும் பவளமல்லிகை, கொன்றை, மந்தாரை, நொச்சி, வில்வம் முதலிய மரங்களை எங்கெங்கோ தேடிக் கொணர்ந்து, நட்டு நீர்பாய்ச்சி வளர்த்து எந்நேரமும் தண்மை நிலவும் குளிர்ச்சி பொருந்திய சோலையாக்கிய தொண்டு அருமையும், பெருமையும் வாய்ந்த தொண்டாகும்.

இப் பெரியார் சமயத்தொண்டு மட்டுமன்றி சமூகத் தொண்டுகளிலும் ஈடுபட்டு பொது ஜனங்களின் நன்மைக்காகப் பணியாற்றியுள்ளார். தமையனாரான பொன்னையா அவர்கள் ஸ்தாபித்த சைவசன்மார்க்க வித்தியாசாலையின் பிரதேச முகாமையாளராக 1926ஆம் ஆண்டிலிருந்து 1962ஆம் ஆண்டு வரை பதவியேற்று பணியாற்றியுள்ளார். ஐக்கிய நாணய சங்கம், ஐக்கிய சங்க பண்டகசாலை சம்பந்தப்பட்ட விஷயங்களிலும் இவருடைய தன்னலமற்ற சேவை இடம் பெற்றுள்ளது.

பேரம்பலம் அவர்கள் ஏழைகளுக்கு உதவிசெய்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முயன்றிருக்கிறார். ஆனால் அதேநேரம் ஏழை, பணக்காரன் சிறியவன், பெரியவன் என்ற பாகுபாடு பார்க்காமல் சமத்துவக் கொள்கையோடு யாவருடனும் பழகுவார்.

இப்பூமியிலே பிறந்தவர்கள் நூறாண்டு காலம் வாழ்வதென்பது மிகவும் அரிதான விடயம். ஆயிரத்தில் ஒருவருக்குத்தான் அப்பேறு வாய்க்கும்.

எங்கள் வைத்திய மூதறிஞர் ஐ.பேரம்பலம் அவர்களுக்கு அப்பேறு கிடைத்தது. அவர் 1889ஆம் ஆண்டு சித்திரை மாதம் அவனியிலே பிறந்து 1990ம் ஆண்டு சித்திரை மாதம் தேகவியோகம் எய்தினார்.

முழுதாக நூறு ஆண்டுகளோடு மேலும் ஒரு வருடம் அதாவது நூற்றொரு வருடங்கள் வாழ்ந்திருக்கிறார். அந்த வாழ்க்கையை நாட்டிற்கும் தாம் பிறந்த ஊருக்கும், சமயத்திற்கும், சமூகத்திற்கும் மிகப் பயனுள்ளதாக வாழ்ந்து, ஏழாலைக் கிராமத்திற்கு புகழும், பெருமையும் பெற்றுத்தந்த மாமணியாகத் திகழ்கிறார்.

பேரம்பலம் ஐயா அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றினை மீட்டிப் பார்த்தால் அவரது வாழ்க்கையில் ஏற்பட்ட வித்தியாசமான வியத்தகு சம்பவங் களை உணரலாம். பொதுவாக, மனிதர்கள் முதலில் இல்லறத்திலிருந்து பின்னர் தான் துறவறத்துக்குச் செல்வார்கள். ஆனால் இவரோ, 13 வயதில் பால்யத் துறவிபோல சடைவரதசுவாமிகளின் நிழலாகி அவர் கூடவே இருந்தார். 17 வருடத் துறவுக்குப் பின்னர் சடைவரத சுவாமிகளின் வழிகாட்டலினாலும் ஆசியுடனும் துறவை விடுத்து இல்லறத்துட் புகுந்தார். அந்த இல்லறத்தை துறவறத்திற்கு மேலாக நல்லறமாக மிளிரச் செய்து, காந்தியக் கொள்கைகளைக் கடைப்பிடித்து காந்திய நெறியில் வாழ்ந்து ஏழாலையிலே ஒரு மகாத்மாகாந்தி வாழ்ந்திருக்கிறார் என்று துணிந்து சொல்லக்கூடிய முறையில் உயர்வான ஒரு வாழ்வை வாழ்ந்து காட்டினார் பேரம்பலம் ஐயா அவர்கள்.



சைவப் பெரியார் ஆசிரியமணி
சின்னத்தம்பி முருகேசு அவர்கள்

அழியாச் செல்வமாம் கல்விச் செல்வத்தை
அள்ளித் தந்தவர் ஆசிரியப் பெருந்தகை
அறிவுக் கண்ணைத் திறந்து அஞ்ஞான இருள்போக்கி மெய்ஞ்ஞானத்தோடு
மேதினியில் வாழ்ந்திட மெய்யறிவு தந்தவர் மேன்மைமிகு ஆசான்
மாதா, பிதா, குரு, தெய்வம் எனும் வரிசையிலே
பெற்றோருக்கு அடுத்தாகப் பேசப்படுபவர் பெருமைமிகும் குருவே
பாரில் கல்விச் செல்வம் தந்து ஆளாக்குபவர் ஆசிரியர்
பட்டம் பெற்று பதவிகள் வகித்து பாங்காக வாழ வழிகாட்டடியவர் ஆசிரியர்
காட்டிலேநிற்கும்மரமெல்லாம்மரமல்லநீட்டோலைவாசியாநிற்பவனேமரம்

இப்படி இயம்புகிறது இனிய தமிழ்ப் பாடலொன்று. மரமாக நிற்காமல் மனிதனாக எமை ஆக்கியவர் ஆசிரியர். எண்ணும் எழுத்தும் கற்றுத் தந்த ஆசிரியரை இறைவனாக மதித்திடுவோம். கல்விச் செல்வம் தந்த ஆசிரியரை கண்ணின் மணியாய்க் கருதிடுவோம்.

நாம் குரு என்றும், உபாத்தியாயர் என்றும், ஆசான் என்றும் வெவ்வேறு சொற்களால் குறிப்பிடும் ஆசிரியரே இத்தனை பெருமைக்கும், புகழுக்கும் உரியவராகிறார். எதிர்காலச் சந்ததியை உருவாக்கப் போகின்ற ஆசிரியரானவர் கடமை, திறமை, பொறுமை என்னும் மூன்று தகைமைகளையும் உடையவரா யிருந்தல் வேண்டும். இம் மூன்று தகைமைகளையும் உடையவரேஆசிரியர் என்ற பதத்திற்கு இலக்கணமாக விளங்கக் கூடியவர்.

“இவர்தான் ஆசிரியர் என்ற சொல்லுக்கு இலக்கணமானவர்” என்று சுட்டிக் காட்டக்கூடிய அளவிற்கு ஆசிரியப்பணி புரிந்தவர் திரு.சி.முருகேசுஉபாத்தியாயர் எமது ஏழாலைக் கிராமத்தைப் பொறுத்தவரை சராசரியாக குடும்பத்திற்கு ஒருவர் என்ற வகையில் ஆசிரியப் பணி புரிபவர் இருந்தபோதும் “உபாத்தியாயர்” என்ற வார்த்தை இவருடனேயே ஒட்டிக்கொண்டது. நாளடைவில், முருகேசு என்ற அவரது பெயரையே விடுத்து, உபாத்தியாயர் என்ற சொல்லின் திரிபான “வாத்தியார்” என்ற சொல்லையே இவரைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தி னார்கள். உறவினர்கள் இவரை “வாத்தியார் மாமா”, வாத்தியார் ஐயா” என்று அழைப்பார்கள். இவரது வீட்டினைக் குறிப்பிடும் போது “வாத்தியார் வீடு” என்று சொல்வார்கள்.

அந்த அளவிற்கு உபாத்தியாயர் என்ற வார்த்தை அவரோடு ஐக்கியப் பட்டிருந்ததென்றால், கடமையுணர்வோடும், கண்ணியத்தோடும் அவர் ஆசிரியப் பணி புரிந்ததே அதற்குக் காரணமாகும். ஆசிரியப் பணியை ஓர் இலட்சியப்

பணியாகக் கொண்டு கடமை புரிந்ததோடு, சமய, சமூகப் பணிகளும் ஆற்றிய முருகேசு உபாத்தியாயர் ஏழாலையின் கிழக்குப் பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

தோட்டப் பயிர்களெல்லாம் பச்சைப்பசேல் என்று செழித்து வளரும் ஏழாலையின் கிழக்குப் பகுதியிலே, சைவப் பாரம்பரியங்களைப் பேணி வாழ்பவரும், கார்காத்த வேளாண்குடியிலே பிறந்தவருமான கந்தையா என்பவர் இற்றைக்கு நூற்றைம்பது வருடங்களுக்கு முன் வாழ்ந்தார். அவருக்கு முதற் பிள்ளையாகப் பிறந்தவர் தெய்வானை அம்மையார். அவருக்குப் பின் மூன்று ஆண் பிள்ளைகள் பிறந்தனர். தமது அருமை மகளான தெய்வானையை சைவசாரசீலரான ஐயம்பிள்ளை வைத்தியருக்குத் திருமணம் செய்து கொடுத்தார் கந்தையா. அதன் பின் தம் புத்திரர்களில் மூத்தவரான சின்னத்தம்பி என்னும் பெயர் கொண்டவருக்கு அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பியின் மகளான இலட்சுமிப்பிள்ளையை திருமணம் செய்து வைத்தார். இலட்சுமிக்கு தந்தையின் பெயரும் சின்னத்தம்பி, கணவரின் பெயரும் சின்னத்தம்பி என்பதில் ஒரு மகிழ்ச்சி இருந்தது. அவர் இலட்சுமி என்ற பெயருக்கேற்ப நல்ல நிறமும் அழகும் உள்ளவராகவும், விரதங்கள் அனுட்டிப்பவராகவும், முருகப்பெருமான் மீது மிகுந்த பக்தி கொண்டவராகவும் இருந்தார். சின்னத்தம்பி இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் இல்லற வாழ்க்கையிலே தலைப்பிள்ளையாக முதற்பிள்ளையாக 1891ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 3ஆம் திகதி ஓர் ஆண்குழந்தை பிறந்தது. முருகப்பெருமானை தன் இஷ்ட தெய்வமாக வழிபடும் இலட்சுமிப்பிள்ளை குழந்தைக்கு முருகேசு என்று பெயரிட்டார் முருகப் பெருமானைப் போலவே குழந்தை மிக அழகாக இருந்தது. சுறுசுறுப்பாகவும் காணப்பட்டது.

“விளையும் பயிரை முளையில் தெரியும்” என்பதற்கிணங்க சிறுவயதிலேயே முருகேசு அறிவும், ஆற்றலும் கொண்டவராக பெற்றோரை மகிழ்வித்தார். இவருக்கு நாகலிங்கம், சிற்றம்பலம், சுப்பிரமணியம், நாகம்மா ஆகியோர் உடன் பிறப்புக்களாக வாய்த்தனர். தங்கை மீது அதிக பாசம் கொண்டவர்.

இவருடைய பெற்றோர் தம் பிள்ளைகளைப் படிக்க வைத்து கல்வியிலே மேன்மையடையச் செய்யவேண்டுமென்று விரும்பினர். அந்த 1890களில் அவர்களின் வீட்டுக்கு அண்மித்ததாக சைவப்பாடசாலைகள் இருக்கவில்லை. 22 வருடங்களாக சைவத்தமிழ் மாணவர்களுக்கு சிறந்த கல்வியை ஊட்டிய தாமோதரம்பிள்ளையவர்களின் சைவப்பிரகாச வித்தியாசாலை 1895ஆம் ஆண்டிலே நலிவடையத் தொடங்கி மூடும் நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருந்தது. இந்நிலையில், சைவப் பாடசாலை இல்லாததால், கல்வியின் மீதுள்ள ஆர்வம் காரணமாக பெற்றோர் முருகேசுவை ஏழாலை அர்ச்சியசிஷ்ட

*கத்தோலிக்க தமிழ்ப்பாடசாலையில் சேர்த்தனர். அதிஷ்டவசமாக, இவர்களுக்கு உறவினரான பொன்னச்சட்டம்பியாரே தலைமை ஆசிரியராக இருந்தார். அவரே கற்பிக்கும் ஆசிரியராகவும் இருந்தார்.*

*அக்காலத்தில் ஆசிரியர்கள் பரீட்சை நடத்துவதில்லை. வெளியிலிருந்து பரீட்சகராகக் கடமை புரியும் ஒருவர் வருடத்திற்கொரு முறை வந்து மாணவர் களைப் பரீட்சிப்பார். அதுதான் வகுப்பேற்றும் பரீட்சையாக இருக்கும். பரீட்சகர் வரப்போகும் நாளன்று மாணவர்கள் நல்ல தூய்மையான வேட்டி கட்டிக் கொண்டும் மாணவிகள் பட்டுப்பாவாடை சட்டை அணிந்து கொண்டும் கோலா கலமாகச் செல்வார்கள்.*

*இவ்வாறு, வருட இறுதியில் பரீட்சகர் வந்து நடாத்தும் பரீட்சைகளில் திறமையாகச் சித்தியடைந்து ஐந்தாம் வகுப்புவரை அங்கு கல்வி கற்றார்.*

*அப்போது, ஆங்கிலேயர் நம் நாட்டை ஆண்டு கொண்டிருந்ததால் ஆங்கில மொழி ஆதிக்கம் கூடுதலாக இருந்தது. எனவே பெற்றோரும் தம் பிள்ளைகள் ஆங்கில மொழியைக் கற்க வேண்டுமென்ற விருப்பத்தைக் கொண்டிருந்தனர். முருகேசுவின் பெற்றோருக்கும் அந்த ஆவல் இருந்ததால் அவரை புன்னாலைக் கட்டுவன் ஆங்கில பாடசாலையில் ஆங்கில முதலாம் வகுப்பில் சேர்த்தனர். பிறவுண் சுப்பிரமணியம் என்பவர் அப்போது அப்பாடசாலையின் தலைமை ஆசிரியராக இருந்தார். அந்தப் பாடசாலையிலே ஆங்கில மொழியினைத் திறம்படக் கற்று ஆறாம் வகுப்பு சித்தியெய்தினார். அக்காலத்தில் ஆங்கிலம் ஆறாம் வகுப்பு சித்தியெய்தினால் ஆங்கில மொழியில் முழுப்புலமை பெற்றவராக விளங்க முடியும்.*

*ஆங்கிலத்தில் தேர்ச்சிபெற்ற போதும், முருகேசு அவர்களுக்கு தமது தாய்மொழியாம் தமிழ்மொழியில் இலக்கண இலக்கியங்களில் பாண்டித்தியம் பெறவேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டது. அந்த நாட்களில் தமிழ் வித்துவான் களையோ, பண்டிதர்களையோ தேடிப் போய்த்தான் தமிழ் கற்கக் கூடியதா யிருந்தது. இவரும் வித்துவான் பிரம்மஸ்ரீ கணேசையர் அவர்களை நாடிச் சென்று தமிழ் இலக்கணம், புராண இதிகாசங்கள் படித்துச் சித்தியடைந்தார்.*

**உயர்கல்வியும் பதவிப் பேறுகளும்**

*முருகேசு அவர்கள் **1908**ஆம் ஆண்டில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் சேர்ந்து ஆங்கில மொழியில் மேல் வகுப்புகளில் சித்தியடைந்தார். **1910**ஆம் ஆண்டு சென்யோன்ஸ் கல்லூரியில் கேம்பிறிட்ஜ் யூனியர் வகுப்பில் சேர்ந்து **1912**ஆம் ஆண்டு கேம்பிறிட்ஜ் சீனியர் பரீட்சையில் சித்தி அடைந்தார். இவருக்குக்*

கல்வி கற்பித்த ஆசிரியர்களான உபஅதிபர் குறொ செற்தம்பையா, ஹென்சிமன், வேதவனம் முதலானோர் இவருடைய கல்வித் திறமையைக் கண்டு இவர் மீது மதிப்பும், அன்பும் கொண்டிருந்தனர். இந்த மூன்று வருடங்களும் சென்ஜோன்ஸ் கல்லூரியின் விடுதிக்கட்டணமாக மாதாந்தம் ஆறு ரூபா செலுத்தி விடுதியிலேயே தங்கிப் படித்தார். பெற்றோர் இவருடைய கல்விக்காக மனமுவந்து செலவழித்தனர்.

முருகேசு அவர்களின் கல்வித் தகைமையினால் 1913ஆம் ஆண்டு அவருக்கு கோப்பாய் ஆங்கிலப் பாடசாலையில் ஆசிரியப் பணிபுரியும் வாய்ப்பு கிடைத்தது. முதன் முதலாக அவருக்குக் கிடைத்த மாதச் சம்பளம் 25 ரூபாயாகும். அது இன்றைய 25000 ரூபாவுக்குச் சமமானது. 1915ஆம் ஆண்டு கைதடி ஆங்கில பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். அங்கு படிப்பித்துக் கொண்டிருக்கும் பொழுது மலேரியாக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டார். ஒரு வருட சேவையின் பின் சென்ஜோன்ஸ் கல்லூரிக்கே இடமாற்றம் பெற்றார். அங்கு ஒரு வருடம் பணியாற்றிய பின் கொழும்பு ஆங்கில ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் இரண்டு வருட ஆசிரிய பயிற்சி பெற்றுத் திரும்பினார். 1917, 1918 ஆகிய இருவருடங்கள் ஆசிரிய பயிற்சியில் கழிய 1919ஆம் ஆண்டு, பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராக கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நியமனம் பெற்று, தொடர்ச்சியாக அப்பாடசாலையில் முப்பத்திரண்டு வருடங்கள் ஆசிரியப் பணி புரிந்து ஒரு சாதனையை நிலைநாட்டினார்.

முருகேசு உபாத்தியாயருடைய படிப்பித்தலானது தனித்துவமும், சிறப்பும் வாய்ந்ததென்று கூறுவார்கள். வாழைப்பழத்தை உரித்து ஊட்டிவிடுவதுபோல் மாணவர்களுக்கு இலகுவாகப் புரிந்து கொள்ளும்படியும், மாணவர்களைக் கவரும் வகையிலும் சிறிது நகைச்சுவை உணர்வும் கலந்து பாடங்களை படிப்பிப்பார். இவர் எப்போது வகுப்புக்கு வருவார் என்று மாணவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் வகையில் மாணவர்களைக் கவர்ந்த ஆசிரியராக விளங்கினார். இவரிடம் கல்வி கற்ற மாணவர் பலர் வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக, பட்டதாரிகளாக உருவாகியிருக்கிறார்கள் ஊதியத்தைப் பெரிதாக நினைக்காமல் கடமையே கண்ணாகக் கருதிச் சேவையாற்றிய ஆசிரியப் பெருந்தகை என்று எல்லோராலும் பாராட்டப்பட்டிருக்கிறார்.

**வாழ்வில் மறக்க முடியாத சம்பவம்**

முருகேசு ஆசிரியர் அவர்கள் சைவநெறியைக் கடைப்பிடித்து வாழும் சைவசார சீலருக்குப் புத்திரனாகப் பிறந்தவர். தாயாரோ விரத அனுட்டானங்களை மேற்கொண்டு தெய்வ பக்தியோடு வாழ்பவர். தந்தை வழி மாமனாரும் மைத்துனரும் சித்தர் சிவயோகிகள் என்ற நிலையில் வாழ்ந்தவர்கள். இத்தகைய

குடும்பப் பின்னணியைக் கொண்டவரான முருகேசு அவர்களும் அடியார் கூட்டத்தில் ஒருவராகவே இருந்தார். அவருக்கு பன்மொழிகளையும் கற்க வேண்டும், கல்வியிலே மேன்மையுற்று சேவை புரிய வேண்டுமென்ற ஆர்வம் கூடுதலாக இருந்ததினால் சென்ஜோன்ஸ் கல்லூரிக்குச் சென்றார்.

மூன்று ஆண்டுகள் அங்கே கல்வி கற்றிருக்கிறார். அன்றியும் ஒரு வருடம் அங்கே ஆசிரியப்பணி புரிந்திருக்கிறார். 1916ஆம் ஆண்டு சென்ஜோன்ஸ் கல்லூரியில் கல்வி கற்பித்துக் கொண்டிருந்த காலத்தில்தான் அது நிகழ்ந்தது. சென்ஜோன்ஸ் கல்லூரி ஒரு கிறிஸ்தவப் பாடசாலை. அங்கே கிறிஸ்தவ சமயத்தினரின் தியானம், ஜெபம் தினமும் நடைபெறும். அடிக்கடி அதைக் காண வேண்டிய சூழ்நிலையில் முருகேசு அவர்களின் மனம் அதிலே லயப்பட்டு மனமாற்றம் ஒன்று ஏற்பட்டது. அவர் கிறிஸ்தவ சமயத்தில் சேர்ந்து கொண்டார். வீட்டில் யாருக்கும் அந்த விஷயம் தெரியாது. ஆசிரியப்பணி புரிந்துவிட்டு வரும் மூத்த மகன்மீது தாயாருக்கு அதிகமான பிரியமும் கூடுதலான கவனிப்பும் இருந்தது. மகன் விபூதி பூசாமலிருப்பதையும் படுக்கையில் முழங்கால் படியிட்டு ஜெபம் செய்வதையும் கண்டு நடந்ததை ஓரளவு ஊகித்தவராய் அதிர்ச்சியும் கவலையும் கொண்டார். ஆயினும் அவர் மகனைக் கண்டிக்கவோ அதுபற்றிக் கேட்கவோ இல்லை. அவருக்கு நாவுக்கரசரின் கதை நினைவுக்கு வந்தது.

திருநாவுக்கரசர் சமண சமயத்தில் சேர்ந்தபொழுது தமக்கையாராகிய திலகவதியார் இறைவனை மனமுருகி வழிபட்டு வேண்டுதல் செய்து சிவநெறியாம் சைவநெறிக்கு மீட்டுக்கொண்டு வந்தது போலவே முருகேசு அவர்களுடைய தாயாரான இலட்சுமிப்பிள்ளை தாமும் இறைவழிபாட்டினால் மகனை மீட்க முற்பட்டார். மாவிட்டபுரம் முருகன் ஆலயத்திற்குச் சென்று உள்ளமுருகி கண்ணீர் வழிய வேண்டுதல் செய்தார்.

“முருகா, என்மகனை மீட்டுத்தா. எங்கள் சைவசமயத்திற்கே திரும்பவும் மீண்டுவருமாறு அருள்புரிவாய். ஒருவர் தன் சமயத்திலிருந்து வேறு ஒரு சமயத்திற்கு மாறுவதென்பது தன்னைப் பெற்றதாயை மறந்து வேறொருவருடைய தாயை தன் தாயென்று நாடிச் செல்வதற்குச் சமமானதல்லவா! முருகா, நீ திருவுள மிரங்கி என் மகனை மீட்டுத் தராவிட்டால் அதைப்பார்த்துக் கொண்டு நான் வாளாவிருக்கமாட்டேன். உயிர் வாழவும் மாட்டேன்” என்று உருகி உருகிப் பிரார்த்தனை செய்ததுடன், உணவையும் விடுத்து தவமிருந்தார்.

அவருடைய பிரார்த்தனை பலித்தது. ஒருநாள் இரவு மகனுக்கு நல்ல காய்ச்சல், காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் ஒரு கனவு கண்டார். “கடல் நடுவில் இவர் நிற்கிறார். முருகப்பெருமானுடைய வாகனமாகிய மயில் கரையில்

நின்று இவரைக் கரைக்கு வரும்படி அழைக்கிறது. இவர் கரையை நோக்கி வந்து மயில் இருக்கும் இடத்தை அடைகிறார். மயில் இவரைத் தன்னுடன் வருமாறு வழிகாட்டியபடி சென்று மாவிட்டபுரம் முருகன் கோவிலுக்குள்ளே செல்கிறது. இவர் பின்தொடர்ந்து செல்கிறார். உள்ளே அர்ச்சகர் முருகனுக்குப் பூசை செய்து விட்டு வந்து இவருக்கு விபூதி, சந்தனப் பிரசாதங்கள் வழங்குகிறார். அவற்றை வாங்கி அணிந்து கொள்கிறார்.

இக்கனவைக் கண்டு விழித்து எழுந்தபோது அவருக்கு ஓர் உணர்ச்சி வசப்பட்ட நிலையும் மனநெகிழ்ச்சியும் ஏற்பட்டது. தன்னை மறந்த நிலையில் விபூதி வைத்திருக்கும் இடத்திற்குச் சென்று எங்கள் மேலான செல்வமான விபூதியினை எடுத்து நெற்றி நிறையப் பூசினார். இக்காட்சியைக் கண்ணாரக் கண்ட தாயாருக்கு பெருமகிழ்ச்சியாக இருந்தது. கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தது. மகனுடன் எவ்வித வாதமும் செய்யாமல் ஒரு வார்த்தைகூடப் பேசாமல், முருகனிடம் முறையிட்டு முருகனருளால் மகனை மீட்டெடுத்த பெருமைக்குரிய தாயாராக லட்சுமிப்பிள்ளை விளங்கினார். முருகேசு உபாத்தியா யரும் ஒளிவு மறைவின்றி பொதுமேடைகளில் இச்சம்பவத்தைப் பற்றிக்கூறி தாயாரைப் பெருமைப்படுத்தியிருக்கிறார்.

**நல்லறமான இல்லறம்**

முருகேசு அவர்கள் கொழும்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி முடித்து பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராக பதவி வகிக்க ஆரம்பித்த பின், அவருக்குத் திருமணம் செய்து வைக்க பெற்றோர் ஆயித்தம் செய்தனர். ஆங்கில ஆசிரியப் பதவியுடன் அழகான தோற்றத்தையும் உடையவராய் இருந்தார். தமிழ் பண்பாட்டுக்கேற்ற உடையும், அவருடைய அறிவைப் போலவே மேல்நோக்கி பரந்து விரிந்து உயர்ந்த நெற்றியும், தீட்சண்யமான கண்களுமாய் அழகான இளைஞராக விளங்கிய அவருக்கு அவ்விடத்திலே பிரபல்யமாக விளங்கிய விதானையார் வேலுப்பிள்ளை தம் மகளான இராசம்மாவை மணம் பேசி வந்தார்.

முருகேசு அவர்களுக்கும், இராசம்மா அவர்களுக்கும் திருமணம் நடைபெற்று தம்பதிகளாக அவர்கள் இல்வாழ்க்கை ஆரம்பித்தபோதே மனைவியி டம் ஒரு வேண்டுகோள் விடுத்தார்.

“எனது பெற்றோர் என்னைப் படிக்கவைத்து நல்ல நிலைக்குக் கொண்டு வந்ததற்காக அவர்களுக்கிருக்கும் பொறுப்பிலே ஒன்றை நான் ஏற்றுச்செய்து உதவவேண்டும். என் சகோதரியின் திருமணத்துக்கும் கொடுக்க வேண்டிய நகை களை நான் செய்து கொடுக்க வேண்டும். அதை முழுமனதோடு நிறைவாய் செய்து கொள்வதற்காக என் தங்கையை எங்கள் மூத்தபிள்ளையாக நாங்கள் நினைக்க

வேண்டும்" என்றார். மனைவி இராசம்மாவும் மகிழ்ச்சியோடு உடன்பட்டார். தங்கையான நாகம்மாவுக்கு கல்யாணம் நடந்தபோது அக்காலத்து வழக்கமாயிருந்த அட்டியல், பதக்கம், சங்கிலி, காப்பு, மோதிரம், கொண்டைப்பூ சேலையின் சுருக்கிலே குத்தும் புறோச் ஆகிய நகைகளைச் செய்வித்துக் கொடுத்தார். ஒரு பவுண் பதின்மூன்று ரூபாவுக்கு விற்ற காலம் அது. அப்போது பதின்மூன்று ரூபாயே பெரிய தொகை போன்றது. பத்துப் பதினைந்து பவுணிலே நகை செய்து கொடுத்து சகோதரியின் கல்யாணத்தை நடாத்தி பெற்றோரை மகிழ்வித்தார்.

முருகேசு இராசம்மா தம்பதியரின் இல்வாழ்க்கைப் பேறாக முதலில் ஒரு பெண் குழந்தை பிறந்தது. உலகமாதாவின் நாமமான பரமேஸ்வரி என்ற பெயரை குழந்தைக்கு வைத்தனர். அடுத்ததாக ஓர் ஆண் குழந்தை பிறந்தது. ஆண் குழந்தைக்கு கந்தையா என்று பெயரிட்டனர்.

அந்தக் காலத்திலே மூதாதையரின் பெயரைப் பிறக்கும் குழந்தைக்கு வைப்பது வழக்கமாக இருந்தது. குறிப்பாக பாட்டனுடைய பெயரை வைப்பார்கள். அந்த வகையில்தான் பெயரையுடையவன் பெயரன் என்று வந்து அது மருவி பேரன் என்ற சொல் வந்ததாகக் கூறுவர். இங்கே முருகேசு அவர்கள் தன் மகனுக்குச் சூட்டிய கந்தையா என்ற பெயர் முருகேசு ஆசிரியரின் தந்தையார் சின்னத்தம்பி அவர்களின் தந்தையாருடைய பெயராகும். அப்போது பாட்டனான சின்னத்தம்பி அவர்களுடன் இருந்தார். எனவே முருகேசு அவர்கள் தம் பாட்டனாரான கந்தையாவின் பெயரை மகனுக்குச் சூட்டினார். அப்போது வாழ்ந்த மனிதர்களுக்கு தமது மூதாதையர் முன்னோர் மீது பற்றும், மதிப்பும் நிறைய இருந்தது. அதனால் அவர்களது பெயரையே பிள்ளைகளுக்குச் சூட்டிப் பெருமைப்படுத்தினர். இன்றைய நாகரிக யுகத்திலே முன்னோரின் பழமையான பெயர்களைப் பிள்ளைகளுக்கு வைக்கவும் விரும்பமாட்டார்கள். முன்னைய அளவுக்கு காத்திரமான பற்று பாசமும் இருப்பதில்லை.

தம்முடைய தாய், தந்தை, பாட்டன், பூட்டன் முதலான உறவுகள் மீது அளவற்ற மதிப்பும் பாசமும் கொண்டிருந்த முருகேசு ஆசிரியர் கூடியவரை அவர்களது பெயர்களைச் சூட்டியதோடு, அவர்கள் விரும்பக்கூடிய பெயர்களாகவும் சூட்டியிருக்கிறார். இவருக்கு மூன்றாவதும் நான்காவதும், ஐந்தாவதும் பெண்பிள்ளைகளாகப் பிறந்தனர். தம் தாயாருக்கு முருகப்பெருமான் மீது அதீத பக்தி இருப்பதால் முருகனுடைய தேவியரின் பெயர்களான தெய்வநாயகி (தெய்வானை), வள்ளியம்மை ஆகிய பெயர்களை பெண் குழந்தைகள் இருவருக்குச் சூட்டினார். அடுத்த பெண்குழந்தைக்கு தம் தாயாரின் பெயரான இலட்சுமி என்ற நாமத்தையே வைத்தார். கடைசிப் புத்திரனுக்கும் முருகனுடைய நாமமான பாலசுப்பிரமணியம் என்ற பெயரைச்சூட்டி மகிழ்ந்தார்.

“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது”

என்ற குறட்பாவுக்கமைய இல்லறத்தை நல்லறமாக அமைத்து அதற்கேற்ப தாமும் வாழ்ந்து உற்றார் உறவினருக்கும் உதவி புரிபவராக விளங்கினார்.

ஏழாலை கிழக்கில் அவருடைய வீடு மிகவும் பெரிதாகவும், உயரமாகவும் அமைந்திருந்தது. அவருடைய வீட்டை “கல்வீடு” என்று குறிப்பிட்டுச் சொல்வார்கள். அந்தச் சூழலிலே முதலில் கட்டப்பட்டதால் அப்பெயர் வந்தது. பின்னர் வேறுகல் வீடுகள் கட்டப்பட்ட போதும் கல்வீடு என்ற பெயர் முருகேசு அவர்களின் வீட்டுக்கு சிறப்புப் பெயராக வந்துவிட்டது. அவருடைய மனைவியை கல்வீட்டு மாமி என்று குறிப்பிட்டுச் சொல்வார்கள். அந்தக் காலத்திலே ஒரு தடவை பெருவெள்ளம் ஏற்பட்டது. உற்றார் உறவினர், ஊரவர் எல்லாரும் அவருடைய வீடு பெரிதாக உயரமாக இருந்ததால் அவ்வீட்டிலே தங்கியிருந் தார்கள். எல்லோருக்கும் அடைக்கலம் கொடுத்து பாதுகாப்பாக இருக்கச் செய்தார். வெள்ளத்தினால் சிறுபஞ்சநிலை ஏற்பட்டது. தோட்டக்காரருடன் சேர்ந்து தோட்டங்களுக்குள் சென்று மரவள்ளி மரங்களைப் பிடுங்கி கிழங்கு களைக் கொண்டு வரச்செய்து தம் வீட்டிலே அவிப்பித்து அந்நேரம் எல்லாரது பசியையும் போக்கி உதவினார்.

தம்மைப்போல தம் பிள்ளைகளை நன்கு படிக்க வைத்தார். முதல் மகனை இந்தியாவுக்கு அனுப்பி படிக்க வைத்து பட்டதாரியாக்கி ஆசிரியப்பணி புரிய வைத்தார். பேரப்பிள்ளைகளும் பொறியியலாளராக, ஆசிரியராகக் கடமை புரிகிறார்கள்.

“துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை”

என்ற கூற்றுக்கமைய எல்லார்க்கும் பயனுள்ளதாக தம் இல்வாழ்க்கையை நடாத்திப் பெருமையுற்றார் முருகேசு உபாத்தியாயர் அவர்கள்.

**ஆலயத் தொண்டுகள்**

இவருடைய குடும்பப் பின்னணியானது பக்திமார்க்கத்தையே முக்கியமாகக் கொண்டது. பெற்றோர், உறவினர் தெய்வபக்திமிக்கவர்களாக இருந்தனர். அதனால் இவரும் சிறுபராயத்திலே ஆலயங்களுடன் ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். வித்துவான் பிரம்மஸ்ரீ கணேசையரிடம் தமிழ் கற்றதால் ஏற்பட்ட தமிழறிவும், குரல்வளமும் இவருக்கு இருந்ததால் எங்கெங்கே புராணபடனம் நடந்ததோ அங்கெல்லாம் போய் புராணம் வாசிப்பார். அத்துடன் புராணங்களுக்கு மிகச் சிறப்பாக தெளிவாக பொருள் விளங்கப் பயன் சொல்லுவார்.

பஜனை நடைபெறும் இடங்களிலும் பக்திப்பரவச உணர்வோடு பாடுவார். கூட்டுப் பிரார்த்தனைகளிலும் இவரது குரல் ஒலிக்கும்.

1910 களில் ஏழாலை மேற்கில் பொன்னையா அவர்களும் சடைவரத சுவாமிகளும் மடம் அமைத்து ஏற்றி வைத்த ஆன்மீக ஞானஒளி முருகேசு அவர்களையும் தன்பால் ஈர்த்தது. அவருக்கிருந்த ஆன்மீக நாட்டமும், பொன்னையா அவர்களுடனான உறவுத் தொடர்பும் அவரை அங்கே வரவழைக்க, சடைவரத சுவாமிகளின் சீடனாகி, அங்கே தோன்றியிருந்த ஆன்மீக ஞானப் பேரொளியில் திளைத்து பேரின்பம் கண்டார். சடைவரத சுவாமிகள் அவருக்கு "சற்குணன்" என்று தீட்சாநாமம் சூட்டினார். அப்பெயருக்கு ஏற்ப என்றும் நற்குணத்தவராகவே விளங்கினார். அவருடைய ஆன்மீக வாழ்விற்கு சடைவரத சுவாமிகளால் இடப்பட்ட இந்த அடித்தளம்தான் பிற்காலத்தில் பெரும் ஆலயத் தொண்டுகளும், ஆலய நிர்வாகங்களும் ஆற்றக்கூடிய சக்தியையும், சந்தர்ப்பங் களையும் முருகேசு உபாத்தியாயர் அவர்களுக்குக் கொடுத்தது.

எமது ஊரான ஏழாலைக்கு அப்பெயர் வரக் காரணமாயிருந்த ஏழு ஆலயங்களில் ஒன்றான அத்தியடி விநாயகர் ஆலயத்தை நிர்வகித்து பூசை வழிபாடுகளை ஒழுங்குற அமைக்கும் அரியபேறு இவருக்குக் கிடைத்தது. இவ்வாலயம் மிகப் பழமை வாய்ந்தது. இதன் ஆரம்பகாலம் இருநூறு வருடங் களுக்கு முந்தியது.

ஏழாலையின் மத்தியிலே இவ்வூருக்கு எழிலூட்டும் குளமும், குளத்தைச் சூழ மருத மரங்களும், குளக்கரையில் வெண்கொக்குகளும், மரங்களில் கிளிகளும் குயில்களுமாக ஒரு மனோரம்மியமான சூழலில் அந்தக் காலத்தில் நெல் பயிரிடு வார்கள். ஆலயத்தை அண்டிய பகுதிகள் நெல் வயல்களாகவே காட்சி தரும். அந்த நெற்பயிர் விளைந்து அறுவடை செய்யும்போது, முதல் வணக்கத்திற்குரிய பிள்ளையாருக்கு முதலில் பொங்கிப் படைக்க வேண்டுமென்ற ஆர்வம் அக்கால மக்களுக்கு ஏற்பட்டது.

பொதுவாக, வீடுகளில் ஏதாவது விஷேசமென்றால் சாணியிலே பிள்ளையார் பிடித்து அறுகம்புல்லைச் சாத்துவார்கள். அவ்வாறே தம் நெல்லை அரிசியாக்கிப் பொங்கல் செய்த அம் மக்களும் சாணியிலே பிள்ளையார் பிடித்து அந்த வயலில் வைத்து பொங்கலைப் படைத்து வழிபடுவார்கள். வருடம்தோறும் இப்படிச் செய்து வரும்போது, அவர்கள் பிடித்து வைக்கும் சாணிப்பிள்ளையார் அவ்விடத்தில் சேர்ந்து சாணிப்பிள்ளையார் கோயில் என அமைந்து விட்டது.

*அதன் பின்னர் சாணிப்பிள்ளையார் கருங்கல் விக்கிரகத்தில் எழுந்தருளி னார். எல்லாப் பூசைகள் திருவிழாக்களிலும் முதற்பூசை கொள்ளும் விநாயகருக்கே இவ்வூரில் முதன்முதலாகத் தேரோட்டம் நடைபெற்றதாக வரலாறு கூறுகிறது. 1900 களில் அத்தியடி விநாயகர் ஆலயத்தில் தேர்த்திருவிழா நடைபெற்றிருக்கிறது. அ.குமாரசுவாமிப் புலவர் அவர்கள் அத்தியடி விநாயகர் மீது திருவூஞ்சற் பதிகங்கள் பாடியுள்ளார். அப்பிரபந்தம் 1987ஆம் ஆண்டு பாடப் பட்டதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே அக்காலகட்டத்தில் திருவிழாக்களும் திருவூஞ்சலும் அத்தியடி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்றிருப்பதை நாம் அறியக் கூடியதாக உள்ளது.*

திருமேவு மீழவள நாட்டினோர் பாற் செந்தமிழ் சேர் யாழ்ப்பாண தேசந்தன்னின்
மருமேவு பொழிச்செறியேழாலை யென்னும்மா நகரிலத்தியடி வாசங்கொண்ட
கரிமேவு திருமுகத்தோன் கணங்கட்கீசன் கங்கைசுதன் விநாயகனாங் கடவுள்மீது
பொருண்மேவு மூஞ்சலிசை யினிது பாடப் போற்றுவதுமவன் சரணப் போது தானே.

வேதநெறி முறையோடும் விளங்கி யார்ப்ப
விண்ணவர் பூமாரியுல கெங்கும் போர்ப்ப
ஏதமில் கந்தருவரிசை செவியில் வார்ப்ப
எண்ணுமடி யாருளத்திற் புளகங் கூர்ப்பச்
சோதிமுடி மணிகளெலா மிருள்கால் சீப்பச்
சொல்லரிய வேழாலை நகரில் வாழும்
ஆதி பிரணவப் பொருளே ஆடீரூஞ்சல்
அத்தியடி விநாயகரே ஆடீரூஞ்சல்.

*இவ்வாறு அற்புதமாக, பெருமைக்குரிய குமாரசுவாமிப் புலவரின் பாடல் பெற்ற அத்தியடி விநாயகர் ஆலயத்தில் அந்தக் காலகட்டத்தில் திருவிழாவும், தேரோட்டமும் நடைபெற்றிருந்த போதும் சரியான முறையில் பரிபாலனம் இல்லாததால் அவ்வவ்போது பூசைகள் தடைப்பட்டன.*

*ஒரு கட்டத்தில் புளியங்கண்டையர் என்பார் சம்பளம் இல்லாமல் கோயில் வருமானத்தையும், ஊர்ப்புரோகிதத்தையும் துணையாகக் கொண்டு பூசை செய்து வந்தார். அதன் பின்னர் ஊரெழுவைச் சேர்ந்த சுவாமிநாத ஐயர் மாதம் பத்து ரூபா சம்பளத்தில் ஆரம்பித்து நாற்பத்தைந்து ஆண்டுகள் தொடர்ந்து இவ்வாலயத்தின் பூசகராக இருந்தார்.*

*இதற்குப் பின்னர், பூசையில் தடங்கல் ஏற்பட்டு ஆலயம் பூட்டப்பட்டிருந்தது. ஊரிலுள்ள பொது இடங்களில் இத்தகைய பாதிப்புக்கள் ஏற்படும்போது அவ் விஷயத்தை அவ்வூர் விதானையாரின் கவனத்திற்குக் கொண்டு வருவது வழக்கம்.*

அவ்வாறே, இவ்வாலயம் பூட்டப்பட்டிருக்கும் விஷயமும் அவ்விடத்து விதானையாராக இருந்த வேலுப்பிள்ளை அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இப்படியான சந்தர்ப்பங்களில் அப்பிரச்சனைக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்று தீர்மானிக்கும் உரிமை கிராம அலுவலர் என்று கூறப்படும் விதானையாருக்கு இருந்தது. எனவே தகுதிவாய்ந்த ஒருவரிடம் அந்த ஆலயத்தை நிர்வகிக்கும் பொறுப்பை ஒப்படைத்து அதனைச் சீர்செய்யத் தீர்மானித்தார் வேலுப்பிள்ளை விதானையார்.

“இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்”

இது திருவள்ளுவரின் வாய்மொழி இதன் கருத்தானது, “இந்தக் காரியத்தை இந்த முறையால் இவன் செய்து முடிப்பான் என்று தெளிந்துணர்ந்து அவனிடமே அந்தக்காரியத்தைச் செய்து முடிக்கத் தரவேண்டும்” என்று உரையாசிரியர் கூறுகிறார்.

வேலுப்பிள்ளை அவர்களும் இக்கருத்தின்படியே தகுதி வாய்ந்த ஒருவரைத் தேர்ந்தெடுத்தார். சடைவரத சுவாமிகளிடம் மெய்ஞ்ஞானம் பெற்றவரும், கல்வி மானும், நேர்மையாளரும், சமய, சமூகத் தொண்டருமாகிய முருகேசு உபாத்தியாயர் அவர்களே வேலுப்பிள்ளை விதானையார் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஆவார். வேலுப்பிள்ளை அவர்களின் மகளை மணம் செய்து மருமகனாக ஆனவர் முருகேசு அவர்கள். இந்த உறவுப் பழக்கமும், ஓரே ஊரவரும் என்பதும் வேலுப்பிள்ளை அவர்களுக்கு முருகேசு அவர்களின் நற்பண்புகளை, திறமையை அறிந்துகொள்ள வாய்ப்பளித்தது.

இந்த வகையில் அத்தியடி விநாயகர் ஆலய நிர்வாகப் பொறுப்பை மனமுவந்து ஏற்ற முருகேசு அவர்கள் அந்த ஆலய வளர்ச்சிக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்துத் தொண்டாற்றினார். தம்முடைய பணத்திலேயே அர்ச்சகரின் சம்பளம் உட்பட ஆலயத்தின் தேவைகள் எல்லாவற்றையும் நிறைவேற்றினார். இரண்டு நேரப் பூசைகள் ஒழுங்காக நடைபெற்றன. சதுர்த்தி, விநாயகர் விரதமாகிய பிள்ளையார் கதை, திருவெம்பாவை முதலானவை இவருடைய காலத்தில் சிறப்பான பூசைகளாக நடைபெற்றன. நித்திய, நைமித்திய பூசைகளுக்கு என்றுமே தடங்கள் ஏற்படாத வகையில் சிறப்புற நிர்வகித்தார். திருப்பணி வேலைகளும் செய்வித்தார். இவ்வாலயத்தில் கர்ப்பக்கிருகத்துடன் அர்த்தமண்டபம், மகாமண்டபம், நிருத்தமண்டபம் என்ற வகையில் ஆகம விதிமுறைக்கு ஏற்ற வகையிலான ஆலய அமைப்பு உள்ளது. 1975ஆம் ஆண்டு இந்த ஆலயத்தில் மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

முருகேசு உபாத்தியாயரின் நிர்வாகத்தில் ஆலயம் மிகத் துரிதமாக முன்னேற்றம் அடைந்தது. எல்லாவற்றையும் சிறப்பாக நிறைவேற்றிய அவருக்கு அத்தியடி விநாயகரைத் தேரிலே எழுந்தருளச் செய்ய வேண்டும். தேரோட்டம் நிகழ்த்திப் பார்க்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தாலும் அவரது வாழ்நாள் முடிவதற்குள் அது நிறைவேறவில்லை. ஆயினும், அவரது இளைய மகன் பாலசுப்பிரமணியம் அவர்கள் தந்தையாரின் விருப்பப்படி ஆலயத்தின் நிர்வாகப் பொறுப்பினை ஏற்று நடாத்தியதோடு, தந்தையாரின் அபிலாஷைகளையும் பூர்த்தி செய்துள்ளார்.

1982ஆம் ஆண்டிலிருந்து மகோற்சவத்தை ஆரம்பித்து, வைகாசி மாத பூரணையைத் தீர்த்தமாகக் கொண்டு பத்து நாட்கள் உற்சவத்தை நடாத்தி வருகிறார். 2004ஆம் ஆண்டு புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. வசந்த மண்டபமும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. மார்கழி மாதத்தில் பிள்ளையார் கதை விரதத்தின் போது 21 நாட்களும் அபிஷேக ஆராதனைகளோடு பிள்ளையார் கதை படிக்கப்பட்டு கடைசி நாளன்று விஷேச அபிஷேகம், நைவேத்தியங்கள் படைக்கப்படுதல் இடம்பெற்று வருகிறது. சதுர்த்தி உற்சவம், திருவெம்பாவை தை உத்தரத்தில் சங்காபிஷேகம் முதலிய விழாக்களைத் திறம்பட நடாத்துவதோடு, தேர்த்திருவிழாவும் சிறப்பாக நிகழச் செய்து தந்தையார் மனப்பூர்வமாகத் தம்மிடம் ஒப்படைத்த ஆலய நிர்வாகப் பொறுப்பை தம் பிள்ளைகள், மருமக்களின் அனுசரணையோடு சிறப்பாகச் செய்து நிறைவேற்றி வருகிறார் மு.பாலசுப்பிரமணியம் அவர்கள்.

முருகேசு அவர்களின் நிர்வாகத்திறமை, நேர்மை முதலியவற்றின் காரணமாக வேறு ஆலய நிர்வாகப் பொறுப்புக்களும் இவரைத்தேடி வந்தன. இலந்தைகட்டி பாதாள ஞானவைரவர் ஆலயத்திலே திருப்பணிச்சபை அமைக்க முயன்றபோது முருகேசு உபாத்தியாயரை அதற்குத் தலைவராக இருந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொண்டனர். ஆலயப் பணிகளுக்கு அவர் என்றும் எங்கும் பின் நிற்பதில்லை. அவ்வாலய திருப்பணிச்சபையின் தலைவராக இருந்து பல சாதனைப் பணிகளைச் செய்தார். இலந்தைகட்டி வைரவர் ஆலயமானது ஆதி காலத்திலே சிறிய ஆலயமாக இருந்தது. அங்கு பல வருடங்களுக்கு முன் ஆடு, கோழி பலியிடும் வழக்கமும் இருந்தது. முருகேசு உபாத்தியாயர் அவர்களும், ஆத்மஜோதி முத்தையா அவர்களும் எடுத்துக்கொண்ட முயற்சியினால் பலியிடும் வழக்கம் நிறுத்தப்பட்டது. பின்னர் ஆலயம் அழகான முறையில் புனரமைக்கப் பட்டது.

முருகேசு அவர்கள் திருப்பணிச்சபைத் தலைவராயிருந்து நெறிப்படுத்தி பிள்ளையார், முருகன், எழுந்தருளி வைரவர், கருவறை வைரவர், நாகதம்பிரான் ஆகிய தெய்வங்களின் விக்கிரகங்களும் பிரதிஷ்டை செய்வித்து சைவ ஆசாரங் களும் ஆகம விதிமுறைகளும் கொண்ட ஆலயமாக உருவாக்கினார். அந்த ஆலயச் சூழலிலே இருந்த இளைஞர்களை ஒருங்கிணைத்து ஆலயத் தொண்டிலும், கூட்டுப் பிரார்த்தனைகளிலும் ஈடுபடுத்தி நல்வழிப்படுத்தினார். அந்த இளைஞர்களின் பெருமதிப்பிற்குரியவரானார். முருகேசு உபாத்தியாயரின் தலைமைத்துவத்தில் உருவான பாதாள ஞானவைரவர் ஆலயம் இன்று இராஜ கோபுரம் வசந்தமண்டபம், சுற்றுமதில், மண்டபம் ஆகியவற்றுடன் கண் கொள்ளாக் காட்சியாக தோற்றமளிக்கிறது.

ஆலயப் பணிகளை ஆத்மார்த்தமான ஈடுபாட்டுடன் நிறைவேற்றும் உபாத்தியாயர் அவர்களுக்கு பக்தியில் திளைக்கும்போது பரவச உணர்வு ஏற்படுவதும் உண்டு. பெரும்பாலும் சுவாமி வீதியுலா வரும்போது அல்லது தேரிலே ஆரோகணித்து வரும்போது பக்திப் பரவசத்தில் ஆனந்தக் கூத்தாடுவார். பட்டு பீதாம்பரங்களுடன் பூமாலைகளுடன் அலங்கார பூஷிதராய் சுவாமி வீதியுலா வரும்போது சுவாமிக்கு முன்னால் பாடுவதும், தாள லயத்தோடு கை தட்டுவதும், ஒருகாலை நிலத்தில் வைத்து மற்றக்காலைத் தூக்குவதும் பின்னர் தூக்கிய பாதத்தைக் கீழே வைத்து மற்றப்பாதத்தைத் தூக்கி ஆடுவதுமாக பக்தி மேலீட்டினால் ஏற்பட்ட ஒரு பரவச உணர்வோடு ஆனந்தக் கூத்தாடுவார். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இவருடன் சேர்ந்து குப்பிளான் காசிப்பிள்ளை அவர்களும், சித்தாந்த வித்தகர் மு.ஞானப்பிரகாசம் அவர்களும் ஆனத்தக் கூத்தினை நடத்துவார்கள். பக்திப் பெருக்கினால் நிகழ்த்தும் செய்கைகளில் இதுவும் ஒருவகையானதே. பார்த்துக்கொண்டிருப்பவர்களும் கூட பக்திநிலைக்கு ஆளாவார்கள். ஒருவரிடம் உண்மையான இறைபக்தி ஏற்பட்டால் அவரிடமிருந்து தீய குணங்களெல்லாம் விடைபெற்றுச் சென்றுவிடும். பாவம் செய்வதற்குப் பயப்படுவார்கள். நற்பண்புகளே அவரை வந்தடையும்.

இவ்வாறாக, பிறருடைய பக்தி நிலையைத் தூண்டிப் பக்திப் பெருக்கை ஏற்படுத்தக்கூடிய செயல்களை ஆற்றக்கூடிய வல்லமையைப் பெற்றிருந்தார் முருகேசு ஆசிரியர். இதுமட்டுமன்றி, சைவக் கோலத்தோடு சிவசின்னங்களோடு வரும் அடியவரைக் கண்டால் அவர்களை வீழ்ந்து வணங்குவார். இத்தகைய பக்தி வெளிப்பாட்டுச் செய்கைகளால் சுற்றாடலை பக்திமயப்படுத்தியதோடு இளம் சந்ததியினரையும் தெய்வபக்தியிலே ஈடுபட வைத்தார் என்பது உண்மை.

**சமூகப் பணிகள்**

முருகேசு உபாத்தியாயர் அவர்கள் ஆசிரியராக இருந்ததால் அப்பணி மூலமாக மிகப்பெரிய சமூகசேவை ஆற்றியுள்ளார். ஊதியத்தைப் பெரிதாக நினையாமல் தம் கடமையும் தம் அயராத உழைப்புமே பெரியதென்றெண்ணிப் பணி புரிந்தார். நேரம் தவறாமையைக் கடைப்பிடித்து, நேர்மையாய்க் கடமை செய்து நல்லாசிரியராய் விளங்கியதே இவர் சமூகத்திற்கு ஆற்றிய முதற் பணியாகும். இவருடைய தன்னலமற்ற திறமையான கற்பித்தலினால் நீதிபதி களை, பணிப்பாளர்களை, சட்டத்தரணிகளை, வைத்தியகலாநிதிகளை, பொறியியலாளர்களை உருவாக்கினார்.

ரியூசன் என்ற வார்த்தையே பேசப்படாத அந்நாட்களில் எத்தனையோ மாணவர்கள் இவருடைய வீட்டிற்கு வந்து பாடம் படித்திருக்கிறார்கள். எத்தனை பேர் வந்தாலும் முழுமையான மனவிருப்பத்தோடு எதுவுமே எதிர்பார்க்காமல் இலவசமாகவே படிப்பித்திருக்கிறார். பாடசாலையில் மாணவர்களின் நன்மைக் காகவும், பாடசாலையின் உயர்வுக்காகவும் மேலதிக வேலைகளையும் மன நிறைவோடு செய்வார்.

1940களில் ஏழாலையின் மத்தியிலே அவசரமாகவும் அவசியமாகவும் சைவ மகாஜன வித்தியாலயம் அமைக்கப்பட்டது. எமது சைவ சமயத்தின் நன்மை கருதியும், சைவப்பிள்ளைகள் தூய்மையான சைவச்சூழலிலே கல்வி கற்க வேண்டு மென்ற நோக்கத்தோடும் இப்பாடசாலை பதினெட்டு நாட்களில் கட்டிமுடிக்கப் பட்டது. இப்பாடசாலையின் நிர்வாகசபைப் பிரமுகர்களிலே திரு.சி.முருகேசு ஆசிரியரும் ஒருவராக இருந்து பணியாற்றினார். இப்பாடசாலை அமைக்கப்பட்ட காணியானது இவருடைய நிர்வாகப் பொறுப்பிலிருந்த அத்தியடி விநாயகர் ஆலயத்திற்கு உரியது.

அவ்வாலயத்திற்குத் தேவையானதையெல்லாம் தம் வருவாயில் செய்து கொள்ளலாம் என்ற நம்பிக்கையும், துணிவும் அவரிடம் இருந்ததால் கோயிலுக்கு உரியதான அந்த ஒன்பது பரப்புக் காணியை சைவ மகாஜன வித்தியாலயத்துக்கு உபகரித்தார்.

“பள்ளித்தலமனைத்தும் கோயில் செய்குவோம்” என்று பாரதியார் பாடினார். அவ்வாறே, இவரும் பள்ளிக்கூடங்கள் கோயில்களுக்கு இணையாகவும் கோயில் களுடன் இணைந்ததாகவும் இருந்தாற்றான் சைவம் ஆரோக்கியமான நிலையிலி ருக்கும் என்று எண்ணினார். நம் சைவப்பிள்ளைகள் சைவச்சூழலில் கற்வி கற்கும் போதுதான் அவர்களுக்கு சைவத்தின் மீது பற்று வளரும். ஆலயத் தொண்டுகளில் ஈடுபாடு வரும்.

வேற்றுமதப் பாடசாலைகளில் படிக்கும்போது நமது பிள்ளைகளுக்கு அவர்களின் உணர்வுகளுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை அனுபவத்தால் உணர்ந்தவர். அதனாலேதான் அத்தியடி விநாயகர் ஆலயத்துக்குரிய காணியிலே ஒரு சைவப்பாடசாலை அமைய மனமுவந்து இடம்கொடுத்தார்.

முருகேசு உபாத்தியாயர் தமது இருபதாவது வயதிலிருந்து ஆயுள் முடியும் அந்தக் கடைசிநாள் வரையாக ஏறக்குறைய எழுபது ஆண்டுகள் பொதுமக்களுக் காக சேவை புரிந்திருக்கிறார். இவரது பணிகளிலே ஆரவாரமிருக்காது. ஆனால் காத்திரமான பணிகளாக இருக்கும். புகழ் தேடல் இருக்காது. ஆனால் மனத்திருப்தி இருக்கும். பத்திரிகை விளம்பரம் இருக்காது ஆனால் பலருடைய மனதில் நிறைவிருக்கும்.

"வலது கை கொடுப்பதை இடது கை அறியாது" என்று கர்ணனுடைய வள்ளல் தன்மையைப்பற்றிக் கூறுவார்கள். அவ்வாறே முருகேசு ஆசிரியரும் பிறருக்கு உதவி தேவைப்படும்போது தம்மாலியன்ற உதவியை யாருக்கும் தெரிய விடாமல் அமைதியாகச் செய்வார். அதற்குக் கைமாறாக அவர்கள் வேறு பொருள் களையோ அல்லது தாம் விளைவித்த காய்கறிகளையோ கொண்டு வந்தால் அவர்களை மதித்து அவற்றைப் பெற்றுக்கொண்டு அதற்குரிய பணத்தைக் கொடுத்து விடுவார். பணம் பெற மறுப்பவர்களுக்கு தருணம் பார்த்திருந்து வேறொரு பொருளைக் கொடுத்து உதவுவார்.

பொதுவாக, மனிதர்கள் பதவிகளைத் தேடிப் போவார்கள். இவரைப் பொறுத்தவரை பதவிகளே இவரைத் தேடி வந்தன. ஊர்மக்கள் ஒன்றுதிரண்டு நீங்கள் தாம் எமக்கு கிராமச்சங்க அங்கத்தவராக இருந்து சேவை செய்ய வேண்டும் என்று வற்புறுத்தி அழைத்தமையினாலே அதில் ஈடுபட்டார்.

ஏழாலை கிழக்கு வட்டாரத்திற்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக கிராமச்சங்க அங்கத்தவராகப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். இவர் யாரிடமும் தனக்கு வாக்களிக்கும்படி கேட்டதே கிடையாது.

அக்காலத்தைய கிராமசங்கமானது மல்லாகம், அளவெட்டி, ஏழாலை, புன்னாலைக்கட்டுவன் ஆகிய நான்கு கிராமங்களையும் உள்ளடக்கியதாக இருந்தது. முருகேசு உபாத்தியாயர் அவர்கள் இக் கிராமச் சங்கத்தின் தலைவரா கவும், கிராமச்சங்க நீதிபதியாகவும் பதினைந்து வருடங்களுக்கு மேலாகப் பதவி யேற்று மக்களுக்கு அரும்பெரும் சேவையாற்றியிருக்கிறார். கிராமச்சங்க நீதிபதியாக இருந்த காலத்தில் நான்கு கிராமங்களிலுமிருந்து வழக்குகள் யாவும் தீர்ப்புக்காக இவரிடமே கொண்டு வரப்படும். பெரும்பாலான வழக்குகளை

நீதிமன்றத்துக்குச் செல்லவிடாமல் சமாதானமாகத் தீர்த்து வைப்பார். அடிதடி வழக்குகள் வரும்போது ஏற்றவகையில் புத்திமதிகள் கூறி இருசாராரிடையேயும் சமரசத்தை ஏற்படுத்தி ஒற்றுமைப்படுத்தி அனுப்புவார்.

காணி பூமிகளின் எல்லை வழக்குகள் வரும்போது, தமது துவிச்சக்கர வண்டியில் அந்தந்த இடங்களுக்குச் சென்று வழக்காளிகளின் முறையீட்டை நேரில் பார்வையிட்டு அத்தகராறுகளை நேர்மைக்கு அமைவாக சுமுகமாகத் தீர்த்து வைப்பார். அவர்களை நீதிமன்றத்திற்குச் செல்லவிட்டிருந்தால் அவர் களுக்கு எவ்வளவோ செலவாக இருக்கும் அவர்களுக்குச் செலவில்லாத வகை யில் தாமே வழக்குகளை நியாயமாகத் தீர்த்து வைப்பார். தம்முடைய இந்தப் பதவி களுக்காக யாரிடமும் ஒரு சதமேனும் பெற்றுக்கொள்ளாத பெருந்தன்மை படைத்தவராக விளங்கினார்.

ஐம்பது வருடங்களுக்கு மேலாக இவ்வாறு தன்னலம் கருதாத சேவை புரிந்த முருகேசு அவர்கள் பாராட்டுதல்களையும், புகழ்ச்சியையும் என்றுமே ஏற்றுக் கொள்ள விரும்பாதவர் ஆயினும், அவருடைய தொண்ணூறாவது வயதில் ஊர்மக்களும், இளைஞர்களும் சேர்ந்து "ஐயா, உங்களுடைய அருமையான குணங்கள் இன்றைய இளைஞர்களிடமும் ஏற்பட வேண்டும். உங்களைப் போன்ற பெரியோர்களைப் பாராட்டும் போது இளைஞர்கள் மனதிலும் உங்களைப் போல் சேவைபுரிய வேண்டுமென்ற எண்ணம் மலரும். அதனால் உங்களுக்கு சேவை நலம் பாராட்டு விழா நடத்தத் தீர்மானித்திருக்கிறோம். நீங்கள் கட்டாயம் சம்மதிக்க வேண்டும்" என்று கேட்டுகொண்டனர். அவர்கள் கூறிய காரணங்கள் அவர் வாயிலிருந்து "சம்மதம்" என்ற வார்த்தையை வரவழைத்தன. அவரது வாழ்க்கைக் காலம் முடிவுறும் கட்டம் நெருங்கிவிட்டதால் இறைவன் அவரை இணங்க வைத்திருப்பாரோ!

1981ஆம் ஆண்டு மாசி மாதம் இருபத்திரண்டாம் நாள் ஏழாலைக் கிராமமே திரண்டு வந்து முருகேசு உபாத்தியாயரின் சேவை நலம் பாராட்டும் விழாவிலே பங்குகொண்டது. பெருவிழாவாக அவ்விழா நடைபெற்றது. அதையொட்டிப் பாராட்டுக் கட்டுரைப் பிரசுரம் ஒன்றும் விநியோகிக்கப்பட்டது.

இவ்விழா நடைபெற்று இரு மாதங்கள் கூட நிறைவுறவில்லை. அன்றைய தினம் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில் கும்பாபிஷேகத்திற்கு முதல்நாள். எண்ணெய்க்காப்பு மற்றும் கிரியைகளைப் பார்ப்பதற்காக முருகேசு உபாத்தியாயர் துர்க்கை அம்மன் கோயிலுக்குச் சென்றார். அவருடைய பேரன்புக்குரியவரும், தாய்வழியில் மைத்துனர் உறவுள்ளவருமான ஆத்மஜோதி நா.முத்தையா அவர்கள் வந்திருப்பதை அறிந்து அவரைக் காண விரும்பினார். அவரோ கோயில்

வீதியில் உள்ள திருமுறை மண்டபத்தில் ஹரிதாஸ்கிரி சுவாமிகளுடைய சங்கீத கதாப்பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறார். நிகழ்ச்சி முடியும் போதுதான் அவரைப் பார்க்க விரும்புவதாக ஒருவரிடம் சொல்லி அனுப்பினார்.

ஆத்மஜோதி முத்தையா அவர்கள் உடனே வெளியில் வந்து முருகேசு உபாத்தியாயரை நாடி வந்தார். உபாத்தியாயர் முத்தையா அவர்களைக் கண்டதும் கட்டித் தழுவி சுகம் விசாரித்து விட்டு, "எப்போ வீட்டுக்கு வருவாய்" என்று கேட்டார். "நாளை கும்பாபிஷேகம் அது முடிந்து மறு நாள் வருவேன்" என்று அவர் பதில்கூற, "நானும் நாளை கும்பாபிஷேகத்துக்கு வருவேன்" என்று கூறிவிட்டு பிரிந்து சென்றார் முருகேசு உபாத்தியாயர்.

அடுத்தநாள், கும்பாபிஷேகம் நிகழ்ந்து கொண்டிருக்க முத்தையா அவர் களின் கண்கள் உபாத்தியாயர் வந்திருக்கிறாரா என்று தேடின. மாலையாகியும் அவர் வரவில்லை. அதன் பின்னர்தான் முத்தையா அவர்களின் மருமகன் ஒருவர் பரபரப்போடு வந்து "வாத்தியார் மாமா சிவபதம் அடைந்து விட்டார்" என்று கூறினார். ஒரு கணம் திகைத்து நின்றாலும், உடனே "அவருடைய மரணம் நல்ல மரணம் அற்புதமான மரணம்" என்று சொன்னார் ஆத்மஜோதி முத்தையா அவர்கள்.

மரணம் என்பது துன்பத்தையும் பிரிவையும் ஏற்படுத்துவது. ஆயினும் வயோதிபம் வந்த பின்னர், அதற்குரிய வேதனையைத் தராமல் மரணம் நிகழ்ந்தால் அதை நல்ல மரணம் அழகான மரணம் என்றுதான் சொல்ல வைக்கிறது.

கார்மாமிசைக் காலன்வரில் கலபத்
தேர் மாமிசை வந்தெதிரப் படுவாய்
தார் மார்ப வலாரி தலாரி எனும்
சூர்மா மடியத் தொடு வேலவனே

உபாத்தியாயர் அவர்கள் இறைவனடி சேர்ந்த அச்சம்பவத்தை நினைக்கும்போது அருணகிரிநாதரின் இந்தக் கந்தரனுபூதிப் பாடல்தான் நினைவில் வருகிறது. அடிப்படையில் இவர் முருகபக்தர். தாயின் வழிவந்த பக்தி அது. முருகப்பெருமான் தேரில் வந்து அழைத்துச் சென்றது போலவே அச்சம்பவம் நிகழ்ந்தது. 17.04.1981 அன்று துர்க்கை அம்மன் கோயில் கும்பாபிஷேகம் முத்தையா அவர்களிடம் கும்பாபிஷேகத்துக்கு வருவதாக முதல்நாள் சொல்லிவிட்டு வந்திருந்தார். ஆனால் அன்றையதினம் உடல் சிறிது சோர்வாக இருந்ததால் கும்பாபிஷேகத் திற்குப் போகாமல் சாய்மனைக் கதிரையில் சாய்ந்து திருமுறைப் பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தார். மூன்று மணியளவில்தான் தமக்கு மயக்கம் வருவதுபோல் இருப்பதாகக் கூறினார். பக்கத்து வீட்டு ஆயுள்வேத வைத்தியர் வந்து நாடி பார்த்து மருந்தும் கொடுத்தார். அவருக்கு உபாத்தியாயரின் உடலின் நிலைமை தெரிந்து விட்டது. ஆயினும் வீட்டிலிருந்தவர்களுக்கு அவர் உண்மையைச் சொல்ல வில்லை.

சிறிது நேரத்தில் தெளிவு ஏற்பட்டு விடும் என்று சூசகமாகச் சொல்லிவிட்டுச் சென்றார். ஏனெனில் அவருடைய ஆத்மா இறைவன்தாளினை அடையும் நேரம் ஆரவாரமின்றி அமைதியான பொழுதாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தி லேயே வைத்தியர் உண்மை நிலையைச் சொல்லாமல் சென்றார். ஆனால் கூட இருந்த பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் முதலானோர் சிறிது நேரத்தில் தாமாகவே உண்மையைப் புரிந்து கொண்டார்கள்.

அவரது உறுதியான உடல் அறுபது வயதே மதிப்பிடக் கூடியதாக இருந்தாலும் உண்மையில் அவர் தொண்ணூறு வயதை எட்டிக்கொண்டிருந்தார். பூரணஆயுள் என்று சொல்லக்கூடிய வயதிலே எந்தவித வேதனையுமில்லாமல் உறக்கத்தில் நிகழ்ந்தது போல் நடந்ததால் உபாத்தியாயர் வாழ்க்கையில் நல்ல பெயர் எடுத்தது போல் அவருடைய மரணமும் நல்லபெயரை எடுத்தது.

பொதுவாக அதைச்சொல்லிக் கொண்டாலும் அவருடைய உறவினர், சுற்றத்தவர், அவரோடு பழகியவர்கள், அவரால் வழிநடத்தப்பட்ட இளைஞர்கள் போன்றோர் அவருடைய இழப்பைப் பேரிழப்பாகக் கருதினர். ஏழாலை இலந்தை கட்டி பாதாள ஞானவைரவர் கோயில் ஆலய பரிபாலனசபைத் தலைவராய் இருந்த காலத்தில் இளைஞர்களையும் ஆலயத்தொண்டுகளில் ஈடுபடுத்த வேண்டு மென்ற ஆவலில் “இந்து இளைஞர் மன்றம்” என்பதை முருகேசு உபாத்தியாயர் உருவாக்கியிருந்தார்.

அவரது மறைவையொட்டி இந்து இளைஞர் மன்றம் விடுத்த அஞ்சலி உரையின் ஒருபகுதி “ஏழாலைக் கிராமத்தின் தவப்புதல்வன், தன்னலம் கருதாத சமூகத் தொண்டன், பல்லாயிரக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய ஆசிரிய தீபம், அப்பர் பெருமான் காட்டிய சரியை நெறியில் நின்று தொண்டுகள் பல செய்த சமயத்தொண்டன் உயர்திரு.சி.முருகேசு அவர்களின் பிரிவு ஏழாலைக் கிராமத்து க்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்”.

இளம் சந்ததியினரின் இதயங்களிலும் இடம்பிடித்த முருகேசு உபாத்தியாயர் ஏழாலை மண்ணிலே பிறந்து இக்கிராமத்தின் முன்னேற்றத்துக்காக அருந் தொண்டாற்றி கிராமசங்கத் தலைவராய், ஐக்கிய நாணயசங்கத் தலைவராய், ஆலய நிர்வாகியாய், திருப்பணிச்சபைத் தலைவராய், கிராமசங்க நீதிபதியாய் பிரதிபலன் எதிர்பாராமல் பணியாற்றியதுடன் கல்வி கற்பிக்கும் புனிதமான சேவையிலே கடமை தவறாது அயராது உழைத்து ஆசிரிய உலகில் மதிப்பும், பெருமையும் பெற்று மாணவர்களின் இதயங்கவர்ந்த ஆசிரிய மணியாகத் திகழ்ந்தார்.



சைவப் பெரியார்
திரு.மு.ஞானப்பிரகாசம் அவர்கள்

# சித்தாந்த வித்தகர் மு.ஞானப்பிரகாசம் அவர்கள்

*1910களில் ஏழாலைக் கிராமத்தின் வரலாற்றில் குறிப்பாக ஏழாலையின் மேற்குப் பகுதியில் அற்புதமான எழுச்சிமிக்க சம்பவங்கள் நடைபெற்றன என்று சொல்லலாம். ஏழாலையின் கிழக்குப் பகுதியிலே தோன்றி, சைவச் சான்றோர் வரிசையிலே முதலாவதாக வைத்துப் போற்றக்கூடியவராக விளங்கிய ஐயம்பிள்ளை பொன்னையா அவர்கள் திருமணத் தொடர்பினால் ஏழாலை மேற்கிற்கு வந்து, அங்கே சாதுசங்கமடம் அமைத்து ஆன்மீக ஞானப் பேரொளியை ஏற்றி வைத்த காலம் அது. அப்பேரொளியை நாடிவந்த சித்தர்கள் சிவனடியார்கள் மற்றும் அடியார் திருக்கூட்டத்தவர் கூடிச் செய்யும் இறைநாம சங்கீர்த்தனம், தியானம் மற்றும் ஆன்மீகத் தேடல்கள் முதலியவற்றால் ஆன்மீக அலைஎழுந்து பக்தி வெள்ளத்தில் எல்லாரையும் திளைக்க வைத்தது.*

*ஒரு ஞானக்குழந்தையின் வரவுக்காக அந்தச்சூழல் தன்னை இவ்வாறு தயார்படுத்திக் கொண்டிருந்தது. அந்தக் காலகட்டத்தில் அதாவது 1911ஆம் ஆண்டு மார்கழி மாதம் 24ஆம் திகதி அந்த ஞானக்குழந்தை பிறந்தது. பரிகாரி கந்தர் அவர்களுக்குப் பீட்டனாய் கதிரிப்பிள்ளை அவர்களுக்குப் பேரனாய் முருகேசு அவர்களுக்கு கடைசிப் புத்திரனாய் விளங்கிய அக்குழந்தைக்கு கதிரிப்பிள்ளை என்று பாட்டனாரின் பெயரையே பெற்றோர் சூட்டினர்.*

*அக்குழந்தை வளர்ந்து தன்னை உணர்ந்தபோது, பொன்னையா அவர்கள் ஏற்றி வைத்த "சாதுசங்கமடம்" ஆகிய ஞானஒளியை மேலும் மேலும் பிரகாசிக்கச் செய்து பேரொளியாக மாற்றப்போவது தாம் என்பதைத் தீர்க்கதரிசனமாக உணர்ந்து தம் பெயரை மாற்றி ஞானப்பிரகாசம் என்று வைத்துக்கொண்டார். இவருடைய தாயார் மூத்ததம்பி பொன்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மகளான சிவக்கொழுந்து ஆவார். தாய்வழிப் பாட்டனார் மூத்ததம்பி நொத்தாரிஸ் ஆகக் கடமையாற்றியவர். புராணத்திற்குப் பயன் சொல்வதிலும் வல்லவராக இருந்தார். ஞானப்பிரகாசம் அவர்களுக்கு ஆங்கில மொழிப்பயிற்சி பெற்ற ஆசிரியராகக் கடமையாற்றிய சிற்றம்பலம் அவர்களும் புகையிரதநிலைய அதிபராகக் கடமை யாற்றிய கந்தப்பசேகரம்பிள்ளை அவர்களும், திருமதி.சுந்தரம் சின்னத்துரை அவர்களும் மூத்த சகோதரர்களாக விளங்கினர். அவர்கள் தம் தம்பியாரை ஞானம் என்று செல்லமாக அழைப்பார்கள். கடைசிப்பிள்ளையாதலால் சகோதரர்கள் மூவரினதும் அளவற்ற அரவணைப்புக்கு ஆளானார் ஞானம்.*

*"விளையும் பயிரை முளையில் தெரியும்" என்பதற்கிணங்க குழந்தைப் பருவத்திலேயே இவருடைய அறிவு பூர்வமான பக்தி பூர்வமான ஆற்றல்கள் வெளிப்பட்டன.*

**கல்வியும் கடமையும்**

இவர் ஆரம்பக்கல்வியைத் தொடங்க வேண்டிய காலத்தில் சைவப் பாடசாலைகள் எதுவும் அவ்விடத்தில் இருக்கவில்லை. அதனால் வித்தியாரம்பம் செய்ததும் திண்ணைப்பள்ளிக்கு அனுப்பினர். அப்பள்ளி ஞானப்பிரகாசத்தின் வீட்டுக்குக் கிட்டவாக உயரிய நாவல் என்று குறிப்பிடும் பகுதியில் கட்டுவிளாணை என்னும் குறிச்சியில் அமைந்திருந்தது. வேப்பமர நிழலில் நடைபெற்ற அப் பள்ளியிலே கல்வி கற்பித்தவர் ஏழாலையின் தோப்பு என்னும் பகுதியில் வாழ்ந்த ஆறுமுகம் சட்டம்பியார் ஆவார். ஆறுமுகம் சடடம்பியாரிடம் ஆரம்பக் கல்வியை முடித்துக்கொண்டு தற்போது மல்லாகம் மகா வித்தியாலயம் என்ற பெயருடன் விளங்கும் மல்லாகம் இந்து ஆங்கில பாடசாலையில் இடைநிலைக் கல்வியைக் கற்றார். அவர் தம் உயர்கல்விக்காக நாடிய இடம் தற்போது பல்கலைக்கழகமாக விளங்கும் பரமேஸ்வராக் கல்லூரி ஆகும். பரமேஸ்வராக் கல்லூரியில் அவர் கால் வைத்த நேரம் சுபவேளையாக இருந்திருக்க வேண்டும். ஞானப்பிரகாசம் அவர் களுக்கும் பரமேஸ்வராக் கல்லூரிக்கும் அவரது ஆயுட்காலம் வரை அத்தகைய தொரு நெருக்கமான தொடர்பு இருந்தது. அங்கு உயர்கல்வியைக் கற்ற அவர் 1927ஆம் ஆண்டு தமது பதினைந்தாவது வயதில் கேம்பிறிஜ் சீனியர் பரீட்சையில் அதிவிசேட சித்தியைப் பெற்றுக் கொண்டார்.

அதன்பின் அவருக்கு கொழும்பு பல்கலைக்கழகக் கல்லூரியில் கணித, விஞ்ஞானக் கல்வியைக் கற்கும் வாய்ப்புக் கிடைத்தது. அங்கு கற்ற கல்வியின் பயனாக 1933ஆம் ஆண்டு இலண்டன் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். பட்டம் பெற்று யாழ்ப்பாணத்துக்கு வந்ததுமே ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் சிறிது காலம் ஆசிரியப்பணி புரிந்தார். அங்கு அவரை நிலைகொள்ளவிடாமல் பரமேஸ்வராக் கல்லூரி அவரை ஈர்த்துக் கொண்டது.

பரமேஸ்வராக் கல்லூரியுடனான அவரது தொடர்பு மலரும் மணமும் போன்றது. அத்தொடர்புக்குக் காரணமாக விளங்கியவர்கள் சேர்.பொன். இராமநாதனும், அவரது மருகரான சு.நடேசபிள்ளை அவர்களும் ஆவர். அவர்களது தேசப்பற்று, சமய சமூகப்பற்று நற்பண்புகளைக் கண்டு அவர்களை ஆதர்ஸ புருஷர்களாக மதித்தார்.

அவர்கள் இருவர் மீதும் ஞானப்பிரகாசம் அவர்களுக்கு ஏற்பட்ட ஆத்மார்த்தமான அன்பின் விளைவுதான் பரமேஸ்வராக் கல்லூரியுடனான அவரது நிரந்தரத் தொடர்பு ஆகும். அத்தகைய நிரந்தரப் பிணைப்பினைக் கொண்ட பரமேஸ்வராக் கல்லூரி 1934ஆம் ஆண்டிலிருந்து ஓய்வுபெறும் வரை அவருடைய ஆசிரிய சேவையை தனதாக்கிக் கொண்டது. 1934ஆம் ஆண்டு அக்

கல்லூரியில் முதல் முதலாக ஆசிரியப் பணி தொடங்கிய போதே லண்டன் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி மாணவனாக தமிழ், சமஸ்கிருதம் ஆகிய பாடங்களைக் கற்று 1935இல் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

1934 – 1946 வரை பரமேஸ்வராக் கல்லூரியின் மாணவர்களுக்கு ஆசிரியராகக் கடமையாற்றினார். 1946 –1949 வரை ஆசிரியர்களுக்கு ஆசிரியராகப் பணிபுரிந்தார். பரமேஸ்வராக் கல்லூரியில் அவ்வேளையில் பண்டித சைவாசிரிய பயிற்சிக் கலாசாலை நடைபெற்றுக் கொண்டிருந்தது. மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் நிறைந்த சமய அறிவு கொண்டவர்களாய் இருக்க வேண்டும் என்ற விருப்பத்தில் தாமே அவர்களுக்குக் கற்பிக்க ஆரம்பித்தார். மூன்று வருடங்கள் அவ்வாறு சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியராயிருந்தார். அக்கால கட்டத்தில்தான் பாடநூற் பிரசுரசபையாரின் தமிழ்மலர், சைவநெறி ஆகிய பாட நூல்களின் ஆக்கத்திற்குத் தலைவராக இருந்து வழிநடத்திய ஞானப்பிரகாசம் அவர்கள் கொழும்பில் இயங்கி வந்த பாடநூற் பிரசுர சபையாரின் தமிழ், சைவம் ஆகியவற்றின் பாட ஆக்கங்களை தமது மேற்பார்வையிலே பரமேஸ்வராக் கல்லூரியிலேயே வெளியிடும்படி செய்தார்.

ஆசிரிய பயிற்சியாளர்களுக்கு வழங்கிய மூன்று வருட சமய பாட கற்பித்தலின் பின் 1950ஆம் ஆண்டிலிருந்து பரமேஸ்வராக் கல்லூரியின் உயர்வகுப்பு மாணவர்களுக்கான கற்பித்தலில் ஈடுபட்டு ஆசிரியப்பணி புரிந்தார். ஆசிரியப் பணியிலிருந்து பதவி உயர்வு பெற்று 1960 – 1965 வரை உபஅதிபராகவும், 1965 – 1970 வரை அதிபராகவும் பரமேஸ்வராக் கல்லூரியில் கடமையாற்றி அரச பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

விஞ்ஞானப் பட்டதாரி என்பதால் பெரும்பாலும் விஞ்ஞான பாடங்களே கற்பித்தார். ஆனால் அவருக்குச் சமய பாடம் கற்பிப்பதிலேயே ஆர்வம் இருந்தது. விஞ்ஞானம் கற்பிக்கும்போது அதற்குப் பொருத்தமாக வாய்ப்பு அமையும் போது சமய தத்துவங்களையும் இணைத்துக் கற்பிப்பார். மாணவர்களுக்கு அது சுவாரஸ்யமாக இருந்ததால் அவருடைய கற்பித்தலிலே கூடிய கவனம் செலுத்துவார்கள்.

**இல்வாழ்க்கை**

ஞானப்பிரகாசம் அவர்களுக்கு 1941ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. அவருடைய அண்ணனாரான கந்தப்பசேகரம்பிள்ளை அவர்களின் துணைவியாரான தங்கரத்தினம் அவர்களின் தங்கையே அவருக்கு மனையாளாக வாய்க்கப் பெற்றார். இதே ஊரைச் சேர்ந்த உறவினரான சிவப்பிரகாசம் அவர்களின் கடைசிப் புத்திரியான சிவஞானசுந்தரம் அவர்களே வாழ்க்கைத் துணையாக அமைந்த

மங்கையாவார். ஞானப்பிரகாசம் அவர்களை வீட்டிலும், அயலிடங்களிலும் உள்ளவர்கள் ஞானம் என்று அழைப்பார்கள். அதுபோல சிவஞானசுந்தரம் அவர் களையும் வீட்டவரும் அயலவரும் ஞானம் என்று அழைத்தார்கள். ஞானமே உருவான ஞானத்திற்கு இல்லாளும் ஞானம் என்ற பெயரோடு கிடைத்ததும் ஒரு பாக்கியமே.

இவர்களுடைய இல்லறச் சோலையிலே நான்கு பிள்ளைகள் மலர்களாக மலர்ந்து மணம் வீசினர். ஞானசம்பந்தன், உமையாள், செந்தூர் முருகன், தேவ்தேவன் ஆகியோரே அவர்களுடைய பிள்ளைச் செல்வங்கள் ஆவர். அவரது வாழ்க்கை என்றும் செழிப்பாக இருந்தது.

ஞானப்பிரகாசம் அவர்களுக்கு ஆசிரியசேவை காரணமாக வேறு இடங்களுக்கு மாறிச் செல்ல வேண்டிய நிலை ஏற்படாததால் என்றும் தம் பந்து மித்திரர்கள் குடும்பத்தவர் சூழ தம் சொந்த ஊரிலேயே இருக்கக்கூடிய வாய்ப்பு அமைந்திருந்தது. ஆயினும் அவரது வாழ்க்கை குடும்பம் என்ற வட்டத்துக்குள் அடங்கவில்லை. வீட்டிற்கு வெளியிலே சமய, சமூக, சித்தாந்தப் பணிகள் என்ற அளவில் பரந்து விரிந்திருந்தது, வெளியுலகிலே அவருக்குப் பல கடமைகள் காத்திருந்தன. அவற்றை நிறைவேற்றுவதில் அவருக்கு ஆர்வமும் இருந்தது. இறைவன் அருளால் அவருக்கு குடும்பப்பொறுப்பு என்று எதுவுமே இருக்கடி வில்லை. “எடுத்துச் சுமப்பான்” என்பதற்கிணங்க அவரது மனைவியின் சகோதரர் குமாரசாமி ஆசிரியர் அவர்கள் பிரம்மச்சாரியாக அவர்களது வீட்டிலேயே இருந்த தால் எடுத்துச் சுமப்பானாக குடும்பத்துக்குத் தேவையான எல்லாவற்றையும் கவனித்துக் கொள்வார். திரு.சி.குமாரசாமி ஆசிரியர் வழங்கிய பக்க பலமானது ஞானப்பிரகாசம் அவர்கள் ஆலயத்தொண்டுகளும், சித்தாந்தப் பணிகளும், சமூக சேவைகளும் நிறைவாகச் செய்வதற்கு பேருதவியாக இருந்தது எனலாம். அவருடைய சகோதரியாரான திருமதி.சி.சுந்தரம் அவர்களும் மைத்துனரான திரு.செ.சின்னத்துரை ஆசிரியரும் அவரது ஆலயப் பணிகளுக்கு வழிகாட்டிகளா கவும் உந்துசக்தியாகவும் விளங்கினர். இத்தகையதொரு குடும்பப் பின்னணி சமயத்துறையில் சாதனைகள் புரிவதற்கு சாதகமாக இருந்தது.

**ஆலயங்களினூடாக சமயப்பணி**

ஞானப்பிரகாசம் அவர்களுடைய பெற்றோர் மற்றும் சகோதரர்கள் யாவரும் சைவாசார சீலர்களாய், தெய்வபக்திமிக்கவர்களாய் வாழ்ந்தவர்கள். அவர் களுடைய தினசரிக் கடமைகளில் இறைவழிபாடு முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. அவ்வகையில் பரம்பரைப் பண்பாக ஞானப்பிரகாசத்திற்கு இயல்பாகவே பக்திமார்க்கத்தில் பெரும் ஈடுபாடு இருந்தது. அவர் பிறந்த காலத்திலேதான் அந்தச் சூழலிலே ஓர் ஆன்மீக எழுச்சிக்கான அத்திவாரம்

இடப்பட்டது. சடைவரதர் முதலான துறவிகளும், ஐ.பொன்னையா அவர்கள், ஐ.பேரம்பலம் அவர்கள் முதலான சைவச் சான்றோர்களுமாகக் கூடி ஆன்மீக ஆய்வுகளும் வேதாந்த விசாரமுமாக மெய்ஞ்ஞானத் தேடலில் ஈடுபட்டிருந்தனர். அதற்காக அவர்கள் அமைத்த சாதுசங்கமடம் என்னும் களமானது அங்குள்ள பலரையும் கவர்ந்திழுத்தது.

ஞானப்பிரகாசம் அவர்களின் தாயார் அதில் நாட்டங்கொண்டு அங்கு செல்வார். சிறுவராக இருந்த ஞானப்பிரகாசமும் தாயாருடன் அங்கு செல்வார். இரும்பை அண்மையாகக் கண்டால் காந்தம் கவர்ந்து இழுத்துவிடும். இங்கே அத்தகையதோர் செயற்பாடாக ஞானப்பிரகாசத்தை பொன்னையா (அருளானந்த சிவம்) என்னும் காந்தம் கவர்ந்து கொண்டது. இருவரிடையேயும் குரு – சீடன் என்ற தொடர்பு மலர்ந்தது. ஏற்கெனவே, இவருடைய ஒன்றுவிட்ட சகோதரியை மணம் செய்ததால் மைத்துனர் என்ற உறவோடு இருந்த பொன்னையா அவர்கள் சீடர் என்ற உயர்நிலையை வழங்கி ஞானப்பிரகாசத்தை தம் திருக்கூட்டத்திலே இணைத்துக் கொண்டார்.

பள்ளிக்கூடத்திலே கழிக்கும் பொழுதைவிட மற்றப் பொழுதெல்லாம் மடத்திலே தவப்பொழுதாகக் கழித்தார் ஞானப்பிரகாசம் அவர்கள். இளம்பிராயத்தில் மடத்திலேற்பட்ட அனுபவங்களைப் பற்றிய கட்டுரை ஒன்றிலே, "ஐ.பேரம்பலம் அவர்கள் மடத்திலே தியான யோகங்களும் பஜனைகளும் நிகழ்த்தி வந்த பழைய அடியார் கூட்டத்தினரையும், புதிய அடியார் கூட்டத்தைச் சேர்ந்த எம் போன்றவரையும் இணைக்கும் பாலம் போல விளங்கினார்" என்று குறிப்பிடுகிறார். இதிலிருந்து, மடத்தில் வயது முதிர்ந்தவர்களும், இளம் வயதினரும், நடுத்தர வயதினரும் அடியவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதை அறியக்கூடியதாக உள்ளது.

இத்தகைய அடியவர் கூட்டத்திலே ஞானப்பிரகாசம் அவர்களின் பக்குவநிலைகண்டு தமக்கு இயலாத வேளைகளில் மடத்தில் பிரதிஷ்டை செய்யப் பட்டிருந்த பிள்ளையாருக்குப் பூசை செய்யும்படி பணித்தார் பொன்னையா அவர்கள். சூரிய உதய, அஸ்தமனங்களை அடிப்படையாக வைத்து உஷத்காலப் பூசை, சாயரட்சைப் பூசை ஆகிய இருகாலப் பூசைகளை மந்திரங்கள் சொல்லி விதிமுறைப்படி செய்துவந்த ஞானப்பிரகாசம் அவர்களிடம் பூசை செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. 1941ஆம் ஆண்டு வரை காலை, மாலை பூசை செய்து வந்தவர் அதன்பின் பூசைக்கு ஓர் அர்ச்சகரை நியமித்தார்.

1941ஆம் ஆண்டு அவருக்குத் திருமணம் நடைபெற்றது. பூசைக்கு அர்ச்சகரை நியமித்தாலும் மற்றத் தொண்டுகள் புரியவும், குருவைத் தரிசிக்கவும் தினமும் மடாலயத்திற்கு வருவார்.

இருவரும் சமஸ்கிருத மொழி கற்றவர்கள் ஆகையால் உபநிடதங்கள் பற்றி வேத ஆகமங்கள் பற்றி அலசி ஆராய்ந்து அந்தப் பேரின்பத்தில் திளைப்பார்கள். சைவசித்தாந்த விஷயங்கள் பற்றி ஆய்வு செய்து மகிழ்வார்கள். திருமுறைப் பதிகங்கள் பாடி உருகுவார்கள்.

1948ஆம் ஆண்டு குரு அருளானசிவம் அவர்கள் சமாதிநிலை எய்திய பின்னர், குருவின் எண்ணங்களுக்கு இசைவாக மடாலயத்தின் பூசைகள் விழாக் களை நடாத்தி வந்தார். சங்கிராந்தி, சதுர்த்தி, பிள்ளையார் பெருங்கதை நோன்பு, அதிகாலையில் திருவெம்பாவை குருபூசைகள், மகேசுர பூசை முதலானவை நியமமாக நடைபெற்றன.

ஆடி மாதத்தில் வரும் மூன்றுநாள் திருவிழாவை அர்த்தம் பொதிந்த விழாவாக அமைத்திருந்தார். மெய்ச்சமயமாம் சைவத்தின் அரும்பெரும் சொத்தான திருமுறைப்பதிகங்களைக் கண்டெடுத்த வரலாற்றினை நினைவூட்டும் வகையில் முதல்நாள் விநாயகர்உலா, இரண்டாம் நாள் நாயன்மார்உலா, மூன்றாம்நாள் சுந்தரர் சேக்கிழார்உலா என்பதாக நடைபெறும். இந்தக் கருணாகரப்பிள்ளையார் மடாலயத்தின் சிறப்பு நிகழ்வாக விளங்குவது புராண படனம். அப்புராண படனத்தை மிக விசேடமாக நடத்துவார் ஞானப்பிரகாசம் அவர்கள்.

புராணபடனத்திற்குரிய குரல்வளம், இராகஞானம், உச்சரிப்புத்திறன், ஆழமான கருத்துக்கள் அத்தனையும் கொண்டவர். அவை அவருக்குப் பரம்பரைக் கொடையாகக் கிடைத்தது எனலாம். இவருடைய தாய்வழிப் பாட்டனார் மூத்ததம்பி அவர்கள், தாய்மாமனாரான திரு.கணபதிப்பிள்ளை, தமையன்மாரான சிற்றம்பலம் ஆசிரியர், கந்தப்பசேகரம் அவர்கள் யாவரும் புராணீகர்களாக விளங்கியவர்கள். அந்த வகையில் இவருக்கும் பயன் சொல்லும் திறமை இயல்பிலேயே வந்திருந்தாலும் இவரது கல்வி மேன்மை காரணமாக மிகச் சிறப்பாகப் பயன் சொல்லுவார். மடாலயத்தில் தை மாதம் (திரு.ஐ.பொன்னையா) அருளானந்தசிவம் அவர்களின் குருபூசையை நிறைவுநாளாகக் கொண்டு திருவாதவூரடிகள் புராணமும், சித்திரையிலிருந்து ஆடி வரை திருத்தொண்டர் புராணமும் படித்துப் பயன் சொல்லப்படும். ஞானப்பிரகாசம் அவர்களின் காலத்தில், நால்வர் சந்நிதியில் புராணபடனம் நிகழும் காலத்தில் மட்டும்தான் காலைப்பூசை நடைபெறும்போது காப்பு சொல்லும் நிகழ்வை நடைமுறைப் படுத்துவது வழக்கமாயிருந்தது. புராணபடனம் செய்வதை அதி உயர்ந்த நிலையில் வைத்துப் பார்ப்பவர் அவர். எனவே அவரது காலத்தில் புராணபடனம் நிகழும் நாட்களில் தனித்துவமான சோபையும் வித்தியாசமான ஒரு சூழலும் ஏற்பட்டிருக் கும். நால்வர் சந்நிதியில் காலைப்பூசையின் போது குத்துவிளக்கின் தீப ஒளியில் ஊதுபத்தி மணம் கமழ காப்பு சொல்லி ஒரு பாடலும் வாசித்து மீண்டும் காப்பு

சொல்லி வைத்துவிட்டு, மாலையில்தான் புராணபடனம் செய்வார். தொலைக் காட்சி, கணனி போன்றவை இல்லாத அந்தக் காலத்தில் புராணம் கேட்கப் பலர் வருவார்கள். கேட்பவர்கள் மெய்மறந்து பரவசத்தில் திளைக்கும்படியாக, ஐம்பது வருடங்களுக்கு மேலாக மடாலயத்தில் புராணபடனம் செய்து வந்தார்.

ஞானப்பிரகாசம் அவர்கள் ஆற்றிய சமயப் பணியானது அவரது பிறந்த ஊரோடு மட்டும் நின்றுவிடவில்லை. பரமேஸ்வராக் கல்லூரியில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்திலும் இடம்பெற்றுள்ளது. பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவுனரான சேர்.பொன்.இராமநாதன் உருவாக்கிய அறநிதியங்களை நிர்வகிப்ப தற்காக அமைக்கப்பட்ட பணிப்பாளர் சபையின் தலைவராக இருந்து பரமேஸ்வரர் ஆலயத்தின் திருத்த வேலைகளை மேற்கொண்டு **1991**ஆம் ஆண்டு இராஜ கோபுரத்தைக் கட்டி தாமே முன்னின்று கும்பாபிஷேகத்தையும் நடத்தி வைத்தார். இவ்வாலயத்தில் தினமும் மூன்று வேளைகள் பூசை நடைபெறவும் பிரதோசம், சிவராத்திரி, நவராத்திரி முதலான நாட்களில் விஷேட அபிஷேகங்கள், பூசைகள் நடைபெறவும் ஒழுங்குகள் செய்தார். பரமேஸ்வரன் ஆலயத்தில் திருக்கேதீச்சரம், திருக்கோணேஸ்வரம், முன்னேஸ்வரம் என்று பெயரிட்டு மூன்று உண்டியல் பெட்டிகளை வைத்தார். மாணவர்கள் அந்த மூன்று ஆலயங்களையும் நினைந்து இறைவனை வழிபடவும் இறைவனுக்குக் காணிக்கை செலுத்தும் பழக்கத்தை அவர்களிடம் ஏற்படுத்தவும் இவ்வாறு செய்தார்.

பணிப்பாளர் சபையின் ஆயுட்காலத் தலைவராக இருந்து பரமேஸ்வரர் ஆலயத்தில் தொண்டாற்றி பல்கலைக்கழக மாணவர்களை நல்வழிப்படுத்திய ஞானப்பிரகாசம் அவர்களின் பணி யாழ்ப்பாணத்திலிருந்து வெளி மாவட்டங் களுக்கும் பரவியது. மன்னார் மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சர ஆலயத்தில் அவர் ஆற்றிய தொண்டுகள் அளப்பரியன.

சேர் கந்தையா வைத்தியநாதன் திருப்பணிச்சபையின் தலைவராக இருந்த காலத்தில் அவருக்கு உறுதுணையாக நின்று இவ்வாலய வளர்ச்சிக்காகப் பெருந்தொண்டாற்றினார். ஞானப்பிரகாசம் அவர்களுக்கு திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிகளில் இருந்த ஈடுபாட்டின் காரணமாகவும், தம்மை முழுமையாக அர்ப்பணித்து ஆலயப் பணிகள் செய்வதன் காரணமாகவும் கந்தையா வைத்தியநாதன் அவர்களின் காலத்துக்குப் பின்னர் திருப்பணிச் சபையின் தலைவராக அவர் நியமிக்கப்பட்டார்.

சிவபெருமானுக்குரிய சோமவார விழாக்கள், மகாசிவராத்திரி முதலான விழாக்கள் சிறப்பாக நடைபெற வேண்டுமென்ற விருப்பத்தில் தாமே முன்னின்று நடத்தி வைப்பார். சேக்கிழார் விழாவும் கதிர்காமத் தீர்த்தத்தோடு அண்டிய கதிர்காமத் திருவிழாவும் திருக்கேதீச்சரத்தில் சிறப்பாக நடப்பதற்கும் இவரே காரணகர்த்தா ஆனார்.

இந்த ஆலயத்தில் அறுபத்துமூன்று நாயன்மாரின் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்படுவதற்கு அயராது பாடுபட்டார். அறுபத்துமூன்று திருத்தொண்டர் களின் சரிதங்களுக்கும் உள்ளமுருகி மெய்மறந்து பயன் சொல்லும் சைவப் பெரியார் ஞானப்பிரகாசம் அவர்கள் அந்த நாயன்மாரின் விக்கிரகங்கள் செய்வதற்காக தமது ஊரிலும் அயற்கிராமங்களிலும் பித்தளைப் பாத்திரங்கள் சேகரித்துக் கொடுத்தார். வருடந்தோறும் அறுபத்துமூன்று நாயன்மாரும் இறைவனும் நேருக்கு நேராகப் பார்த்தவாறு வீதிவலம் வரும் "பத்தோற்சவம்" என்னும் பெருவிழாவும், பஞ்சரத பவனியும் சிறப்பாக நடைபெற முன்னின்று உழைத்தார்.

முன்னர் ஒரு காலத்தில் தமிழகத்தில் மக்களிடையே பூசல்கள் ஏற்பட்டு அவர்களிடையே உண்டான கருத்து வேற்றுமைகளால் மக்கள் அமைதியிழந்து மனச்சாந்தியிழந்து அதனால் சமுதாயம் சீர்கெட்டிருந்த வேளையிலே அக்கால கட்டத்தில் அவதாரம் செய்திருந்த சமயகுரவர்கள் ஊரூராகப் பாதயாத்திரை செய்து தலங்கள் தோறும் சென்று இறைவனது திருவருட் செயல்களையும், திருமேனியழகையும் இன்னிசைப் பாடல்களாய்ப்பாடி இறைபக்தி மூலமே மனச் சாந்தியையும், அமைதியையும் பெறமுடியும் என்று மக்களுக்கு உணர்த்தி சைவசமயம் மறுமலர்ச்சியுறச் செய்தனர்.

இவ்வாறாகவே எமது நாட்டிலும் மக்களிடையே அமைதியின்மையும் வேற்றுமை உணர்வும் ஏற்பட்டிருந்த காலத்தில் சைவப் பெரியார் மு.ஞானப்பிரகாசம் அவர்களும் நாயன்மார்களின் வழியைப் பின்பற்றி திருத்தலப் பாதயாத்திரையை மேற்கொண்டார்.

யாழ்ப்பாணத்து நல்லூரிலிருந்து பூநகரியூடாக காடு கரம்பையெல்லாம் கால் வலிக்க நடந்து திருக்கேதீச்சரத்தைச் சென்றடைவார்கள். ஆரம்ப இடத்திலேயே பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் பாதயாத்திரையில் பங்குபற்றுவார்கள். போகும் வழிகளிலும் பக்தர்கள் சேர்ந்து கொள்வார்கள். நடந்து செல்லும்போது பக்திப்பரவசத்தில் அரோகரா என்று ஒலி எழுப்புவார்கள். பண்ணிசையோடு திருமுறைகளை ஓதுவார்கள். வழியில் காணும் ஆலயங்களிளெல்லாம் இறைவனைத் தரிசனம் செய்வதோடு, அங்கு திருஞானசம்பந்தர் புராண படனமும், திருமுறைப் பாராயணங்களும் நடைபெறும். ஞானப்பிரகாசம் அவர்கள் பாதயாத்திரைக்குத் தலைமை தாங்கி இவற்றையெல்லாம் நெறிப்படுத்தி நடாத்துவார்.

பாதயாத்திரை செய்யும் இந்த அடியார்களுக்கு அமுதிடவும், அவர்களைக் களைப்பாற்றி வழியனுப்பவும் ஆங்காங்கே பக்தர்கள் காத்திருப்பார்கள். கதிர்காமத் தீர்த்தத்திற்கு முதல்நாள் மாலைப்பொழுதில் திருக்கேதீச்சரத்

தலத்தைச் சென்றடைவார்கள். அங்கேயுள்ளவர்கள் இவர்களுக்கு பாதபூசை செய்து வரவேற்பார்கள். இவர்கள் கொண்டு சென்ற அபிஷேகப் பொருட்களால் கேதீச்சரநாதருக்கு அபிஷேகம் நடைபெறும். நீண்டகாலமாக ஆடி மாதத்தில் இப் பாதயாத்திரையை நடாத்தினார்.

அங்கு சிவபூஜா மடத்தை ஸ்தாபித்ததோடு திருவாசக மடத்திலும் பெரும் பணியாற்றியுள்ளார். அங்கே நடைபெறும் புராணபடனங்களில் கேட்போர் பக்தியில் திளைத்துப் பரவசமடையும் வண்ணம் பயன் சொல்லுவார்.

திருவாசக மடத்தில் நடைபெறும் மாகேசுர பூசையை முன்னின்று நடாத்துவார். "அதிக நல்லறம் நிற்பது என்று அறிந்தனை அறத்துள் அதிகமாம் சிவபூசையுள் அடியவர் பூசை அதிகம் என்றறிந்து அன்பரை அர்ச்சனை செய்வாம்" என்ற திருவிளையாடற்புராணப் பாடலுக்கிணங்க அடியார்களை மாகேசுரர் களாகப் பாவனை செய்து, ஆசாரசீலர்களைக் கொண்டு தூய்மையாகச் சமைத்த உணவளித்து, "மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும் அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்" என்று பாடி அடியவர்களை வணங்குவார்.

இத்தகைய மாகேசுர பூசையை ஏழாலை மடாலயத்திலும் ஆண்டுதோறும் ஆறு குருபூசைத் தினங்களிலும் செய்து பரவசமடைவார். ஏழாலை கருணாகரப் பிள்ளையார் மடாலயம், திருநெல்வேலி பரமேஸ்வரர் ஆலயம், திருக்கேதீச்சரம் ஆகிய மூன்று தலங்களும் வாழ்நாள் முழுவதும் அவர் தொண்டு புரிந்த திருத்தலங்களாகும்.

இளம் சந்ததியினரை இறைவழிபாட்டில் ஈடுபடுத்தி சமயநெறியில் அவர்களை நெறிப்படுத்தி வழிநடத்தினால்தான் சிறந்த சமுதாயம் உருவாகும் என்பதை உணர்ந்த சைவப் பெரியார் ஞானப்பிரகாசம் அவர்கள் அதற்காகச் சில செயற்பாடுகளை முன்னெடுத்து நடத்தினார். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆடிக் கார்த்திகைத் திருவிழாவன்று பத்து, பன்னிரண்டு வயதுடைய சிறுவர்களை காவடி எடுக்கச் செய்து மடாலயத்திலிருந்து மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்கு காவடி ஆட்டத்துடன் அழைத்துச் செல்வார். பரமேஸ்வராக் கல்லூரி மாணவர்களை மாவிட்டபுரம் கோயிலில் சரியைத்தொண்டு செய்ய வைத்து அச் சூழலை அழகும் தூய்மையுமாக ஆக்குவார்.

தர்மமே வெல்லும் என்பதை எடுத்துக்காட்டும் புராணங்கள், இதிகாசங்களை வாசிப்பதால் சமுதாயம் நல்வழியில் செல்லும் என்பதற்காக ஒவ்வொரு சனிக்கிழமை மாலை வேளையிலும் மடாலயத்தில் இராமாயணம் வாசிப்பதை நியமாகக் கொண்டார். அந்தக் காலத்தில் பலர் கதை கேட்பார்கள். தர்மத்தின் வழி வாழத் தீர்மானிப்பார்கள்.

அக்காலத்திலே இந்து கலாசார அமைச்சின் அனுசரணையுடன் ஊர்கள் தோறும் "இந்துசமய அபிவிருத்திச் சங்கங்கள் அமைக்கப்பட்டன". ஞானப்பிரகாசம் அவர்கள் வடக்கு - கிழக்கு, தெற்கு - மேற்கு என இரண்டு அபிவிருத்திச் சங்கங்கள் அமைத்து பண்ணிசை வகுப்புக்கள் நடத்தி பேச்சுப் போட்டி, பண்ணிசைப்போட்டி, கட்டுரைப்போட்டி முதலான போட்டிகள் நடாத்தி பரிசுகள் வழங்கி எமது கலாச்சார விழுமியங்களைப் பாதுகாத்து வைத்திருந்தார். அவர் சிவசின்னங்களை மதிப்பவர். நாம் அவற்றை மதித்து நடந்தாற்றான் இளம் வயதினரும் அதனைப் பின்பற்றி அணிவார்கள் என்பதற்காக எந்நேரமும் நெற்றியிலே திரிபுண்டரமாக திருநீற்றுக்குறி விளங்கக் காட்சி தருவார். சந்தனமும், குங்குமமும் சேர்த்து பொட்டிட்டிருப்பார். கழுத்திலே உருத்திராக்க மாலை துலங்கும். எமது பாரம்பரிய உடைகளுக்கு மதிப்பளிக்க வேண்டுமென்ப தற்காக வேட்டியும், சால்வையும் மட்டுமே அணிந்து பாடசாலை அதிபர் பதவியை வகித்துக் காட்டினார்.

அந்நிய நாட்டவரின் வருகையால் எமது சூழலின் பண்பாடுகள் மாற்ற மடையத் தொடங்கியதைக் கண்டு மனம் வருந்திய அவர் எமது சைவசமய மரபுகளை எம்மவர் கடைப்பிடித்து சைவப்பண்பாடுகளைப் பின்பற்றி வாழவேண்டு மென்ற விருப்பத்தில் தாமும் தூயசைவத் திருமகனாக வாழ்ந்துகாட்டி மற்றவரையும் அப்படியாக வாழ்விப்பதற்காக இத்தனை வகையான பணிகளையும் செய்தார். அவரைப் போன்றவர்கள் ஆற்றிய பணிகளால் சைவம் இந்த அளவுக்கா வது காப்பாற்றப்பட்டது.

**கல்விப் பணிகள்**

ஒரு சமுதாயம் முன்னேறி உயர்நிலை அடைய வேண்டுமாயின் கல்வியிலே மேன்மையடைய வேண்டும். அதனை உணர்ந்த ஞானப்பிரகாசம் அவர்கள் எமது சமுதாயம் மேல்நிலை அடையும்படியாக கல்விப் பணிகள் பலவற்றை ஆற்றி யுள்ளார். அவர் விஞ்ஞானப்பட்டதாரி ஆகிய உடனேயே கல்விப்பணி செய்யக் கூடிய அதிஉயர்ந்த சேவையாகிய ஆசிரியர் தொழிலை மேற்கொண்டார். நன் நூலில் ஆசிரியருக்குரிய இலக்கணங்களாகக் கூறப்பட்ட மலர் போன்ற முகமலர்ச்சி, மலை போன்ற உயர்ந்த அறிவு, பூமாதேவி போன்ற பொறுமை, சமன் செய்து சீர்தூக்கும் கோல் போன்ற நடுவுநிலைமை அத்தனையும் உடையவராக ஆசிரியர் பணியில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து அக்கால மாணவர் களுக்குச் சிறந்ததோர் ஆசிரியராக விளங்கினார். கற்பித்தலிலே உள்ள தேடல், பதித்தல், பிரயோகம், என்பவற்றில் பிரயோகத்திற்கே முதலிடம் கொடுப்பார். மாணவர்களைப் பரீட்சைக்குப் பயிற்றுவிப்பதில் வல்லவராக விளங்கினார். இவர் கல்வி உலகில் ஆசிரியராக, உபஅதிபராக, அதிபராக, சிந்தனைத்திறன் கொண்ட எழுத்தாளராக இருந்து ஆற்றிய பணிகள் அளவற்றவையாகும்.

ஆண்களுக்காக பரமேஸ்வராக் கல்லூரியையும் பெண்களுக்காக மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியையும் அமைத்துத்தந்த சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் யாழ்ப்பாண மக்களின் நன்மைக்காக வடபகுதியில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும் என்று விரும்பினார். அவரது கனவு நனவாக முன் அவர் இறைவனடி சேர்ந்து விட்டார். சேர்.பொன்.இராமநாதனின் விருப்பத்தை நிறைவேற்ற அவரது மருகராகிய சு.நடேசபிள்ளை அவர்களுடன் இணைந்து மு.ஞானப்பிரகாசம் அவர்கள் அயராது பாடுபட்டார். அவர்களெல்லோரும் எடுத்த முயற்சிகளின் காரணமாக 1974ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 10ஆம் திகதி பரமேஸ்வராக் கல்லூரியே பல்கலைக்கழகமாக அன்றைய பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. ஞானப்பிரகாசம் அவர்களுக்கு பரமேஸ்வராக் கல்லூரியுடன் இருந்த தொடர்பு அது பல்கலைக்கழகமான பின்னரும் நீடித்து அங்கும் அரும்பணியாற்ற வைத்தது.

கல்வியானது அறிவைப் பெருக்குவதுடன் பக்தியுணர்வையும் வளர்க்க வேண்டுமென்பது இச் சைவப் பெரியாரின் எண்ணமாகும். அவர் என்றும் சமய தத்துவக் கல்விக்கே முதலிடம் அளித்தார். அவ்வகையில் எமது சமயப் பாரம்பரியம் என்றும் சிறப்பாக விளங்கவேண்டும் என்ற சிந்தனையுடன் ஆக்க பூர்வமான ஆலோசனைகளை பல்கலைக்கழகப் பேராசிரியர்களுக்கு வழங்குவார். அவருடைய ஆலோசனையின்படி 1993ஆம் ஆண்டு பங்குனி உத்தர தினத்தில் பேராசிரியர் அ.துரைராஜா அவர்களால் "வேதாகம ஆய்வு நிறுவனம்" தொடக்கி வைக்கப்பட்டது.

வேதம், ஆகமம், திருமுறைகள் முதலான எமது சமய நூல்களை ஆய்வு செய்தலும், கருத்தரங்குகள் மூலம் அவற்றை மக்களிடையே பரப்புவதும், அந்தணச் சிறார்களுக்கு வேதபாராயணம், சம்ஸ்கிருதக்கல்வி, ஆகமக்கல்வி, திருமுறைப்பாராயணம் ஆகியவற்றை உள்ளடக்கிய கல்வியைப் பெற்றுப் பயனடையும் வண்ணம் வகுப்புக்களை நடத்துவதும் இதன் செயற்பாடுகளாகும். சனி, ஞாயிறு தினங்களில் வகுப்புக்கள் நடத்தப்பட்டு, சேர்.பொன்.இராமநாதன் அவர்களுடைய குருபூசைத் தினத்தன்று அந்தண மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். சிவாச்சாரியார்களுக்கு இங்கு இரு வருடப் பயிற்சி அளிக்கப்பட்டது.

சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் யாழ்ப்பாணத்துச் சைவப்பிள்ளைகள் எமது கலாச்சார, மதச்சூழலில் கல்வி கற்று மேற்மையுற வேண்டுமென்ற விருப்பத்தில் தாம் அமைத்த பாடசாலைகளுக்கு அறநிதியங்களையும் உருவாக்கி வைத்துள்ளார். பரமேஸ்வராக் கல்லூரியை தமக்குப் பின்னரும் சிறந்த முறையில் நடத்துவதற்காக கிளிநொச்சியில் பல ஏக்கர் நிலங்களையும், கொழும்பில் ஒரு வீட்டையும், நீர்கொழும்பு, குருநாகல் போன்ற இடங்களில் தென்னந்தோப்புக் களையும், பரமேஸ்வராக் கல்லூரிக்குரிய சொத்தாக அளித்து, அவற்றிலே

கிடைக்கும் வருமானங்களைக்கொண்டு பரமேஸ்வரர் ஆலயத்தையும், பரமேஸ்வராக் கல்லூரியையும் நடத்துவதற்குப் பயன்படுத்த வேண்டுமென ஓர் அறக்கட்டளையில் குறிப்பிட்டுள்ளார். அந்த அறக்கட்டளையை சரியான முறையில் நிர்வகிப்பதற்காக அமைக்கப்பட்ட பணிப்பாளர் சபையின் தலைவராக தம் இறுதி மூச்சுவரை பணியாற்றிய ஞானப்பிரகாசம் அவர்கள் கிளிநொச்சியில் இருக்கும் நிலங்களின் வருமானத்தைக் கொண்டு அங்குள்ள ஏழைப்பிள்ளை களுக்காக இரண்டு பாலர் பாடசாலைகளை நடாத்தி வந்தார். இவர் சம்ஸ்கிருதம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மும்மொழிகளிலும் புலமை பெற்றவர்.

ஏழாலை மடாலயத்தின் மடைப்பள்ளியின் முன்னைய கட்டிடத்தில் சம்ஸ்கிருத வகுப்புக்களை நடாத்தினார். அந்தணச் சிறுவர்கள் "குருக்கள்" ஆவதற்கு ஏதுவாக அதற்குரிய வகுப்புக்களையும் நடாத்தி வந்தார். சன சமூக நிலையங்களில் வகுப்புக்கள் அமைத்துத் திருக்குறள் படிப்பித்தார். "எம்பெரு மக்கள் கல்வி நிலையம்" என்ற பெயரில் ஒரு கல்விக்கூடத்தை ஆரம்பித்து சிறுவர்களுக்கும், வளர்ந்தோர்க்கும் தக்கமுறையில் கல்வி புகட்டினார்.

கொழும்பு விவேகானந்த சபையின் மூலம் சைவசமயத்தை பரீட்சைக்குரிய ஒரு பாடமாக்கி, பரீட்சைக்குரிய பாடத்திட்டங்களையும் அமைத்துக் கொடுத்தார் ஞானப்பிரகாசம் அவர்கள்.

ஏழாலை மத்தியிலே சைவமகாஜன வித்தியாசாலை நிறுவுவதற்கு ஆலோசனை வழங்கியதோடு அதற்காக முன்னின்று உழைத்தார். சைவமகாஜன வித்தியாசாலை தோன்றிய வரலாற்றை நோக்கும்போது எமது உள்ளத்தில் ஓர் நெகிழ்ச்சி ஏற்படும். 1940ஆம் ஆண்டு தை மாதம் ஒரு ஞாயிற்றுக்கிழமை. முற்பகல் 10.30 மணி மு.ஞானப்பிரகாசம் அவர்களைக் காரியதரிசியாகக் கொண்ட சைவ மகாசபைக் கூட்டம் ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாசாலையில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது ஏழாலை மத்தியைச் சேர்ந்த இருவர் மிகுந்த பரபரப்போடு அச்சடித்த பத்திரம் ஒன்றைக் கொண்டுவந்து தலைவர் கையில் கொடுத்து, "ஐயா, உடனடியாக இதற்கு ஏதாவது செய்யுங்கள்" என்று கெஞ்சுவது போல் கேட்டனர். தலைவர் அதை உரத்து வாசித்தார். சபையினர் யாவரும் திகைப்பும் பரபரப்புமாக தவித்தனர். அது ஒரு வரவேற்புபசாரத்திற்கு எழுதப்பட்ட பத்திரம். அதிலிருந்த ஒரு வரி எல்லாரையும் கலக்கியது. அது "ஏழாலையை இளவாலையாக்குவோம்" என்பதாகும்.

இந்த வாசகத்தின் உள்ளார்ந்த அர்த்தம், அதனால் எமது மதத்திற்கு விளையக்கூடிய தீங்குகள் என்பவற்றைப் புரிந்துகொண்ட கூட்டத்திலிருந்த சைவ மக்கள் கலவரமடைந்த போது, சபைக் காரியதரிசியான ஞானப்பரகாசம் அவர்கள் ஓர் ஆலோசனையை முன் வைத்தார். "உடனடியாக ஏழாலை மத்தியிலே ஒரு

சைவப் பாடசாலை நிறுவ வேண்டும். தீய விளைவுகளைத் தடுப்பதற்கு அதுவே சிறந்த உபாயமாகும்” இப் பிரேரணையைக் கேட்டு சபையோர் மகிழ்ந்து ஆரவாரம் செய்து வரவேற்றனர். அங்கிருந்த பிரமுகர்களைக் கொண்ட நிர்வாக சபை உடனே அமைக்கப்பட்டு அவர்களிடம் சைவமகாஜன வித்தியாலயம் அமைக்கும் பொறுப்பினை ஒப்படைக்கப்பட்டது. எமது சமயத்தைப் பாதுகாக்க அமையப் போகும் இப்பாடசாலைக்காக அத்தியடி விநாயகர் ஆலயத்துக்கு உரித்தான ஒன்பது பரப்புக் காணி கொடுக்கப்பட்டது. பதினெட்டு நாட்களில் பிரமாண்டமான தாக இப்பாடசாலை கட்டி முடிக்கப்பட்டு இயங்கத் தொடங்கியது. ஞானப்பிரகாசம் அவர்கள் உள்ளிட்ட நிர்வாக சபையானது அகில இலங்கைச் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தாலும், பின்னர் பரமேஸ்வரா கல்விச் சபையாலும் பாடசாலையை நடாத்துவிக்க துரித வளர்ச்சி கண்டு ஒரு வருடத்தில் அரச நன்கொடைபெறும் பாடசாலை ஆயிற்று. ஞானப்பிரகாசம் அவர்கள் ஆற்றிய கல்விப் பணிகளால் சமயமும் வளர்ந்தது. சமுதாயமும் கல்வி ஞானம் பெற்று மேன்மையடைந்தது.

**சித்தாந்த வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பணிகள்**

ஏழாலைக் கிராமம் சித்தாந்தத்தின் விளைநிலம் என்றால் அது மிகையாகாது. ஏழாலை மேற்கு சாதுசங்கமடமானது முதலில் வேதாந்த ஆய்வுகள் நடக்கும் இடமாக இருந்தது பின்னர் சடைவரதரின் குருவான பொன்னம்மா சுவாமிகள் நேரில் வருகைதந்து இவ்விடத்தை சித்தாந்த பீடமாக்கினார். அதன் பின்னர் இங்கு சித்தாந்தமே செல்வாக்குடன் திகழ்ந்தது. மடத்தின் ஸ்தாபகர் ஐ.பொன்னையா அவர்கள் சமஸ்கிருதம் கற்று சுவேதாசுவதரம் என்னும் உபநிடதத்திற்கு உரை எழுதி மேலும் பல சித்தாந்தப் பணிகள் செய்து சித்தாந்தப் பேறறிஞராக விளங்கினார்.

ஞானப்பிரகாசம் அவர்களும் அரும்பெரும் பணிகள் செய்து யாழ் பல்கலைக் கழகத்தில் முதலாவது பட்டமளிப்பு விழாவில் “சித்தாந்த வித்தகர்” என்று பட்டம் சூட்டிக் கௌரவிக்கப்பட்டார். இன்றும் இவ்விடத்தில் இளம் சித்தாந்திகளால் சித்தாந்தப் பணிகள் முன்னெடுத்துச் செய்யப்படுகின்றன. “சித்” என்றால் “கிடைத்த” என்பது பொருளாகும். பல நூல்களில் இருந்தும் ஆராய்ந்து முடிவாகக் கிடைத்த ஒரு முடிவுதான் சித்தாந்தம்.

சித்தாந்த வித்தகர் ஞானப்பிரகாசம் அவர்கள் தம் மும்மொழிப் பாண்டித்தி யத்தாலும், மும்மொழிகளிலும் காணப்பட்ட சித்தாந்த நூல்களைக் கற்றுத் தெளிந்து எமக்கு அரும்பெரும் சித்தாந்தப் புதையல்களைத் தந்துள்ளார். இவருடைய சித்தாந்த அறிவின் ஆரம்பக்களம் ஏழாலை சாது சங்கமடம் என்று உறுதியாகச் சொல்லலாம். சிறுவயதில் தாயார் அங்கு செல்லும் போது தாமும் உடன் செல்வார். அவ்வேளையில் சாதுசங்கமடம் பெரியதோர் சித்தாந்தக்

கோட்டையாக விளங்கியது. அருளானந்தசிவம் என்னும் தீட்சாநாமம் பெற்ற பொன்னையா அவர்கள் அங்கே சைவசித்தாந்தமென்னும் சிம்மாசனத்தில் அரசோச்சிக் கொண்டிருந்தார்.

அந்த மாபெரும் சித்தாந்த ஞானியின் அருட் பார்வைக்கு ஆளான சிறுவனான ஞானப்பிரகாசம் அங்கு கூறப்படும் சித்தாந்த விளக்கங்களை உள்வாங்கிக் கொண்டார். மேலும் மேலும் அவருக்கு சித்தாந்த தாகம் அதிகரித்தது. ஜே.எம்.நல்லாசிப்பிள்ளை ஆங்கிலத்திலே எழுதிய சிவஞானபோதத்தையும் அதன் விரிவுரையையும், “சித்தாந்ததீபிகை” என்னும் ஆங்கிலமாத வெளியீடுகளின் தொகுப்பு நூல்களையும் தம் ஆங்கிலப் புலமை யால் கற்றுத் தேர்ந்தார். திரு.டி.கோபால் செட்டியார், வேதாசலம் ஆகியோரது சித்தாந்த வெளியீடுகளையும் கற்றவர்.

இவ்வாறாக கீழைத்தேச, மேலைத்தேச தத்துவ ஞானிகளின் நூல்களைக் கற்று சைவசித்தாந்த அடிப்படையில் ஒப்புநோக்கி உண்மைகளைத் தேர்ந்தவர். தாம் தேர்ந்தெடுத்த சைவசித்தாந்த கருத்துக்களை தம் சிந்தனைகளை தெளிவாக யாவரும் அறியும் வகையில் கட்டுரைகளாக, சொற்பொழிவுகளாக, நூல்களாக வெளியிட்டார் சித்தாந்த வித்தகர்.

ஈழகேசரியின் விசேட மலர்களில் இவருடைய கட்டுரைகள் வெளியாகின. பின்னர் 1948ஆம் ஆண்டு “சிவதொண்டன்” என்னும் இந்துசமய சஞ்சிகையில் மெய்கண்டார் திருவுள்ளம் அல்லது பிரபஞ்சமர்மம் என்ற தலைப்பில் கட்டுரைகளை எழுதியுள்ளளார். அதில் முதலாவது கட்டுரையில் உலகம் நிலையில்லாதது என்று உணர்ந்த பக்குவிகளே ஞானசாஸ்த்திரங்களைப் படிக்கத் தகுதியுடையோர் அவர்களுக்காகவே தாம் இக்கட்டுரைத் தொடரை எழுத முன் வந்ததாகக் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு கட்டுரையின் தொடக்கத்திலும் மெய்கண்டாரின் மகாவாக்கியம் ஒன்றினைத் தந்து அதற்கு விரிவாக எமக்குப் புரியும்படியாக விளக்கம் தந்துள்ளார்.

“சித்து, சடம் இரண்டும் இயைந்து நிற்கும் பெருவல்லபமே கடவுள். நீ அந்த வல்லபத்தை அறி. நீ அதுவாகுக” என்ற மெய்கண்டார் மகாவாக்கியத்திற்கு “உலகமானது பல்வேறு மாறுதல்களுக்கு உட்பட்டு தோன்றி நின்று அறிந்து இயங்கும் பொருளாகும். இதனை இயக்கும் சக்தியே கடவுள் என அறிக” என்று விளக்கம் கூறியுள்ளார்.

“உலகம் என்ற ஒன்று இல்லாவிட்டால் நமக்குக் கதி அந்த காரமே ஆதலின் உலகைத் தந்து நம்மை அந்த காரத்திலிருந்து மீட்ட வல்லபத்தை அறி. நீ அதுவாகுக” என்ற மெய்கண்டார் மகாவாக்கியத்திற்கு மனிதனானவன் பஞ்ச

பூதங்களல்ல. ஆனால் அவனுடைய உடம்பு பஞ்சபூதங்களையே அனுபவிக்கின்றது. பிறக்கும் போது சாமர்த்தியம் இல்லாத மனிதன் தான் விரும்பும் உடம்பை எடுக்க முடியாதவன். தன் தந்தைதாய் அண்ணன் தம்பியைத் தானாகத் தேடி எடுக்கச் சாமர்த்தியம் இல்லாத மனிதன் அவ்வளவு வல்லபம் இல்லாதவனாக வாழ்கின்றான்.

இந்நிலையில் தனக்கு மேலான ஒன்று நின்று தன்னை இயக்குவதை உணர்கிறான். அந்த வல்லபத்தினாலேயே தான் உண்டு உயிர்த்து கண்டு கேட்டு வாழ்கின்றேன் என்பதையும் உணர்கின்றான். இது சாதாரண வல்லபம் அன்று, பேரறிவும் பெரும் கருத்தும் கொண்ட வல்லபமாகும். இதனாலேயே உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. இது ஒருவன் உறங்குவதும் விழிப்பதும் போன்ற நிலையாகும் என்று சிறந்த தத்துவக் கருத்தைக் கூறியுள்ளார்.

இவ்வாறு மெய்கண்டார் மகாவாக்கியங்களுக்கு அற்புதமான கருத்து விளக்கங்களோடு மெய்கண்டார் திருவுள்ளம் என்ற கட்டுரைத் தொடர் சிவதொண்டன் என்ற சைவசஞ்சிகையில் வெளியானது. இக்கட்டுரைகளில் வெளிவந்த கருத்துக்களைச் சிறுசிறு சூத்திரங்களாக்கி சிவஞானபோதச் சூத்திரங்கள் போல ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அதனைக் கொழும்பிலிருந்த ஒரு புத்தபிக்குவைக் கொண்டு சிங்களத்திலும், மொழிபெயர்ப்பித்து மும்மொழி நூலாக வெளியிட்டார். மெய்கண்டார் விஜயம் என்னும் கட்டுரைத் தொடர் தமிழகச் சஞ்சிகையிலே பல மாதங்கள் வெளியாகின. கர்மயோகம் என்பதும் இவரால் எழுதப்பட்ட சிறந்த தத்துவ நூலாகும்.

ஞானப்பிரகாசம் அவர்கள் சைவசித்தாந்தக் கருத்துக்களை விளக்கும் வகையில் ஆங்கில மொழியிலும் சில நூல்களை எழுதி வெளியிட்டார். The Spritual Teacher என்ற நூல் 1982 ஆம் ஆண்டிலும் Tat Purusha - The Ageless Sprit என்ற நூல் 1988 ஆம் ஆண்டிலும் Tamilakam and Saiva thought என்ற நூல் 1991ஆம் ஆண்டிலும் Sankhya thought என்ற நூல் 1994 ஆம் ஆண்டிலும் வெளிவந்தன.

இவர் சொற்பொழிவுகள் மூலமும் சைவசித்தாந்த நெறியைப் பரப்பினார். 1960ஆம் ஆண்டு மார்கழி மாதம் 30ஆம், 31ஆம் திகதிகள் 1961 தை 1ம் திகதி ஆகிய மூன்று நாட்களும் சைவசித்தாந்த சமாஜத்தின் ஐம்பத்து நான்காவது மகாநாடு திருக்கேதீச்சரத்தில் நடைபெற்ற போது மகாநாட்டின் தலைவர் ச.சச்சிதானந்தம் பிள்ளை அவர்களின் தலைமையில் சித்தாந்த வித்தகர் ஞானப்பிரகாசர் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவானது மிகவும் தரமுள்ளதாக அமைந்து பலருக்கும் சித்தாந்தத் தெளிவு ஏற்பட வாய்ப்பாக அமைந்தது. அச் சொற்பொழிவின் ஆரம்பமே யாவரது கவனத்தையும் ஈர்க்கும் வகையில் அற்புதமாக இருந்தது.

"அன்பர்களே, நீங்கள் ஆனந்தமயமான அறிவுமயமான ஒன்றை அறிய வேண்டும் அதுவே சிவம் அன்பு ததும்பி இருப்பதற்கு இரங்குபவன் அன்பு வடிவான ஆண்டவனே. "சிவனென யானுந் தேறினன் காண்க" என்பார் மணிவாசகர். "சிவனென்னும் நாமம் தனக்கேயுடைய செம்மேனியம்மான்" என்பார் அப்பர் பெருமான். "உயிர்க்கு எல்லாம் அறியும் தன்மை வரும். ஆ யினும் எல்லாம் செய்யும் வல்லமை வரவே வராது".


இவ்வாறு ஆரம்பித்து தமது உள்ளத்தில் நிறைந்திருக்கும் சித்தாந்தம் பற்றிய கருத்துக்களைத் தெளிவாக விரிவாக எடுத்துக் கூறி அதன் மூலமாக சைவசித்தாந்தத்தினை யாவரும் விளங்கிக் கொண்டு அதன்படி செயற்பட வழிகாட்டியாக அமைந்தார் சித்தாந்த வித்தகர் அவர்கள்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் ஆண்டுதோறும் சைவமகாநாடு நடாத்தும் போது இவர் முக்கிய பேச்சாளராகக் அழைக்கப்பட்டிருப்பார். அங்கு அவர் சித்தாந்தம் பற்றி ஆற்றிய சொற்பொழிவைக் கேட்டு தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்திருந்த சி.கே.சுப்பிரமணிய முதலியார், சத்புருஷ தேசிகர், வச்சிரவேலு அவர்கள் குருசாமிதேசிகர், முத்துமாணிக்கம் போன்றோர் இவரைக்கட்டித் தழுவி அன்பு மேலீட்டால் பாராட்டி வாழ்த்தினர். இந்தியாவில் நடைபெறும் சைவமகா நாடுகளிலும் கலந்துகொண்டு உரையாற்றி இருக்கிறார். தமிழகம் போற்றும் சைவ சித்தாந்தப் பேரறிஞராகவும் இவர் விளங்கினார். ஒரு தடவை யாழ்ப்பாணத்தி லிருந்து தமிழறிஞர் ஒருவர் தமிழகம் சென்று வச்சிரவேலு முதலியாரிடம் சித்தாந்தம் கற்கச் சென்றார். வச்சிரவேலு முதலியார் திகைப்போடு "யாழ்ப்பாணத்தில் சித்தாந்த சாகரமாக ஞானப்பிரகாசர் இருக்கும் போது சித்தாந்தம் படிக்க இங்கு வந்தீர்களா" என்று கேட்குமளவுக்கு தமிழகத்திலும் புகழ் பெற்றிருந்தார்.

பரமேஸ்வராக் கல்லூரியில் அமைந்திருந்த பண்டித பயிற்சிக் கலாசாலை யில் சித்தாந்த வித்தகர் ஞானப்பிரகாசம் அவர்களிடம் சைவக் கொள்கைகளைக் கற்ற ஆசிரிய மாணவர்களிற் பலர் சித்தாந்தப் பேச்சாளர்களாகத் திகழ்ந்தார்கள். வித்துவான் வேந்தனார், பண்டிதர் கார்த்திகேயன் முதலானோர் குறிப்பிடத்தக்க வர்கள். வேறு பல இடங்களிலும், சித்தாந்த வகுப்புக்களை நடத்தினார் ஞானப்பிரகாசம் அவர்கள்.

சிவதொண்டன் நிலையத்தில் ஒரு வாரத்தில் இரண்டு நாட்கள் இரண்டு மணித்தியாலங்கள் வகுப்பு நடாத்தப்பட்டது. குரும்பசிட்டி சன்மார்க்க சபையில் இரண்டு வருடங்கள் சிவஞானசித்தியார் வகுப்பை நடாத்தி கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் அதன் நிறைவு விழாவும் நடைபெற்றது.

சித்தாந்த வகுப்புப் பூர்த்தி விழா




நடுவில் மாலையுடன் நிற்பவர் ஞானப்பிரகாசம் அவர்கள்

இராமநாதன் அறக்கட்டளைக்கு அமைய மருதனார்மடத்தில் பல்லாண்டு காலம் சிவஞானபோத வகுப்புக்களை நடாத்தினார்.

காரைநகரில் ஆண்டுதோறும் சைவமகாசபையினரால் நடத்தப்படும் சைவ மகா நாட்டிற்கு சித்தாந்த வித்தகரை சொற்பொழிவாற்ற அழைப்பது வழக்கம். ஒரு தடவை சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரனார் தலைமை தாங்கிய ஒரு மகா நாட்டிற்கு ஒரு பிரமுகர் பேச அழைக்கப்பட்டிருந்தார்.

அந்தப் பிரமுகர் சட்டத்தரணியும் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவரு மாவார். அவர் தமது பேச்சிலே சிவசின்னங்கள், செம்பு, தண்ணீர், முதலான வற்றை இகழ்ந்து பேசினார். ஞானப்பிரகாசம் அவர்கள் கோபாவேசமாக எழுந்து அந்தச் சட்டதரணியின் தரமற்ற பேச்சுக்குத் தக்க பதில் உரைத்துவிட்டு, "அவரிலே தவறில்லை. அவரை அழைத்தவர்களிலேதான் தவறு உள்ளது" என்று கூறி முடித்தாராம். உடனே சபையோர் கைதட்டி ஆரவாரம் செய்து சட்டத்தரணி மீது வெறுப்பைக் காட்டி "நாவலர் வந்துவிட்டார்" என்று ஞானப்பிரகாசம் அவர்களின் உரையை வரவேற்று ஆரவாரித்தனர். இச்சம்பவத்தின் பின் சித்தாந்த வித்தகரின் மதிப்பு மேலும் உயர்ந்தது. சொற்பொழிவுகளுக்கும் அழைப்பு வந்தது. இவருடைய சித்தாந்த வகுப்புகளுக்குச் செல்ல முடியாதவர்கள் வீட்டில் வந்து பாடம் கேட்டு படிப்பதும் வழக்கமாக இருந்தது.

ஒரு தடவை பெரியார் சிவபாதசுந்தரனாரைப் பார்த்து ஒருவர் கேட்டாராம் "உங்களுக்குப் பின் சித்தாந்தப் பணியைத் தொடரப் போவது யார்? "ஞானப்பிரகாசம் இருக்கிறார். அவர் செய்வார்" என்று உடனடியாகப் பதில் கூறினார் சிவபாதசுந்தரனார் அவர்கள்.

ஈழத்துச் சைவப் பெரியார்கள் வரிசையிலே சமயம், கல்வி, சித்தாந்தம் ஆகிய துறைகளில் காத்திரமான பணிகளைச் செய்து முக்கியமானவர்களில் ஒருவராக விளங்குகிறார் ஞானப்பிரகாசம் அவர்கள். தெய்வீக பூமியாகிய யாழ்ப்பாணத்துச் சமூகம் அருளும், அறிவும் நிறைந்த சமூகமாக உருவாக வேண்டுமென்ற ஆர்வத் தோடுதான் இத்தனை பணிகளும் செய்தார். அந்நிய நாட்டவரின் ஊடுருவலால் எமது மத, கலாச்சாரப் பண்பாடுகளுக்கு, பழக்க வழக்கங்களுக்கு ஏற்பட்ட இடையூறுகள், மாற்றங்களுக்கு நடுவிலே அவை அழிந்து போகாமல் காப்பாற்று வதற்காக ஆலயங்களில் ஆத்மார்த்தமான வழிபாடுகளும், பாடசாலைகளில் முறையான ஒழுக்க நெறியிலமைந்த பண்பாட்டுக் கல்வியும் இடம்பெறச் செய்வதற்காக அரும்பாடுபட்டார்.

விஞ்ஞான கலைப்பட்டதாரி, சித்தாந்த வித்தகர், மும்மொழிப் புலமை யாளர்,எழுத்தாளர், புராணீகர், சொற்பொழிவாளர் என்று பலதரப்பட்ட தகுதி களைக் கொண்டு ஆசிரியராய், அதிபராய், ஆலய நிர்வாகியாய், ஆலய பரிபாலன

சபைத் தலைவராய், பரமேஸ்வரா இயக்குனர் சபைத் தலைவராய், பணிப்பாளர் சபைத் தலைவராய் பன்முகப்பட்ட பதவிகளை ஏற்று ஆயுட்காலம் வரை பணியாற்றிய மு.ஞானப்பிரகாசம் அவர்கள் 1996ஆம் ஆண்டு சித்திரை 18ஆம் திகதி சிவபதப்பேறெய்தினார்.

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்”

என்ற குறட்பாவுக்கமைய அற்புதமான அர்ப்பணிப்பான வாழ்க்கையை வாழ்ந்து நிறைவேற்றிய சித்தாந்த வித்தகர் இறைவனது தாளினை அடைந்த ஒரு வருட முடிவில் யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவை தனது மாதாந்த வெளியீடான இந்து தர்மம் இதழை ஞானப்பிரகாசம் அவர்களின் நினைவாக அவரைப்பற்றிய கட்டுரை, கவிதை ஆக்கங்களுடன் “ஞானப்பிரமம்” என்னும் சிறப்பிதழாக வெளியிட்டு நினைவஞ்சலிக் கூட்டமொன்றையும் நிகழ்த்தியது.

ஐந்து வருடங்களின் பின் அவருடைய வாழ்க்கை வரலாறு அடங்கிய ஞான காவியம் என்னும் நூல் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் வெளியீடு செய்யப்பட்டது. அவரைப் பற்றிய கட்டுரை ஆக்கங்கள் வானொலியிலும், பத்திரிகையிலும் இடம் பெற்றுள்ளன.

மரணத்தின் பின் வழங்கும் விருதாக இந்துசமயப்பேரவைவிருதும் நினைவுச் சின்னமும் வழங்கிக் கௌரவித்தது.

ஞானப்பிரகாசம் அவர்கள் எழுத ஆரம்பித்து அது நிறைவடையாமலே அவர் இறைவனடி சேர்ந்த நிலையில் அதனை அவரது குடும்பத்தவர் நிறைவு செய்து “சிவசகஸ்ரநாமாவளி” என்ற பெயரோடு வெளியிட்டனர்.

அவர் ஏழாலைக் கிராமத்திலே அவதரித்து நூறு ஆண்டுகள் பூர்த்தியானதை யொட்டி 01.02.2012 அன்று தினக்குரல் பத்திரிகையில் (கொழும்புப் பதிப்பு) சித்தாந்த வித்தகரும் திருக்கேதீச்சரமும் என்ற கட்டுரை வெளியானது. இத்தகைய தோர் மாமணியாக ஏழாலைக் கிராமத்துக்கு வாய்க்கப் பெற்றவர் ஞானப்பிரகாசம் அவர்கள்.

சித்தாந்த வித்தகர் என்று சிறப்புப் பட்டம் பெற்று
சீரிய பணிகளாற்றி சிவநெறி தழைக்கச்செய்து
நித்தமும் தவறாமல் மடத்துப் பிள்ளையார் கோயில் சென்று
நிறைவாய்த் தொண்டாற்றி சைவப்பெருங்கடலின்
முத்தாக விளைந்த முழுஞானச் சுடரே
ஞானப்பிரகாசம் என்றும் நாமத்துடன் தர்மத்தின்
வித்தாக வந்து பெரு விருட்சமாய் வளர்ந்து
சைவப்பணி செய்த எங்கள் சற்குருவே போற்றி.



சி.வைத்திலிங்கம் அவர்கள்

# ஈழத்துச் சிறுகதை முன்னோடி சி.வைத்திலிங்கம் அவர்கள்

ஈழத்தின் இலக்கிய வரலாற்றுப் பின்னணியை ஆராய்ந்தால் 14ஆம் நூற்றாண்டிலிருந்து 18ஆம் நூற்றாண்டு வரை வெளியான நூல்கள் யாவும் மரபு ரீதியான செய்யுள் வடிவ நூல்களாகவே அமைந்திருந்தன. அவை எல்லா மக்களாலும் வாசித்துக் கிரகித்து ரசிக்கக் கூடியனவாக இருக்கவில்லை. நன்கு தமிழ் கற்ற பண்டிதர்களால்தான் அவை படிக்கப்பட்டன. ஆறுமுகநாவலர் காலத்தில் செய்யுள்நடை, வசனநடையாக மாற்றம் பெற்றது. விபுலானந்தரின் யாழ்நூலும் 1927ல் வெளியான மதங்க சூளாமணியும் சராசரி தமிழ் படித்தவர்களால் விரும்பப்பட்டது.

விபுலானந்தரால் இலக்கியம் புதுவடிவமைப்புப் பெற்றது. அக்காலகட்டத்திலே புனைகதை இலக்கியமாக நாவல்கள் தோன்றின. சி.வை.சின்னப்பாபிள்ளை அவர்கள் வீரசிங்கன் கதை, ஜெயசீலன் முதலான நாவல்களை எழுதினார். இவ்வாறு 1925ஆம் ஆண்டு வரை பல தமிழ் நாவல்கள் வெளியான போதும் அவை வித்துவத் தன்மை கொண்ட ஆக்கங்களாகவே இருந்தன. விரும்பி ரசித்துப் படிக்கும் அளவுக்கு மக்களிடையே அவை வரவேற்புப் பெறவில்லை.

கவிஞர் ஒருவர் வழங்கிய பேட்டியிலே பின்வருமாறு கூறுகிறார். "உண்மையான சிறந்த இலக்கியம் என்று சொல்வதானால் அது படித்தவர்களிடையே மட்டுமல்ல சாதாரண படிப்பறிவுகொண்ட பாமரர்களாலும் ரசிக்கப்பட வேண்டும். அவர்களது இதயங்களில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். அவர்களது மனங்களில் அது ஒட்டிக்கொள்ள வேண்டும். இத்தகைய இலக்கியம் தான் சிறந்த இலக்கியம் என்று கருதப்படக்கூடியது.

அத்தகையதோர் சிறந்த இலக்கிய வடிவம் முதன்முதலாக யாழ்ப்பாணத்திலுள்ள ஏழாலைக் கிராமத்திலே உருவானது. புனைகதை இலக்கியத்தில் நவீன இலக்கியம் என்ற பெயரோடு "சிறுகதை" என்ற வடிவமைப்போடு உருவாக்கப்பட்டு வாசகர்களால் பெரிதும் வரவேற்கப்பட்டது. 1930களில் முதன் முதலாக சிறுகதை ஆக்கங்கள் பத்திரிகைகளில் வெளியாகின. அச்சிறுகதைகளின் சிருஷ்டி கர்த்தாக்கள் யாரெனில் ஏழாலை மேற்கைச் சேர்ந்தவர்களான சி.வைத்திலிங்கம் (ரவீந்திரன்) அவர்களும், ந.சிவஞானசுந்தரம் (இலங்கையர்கோன்) அவர்களும் ஆவார்கள். இவர்கள் இருவரும் சிறுகதை என்னும் நவீன இலக்கியத்தை அறிமுகப்படுத்தி பெரிய வெற்றி கண்டார்கள். அதனால் அவர்கள் ஈழத்துச் சிறுகதை முன்னோடிகள் என்று போற்றப்பட்டார்கள்.

தமிழகத்தின் சிறுகதை முன்னோடிகள் என்று மூவர் குறிப்பிடப்பட்டிருக் கிறார்கள். அ.மாதவய்யா, சுப்பிரமணிய பாரதியார், வ.வே.சு.ஐயர் ஆகியோரே அவர்கள். அவ்வாறே ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளாகவும் மூவரைக் குறிப்பிடுகிறார்கள். அவர்கள் சி.வைத்திலிங்கம், இலங்கையர்கோன், சம்பந்தர் ஆகிய மூவருமாவார். அவர்களில் வைத்தியலிங்கம் அவர்களும் இலங்கையர்கோன் அவர்களும் ஏழாலை என்னும் ஒரே மண்ணில் பிறந்த மாணிக்கங்கள். ஒரே கொடியில் மலர்ந்த மலர்கள். ஒரே நாற்று மேடையில் முளைத்த பயிர்கள். ஒரே அடிதொடியில் ஒரே வம்சத்தில் உதித்தவர்கள். ஒருவருக் கொருவர் "மச்சான்" முறையினர். இருவரும் ஒரே மண்ணில் வளர்ந்ததால் ஒன்றாய்ச் சேர்ந்து பேசிச்சிரித்து இலக்கிய விமர்சனம் செய்து பொழுது போக்கிய வர்கள். இவர்களில் நான்கு வயது மூத்தவரான சி.வைத்திலிங்கம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றினை முதலில் நேக்குவோம்.

அந்தக் காலத்திலே "உடையார் வம்சம்" என்றொரு பகுதியினர் ஏழாலை மேற்கிலே செல்வச் செழிப்போடு, சீர் சிறப்போடு வாழ்ந்து வந்தனர். அந்த உடையார் மரபிலே வந்த கேசவ உடையார் பரம்பரையில் வந்த வைத்திலிங்கம் அவர்கள் தையல்முத்து என்னும் பெண்ணை மணம்புரிந்து ஐந்து ஆண்பிள்ளை களைப் பெற்றெடுத்தார். அவர்களில் மூத்தவரான சிவப்பிரகாசம் அவர்களுக்கு ஐந்து புதல்வர்களும் நான்கு புதல்வியரும் இருந்தனர். அவர்களில் மூத்தவர் ஏழாலை புவனேஸ்வரி அம்பாள் ஆலய தர்மகர்த்தாவாக விளங்கிய இரத்தினம் ஓவசியர் அவர்கள். அவரை அடுத்து இரண்டாவது புத்திரனாகப் பிறந்தவர்தான் ஈழத்துச் சிறுகதை மூலவர் வைத்திலிங்கம் அவர்கள். அவர் **1911**ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7ஆம் திகதி பிறந்தார். தந்தையின் தந்தையாரான வைத்திலிங்கத்தின் பெயரை இவருக்கும் சூட்டியதால் பேரன் (பெயரன்) என்ற பதத்திற்குப் பொருத்தமானவர் ஆனார்.

இவருக்கு கந்தசாமி ஓவசியர், குமாரசாமி ஆசிரியர், தில்லைநடேசன் ஆகியோர் இளைய சகோதரர்களாகவும், தங்கரத்தினம், சிவஞானசுந்தரம், சிவகாமசுந்தரி, தையல்நாயகி ஆகியோர் சகோதரிகளாகவும் கிடைக்கப் பெற்றனர். அண்ணன், தம்பிமாருடன் சேர்ந்து விளையாடுவதும், இயற்கை எழிலை மற்றவர்களை விட வித்தியாசமான முறையில் ரசிப்பதும், எதிலும் ஓர் ரசனை உணர்வோடு சிந்திப்பதுமாக சிறுபராயத்திலேயே இவர் ஓர் எழுத்தாளராக, சிந்தனைச் செல்வராக உருவாகப் போகிறார் என்பதை அவருடன் கூட இருந்த வர்கள் கண்டு கொண்டார்கள்.

**கல்வியும் கடமையும்**

*வைத்திலிங்கம் அவர்களுக்கு வித்தியாரம்பம் செய்தபோது அவர்களது சூழலில் சைவப் பாடசாலைகள் இருக்கவில்லை. அவருக்கு ஆரம்ப இடைநிலைக் கல்வியை வழங்கியது அடுத்த ஊரான மல்லாகத்திலிருந்த இந்து ஆங்கில பாடசாலையாகும். ஏழாலையின் மேற்கிலே 1915ஆம் ஆண்டுக்கு முன்னர் பிறந்த வர்களில் பிரபல்யமாகவும், பிரமுகர்களாகவும் விளங்குபவர்களின் கல்வியை ஆராயுமிடத்து அவர்களுக்கு ஆரம்ப, இடைநிலை ஆங்கிலக் கல்வியறிவை ஊட்டியது மல்லாகம் இந்துக்கல்லூரியே. தற்போது மல்லாகம் மகா வித்தியாலயம் என்ற பெயரோடு விளங்கும் மல்லாகம் ஆங்கில பாடசாலைதான் வைத்திலிங்கம் அவர்களை ஆங்கில மொழியறிவைப் பெற்றுக்கொள்ள வைத்தது. அங்கிருந்து உயர்கல்விக்காக அவர் பரமேஸ்வராக் கல்லூரிக்குச் சென்றார். ஆங்கில மொழி மூலமான கல்வியைக் கற்று உயர்வகுப்புகள் சித்தியடைந்தபின் 1931ஆம் ஆண்டு கொழும்பு மாநகரசபையில் எழுதுவினைஞராகச் சேர்ந்த பின் பதவிஉயர்வு பெற்று பிரதம எழுதுவினைஞரானார். உத்தியோக காலம் முழுவதும் கொழும்பிலேயே வாழ்ந்தார்.*

*இவருடைய துணைவியாரின் பெயர் அம்பிகை என்பதாகும். பரமேஸ்வரன் பார்வதி போல வைத்திலிங்கம் அம்பிகை என்று பெயர் பொருத்தம் இவர்களுக்கு அமைந்திருந்தது. இவர்களது இனிமையான இல்வாழ்க்கையிலே கௌரிசங்கர் என்ற மகனும், யமுனா, இந்து என்று பெண்குழந்தைகளும் மேலும் இனிமை சேர்த்தனர்.*

*வைத்திலிங்கம் அவர்கள் ஆங்கில மொழிப்புலமையோடு சமஸ்கிருதம், மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் சரளமாகப் பேசுவார். புத்தகம் வாசிப்பது அவரது பொழுதுபோக்கு என்று சொன்னாலும் அதை அவர் பொழுது போக்காகச் செய்யவில்லை. தம் தலையாய கடமை என்பது போலத்தான் புத்தகங் களை அக்கறையோடு அடிக்கடி வாங்கி வந்து ஊன்றி உணர்ந்து வாசிப்பார்.*

*கொழும்பில் வாழ்ந்த போதும் கூடியவரை மிக எளிமையாகவே வாழ்ந்தார் என்று அவரது மனைவியார் கூறுகின்றார். இப்படித்தான் வாழ வேண்டுமென்று உறுதி கொண்டுவிட்டால் இடம், பொருள், ஏவல் எதுவுமே அதை மாற்றமுடியாது. எழுத்தாளராக இருந்ததால் கதாபாத்திரங்களின் உணர்வுகளை இதயங்களை உரசிப்பார்த்து, கொடுமைகளை அவலங்களைக் கண்டு கொதிக்கின்ற அவர் எளிமையும், இரக்கமும், கலாரசனையும் கொண்டவராக விளங்கினார்.*

**இலக்கியப் பணி**

"உன்னதமான லட்சியங்களும், கனவுகளும் எங்கள் வாழ்க்கையில் நிரம்பியிருந்த நாட்கள் அவை. இலக்கியத்தைப் படிப்பதிலும், நாடகங்களைப் பார்ப்பதிலும், சங்கீத ரசனையிலும் எங்கள் இருவருக்கும் எப்பொழுதுமே பெரிய ஆர்வம். எழுதவேண்டும். ஏதாவது சிருஷ்டிக்க வேண்டும் என்ற உணர்ச்சி எப்பொழுதுமே சிறகடித்துக் கொண்டிருக்கும்".

இவ்வாறு கூறியவர் ஈழத்துச் சிறுகதை முன்னோடியான சி.வைத்திலிங்கம் அவர்கள். அவருடைய இந்தக் கூற்றினை நோக்கும்போது அவருக்கிருந்த இலக்கிய தாகத்தையும், எழுதுவதில் இருந்த ஆர்வத்தையும் அறிந்துகொள்ள முடிகிறது. இதில் அவர் எங்கள் இருவருக்கும் என்று குறிப்பிட்டது தம்மையும் இலங்கையர்கோன் அவர்களையுமாகும்.

இருவரும் அயலவர்களாய், உறவினர்களாய் இருந்தாலும், வயதில் நான்கு ஆண்டுகள் வித்தியாசமுடையவர்கள். அப்படியிருந்தும் சமவயது நண்பர்கள் போல் ஒட்டி உறவாடி, அன்னியோன்யமாய்ப் பழகினார்களென்றால் அதன் காரணம் இருவரிடமிருந்த இலக்கிய ரசனையும் எழுத்தார்வமுமேயாகும். இருவரும் சமகாலத்திலேயே நவீன இலக்கிய ஆக்கங்களைப் படைத்து ஈழத்துச் சிறுகதை மூலவர்கள் என்ற பெருமையைப் பெற்று ஏழாலைக்கு என்றுமழியாப் புகழைத் தேடித் தந்துள்ளார்கள்.

சி.வைத்திலிங்கம் அவர்கள் தமிழில் நல்ல புலமை பெற்றவர். அத்துடன் ஆங்கில மொழியிலும் முழுமையான தேர்ச்சி பெற்றவர். அவருடைய இளமைக் காலத்திலே ஐரோப்பியரின் ஆதிக்கம் இங்கிருந்தது. அந்த மேற்கு நாட்டவர்கள் தம் மத, கலாச்சாரங்களை, பழக்கவழக்கங்களை இங்கே கொண்டுவந்து பரப்பியதுபோல், தமது இலக்கியங்களையும் எமது நாட்டிற்கு இறக்குமதி செய்தார்கள். இலக்கிய ரசனை கொண்டவர்கள், இலக்கியத்தில் ஆர்வம் கொண்டவர்கள் எந்த மொழியானாலும் அம்மொழி தெரிந்தால் அவர்களது இலக்கியத்தைப் படிப்பதிலே நாட்டம் கொள்வார்கள். அவ்விதமாகவே வைத்திலிங்கம் அவர்களும் தமது இலக்கிய வேட்கை காரணமாக பல ஆங்கிலச் சஞ்சிகைகளை வாங்கி வாசிப்பார். ஆங்கில எழுத்தாளர்கள் நவீன உத்திகளைக் கையாண்டு அமைக்கின்ற கதைப்பாங்கு அவரை மிகவும் கவர்ந்தது. ஆங்கில மொழிச் சஞ்சிகைகளில்வரும் கதைகளை நிறைய வாசித்ததினால் ஏற்பட்ட தாக்கமும் எழுத வேண்டும். ஏதாவது சிருஷ்டிக்க வேண்டும் என்ற துடிப்பும் சேர்ந்து ஊக்குவிக்க சிறுகதை என்னும் நவீன இலக்கியத்தை அரங்கேற்றினார்.

ஆங்கிலேயர் கையாண்ட நவீன உத்திமுறைப் பிரயோகமும் இவரது கதை களிலே காணப்படும். அதுமட்டுமன்றி எமது கிராமத்தின் இயற்கை எழில் கொஞ்சும் சூழலும், அதனை மனமொன்றி ரசித்து மகிழும் அவருடைய கலையுள்ளமும் கூட சிறுகதைகளை எழுதுவதற்குத் தூண்டுகோலாய் அமைந்திருக்கும். கலாரசனை மிக்கவர்களுக்கு அவர்களது உணர்ச்சியைத் தூண்டிவிடக்கூடிய இயற்கை அழகு எமது ஊரில் உள்ளது.

ஏழாலையின் மத்தியிலே பெரியதொரு குளம். குளத்தைச் சுற்றி மருத மரங்கள். மரப்பொந்துகளில் கிளிகள். கீழே நிலப்பரப்பிலே வெள்ளை வெளேரென்ற கொக்குகள் நீண்டகால்களால் நடந்து திரிவதைக் காணலாம். குளத்தை அண்டிய வயல் நிலங்களிலே பச்சைப் பசேலென்று பயிர்கள். ஐம்பது வருடங்களுக்கு முன்னைய காலத்திலே, நாம் தூரப்போகும் போதே “தொப் தொப்” என்று சத்தம் கேட்டு எதிரொலிக்கும். கிட்டப் போனால் அந்தக் காட்சியும் ரசனைக்குரியதாகத் தெரியும். குளத்துக்கு அருகே இருக்கும் கற்களில் சலவைத் தொழிலாளர் உடை துவைப்பார்கள். அந்தச் சத்தம் கல்லில் ஆடையைத் தூக்கி அடிக்கும்போது ஏற்படும் அந்தச் சத்தம் அந்தச் சூழலுக்கு மிகவும் பொருத்தமாக தாளலயத்தோடு எதிரொலிக்கும். அவர்கள் துணியைக் கல்லில் அடித்து, குளத்துநீரை எடுத்து அவற்றைக் கழுவிப்பிழிந்து, பச்சை வெல்வேற் போல் பரந்திருக்கும் புல்வெளியில் விரித்துக் காயவிடுவார்கள். தெற்குப்புறம் இந்தக் காட்சி. வடக்குப் பக்கம் திரும்பினால் ஏழு ஆலயங்களில் அடுத்தடுத்தாக இருக்கும் நான்கு ஆலயங்களினதும் கோபுரம் மிக அழகாக வரிசையாகத் தெரியும். குளத்தின் அணைக்கட்டின் வழியே நடந்து சென்றால் கிழக்குச் திசையில் குளத்தின் கரையில் ஏழு ஆலயங்களில் ஒன்றான பெரியதம்பிரான் ஆலயம் இயற்கைச்சூழலில் சுகமான காற்று உடலை வருடிவிடும் ஓர் இனிமை யான அற்புதமான இடத்தில் அமைந்திருப்பதைக் கண்டு வியக்கலாம்.

குளமும், மருத மரங்களும், வயல்வெளிகளும், பறவைகளின் இன்னிசைக் குரலும், துணி துவைக்கும் சத்தமும், ஆலய மணியோசையும் இனிய தென்றல் காற்றுமாய் அந்த அற்புதமான இடத்தின் மனோரம்மியமான அழகு சாதாரண மனிதர்களையே குதூகலித்து உணர்ச்சிவசப்படச் செய்யும். ரசிகத்தன்மையும், சிந்தனைத்திறனும் கொண்ட வைத்திலிங்கம் அவர்களோ அந்தக் கிராமிய மணம் கமழும் அழகிலே தம் மனதையே பறிகொடுப்பார். அந்த உணர்ச்சிக் கலவையில் கற்பனை பீறிட்டு வரும். கதைகளிலே அவை பிரதிபலிக்கும்.

சி.வைத்திலிங்கம் அவர்கள் கதைகளில் கிராமப்புற வர்ணணைகளோடு கிராமத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை சார்ந்த விஷயங்களும், வாசிப்பவரின்

மனதைத் தொடுமாறு எழுதப்பட்டிருக்கும். அவருடைய கதைகளில் கிராமியப் பாங்கு உயிரோட்டமாக வெளிப்பட்டிருக்கும். அவருடைய கிராமப்பற்றினைப் பற்றி அவர் கூறுவதையே பார்ப்போம்.

“நகர வாழ்க்கையுடன் நான் என்றுமே ஒன்றியதில்லை. கிராமத்தின் அழைப்புக் குரல் எப்பொழுதும் என் காதில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது. கிராமச் சூழ்நிலையில் வளர்ந்தவன் நான். கள்ளம் கபடமில்லாத கிராம வாசிகளுடன் ஒன்றி வாழ்ந்திருந்தவன். தோட்டாந்துரவுகளிலும் வயல்வெளி களிலும், வெய்யிலும், மழையிலிலும், இரவிலும், பகலிலும் அவர்களுடன் சேர்ந்து உழைத்திருக்கிறேன். அங்கு அசையும் காற்றும் வீசும் நிலவும் ஊறும் நீரும் என்னை இன்பலாகிரியில் ஆழ்த்திவிடுகிறது” வைத்திலிங்கத்தின் இந்தக் கூற்றானது அவர், கிராமத்தின் அழகை இயற்கையோடு இயைந்து வாழ்கின்ற கிராமிய வாழ்க்கையை அவர் எவ்வளவு நேசித்தார் என்பதைக் காட்டுகின்றது. இலக்கிய ஈடுபாட்டினாலும், ஆங்கிலமொழி அறிவாலும் ஆங்கிலச் சஞ்சிகை களை வாசித்து அதில் மனமொன்றி ரசித்ததினால், தாமும் அந்த மேனாட்டு உத்திமுறைகளைப் பயன்படுத்தி கதைபுனையும் எண்ணம் ஏற்பட, அவரிடமிருந்த கிராமியப்பற்றும், சமூகப்பற்றும் நல்ல கதைக் கருக்களைக் காட்டிக்கொடுக்க சிறந்த புனைகதைகளை எழுதினார். ஆங்கில இலக்கியங்களில் வரும் உத்தி முறைப் பயிற்சியுடன் இக்காலத்துக்கு ஏற்ப வண்ணக்கோலம் இட்டு எழுதுவதில் வைத்திலிங்கம் அவர்கள் முன்வரிசையில் நிற்கிறார்.

தமிழகத்தின் மணிக்கொடிக்குழுவைச் சேர்ந்த கு.ப.ராவின் பாணி இவரது கதைகளில் தெரிவதாகவும், எனவே இவரை ஈழத்துக் கு.ப.ரா என்று சொல்லலாம் என்று கூறுபவர்களும் இருக்கிறார்கள். ஆனால் அந்த மணிக்கொடிக் குழுவைச் சேர்ந்த சிறந்த படைப்பாளிகளுக்கு நிகராக இவர் கலைமகள், ஆனந்தவிகடன் முதலியவற்றில் எழுதிப் புகழ் பெற்றார்.

ஆயினும் ஈழநாட்டிற்கேயுரிய சிறப்பான கிராமப்புற வர்ணனைகளும், களனி ஆற்றங்கரை வர்ணனைகளும் கொண்ட கதைகளை தமக்கேயுரிய பாணியிலேயே கலைத்துவம் ததும்பும் சில அழகான கதைகளையும் எழுதியுள்ளார். கதையின் இறுதிக் கட்டத்திலே கடைசி வசனத்திலே கதையின் போக்கிலே திருப்பத்தை ஏற்படுத்தி வாசகரை வியக்க வைப்பதில் அவருக்கு நிகர் அவரேதான். கதையின் முடிவிலே எதிர்பாராத திடீர் திருப்பம் அமைக்கும் கோட்பாட்டை அறிமுகப்படுத்தி வெற்றி கண்டார்.

வைத்திலிங்கம் அவர்களின் சிறுகதைகளின் எண்ணிக்கை இருபத்தைந்திற்குள் தான் அடங்கும். அந்த ஆக்கங்களை அற்புதமாகப் படைத்து

அவைகளுடனேயே நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகள் எழுதியவர் அடைய முடியாத புகழை எட்டினார். அகில இலங்கை ரீதியான புகழ் அது. அவரும் இலங்கையர்கோனும் ஆக்கிய நவீன இலக்கிய வடிவமான சிறுகதை புதுயுகத்தின் புதிய ஆக்கமாக எல்லாராலும் விரும்பி வரவேற்கப்பட்டதோடு சிறுகதை முன்னோடிகள் என்ற பெருமையையும் பெற்றுக் கொடுத்தது. தாம் பிறந்த ஊருக்குப் புகழையும் தேடித் தந்தார்.

இவர் ரவீந்திரன் என்ற புனைபெயரோடு தமது பதினேழாவது வயதிலேயே எழுத ஆரம்பித்தார். ஈழகேசரி, மறுமலர்ச்சி, கலைமகள், ஆனந்தவிகடன், கிராம ஊழியன் முதலானவற்றிலும் சிறுகதைத் தொகுதிகளிலும் இவருடைய கதை களும், கட்டுரைகளும் பிரசுரமாயின.

ஈழகேசரி 1930 களில் வார இதழாக தோற்றம் பெற்றது. இப்பத்திரிகை தேசிய இலக்கிய எழுச்சிக்கும், ஆக்க இலக்கிய வளர்ச்சிக்கும் அரும்பணியாற்றியுள்ளது. இலக்கிய சம்பந்தமான விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்த ஈழகேசரி யாழ்ப்பாணத்திலும், யாழ்ப்பாணத்திற்கு வெளியேயுள்ள தமிழரிடையேயும் பிரபல்யம் பெற்றது. ஈழகேசரியில் எழுதி வந்த சிறுவர்களும், இளைஞர்களும் அதில் எழுதுவதற்கு இடம்போதாமை காரணமாகவும், தாமும் ஏதாவது செய்ய வேண்டுமென்ற முனைப்புக் காரணமாகவும் “மறுமலர்ச்சி” என்னும் சஞ்சிகை யைத் தோற்றுவித்தனர்.

மரபுமுறையிலிருந்தும், பண்டித வித்துவத்தனமான மொழி நடையிலிருந்தும் தமிழை விடுவித்து மண்வாசனையும் பேச்சுவழக்கும் இணைந்த யதார்த்த பூர்வமான படைப்புக்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்தவை ஈழகேசரியும், மறுமலர்ச்சி சஞ்சிகையும்தான்.

இத்தகையதோர் நிலையில்தான் எமது ஊரவர்களான வைத்திலிங்கமும், இலங்கையர்கோனும் ஈழத்துச் சிறுகதை வரலாற்றினைத் தொடக்கி வைத்தனர். புதுப்புது உத்திகளைக் கையாண்டு சமூகப் பிரச்சனைகளை அலசி ஆராய்ந்து ஆக்கபூர்வமான சிறுகதைகளை எழுதினர். இக்காலத்தில்தான் ஈழகேசரிப் பத்திரிகை ஈழத்துக் கதைப் படைப்புக்களுக்கு முக்கியத்துவம் தந்து அவைகளைப் பிரசுரித்தது.

ஈழகேசரி செய்த இப்பணி பற்றி கனகசெந்திநாதன் இவ்வாறு கூறுகிறார். “1992ஆம் ஆண்டிற்குப் பின்னர் சுமார் பத்துவருட காலம் தூங்கிக் கிடந்த யாழ்ப்பாணம் எதற்கெடுத்தாலும் தமிழ் நாட்டையே எதிர்பார்த்திருந்த யாழ்ப்பாணம் தன் தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டமைக்கு ஈழகேசரிப்

பத்திரிகையே முக்கிய காரணமாகும். இத்தகைய ஒரு பின்னணியிலே பழைமையை ஆராய வேண்டும் புதியவற்றை ஆக்க வேண்டும். அதிலும் ஈழத்திற்கே தனித்துவமாக அமைந்த கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் பிரதிபலிக்க வேண்டும் என்கிற ஓர் எழுச்சி உதயமாயிற்று. இந்த எழுச்சிக்கு ஏற்றதொரு சங்கப் பலகையாக ஈழகேசரியே எழுத்தாளர் முன் காட்சியளித்தது".

எமது சிறுகதை முன்னோடிகளுக்கு இவ்வாறு களம் அமைத்துக் கொடுத்து ஈழகேசரி ஓர் வரப்பிரசாதமாக இருந்தபோதும் தென்னிந்தியச் சஞ்சிகைகளிலும் தமது ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டும், இந்தியத்தமிழ் மக்களிடையேயும் தமது ஆக்கங்கள் பற்றிப் பேசப்பட வேண்டுமென்பதில் அவர்கள் ஆர்வம் காட்டினர். ஈழகேசரி பத்திரிகையில் எழுதிய அதேநேரம் கலைமகள், ஆனந்தவிகடன் முதலான தமிழ்நாட்டுச் சஞ்சிகைகளிலும் எழுதினார்கள். வரலாற்றுச் சம்பவங் களும், புராண இதிகாசக் கதைகளும், இரு நாடுகட்கும் பொதுவாக உள்ள பிரச்சனைகளைச் சித்தரிக்கும் சம்பவங்களும் கொண்ட அற்புதமான சிறுகதை களை இந்தியச் சஞ்சிகைகளிலும் எழுதிப் புகழ்பெற்றார்கள்.

அவர்களுடைய எழுத்துக்கள் பற்றி கனகசெந்திநாதனின் ஈழத்து இலக்கிய வளர்ச்சி என்னும் நூலில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "இவர்கள் உலகயுத்த காலத்தின் கெடுபிடிக்குள் உலகம் அவதிப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் எழுதிய எழுத்துக்களைப் பதினேழு வருடங்களின் பின் நிதானித்து அசைபோட்டு வாசிக்கும் பொழுது சில உண்மைகளை உணர முடிகின்றது. தமிழ்நாட்டு எழுத்தாளர்களான கு.ப.ரா, கல்கி ஆகியோரது எழுத்தின் ஆதிக்க நிழல் இவர்களுடைய எழுத்துக்களில் கவிந்திருக்கின்றது. கலைமகளையும், ஆனந்தவிகடனையும் இலட்சியப் பத்திரிகைகளாக வைத்துக்கொண்டு எழுதிய தன்மையைக் கவனிக்க முடிகிறது. யதார்த்த இலக்கியக்காரரின் கருப்பொருளாகி விட்ட வறுமை, பசி, முதலாளி, தொழிலாளிப் போராட்டங்கள் சூசகமாகவே கையாளப்பட்டன. அவர்கள் கையாண்ட நடையில் ஒரு செழுமையும், பூரணத்து வமும் வாசித்து முடித்தபின் ஓர் இன்பமான அமைதியை அளிக்கும் தன்மயக்க நிலையும் இருந்தன என்பதை நாம் மறுக்க முடியாது"

இத்தகைய விமர்சனங்களைப் பெற்ற வைத்திலிங்கம் அவர்களின் கதைகளைப் பற்றிப் பார்ப்போம். இவரால் எழுதப்பட்டு பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் பிரசுரமான சிறுகதைகளில் பதினேழு சிறுகதைகளைக் கொண்ட "கங்காகீதம்" என்ற சிறுகதைத்தொகுதி இவர் வாழ்ந்து கொண்டிருக்கும் போதே வெளியீடு செய்யப்பட்டது.

வைத்திலிங்கம் அவர்களின் நண்பரும் எழுத்தாளருமான சோ.சிவபாதசுந்தரம் அவர்களின் உதவியுடன் சிவகெங்கை அன்னம் பதிப்பகம் கங்காகீதத்தை வெளியிட்டது. அதிலுள்ள கதைகளாவன.

| | |
|---|---|
| ஏன் சிரித்தார் | (கலைமகள் 1939) |
| மின்னல் | (ஈழகேசரி 1939) |
| கங்கைக்கரையில் | (கலைமகள் 1939) |
| பார்வதி | (கலைமகள் 1939) |
| தியாகம் | (கலைமகள் 1940) |
| நந்தகுமாரன் | (கலைமகள் 1940) |
| ஏமாளிகள் | (கலைமகள் 1941) |
| பூதத்தம்பிக்கோட்டை | (கலைமகள் 1941) |
| விதவையின் இதயம் | (ஈழகேசரி 1941) |
| மரணத்தின் நிழல் | (ஈழகேசரி 1941) |
| அழியாப் பொருள் | (கலைமகள் 1941) |
| மூன்றாம் பிறை | (கதைக்கோவை 1942) அல்லயன்ஸ் பதிப்பகம் |
| நெடுவழி | (ஈழகேசரி 1942) |
| பைத்தியக்காரி | (கலைமகள் 1942) |
| கங்காகீதம் | (கிராமஊழியன் 1944) |
| சிருஷ்டி ரகசியம் | (ஈழகேசரி 1948) |
| உள்ளப்பெருக்கு | (ஈழகேசரி 1956) வெள்ளிவிழா மலர் |

சி.வைத்திலிங்கம் அவர்கள் எழுதிய கதைகளில் வரலாற்றுக் கதைகளும், சமூகக் கதைகளும் அடங்குகின்றன. பெரும்பாலான கதைகள் சமூகக் கதைகளே யாகும். பூதத்தம்பிக்கோட்டை, தியாகம், நந்தகுமாரன் முதலியவை வரலாற்றுக் கதைகள். எமது நாடு அந்நியரின் ஆதிக்கத்திலிருந்த காலத்து அரசியல் வரலாற்றைப் பின்னணியாக வைத்து சிறந்த கற்பனை மெருகோடு புனையப்பட்ட கதை "பூதத்தம்பிக்கோட்டை" அரசியல் சூழ்நிலைகளில் ஏற்பட்ட அவலங்களை எடுத்துக்காட்டும் வரலாற்றுப் படைப்பான இக்கதை பலருடைய பாராட்டையும் பெற்றது.

இவர் வாழ்ந்த காலம் ஜாதிப்பாகுபாடுகள் தீவிரமாக இருந்தகாலம். அக்கால கட்டத்திலே இவர் முற்போக்குக் கொள்கை கொண்டவராக இருந்தார். "தியாகம்" என்ற சிறுகதையில் ஜாதிப்பாகுபாட்டைத் தகர்க்கக் கூடிய வசனங்களைத் துணிந்து எழுதியுள்ளார். "சமூக வழக்கங்கள், ஜாதிக்கட்டுப்பாடுகள் யாவும் யாரோ சிலரால் தம் சுயநலத்துக்காக வகுத்துக் கொள்ளப்பட்ட அரண்கள். இவைகளை உடைத்தெறிவது வீரர்களின் கடமை, இவ்வாறு எழுதியிருக்கிறார் வைத்திலிங்கம் அவர்கள்.

கிராமத்தின் இயற்கை அழகை ரசிக்கும் இவர், கிராமத்தில் வாழும் மக்களுடன் ஒன்றி வாழ்ந்தவர். அவர்களுடைய பிரச்சனைகளை, அவலங்களை அவர்களுடைய மனஉணர்வுகளை நன்கு அறிந்தவராதலால் அவைகள் இவருடைய கதைகளுக்குக் கருப்பொருள்கள் ஆயின. "ஏன் சிரித்தார்" என்ற கதையில் கூலி வேலை செய்யும் சின்னம்மாவின் உணர்வுகளும், "கழனி கங்கைக் கரையில்" என்ற கதையில் வீண் சந்தேகம் கொண்டு தன் உறவுகளைப் பறிகொடுக்கும் கந்தையனின் நிலையும் மிகவும் தத்ரூபமாக எடுத்துக் காட்டப் பட்டுள்ளன. குடிபோதையும் இச்சமூகத்திலுள்ள ஒரு பிரச்சனைதான். அதனால் விளையும் கொடுமைகளைச் சித்தரிக்கும் கதை "உள்ளப்பெருக்கு". ஒருவன் தினமும் குடித்துவிட்டு வந்து போதையில் தன் மனைவியை மிகவும் கொடுமைப் படுத்துகிறான். குடிபோதையில் தாயைக் கொடுமைப்படுத்தி சித்திரவதை செய்யும் தந்தையைப் பார்த்துப் பார்த்து ஆண் வர்க்கத்தையே வெறுக்கிறாள் மகள். அந்தப் பெண்ணுடைய மன உணர்வையும், வெறுப்பையும் மிக நுணுக்கமாக எடுத்துக் காட்டுகிறது உள்ளப்பெருக்கு சிறுகதை.

"பாற்கஞ்சி" என்னும் சிறுகதை ஆனந்தவிகடனில் பிரசுரமானது. மிகவும் பிரபலமாகப் பேசப்பட்ட கதை அது. வறுமை என்பது இச் சமுதாயத்தில் என்றுமே நிலைத்துவிட்ட ஓர் அவலம். தற்காலத்தில் வெளிநாட்டு வருமானங்களால் போலியான ஒரு செழிப்பு ஏற்பட்டுள்ள போதும் வறுமையும் ஒருபுறம் வாழ்ந்து கொண்டே இருக்கிறது. பிச்சை எடுப்பவர்களும், வயிறார உண்டு பசி தீர்க்க முடியாத ஏழைகளும் அன்றும் இன்றும் இச் சமுதாயத்தின் ஓர் அங்கமாக இருக்கிறார்கள். அத்தகைய வறுமையின் கொடுமையைப் படம் பிடித்துக் காட்டுகிறது வைத்திலிங்கம் அவர்களின் பாற்கஞ்சி சிறுகதை. தன் குழந்தைக்கு விருப்பமான உணவைக் கொடுக்க முடியாத ஒரு தாயின் தவிப்பை இக்கதையில் காண முடிகிறது. வறுமை காரணமாக குழந்தைக்குக் கூழ் மட்டுமே கொடுக்கிறாள் தாய். குடிக்க மறுக்கும் குழந்தையிடம் "நாளைக்குப் பாற்கஞ்சி தருகிறேன்" என்று சொல்லிக் குடிக்க வைக்கிறாள். இவ்வாறே தினமும் பாற்கஞ்சி தருகிறேன் என்று சொல்லிச் சொல்லி குழந்தையை ஏமாற்றிக் கூழ் குடிக்க வைக்கும் தாயின் உள்ளக் குமுறலை உணர்ச்சித் துடிப்போடு வடித்திருக்கிறார். படிப்பவரின் உள்ளத்தை நெகிழ வைக்கும் "பாற்கஞ்சி", சிறுகதை "தேர்ந்த சிறுகதைகள்" என்னும் பகுதியில் சேர்க்கப்பட்டு, க.பொ.த உயர்தர வகுப்பு மாணவரின் பாடத்திட்டத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இன்று பெரிதாகப் பேசப்படும் "பெண்ணியம்" பற்றிய கருத்துக்கள் கொண்ட கதைகளை அக்காலத்திலேயே வைத்திலிங்கம் அவர்கள் எழுதியுள்ளார். இதுபற்றி கலாநிதி செ.யோகராசா அவர்கள் கூறுவதாவது "சி.வைத்திலிங்கத்தின் சிறுகதைகளில் எவரும் காணத்தவறிய பிறிதொரு சிறப்பம்சம் அமைந்துள்ளது.

அதாவது இன்றைய பெண்நிலைவாத நோக்கில் அணுகும் போது அவருடைய சிறுகதைகள் இன்னொரு பரிணாமத்தை எய்துகின்றன. விதவையின் இதயம், மின்னல், நெடுவழி, கங்காகீதம், உள்ளப்பெருக்கு என்பன இவ்விதத்தில் கவனிப்பிற்குரியனவாகின்றன."

இவ்வாறு கூறும் செ.யோகராசா அவர்கள், "தமது ஏனைய சிறுகதைகளி லிருந்து உள்ளடக்க ரீதியில் விலகி நிற்கின்ற இரு சிறுகதைகளை வைத்திலிங்கம் அவர்கள் எழுதியிருக்கிறார்" என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

அவை ஏமாளிகள், மரணத்தின் நிழல் ஆகிய கதைகளாகும். ஏமாளிகள் என்ற கதை பிச்சைக்காரர் சிலர் எப்படியெல்லாம் ஏமாற்றிப் பிச்சையெடுக்கிறார்கள் என்பதைப்பற்றி எந்தக் காலத்திற்கும் பொருந்தக் கூடியதான கதையாக எழுதப் பட்டிருக்கிறது. மரணத்தின் நிழல் என்ற கதை மரணப்படுக்கையிலுள்ள ஒருவரின் அந்திமவேளை பற்றிய உணர்வுபூர்வமான படைப்பாகும். இத்தகைய வித்தியாச மான கதைப்படைப்புளையும் சி.வைத்திலிங்கம் அவர்கள் உருவாக்கியிருக் கிறார்கள்.

இவருடைய வரலாற்றுக் கதைகளும், பாராட்டுப் பெறும் வகையில் சிறப்பாகவே அமைந்துள்ளன. சமூகக் கதைகளோ "பழமை" என்று கூற முடியாமல் என்றும் எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய ஆக்கங்களாக அமைந்துள்ளன. பெண்ணியம் பற்றிய அவரது கருத்துக்களைப் பிரதிபலிக்கும் கதைகளோவெனில் அன்றும், இன்றும் இனிவரும் காலத்திற்கும் ஏற்றனவாகவே அமைந்துள்ளன.

"சி.வைத்திலிங்கத்தின் பெண்கள் பற்றிய பார்வைகள் காரணமாக அன்னார் ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் முதன்மை இடம் முன்னோடிக்குரிய இடம் பெறுவது விதந்துரைக்கப்படவேண்டியது எனினும் இத்தகைய சிறப்புப்பற்றி உணரப்படாத நிலையே காணப்படுகிறது" என்று கூறும் செ.யோகராசா அவர்கள், விமர்சகர் ஒருவர் வைத்தியலிங்கம் அவர்களின் எழுத்தைப் பற்றி வழங்கிய விமர்சனத்தையும் குறிப்பிடுகிறார்.

"சி.வைத்திலிங்கமோ தேசிக விநாயகம்பிள்ளையைப் போல் மென்மை, பெண்மை, கனிவு, அழகு, இனிமை முதலிய பண்புகளை விரும்புபவர். இலக்கியம் அவற்றைப் பிரதிபலிக்க வேண்டும் என்று நம்புபவர். கவிதையின் கனிவும், வடமொழி இலக்கியத்தின் பெருமிதமும் துலங்க வேண்டும் என்று வற்புறுத்துபவர்." வைத்திலிங்கம் அவர்களின் கதைகளிலே பிரதிபலித்த இனிய அம்சங்களை ஆய்ந்தறிந்து அந்த விமர்சகர் அவ்வாறு அழகாகக் கூறியுள்ளார்.

இவர் சிறுகதை ஆக்கங்களோடு மொழிபெயர்ப்பு ஆக்கமும் செய்துள்ளார். ரஷ்ய நாவலான "On the eve" என்பதை "மாலை வேளை" என்ற பெயரிட்டு மொழி பெயர்த்தார். அந்த மொழிபெயர்ப்பு நாவல் 1941ஆம் ஆண்டு ஈழகேசரியில் தொடர்கதையாக வெளிவந்தது.

சி.வைத்திலிங்கம் அவர்கள் எழுத்தாளராக மட்டுமன்றி பல்துறைக் கலைஞராக விளங்கியிருக்கிறார். விவேகானந்த சபையில் ஒரு விழா நடந்தபோது அதில் நாடகமும் இடம்பெற்றது. அந்த நாடகத்தில் வைத்திலிங்கம் அவர்கள் பெண் வேடம் தாங்கி நடித்ததாக அவருடைய துணைவியார் கூறுகிறார். சுடரொளி கலை இலக்கிய அரசியல் சமூக சஞ்சிகையின் 2006ஆம் ஆண்டின் வைகாசி - ஆனி இதழில் அவருடைய துணைவியார் திருமதி.அம்பிகை வைத்திலிங்கம் அவர்கள் தன் கணவரைப்பற்றி ஒரு கட்டுரை வரைந்திருந்தார். "பத்திரிகை யாசிரியர்கள் பலர் கொழும்பில் இவரைச் சந்தித்து இலக்கிய உலகைப்பற்றிக் கலந்துரையாடுவார்கள். இது இவருக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கும்" என்று குறிப்பிட்டிருக்கிறார். மேலும் அதில் "புகழ் பூத்த எழுத்தாளர் இலங்கையர்கோன் இவரது மைத்துனர், இருவரும் கொழும்பில் ஒரு வீட்டில் நீண்டகாலம் தங்கியிருந்தபோது இருவரும் ஆங்கிலத்திலிருந்து பல மொழிபெயர்ப்புகளைச் செய்தார்கள்" என்றும் எழுதியிருக்கிறார்.

ஈழத்திருநாட்டின் சிறுகதை வரலாற்றைத் தொடக்கி வைத்த ஆரம்ப கர்த்தா வாகவும், சிறந்த கதைப் படைப்புக்களைத் தந்த காதசிரியராகவும், ஈழத்தின் தமிழ்ச் சிறுகதை முன்னோடி என்ற புகழாரத்தையும் பெற்றவராகவும் திகழ்ந்து தாம் பிறந்த ஊருக்குப் பெருமை தேடித்தந்த சிவப்பிரகாசம் வைத்திலிங்கம் அவர்கள், ஏழாலைக் கிராமத்திலே உற்பத்தியான அந்த நவீன இலக்கிய எழுத்துப் பணியானது தொடர்வதற்கு ஓர் உந்து சக்தியாகவும், ஊக்குவிப்பாளராகவும் விளங்கியிருக்கிறார். மற்றவர்கள் எழுதுவதற்கு இவருடைய ஆக்கங்கள் தூண்டுகோலாய் இருந்தன என்றும் சொல்லலாம்.

"கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்" என்பதற்கிணங்க இவருடைய வீட்டிலிருந்தே ஒருவர் முதலில் எழுத ஆரம்பித்தார். இவருடைய எழுத்தார்வம் தொற்றிக்கொள்ள இவரது சகோதரியான தங்கரத்தினம் கந்தப்பசேகரம் அவர்கள் கதைகள் எழுதினார். அந்த வேளையில் இலங்கை வானொலி பிரபல்யமான ஊடகமாயிருந்தது. நேயர்கள் போட்டி போட்டுக்கொண்டு வானொலியில் ஒலி பரப்புவதற்காக ஆக்கங்கள் எழுதி அனுப்பிய காலம்.

வைத்திலிங்கம் அவர்களின் சகோதரியாரும் மதுராந்தகி என்ற புனைபெயரில் சிறந்த கதைப்படைப்புக்களை எழுதினார். அவரது கதைகள்

வானொலியின் வர்த்தக சேவையில் ஒலிபரப்பாகி அவருக்குப் பாராட்டுதல்களைப் பெற்றுக் கொடுத்தது. 1960களில் அவரது கதைகள் பிரபல்யமானதைத் தொடர்ந்து, வைத்திலிங்கம் அவர்களின் தமையனார் இரத்தினம் ஓவசியர் அவர்களுடைய மகளான நாகபூஷணி பாலசுப்பிரமணியம் அவர்கள் அற்புத சிருஷ்டியாகப் பல சிறுகதைகள் எழுதினார். அவரது கதைப்படைப்புக்கள் கலைச்செல்வி, தினகரன் முதலானவற்றில் பிரசுரமாகிப் புகழ் பெற்றன.

ஏற்கனவே, சமயத்துறை சார்ந்த எழுத்தாளர் பலர் தோன்றி, சமய நூல் ஆக்கங்களைப் படைத்திருந்தார்கள். சி.வைத்திலிங்கம், இலங்கையர்கோன் ஆகிய இருவரும் ஈழத்தமிழ்ச்சிறுகதை முன்னோடிகள் என்ற பெருமையைப் பெற்ற பிறகு அவர்கள் வாழ்ந்த ஏழாலை மேற்கைச் சேர்ந்த பலர் நவீன இலக்கிய எழுத்துத்துறையில் பிரவேசித்தனர்.

தா.சண்முகநாதன் அவர்கள் (நாவல், சிறுகதை, நாடகம்) சிவ.சண்முகவடிவேல் அவர்கள் (நாடகம். கவிதை, கட்டுரை) சி.சிவஞானசுந்தரம் அவர்கள் (சிறுகதை, நாவல், நாடகம்) அ.உமாசங்கர் அவர்கள் (சிறுகதை, கட்டுரை) இ.கணேசராசா அவர்கள் (நாடகம், கவிதை) ஆனந்தி (சிறுகதை) கே.ஆர்.ஜானா (சிறுகதை, கவிதை) ஜனகன் மகள் சிவஞானம் (சிறுகதை, நாடகம்) தமிழ்ப்பிரியா (சிறுகதை, தொடர்கதை) சி.சக்திகிரீவன் அவர்கள் (மரபுக் கவிதை, கட்டுரை) கு.ரஜீபன் அவர்கள் (புதுக்கவிதை, கட்டுரை) செந்தூரன் அவர்கள் (நாடகம்) ஏழாலை வாணி (கவிதை) பவானி (கவிதை, கட்டுரை) கலாதேவி (சிறுகதை, கவிதை), சியாமளா (கவிதை) என்றவாறு ஓர் எழுத்தாளர் கூட்டமே அந்த சிறுகதை முன்னோடிகளுக்குப் பின்னால் உருவாகி வந்தது.

வைத்திலிங்கம் அவர்கள், இலங்கையர்கோன் ஆகியோரது சிறுகதைத் தொகுதி நூல்களான கங்காகீதம், வெள்ளிப்பாதசரம் ஆகிய வெளியீடுகளைத் தொடர்ந்து ஏழாலையைச் சேர்ந்தவர்களான சண்முகநாதன் அவர்களின் "கோமதியின் கணவன்" சி.சிவஞானசுந்தரம் அவர்களின் "நெஞ்சில் நிறைந்தவள்" ஆனந்தியின் "துருவ சஞ்சாரம்", தமிழ்ப்பிரியாவின் "காம்பு ஒடிந்த மலர்", எம்.இந்திராணியின் "தவறி விழுந்த குஞ்சுகள்" முதலான நாவல்கள், சிறுகதைத் தொகுதிகளும் வெளியீடு செய்யப்பட்டுள்ளன. இத்தகையதொரு நவீன இலக்கிய எழுச்சிக்கு வித்திட்டவர்கள் எமது சிறுகதை முன்னோடிகளே.


கிராமிய வாழ்க்கையைச் சித்தரிப்பதும் பெண்ணியம் பற்றிப் பிரதிபலிப்பதுமான சிறுகதைகளைச் சிறப்பாகவும், முதன்மையாகவும் எழுதியதன் காரணமாக ஈழத்துச் சிறுகதைத்துறையில் முதன்மையிடமும், நிரந்தரமான புகழும் பெற்ற சி.வைத்திலிங்கம் அவர்கள் 1911ஆம் ஆண்டிலிருந்து 1931ஆம் ஆண்டு வரையான

இருபது வருட காலமும் தாம் பிறந்த ஊரான ஏழாலைப்பதியிலேயே கிராமிய மணத்தை நுகர்ந்துகொண்டு கிராம மக்களுடன் ஒன்றிணைந்து கிராமத்து வாழ்க்கையிலே ஐக்கியமாகி வாழ்ந்தார். அது அவருக்கு மிகவும் மகிழ்ச்சியான நாட்கள்.

பின்னர், உத்தியோகம் புருஷலட்சணம் என்பதற்கிணங்க கொழும்பில் மாநகர சபையில் எழுதுவினைஞராகக் கடமையேற்று 1931ஆம் ஆண்டிலிருந்து 1980ஆம் ஆண்டு ஓய்வுபெறும் வரை கொழும்பிலே வாழ்ந்தபோதும், விடுமுறை நாட்களில் தான் பிறந்த கிராமத்தின் அழகை ரசிக்கவும், உறவுகளைச் சந்திக்கவும் ஏழாலையை நாடி வருவார். கொழும்பில் வேலை பார்த்த காலத்திலே தான் ரசித்த கிராமிய அழகையும் கிராமத்திலே சந்தித்த கிராமவாசிகளையும் பற்றி அசைபோட்டு மீட்டுப்பார்த்து சிறந்த கிராமியப் பாங்கான கதைகளை எழுதினார். நகரிலே சந்தித்த மனிதரையும் சில கதைகளின் கதாபாத்திரமாக்கினார். முத்துமெனிக்கா, புத்தபிக்கு ஆகியோரும் அவரது கதாபாத்திரங்களாயினர்.

வைத்திலிங்கம் அவர்கள் ஓய்வுபெற்ற பின்தான் பிறந்த ஊருக்கு வந்து புதிதாக வீடுகட்டி, கிராமத்தின் இனிய காற்றைச் சுவாசித்து உறவினருடன் கொண்டாடி குடும்பத்தினருடன் மகிழ்ந்திருந்தார். ஆனால் அது அவருக்கு நிலைக்கவில்லை. பிள்ளைகள் மூவரும் தொழில் மற்றும் திருமணம் காரணமாக வெளிநாடுகளுக்குச் சென்றனர். நாட்டுப் பிரச்சனையாலும், வயோதிபத்தில் துணையாகவும் ஆதரவாகவும் தம் பிள்ளைகள் பக்கத்தில் இருக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்பினாலும், வைத்திலிங்கம் அவர்கள் தம் மனைவியுடன் பெற்ற பிள்ளை களை நாடிச் சென்று அவர்களுடன் சேர்ந்திருந்தார்.

பின்னர், 1991ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி அவர் அமரரானார். “பூதஉடம்பு அழிந்தாலும் புகழுடம்பு அழியாது” என்பதற்கிணங்க அவர் அடைந்த புகழ் என்றும் நிலைத்திருக்கும். ஈழத்தமிழ்ச் சிறுகதை வரலாற்றின் தொடக்குனராக, சிறுகதை முன்னோடியாக, சமூகத்தில் நிலவும் குறைபாடுகளை சிறுகதை வழியாக முன் வைத்து சமூகத்தில் ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்திய எழுத்தாளராக அவர் பெற்ற பெருமை அவரைப் பெற்றெடுத்த ஏழாலை மண்ணுக்கே சாரும்.



நடராஜா சிவஞானசுந்தரம்
இலங்கையர்கோன் அவர்கள்.

# ஈழத்து தமிழ்ச் சிறுகதை மூலவர், ஆக்க இலக்கிய கர்த்தா இலங்கையர்கோன் அவர்கள்

இலங்கையர்கோன் என்பது இலங்கைத் திருநாட்டின் நவீன தமிழ் இலக்கிய வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட பெயராகும். கற்றுணர்ந்த பண்டிதரும், பாவலரும் மட்டுமே படித்துச் சுவைக்கக் கூடியதாக இருந்த மரபு ரீதியான கடும் இலக்கணத் தமிழிலிருந்து விலகி மண் வாசனையோடு கூடிய பேச்சு வழக்குத் தமிழிலே சிறந்த ஆக்கங்கள் படைத்து சாதாரண மக்களும் அந்த இலக்கியச் சுவையை நுகர்ந்து ரசிக்கும்படி செய்த பெருமைக்குரியவராக இவர் விளங்குகிறார்.

ஒருவர்க்கொருவர் மச்சான் முறையினராகவும் அயலவர்களாகவும் விளங்கிய வைத்திலிங்கம், இலங்கையர்கோன் ஆகிய இருவரும் சிந்தனைச் சிறகினை விரித்து கற்பனை வானிலே பறந்து படைத்துத்தந்த இலக்கியம்தான் சிறுகதை என்னும் நவீன வடிவம். அதனை வெற்றிகரமாக உருவாக்கிய ஏழாலையர் இருவரும் சிறுகதை முன்னோடிகள் ஆயினர்.

இவர்களில், இலங்கையர்கோன் அவர்கள் மூன்று கோணங்களில் நின்று சிறுகதை, நாடகம், மொழிபெயர்ப்பு ஆக்கம் என்ற வகையில் இலக்கியத்தை நவீன மயப்படுத்தி அழகிய ஆக்கங்களைப் படைத்துள்ளார். அவருடைய புனைபெயர் தான் இலங்கையர்கோன் என்பது. இயற்பெயர் சிவஞானசுந்தரம் என்பதாகும். ஆனால் அவரது புனைபெயரே அவரைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப் படுகிறது. அவருடைய காத்திரமான எழுத்துக்களின் வலிமையினால் இயற் பெயரிலும் பார்க்க இலங்கையர்கோன் என்ற புனைபெயரே ஆதிக்கம்பெற்று அவருடைய பெயராகியுள்ளது.

இவர் ஏழாலையில் பிரபல்யம் வாய்ந்த ஒரு வம்சத்திலே உதித்தவர். இற்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன் இராசகாரி பெருவேளாளர் என்று அழைக்கப் பட்ட புவனநாயகமுதலி என்பவரின் பரம்பரையாகத் தோன்றிய வைத்தியநாதர், முதலித்தம்பி, வைத்தியநாதர், முதலித்தம்பி என்று பாட்டானருடைய பெயரையே மாறி மாறிச் சூட்டப்பெற்ற நான்கு தலைமுறைகளின் பின் ஐந்தாவது சந்ததியாக வந்துதித்த முருகேசு அவர்கள் சிதம்பரநாத உடையாரின் மகளான பொன்னுப்பிள்ளை அவர்களை மணம் செய்து, தமது முதற்குழந்தைக்கு நடராசா என்று பெயரிட்டார். அக்காலத்திலேயே நடராசா எட்டாம் வகுப்புவரை படித்திருந்தார்.

பதினெட்டாம் நூற்றாண்டின் முடிவும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கமுமான அக்காலகட்டத்திலே எட்டாம் வகுப்பு படித்தாலே பெரிய படிப்பாளி என்று சொல்லக்கூடிய அறிவும் தரமும் இருக்கும்.

நடராசா அவர்கள் தாம் கற்ற கல்வியினாலே மலையகத்திலுள்ள ஒரு றப்பர் தோட்டத்தில் எழுதுவினைஞராகக் கடமையாற்றினார். பின்னர், தமது தாயாரின் தமையனாரான நொத்தாரிஸ் மூத்ததம்பி அவர்களின் மகளும் தனது முறைப் பெண்ணுமாகிய இளையாச்சிப்பிள்ளையை திருமணம் செய்தார். நடராசா இளையாச்சிப்பிள்ளை தம்பதியருக்கு முதற்பிள்ளையாக ஓர் ஆண் குழந்தை 06.09.1915 ல் பிறந்தது. அக்குழந்தைக்கு சிவஞானசுந்தரம் என்று பெயரிட்டனர். அக்குழந்தையே தனது பதினெட்டாவது வயதில் இலங்கையர்கோன் என்ற புனைபெயரைச் சூட்டி எழுத்துத்துறையில் பிரவேசித்து சிறுகதை முன்னோடி களில் ஒருவராகவும், ஆக்க இலக்கிய கர்த்தாவாகவும், வேற்றுமொழி நாவல் களை தமிழில் மொழி பெயர்ப்பவராகவும் புகழ்பெற்று விளங்கியது. இலங்கையர்கோன் என்ற சிவஞானசுந்தரத்துக்கு ஒரு தங்கையும் இரண்டு தம்பிமாரும் இருந்தனர். சிவஞானவதி என்ற அருமைத்தங்கை பன்னிரண்டு வயதில் விஷக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டு இறந்து போனார். சோமசுந்தரம் என்ற தம்பியாரும் ஏழு வயதில் காலமானார். இதனால் இலங்கையர்கோனுக்கு இளம் வயதில் பெரிய மனத்தாக்கம் ஏற்பட்டிருந்தது. ஆயினும் அவருக்கு திருஞானசெல்வம் என்ற தம்பி என்றும் துணையாய் ஆதரவாய் இருந்தார்.

### படிப்பும் பதவியும்

இலங்கையர்கோன் அவர்கள் தமது ஆரம்பக்கல்வியை ஏழாலை சைவப் பாடசாலையில் பெற்றார். பின்னர் மல்லாகம் இந்து ஆங்கில பாடசாலையிலே கற்று உயர்கல்விக்காக பரமேஸ்வராக் கல்லூரியில் சேர்ந்தார். ஆங்கில மொழி மூலமே தமது கல்வியைக் கற்று ஆங்கிலமொழியில் மிகுந்த தேர்ச்சி பெற்றார். அந்த ஆங்கிலமொழிப் புலமைதான் அவரை ஆங்கில இலக்கிய நாட்டம் கொள்ள வைத்தது. அவர் ஆங்கில பாடசாலைகளிலேயே கல்வி கற்றார். ஆங்கில இலக்கியத்தில் மனதைப் பறிகொடுத்த அவர் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகக் கல்வியை ஆங்கிலமொழியிலேயே கற்றார். ஆயினும் அவருக்குத் தமிழ் மொழியிலும் ஆர்வம் இருந்தது. அதனால் பண்டிதர்கள், தமிழாசிரியர்களைத் தேடிப்போய் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் புராண இதிகாசங்களையும் கற்றார். தலைமையாசிரியராக இருந்த பண்டிதர் த.பொ.கார்த்திகேசனிடம் சிலப்பதிகாரத்தை தெளிவாகக் கற்றார். சுப்பிரமணியம், செல்லப்பா ஆகிய ஆசிரியர்களிடம் தமிழ் கற்று பாலபண்டித பரீட்சைக்குத் தோற்றியிருந்தார். கிடைக்கும் தமிழ் நூல்களையெல்லாம் படித்து அதிலிருக்கும் நயங்களை ரசிப்பார்.

இவர் இலண்டன் பல்கலைக்கழகத்தின் பொருளாதார இடைநிலைத் தேர்வில் சித்தியடைந்தார். பின், கொழும்பு சட்டக்கல்லூரியில் படித்து சட்டத்தரணியாக பணி புரிந்தார். சில வருடங்களின் பின் அரசாங்க சேவையில் காரியாதிகாரி (D.R.O) என்னும் உயர்பதவியைப் பெற்றார். நெடுங்கேணி, மட்டக்களப்பு முதலான இடங்களில் இப்பதவியை வகித்த அவரது நிர்வாகத் திறனும், நேர்மையும் எல்லோராலும் பாராட்டப்பட்டது.

மணவாழ்க்கை

இலங்கையர்கோன் அவர்கள் தனது சொந்த மச்சாளும், உடையார் பரம்பரையில் வந்த செல்வந்தரான சிவசம்பு ஓவசியரின் மகளுமான செல்லம்மா அவர்களை திருமணம் செய்தார். பாரதிக்கு ஒரு செல்லம்மா வாய்த்தது போலவே இவருக்கும் துணையாக செல்லம்மா கிடைக்கப் பெற்றார். நல்ல குடும்பத் தலைவி யாகவும், குடும்ப விளக்காகவும் திகழ்ந்த செல்லம்மா கணவர் எழுத்துத்துறையில் பெற்ற வெற்றிகளுக்கெல்லாம் பின்னால் நின்று உழைப்பவராக விளங்கினார். இலங்கையர்கோன் எழுதும் ஆக்கங்களை அழகாகப் பிரதிசெய்தல், பிரசுரமாகும் அவரது ஆக்கங்களைச் சேகரித்துப் பாதுகாத்தல் முதலான பணிகளைக் கணவருக்காகச் செய்து வந்தார்.

சிவஞானசுந்தரம் என்னும் இயற்பெயர் கொண்ட இலங்கையர்கோன் செல்லம்மா தம்பதியினர்க்கு மூன்று பிள்ளைகள் இருந்தார்கள். மூத்தமகன் ஸ்கந்தவர்மன் யாழ் போதனா வைத்தியசாலையில் வைத்தியராகப் பணி புரிந்து, தற்போது குடும்பத்துடன் அவுஸ்திரேலியாவில் இருக்கிறார். இலங்கையர்கோனுக்கு இரண்டாவது பிள்ளையாக மகள் பிறந்தாள். அவருக்கு பெண்குழந்தைகள் என்றால் பெருவிருப்பமாம். பத்துப் பெண்குழந்தைகள் பிறந்தாலும் மகிழ்ச்சியோடு ஏற்றிருப்பேன் என்று சொல்வாராம். சிவஞானவதி என்ற அவருடைய தங்கை பன்னிரண்டு வயதில் காலமான போது மிகவும் மனத்தாக்கமுற்றவர். அதனால் போலும் பெண்குழந்தை மீது அத்தனைபிரியம். மகள் பிறந்தபோது ஈழகேசரியில் "சிரித்தாள்" என்ற தலைப்பிலே கவிதை எழுதியிருந்தார். அவருடைய மகளான திருமதி.சந்திரலேகா வாமதேவா கலாநிதிப்பட்டம் பெற்று இந்துநாகரீகத்துறை விரிவுரையாளராகி தற்போது நியூசிலாந்து நாட்டில் "தமிழ்த்தென்றல்" என்ற பத்திரிகை நடத்துகிறார். இலங்கையர்கோன் அவர்களது மூன்றாவது பிள்ளையான ஜெயவர்மன் கொழும்பில் பட்டயக் கணக்காளராக பணி புரிகிறார்.

இலங்கையர்கோனுக்கு திருஞானசெல்வம் என்ற பெயருடைய ஒரேயொரு தம்பி மட்டுமே இருந்தார். அவர் கேம்பிறிஜ் சீனியர் பரீட்சையில் தேறி புகையிரதப் பகுதியில் எழுதுவினைஞராகி பின் பதவிஉயர்வு பெற்றார்.

இலங்கையர்கோன் அவர்கள் தமது மனைவியாரான செல்லம்மா அவர்களின் சகோதரியான புவனேஸ்வரி அவர்களையே தமது தம்பியாரான திருஞானசெல்வம் அவர்களுக்கு மணம் செய்து வைத்தார். அவருடைய கலையுள்ளம் உறவுகளை மிகவும் நேசித்து அளவற்ற பிரியம் காட்டியது.

**இலக்கியத்துறையில் ஆற்றிய ஆக்கபூர்வமான பணிகள்**

இலங்கையர்கோன் அவர்கள் இயல்பிலேயே கலையார்வமும், இலக்கிய ஈடுபாடும் கொண்டவராக விளங்கினார். அவருடைய சிந்தனைத்திறன்மிக்க இதயமானது ஊரில் உலவும் மக்களின் வாழ்க்கைநிலையை ஊடுருவிப்பார்த்து உணர்ந்துகொள்ளும் தன்மையுடையதாக இருந்தது.

புராண இதிகாசங்கள், சரித்திர வரலாறுகள், ஐம்பெருக்காப்பியங்கள் இவற்றிலே சிறுவயது முதலே ஆர்வம்மிக்கவராக இருந்தார். ஆரம்பத்திலிருந்தே ஆங்கிலமொழியைக் கற்று அதில் முழுத்தேர்ச்சி பெற்றதனால், மேலைத்தேசங்களிலிருந்து வரும் ஆங்கிலச் சஞ்சிகைகளை இலக்கிய தாகத்தினால் ஈடுபாட்டுடன் வாசித்து, அவர்களது ஆக்கத்திறனையும், உத்திமுறைகளையும் வியந்து, உணர்வுபூர்வமாக ரசிப்பார்.

எல்லாவற்றுக்கும் மேலாக, ஊருக்குள்ளே உறவுக்குள்ளே ஓர் இலக்கிய கூட்டாளி அவருக்குக் கிடைத்தார். அவருடைய சமகால எழுத்தாளரும், மச்சானுமாகிய சி.வைத்திலிங்கம் அவர்களுடைய சேர்க்கையும் இலங்கையர்கோன் அவர்களின் எழுத்தார்வத்துக்கு உந்துசக்தியாக விளங்கியது எனலாம்.

தங்களது சேர்க்கை பற்றி வைத்திலிங்கம் அவர்கள் அழகாகக் கூறுகிறார். "உன்னதமான லட்சியங்களும், கனவுகளும் எங்கள் வாழ்க்கையில் நிரம்பியிருந்த நாட்கள் அவை. இலக்கியத்தைப் படிப்பதிலும், நாடகங்கள் பார்ப்பதிலும் சங்கீத ரசனையிலும் எங்கள் இருவருக்கும் எப்பொழுதுமே பெரிய ஆர்வம். எழுத வேண்டும் ஏதாவது சிருஷ்டிக்க வேண்டும் என்ற உணர்ச்சி என்றும் சிறகடித்துக் கொண்டேயிருக்கும்" இவ்வாறு தம் இருவரையும் பற்றிக் கூறுகிறார்.

இத்தகையதொரு சூழ்நிலையில்தான் இலங்கையர்கோன் அவர்கள் எழுத்துலகில் காலடி வைத்தார். தமது பதினெட்டாவது வயதில் முதல் சிறுகதையாக "மரியா மதலேனா" என்னும் சிறுகதையை தமிழகத்தின் சஞ்சிகையான "கலைமகள்" சஞ்சிகையில் எழுதினார். தம்முடைய தேசப்பற்றைக் காட்டும் வகையில் இலங்கையர்கோன் என்ற புனைபெயரைத் தேர்ந்தெடுத்து தமது எழுதுப்பணிக்குப் பலமான அத்திவாரத்தை இட்டுக் கொண்டார்.

இவருடைய இலக்கியப்பணியானது சிறுகதை, நாடகம், மொழிபெயர்ப்பு என்னும் மூன்று வடிவங்களில் எழுத்து ஆக்கங்கள் படைக்கப்பட்டதாக செயற்படுத்தப்பட்டு, இவருக்கு வெற்றியையும், புகழையும் தேடிக் கொடுத்தது.

**சிறுகதை ஆக்கங்கள்**

எமது பண்டைய நூல்களான புராண இதிகாசங்கள், ஐம்பெரும் காப்பியங்கள் முதலானவைகளெல்லாம் இலக்கண வரம்புக்குட்பட்ட மரபுக் கவிதைகளாலான நூல்களாகும். படித்தவர்களாலும், பண்டிதர்களாலும்தான் அந்த இலக்கியங்களைப் படித்துச் சுவைத்து மகிழக்கூடியதாக இருந்தது. இந் நிலையில் பாரதியார், ஆறுமுகநாவலர் போன்றோர் வசனநடையை ஆரம்பித்து வைத்தனர். அவைகூட வித்துவத்தன்மை கொண்டவையாக விளங்கியமையால் நன்கு படித்தவர்களுக்கே உரியவையாயின.

இந்நிலையை மாற்றி, வாசிக்கத்தெரிந்த அத்தனை பேருமே சுவாரஸ்ய மாகவும் சுலபமாகவும் படித்துக் கிரகித்து ரசிக்கக்கூடிய வகையில் நவீன இலக்கிய வடிவத்தை இலங்கையர்கோன் அவர்கள் உருவாக்கினார். அதன் பெயர்தான் "சிறுகதை" இலக்கியம். அந்த இலக்கிய வடிவமானது மேலைநாட்டிலிருந்து இங்கு இறக்குமதியானதுதான். ஆனால் நமது மொழியில் நமது மண்வாசனை யோடு நமது வாழ்க்கைக் கோலங்களை அடிப்படையாகக் கொண்டு படைக்கப் பட்டபோது புதிய இலக்கியம், நல்ல சுவாரஸ்யமான இலக்கியமென்று வாசகர்க ளால் வரவேற்கப்பட்டது. இலங்கை, இந்திய தமிழ்ச் சஞ்சிகைகளும் ஆர்வத்தோடு அவற்றைப் பிரசுரித்தன. வித்தியாசமான கருப்பொருளைக்கொண்ட கதைகளை எதிர்பார்த்த கலைமகள் முதலான தென்னிந்தியச் சஞ்சிகைகள் இவருடைய கதைகளை பெரிதும் வரவேற்றன. கலைமகள், கிராம ஊழியன், சூறாவளி, மணிக்கொடி, ஆனந்தவிகடன் முதலான இந்தியச் சஞ்சிகைகளில் இவருடைய கதைகள் பிரசுரமாகியுள்ளன. இவர் பெரும் எண்ணிக்கையிலான கதைகளை எழுதியுள்ளார். இந்தியச் சஞ்சிகைகளை விட ஈழகேசரி, மறுமலர்ச்சி, வீரகேசரி முதலான இலங்கைப் பத்திரிகைகள் இவரது கதைகளுக்கும் களம் அமைத்துக் கொடுத்தன.

இலங்கையர்கோனுடைய சிறுகதைகளை நோக்குமிடத்து புராண இதிகாச வரலாற்றுச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட வரலாற்றுக் கதைகள், சமூகச் சம்பவங்களை வைத்து எழுதப்பட்ட சமூகக் கதைகள் என இரு பிரிவாகப் பிரிக்கலாம். வரலாற்றுக் கதைகளாக அமைந்தவை மரியாமதலேனா, தாய், மேனகை, யாழ்பாடி, அநுலா, சிகிரியா, தேவலோகக் காதல், மணப்பரிசு, கடற்கோட்டை முதலானவையாகும். ஆங்கிலமொழியை நன்கு கற்று, இலக்கிய ஈடுபாட்டினால் ஆங்கில இலக்கியங்களைப் படித்து, அவர்கள் கையாண்ட உத்திகள், மற்றும் அவர்களுடைய இலக்கிய வடிவமைப்பு ஆகியவற்றைப் பயன்படுத்தி தாமும் கதை புனைய முயன்ற போது, கதைக்கான வரலாற்றுச் சம்பவம் கூட அவர்களுடையதாகவே அமைந்துவிட்டதைக் காணலாம்.

கலைமகளில் வெளியான இவரது முதற்சிறுகதையில் மரியா என்ற பெண் செல்வச் செழிப்பான குடும்பத்தில் பிறந்து, பின் அவற்றை இழக்க நேர்ந்தபோது, சுகபோகங்களுக்காக குற்றம்புரிந்து பிடிபட்டு யேசுவின் முன் நிறுத்தப்படுகிறாள். யேசுவால் அவள் திருத்தப்பட்டதாக கதை சொல்கிறது.

ஈழகேசரியில் வெளியான "தாய்" என்ற சிறுகதை யேசுவை ஊர்வலமாக அழைத்துச்சென்று சிலுவையில் அறைந்து கொன்றதை நேரில் கண்ட தாயாரான மேரியின் வேதனையான மன உணர்வுகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட கதை. அநுலா, சிகிரியா, யாழ்பாடி ஆகியன இலங்கையின் வரலாற்றுச் சம்பவங்களைக் கொண்டு எழுதப்பட்ட கதைகள். அநுராதபுரத்தை ஆண்ட பட்டத்தரசியான அநுலாவின் வரலாறான "அநுலா" சிறுகதையில் இயற்கை வர்ணனைகள் கூடுதலாக இடம்பெற்றுள்ளன. உதாரணத்திற்கு ஒன்று "தேய்த்து மினுக்கிவிட்ட வெள்ளித்தகடு போல் சந்திரன் நடுவானில் தொங்கிக் கொண்டிருந்தான்"

"யாழ்பாடி சிறுகதையானது நன்கு யாழ் மீட்ட வல்ல கண்ணிழந்த ஒருவன் தன் மனைவியுடன் ஏற்பட்ட ஊடலால் இலங்கைக்கு வந்து அரசன் முன் யாழ் வாசித்து பாராட்டுகளும் யாழ்ப்பாணம் என்ற மணற்றிடரையும் பரிசாய்ப்பெற்ற கதை. இக்கதையிலே இலங்கையர்கோன் அவர்களது கற்பனைவளம். கலை யுணர்வு, கவித்துவம் மூன்றும் இழையோடுகின்றன. யாழ்பாடியின் கண்ணில்லாத அவலட்சணமான முகத்தோற்றத்தை பின்வருமாறு வர்ணிக்கிறார்.

"அவனுடைய கண்கள் இருக்க வேண்டிய இடத்தில் இரண்டு ஆழமான பள்ளங்கள் இருந்தன. வாழ்வின் பெரும்பேறான கண்ணொளியை அவன் இழந்து விட்டான். அவனுடைய முகத்தில் அழகு என்பது சிறிதுமில்லை. திருமகள் அதை முழுதும் புறக்கணித்திருந்தாள். அது சுடுகாடு போலப் பாழடைந்திருந்தது". யாழ் பாடியின் விரல்கள் யாழை மீட்டத் தொடங்குகின்றன. அதிலிருந்து எழும் நாத இன்பத்தை அற்புதமாகச் சித்தரிக்கிறார்.

"யாழ் நரம்புகளின் இயக்கம் ஒலியின் அலைகளாய், நாதக் கடலாய் இசையின் சாகரமாய், இன்பத்தின் பிரளயமாய் முடிவடையும். முடிவென்பதே அதற்கு இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். அணுக்களாய், கண்டங்க ளாய், உலகங்களாய், அண்டங்களாய், பேரண்டங்களாய் முடிகிறதோ அல்லது அப்பாலும் போகின்றதோ? யாருக்குத் தெரியும். அன்னத்தின் நடை, மயிலின் ஆடல், கோகுலத்தின் தொனி, சந்திரனின் குளிர்ச்சி, அனிச்ச மலரின் மென்மை, ஆமாம் தாமரையின் மலர்ச்சி இவையெல்லாம் பிறக்கின்றன. அந்த யாழோசை யில்" இவ்வாறு, கதையை வாசிப்பவர் அந்த யாழிசையைக் கேட்பதுபோல் உணர வைக்கிறார். மயங்க வைக்கிறார் இலங்கையர்கோன்.

அத்தெய்வீக யாழிசையை எழும்பும்போது யாழ்பாடியின் நிலையை மிக அற்புதமான வார்த்தைப் பிரயோகங்களால் வாசிப்பவரை உணர்விக்கிறார். "அவனுடைய கண்களின் முன் எல்லையில்லாத அழகுலகங்கள் திறக்கப்படு கின்றன. அவற்றின் மேம்பாட்டில் அவன் தன்னை இழந்து விடுகிறான். இப்பொழுது அவன் வயிற்றுச் சோற்றுக்கே அல்லல்படும் யாழ்பாடி அல்ல. அழகின் கொழுந்தாய் விளங்கும் அமரனோ".

நாம் பாடசாலையில் பாடப் புத்தகத்தில் படித்திருந்த யாழ்பாடியின் கதை இலங்கையர்கோனின் அற்புதமான, உள்ளத்தைத் தொடும் வசனநடையிலே வாசிக்கும்போது ஒருபெரும் காவியமாகவே உணர முடிகிறது. மேனகை என்ற கதை விசுவாமித்திர முனிவருக்கும் மேனகைக்கும் சகுந்தலை பிறந்த வரலாற்றினை கற்பனை மெருகோடு சுவைபட, கலைநயம் மிளிரும்படியாக எழுதப்பட்ட கதையாக அமைந்துள்ளது.

கிராமத்து மக்களின் வாழ்க்கையும், அவரது உத்தியோக வாழ்க்கையில் கிடைத்த அனுபவங்களும் சமூகச் சிறுகதைகளுக்குக் கருப்பொருளாயின.

வெள்ளிப்பாதசரம், துறவியின் துறவு, ஒருநாள், சக்கரவாகம், சதிர்க்காரி, என்தமக்கை, கடற்கரைக்கிழிஞ்சல், தாழைமரநிழலில், மச்சாள், முதற்சம்பளம், வஞ்சம், நாடோடி, அநாதை, மனிதக்குரங்கு, தந்திவந்தது, செங்காந்தள் முதலியன இலங்கையர்கோன் எழுதிய சமூகக் கதைகளாகும்.

அவரது சிறுகதைகள் யாவுமே சிறப்பான, ரசனைமிக்க கதைகளாக இருந்த போதும் வெள்ளிப்பாதசரம் என்ற கதை மிகவும் பிரபல்யமாகி படிப்பவரின் மனதில் நீங்காத இடம்பெற்ற கதையாக விளங்குகிறது. பொதுவாக, கதை எழுதும்போது அதன் கருப்பொருள் உண்மைச் சம்பவமாயிருந்தாலும் கதாபாத்திரங்களின் பெயர்கள் கற்பனையாகவே அமைப்பார்கள். ஆனால் இக்கதையில், இங்கு வாழ்ந்த செல்லையா நல்லம்மா என்ற தம்பதியரின் பெயர்களை அப்படியே பயன்படுத்தி மிக அழகாக அவர்களின் குண இயல்புகளை, வாழ்வியலை எழுத்தில் வடித்திருக்கிறார்.

தம் கிராமத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வை கலைக்கண்ணோடு ஊடுருவிப் பார்க்கும் தன்மை இலங்கையர்கோனிடம் இருந்தது. புதிதாக மணவாழ்க்கையில் ஈடுபட்ட செல்லையா நல்லம்மா தம்பதியரின் இயல்பு அவருடைய மனதைத் தொட்டிருக்க வேண்டும். ஆகவே அவர்களின் உண்மைப் பெயரையே போட்டு, கதை புனைந்துவிட்டார். இந்தக் கதை எழுதிய அந்தக் காலகட்டத்தில் சாதாரணதரத்து மக்கள் கோயில் திருவிழாக்களுக்கு மாட்டுவண்டியிலே போவது வழக்கமாயிருந்தது. வெள்ளிப்பாதசரம் கதையின் நாயகன் செல்லையா தன் மனைவி நல்லம்மாவுடன் மாட்டு வண்டியில் வல்லிபுரக்கோயில் திருவிழாவுக்கு செல்கிறார்.

ஏழாலையிலிருந்து போகும்போது "வல்லைவெளி" என்ற இடத்தினூடாகத் தான் செல்ல வேண்டும். சனப்புழக்கமற்ற அந்த இடம் போக்குவரத்துக்கு மட்டுமே பயன்படுத்தப்படும். அந்த வல்லைவெளியின் தெருவினூடாக செல்லையாவின் மாட்டுவண்டி செல்கிறது. அத்தெருக்காட்சியை இலங்கையர்கோன் இப்படி வர்ணிக்கிறார்.

"யாரோ மணமகன் ஊர்வலம் வருவதற்காக விரித்துவிட்ட நிலப்பாவாடை போல வளைந்து கிடந்த தெருவில் இருமருங்கும் நெடிய பனைமரங்கள் மௌனப் பூதங்கள் போல் வரிசையாக நின்று ஆலவட்டம் பிடித்தன. இவ்வாறு வெள்ளிப்பாத சரம் என்ற கதையில் களம், பிரதேசப் பண்புகள் முதலியன நன்கு சித்தரிக்கப் பட்டுள்ளன. ஆனால் விமர்சகர் ஒருவர் இவ்வாறு கூறுகிறார். "இலங்கையர்கோனின் கதைகளில் சம்பவங்களிலும் பார்க்க உணர்ச்சியே முக்கியம். களம் காட்டப்பட வில்லை பிரதேசவாசனை இல்லை" என்று கூறும் விமர்சகரின் கூற்றுக்கு வெள்ளிப்பாதசரம் விதிவிலக்காக இருக்கிறது.

இக்கதையில் செல்லையாவும் நல்லம்மாவும் திருவிழாவுக்குச் செல்கின்றனர். தன்னிடமிருந்த பணத்தில் வெள்ளிப்பாதசரம் வாங்கி அவளுக்குக் கொடுக்கிறான். அவள் அதிலொன்றைத் தொலைத்துவிட, அவன் கோபித்து அவளை ஏச அவள் ஊடல்கொள்ள அந்தச் சம்பவங்களை தத்ரூபமாக மிக அழகாக வர்ணனைகளும் உணர்ச்சித் துடிப்புமாக அற்புதமாகப் படைத்திருக் கிறார். இச்சிறுகதை தேர்ந்த சிறுகதைகள் என்ற தொகுதியில் இடம்பெற்று க.பொ.த உயர்தர வகுப்பு பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தது படைப்பாளியின் திறமைக்கு எடுத்துக்காட்டான கதை.

இலக்கண வரம்பு என்னும் கூட்டுக்குளிருந்து தமிழை விடுவித்து இலகுவான எளிமையான வசனநடையிலே சிறுகதை என்னும் நவீன இலக்கிய வடிவத்தை அறிமுகப்படுத்தி வெற்றிகண்ட இலங்கையர்கோன் அவர்கள் தற்காலத்திலே கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கும் புதுக்கவிதை என்னும் இலக்கிய வடிவத்திற்கு அந்தக் காலத்திலேயே ஆதரவு வழங்கியிருக்கிறார். அவர் எழுதிய "நாடோடி" என்ற சிறுகதையின் நாயகன் சோமசுந்தரன் இந்தக்க தை எழுதப்பட்ட ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரான காலத்திலேயே புதுக்கவிதை எழுதுகிறான். அதுபற்றி இலங்கையர்கோன் நாடோடி கதையில் பின்வருமாறு கூறுகிறார். "அவன் இதயத்தின் ஆழத்திலிருந்து கவி பாடுகிறான். வெறும் நூலறிவிலிருந்து பாடவில்லை. அதனால் அவனுடைய கவிதை யாப்பிலக்கணத்தின் வரம்பு களையும் தகர்த்து எறிந்துகொண்டு காட்டாற்று வெள்ளம்போல் புரண்டு சென்றது. வாயிலிருந்து வெளிவரும் வெறும் வார்த்தைகளுக்கு இலக்கண வரம்பு செய்யலாம்.

இருதயத்தின் ஆழத்திலிருந்து உற்பத்தியாகும் உணர்ச்சிக்கு இலக்கண மேது என்று குறிப்பிடும் இலங்கையர்கோன் புதுக்கவிதைக்குத் தம் ஆதரவை நாடோடி சிறுகதை மூலம் வழங்கியிருக்கிறார்.

எமது சமூகத்திலே தீர்க்க முடியாமலிருக்கும் வறுமை என்னும் கொடுமையைச் சித்தரிக்கும் கதையாக "முதற்சம்பளம்" எனும் சிறுகதை விளங்குகிறது. யாழ்ப்பாணத்துப் பேச்சுவழக்குத் தமிழ் இதில் நிறைய வருகிறது. வறுமை காரணமாக ஒரு சிறுவன் சுருட்டுச் சுற்றும் வேலைக்குப் போகிறான். அவன் முதல் மாதச் சம்பளத்தைக் கொண்டுவரும்போது தாய் இப்படிக் கூறுகிறாள். "தம்பி எங்கையடா உன்ரை உழைப்பு. முடிச்சை அவிழ் பாப்பம். ஓ இஞ்சை றம்பத்தான்". மகனுக்கு ஏதோ அடிபட்டபோது "அதெல்லாம் வளர முன்னுக்கு மாறிவிடும்" என்கிறாள். கிராமத்துப் பாஷையை இக் கதையில் நன்கு ரசிக்கலாம்.

அன்னியோன்யமான அன்புமிக்க ஒரு தம்பதிகளின் கதை "சக்கரவாகம்" வேலுப்பிள்ளை தெய்வானை தம்பதிகள் ஒருவர் மேலொருவர் உயிரையே வைத்திருக்கின்றனர். விவாகரத்து, கருத்தடை என்று பல குடும்பங்களுக்குள் அலங்கோலமான நிலை இருக்கும் காலத்தில் மனைவி தெய்வானை இறந்த போது அவள் பிரிவைத் தாங்க முடியாது தவித்து மூன்று மாதங்களுக்குள் தானும் இறக்கிறான் வேலுப்பிள்ளை. அற்புதமான உணர்ச்சிமயமான கதை.

சதிர்க்காரி என்ற கதை முன்னைய காலங்களில் கோயில் திருவிழாக்களில் சின்னமேளம் எனப்படும் சதுர்க் கச்சேரி நடைபெறுவதை வைத்து எழுதப்பட்டது. ஒரு பலவீனமாக கதைக்கருவை வைத்து திறமான கதை புனைந்திருக்கிறார் இலங்கையர்கோன்.

"தாழை மர நிழலில்" என்ற சிறுகதையில் கல்முனைப் பிரதேசத்தின் பேச்சு வழக்கு மொழியும் மண் வாசனையும் பிரதிபலிப்பதைக் காணலாம். இலங்கையர்கோன் அவர்கள் காரியாதிகாரியாக பதவி வகித்த காலத்தில் மட்டக்களப்பு, நெடுங்கேணி முதலான இடத்து மக்களுடன் பழகும் வாய்ப்புப் பெற்றவர். அவரது உத்தியோக வாழ்க்கையில் பெற்ற அனுபவங்கள்தான் அநாதை, மனிதக்குரங்கு முதலான கதைகளாக உருவாயின. 1930 களிலிருந்து 1960 வரையான காலப்பகுதியில் ஆரம்பகாலத்தில் அடிக்கடி இவருடைய சிறுகதைகள் சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் பிரசுரமாயின. ஐம்பதாம் ஆண்டுக்குப் பின்னர் இடையிடையேதான் சிறுகதைகள் எழுதினார். 1950 ஆம் ஆண்டிற்குப் பின்னர் அவர் நாடகம், மொழிபெயர்ப்புத்துறை ஆகியவற்றில் கூடிய கவனம் செலுத்தினார். மச்சாள், தந்திவந்தது, தாழைமர நிழலில் முதலிய

சிறுகதைகள் 1950ஆம் ஆண்டிற்குப் பின்னர் எழுதிய சிறுகதைகளாகும். தாம் எழுதிய சிறுகதைகளைத் தொகுத்து நூலாக வெளியிட இலங்கையர்கோன் முயற்சி செய்திருக்கிறார்.

ஆனால் அவர் உயிருடன் இருக்கும் வரை அது நிறைவேறவில்லை. இலங்கையர்கோன் மறைந்த ஓராண்டில் அவருடைய பதினைந்து சிறுகதைகள் அடங்கிய சிறுகதைத்தொகுதி நூல் வெளியீடு செய்யப்பட்டது. அவருடைய எழுத்துத்துறையின் வெற்றிகளுக்குப் பின்புலமாக நின்று சேவையாற்றிய மனைவி யாரான திருமதி செல்லம்மா சிவஞானசுந்தரம் அவர்கள் “வெள்ளிப்பாதசரம்” என்று பெயரிட்டு அச்சிறுகதைத் தொகுதியை 1962ஆம் ஆண்டு கணவருக்குச் சமர்ப்பணமாக வெளியிட்டிருக்கிறார். அத்தொகுதியில் இடம்பெற்ற சிறுகதை களாவன வெள்ளிப்பாதசரம், அனுலா, அநாதை, மனிதக்குரங்கு, தாழைமர நிழலிலே, மரியாமதலேனா, சக்கரவாகம், மேனகை, நாடோடி, தாய், மச்சாள், துறவியின் துறவு, முதற்சம்பளம், யாழ்பாடி, சிகிரியா ஆகியனவாகும். சிறுகதைத தொகுதிக்கு இந்திய சஞ்சிகையான “கலைமகள்” ஆசிரியர் கி.வா.ஜெகந்நாதன் அவர்கள் மதிப்புரை வழங்கியுள்ளார். இலங்கையர்கோனின் சிறுகதைகள் பலவற்றை மிக்க ஆர்வமுடன் கலைமகளில் பிரசுரித்த கி.வா.ஜெகந்நாதன் அவர்கள் இலங்கையர்கோனின் சக்கரவாகம் என்ற சிறுகதையில் இடம்பெற்ற மிக உன்னதமான கணவன், மனைவி உறவை ரசித்து அதிவிசேடமான கதையாக மதிப்புரையில் குறிப்பிட்டிருக்கிறார். செல்லம்மா அவர்களின் முன்னுரையும் வெள்ளிப்பாதரசம் சிறுகதைத் தொகுதியில் உள்ளது. இதன் மறுபதிப்பினை பிள்ளைகள் வெளியிட்டுள்ளார்கள்.

யாழ்பபாணத்துக் கிராமங்களின் வாழ்வியலும், மண் வாசனையும் பண்பாடு களும் துலங்க அற்புதமான உணர்ச்சித் துடிப்புள்ள ஏராளமான சிறுகதைகளைப் படைத்து இலக்கிய உலகின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்று வாசகர்களின் உள்ளங்களைக் கொள்ளைகொண்டு ஈழத்தமிழ் சிறுகதை முன்னோடி என்ற உயர் விருதினைப் பெற்று தாம் பிறந்த ஊருக்குப் பெரும் புகழினைத் தேடித் தந்துள்ளார் இலங்கையர்கோன்

**நாடக ஆக்கங்கள்**

1952ஆம் ஆண்டிலிருந்து 1960ஆம் ஆண்டு வரையான எட்டு ஆண்டுகளிலும் நாடகங்கள் எழுதுவதிலே முழுமூச்சுடன் ஈடுபட்டார் இலங்கையர்கோன். 1950 களில் இலங்கை வானொலி பெரும் வரவேற்பினைப் பெற்ற ஊடகமாக விளங்கியது. எமது பேச்சுவழக்குத் தமிழில் அமைந்த நாடகங்களைக் கேட்பதிலே மக்கள் பெரும் ஆர்வம் காட்டினர். அத்தகையதொரு ஆர்வத்தினை ஏற்படுத்தி யவர் இலங்கையர்கோன் அவர்களே.

விதானையார் வீடு லண்டன் கந்தையா, மாதவி மடந்தை, மிஸ்டர் குகதாஸன், சந்திரமதி, துறவு, மத்தலத்து மரியாள் முதலியன அவரால் எழுதப் பட்ட நாடகங்கள். இவற்றைவிட முப்பது நிமிட ஒரு மணி நேர நடிப்புக்கேற்ற நாடகங்கள் ஐம்பதுக்கு மேற்பட்ட எண்ணிக்கையில் எழுதியுள்ளார். லண்டன் கந்தையா, விதானையார் வீடு முதலான நாடகங்கள் வானொலியில் பல வாரங்களாக இடம்பெற்று பல்லாயிரக்கணக்கான வானொலி நேயர்களைக் கவர்ந்தவையாகும். விதானையார் வீடு என்ற நாடகம் வானொலியில் நூறு அங்கங்களாக நடைபெற்றது. சமூக நாடகமான அதில் எமது வாழ்வு முறைகள் விருப்பு வெறுப்புக்கள், அபிலாசைகள், கலை கலாச்சாரம் இழையோடி கேட்கக் கேட்க ஆர்வத்தைத் தூண்டும் நாடகமாக அமைந்திருந்தது. அவரது உத்தியோக வாழ்க்கையின் தொடர்பிலே உருவான இந்த நாடகம் 1955ஆம் ஆண்டில் வானொலியில் ஒலித்தது. 1957ஆம் ஆண்டு மிஸ்டர் குகதாஸன் என்ற நாடகம் வானொலியில் ஒலிபரப்பானது. கேட்கக் கேட்கச் சிரிக்க வைக்கும் நகைச்சுவை நிரம்பியிருந்தது. கதையிலே காத்திரத்தன்மை குறைவாக இருந்தாலும் சிரித்துச் சிரித்து மகிழ்வதற்காகவே இதனைப் பலரும் விரும்பினர். இலங்கையர்கோன் அவர்கள் இயல்பிலேயே நகைச்சுவையாகப் பேசுபவர். நாடகங்களிலும், நகைச் சுவையை அள்ளி வீசியிருக்கிறார்.

மிஸ்டர் குகதாஸன் நாடகம் அவர் வாழ்ந்த காலத்திலேயே நூலுருவம் பெற்றது. சமூகக் கதை கொண்ட நாடகங்களுடன் புராண, இதிகாச வரலாற்று நாடகங்களும் எழுதியுள்ளார். அரிச்சந்திர புராணம், சிலப்பதிகாரம், முதலான பழந்தமிழ் நூல்களில் இலங்கையர்கோனுக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. வரிவரி யாகக் கற்று அப்புராணங்களில் லயித்துப் போயிருந்த அவர் சந்திரமதி என்னும் நாடகத்தினையும், துறவு என்ற நாடகத்தையும் எழுதினார்.

துறவு என்ற நாடகம் சிலப்பதிகாரம் எழுதிய இளங்கோவடிகளின் துறவினை வைத்து எழுதப்பட்டது. சிலப்பதிகாரம் என்ற காப்பியத்தின் மீது அவருக்கு அத்தனை ஈர்ப்பு இருந்தது. அந்நூல் பற்றி எல்லாரும் அறியவேண்டும். பட்டி தொட்டியெல்லாம் அது பரவ வேண்டும் என்ற நோக்கத்திலே அந்நூலின் அடிப்படையில் நாடகங்கள் எழுதினார். மாதவி மடந்தை என்ற நாடகம் அவ்வாறு உருவானதுதான். இக்கதையினை மேடை நாடகமாக அமைத்து 1958ஆம் ஆண்டு நூலாக வெளியிட்டார். எட்டுக் காட்சிகள் கொண்டதாக அந்நாடகம் எழுதப் பட்டுள்ளது. “மாதவி மடந்தை” நாடக நூலுக்கு இலங்கையர்கோன் அவர்கள் எழுதிய முன்னுரையில் தமிழ் எழுத்துத்துறையில் தம்மை ஈடுபத்தியவர் ஈழகேசரி பொன்னையா அவர்களென்றும் அவரது திருமகள் அழுத்தகத்திலேயே இந்நூல் அச்சிடப்பட்டதாகவும் அவருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் குறிப்பிடுகிறார்.

மேலும் இந்நாடகத்தை தம் மனைவியார் செல்லம்மா அவர்கள் அழகாகப் பிரதி செய்து தந்ததற்காக அவருக்கும் நன்றி கூறுவதாகக் குறிப்பிடுகிறார். இந் நூலுக்கு சு.நடேசபிள்ளை அவர்கள் அணிந்துரை வழங்கியிருக்கிறார். "நாடகாசிரியரின் உரைநடை தெள்ளிய நீரோடை போலிருக்கிறது" இவ்வாறு நடேசபிள்ளை அவர்கள் எழுதியிருக்கிறார். புத்தகத்தின் முதல் பக்கத்தில் 01.03.58 என்று திகதியிடப்பட்டதுடன் புத்தகத்தின் விலை ரூ 4.50 என்றும் எழுதப் பட்டிருக்கிறது.

இலங்கையர்கோன் அவர்கள் தாம் முதன்முதலாக எழுதிய சிறுகதையான மரியா மதலேனாவை தமது பிற்காலத்தில் "மத்தலத்து மரியாள்" என்ற பெயரில் நாடகமாக அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். அதுதான் அவரது கடைசி நாடகமாயிருந்தது. வாழ்க்கையே ஒரு நாடகம் தான் உலகமென்னும் நாடக மேடையில் வாழ்க்கை என்னும் நாடகத்தை நடிக்க வந்த நடிகர்களே மனிதர்கள். இலங்கையர்கோனின் இறுதிக்கட்ட வாழ்க்கையும் மத்தலத்து மரியாள் என்ற நாடகத்தை எழுதிய விநோத நாடகமாகவே அமைந்துவிட்டது. அதனை உருவாக்கிய விதமே ஒரு நாடகம் தான்.

அவ்வேளையில் இலங்கையர்கோன் மட்டக்களப்பில் உத்தியோகத்தில் இருந்தார். அங்கே அவருடைய எழுத்து ஆக்கங்களை அவர் சொல்லச் சொல்லத் துளசிகாமணி என்பவரே எழுதுவார். மத்தலத்து மரியாள் என்ற நாடகத்தையும் இலங்கையர்கோன் சொல்ல துளசிகாமணி எழுதிக்கொண்டிருந்தார். நான்கு காட்சிகள் சொல்லி முடித்த பின் திடீரென்று காரிலேறிப் போனார். அரைமணி நேரத்தில் கார் விபத்துக்காளானது. மழையும் பெய்து கொண்டிருந்தது. காருக்குள் இலங்கையர்கோன் குப்புறக் கிடந்தார். துளசிகாமணி அவரை வேறு காருக்குள் ஏற்றினார். அவரோ எதுவுமே நடக்காதமாதிரி "கையிலே என்ன நாடகப் பிரதியா நாலாங்காட்சி முடிஞ்சுது அஞ்சாம் காட்சி எழுது" என்று அந்தக் காருக் குள்ளேயே நாடக வசனங்களைச் சொல்ல ஆரம்பித்தார். அந்நிலையிலும் ஒழுங்குமுறை மாறாமல் சொல்லச் சொல்ல எழுதி முடித்த துளசிகாமணி நாடகத்தைத் திரும்ப வாசித்துப் பார்த்தபோதுதான் இப்படியான ஒரு சூழ்நிலை யிலும் தொடர்புகெடாமல் சொல்லியிருக்கிறாரே என்று ஆச்சரியப்பட்டார்.

இலங்கையர்கோன் அவர்களுக்கு மேடை நாடகங்களின் மீதிருந்த ஆர்வம் காரணமாக "வசந்தகான சபை" என்ற பெயரிலிருந்த நாடக சபைக்கு ஊக்கமும் உதவியும் அளித்தார். சங்கரதாஸ் சுவமிகளால் எழுதப்பட்ட மயான காண்டத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கையர்கோன் எழுதிய அரிச்சந்திர புராண மயான காண்டம், நாடகம் இலங்கையின் பல இடங்களிலும் ஆயிரம் தடவைக்கு மேலாக மேடையேறி உள்ளது.

மயான காண்டம் நாடகத்தில் நாடக பாத்திரங்களின் உணர்ச்சிகரமான நடிப்பையும், இலங்கையர்கோனின் உணர்ச்சி மயமான வசனங்களையும் கண்டும் கேட்டும் ரசிகப் பெருமக்கள் உணர்ச்சிவசப்பட்டதை என்றுமே மறக்க முடியாது. 2011ஆம் ஆண்டு ஏழாலையில் நடந்த ஒரு கவிதை நூல் வெளியீட்டிலே கலந்து கொண்டு வெளியீட்டுரை நிகழ்த்த வந்த வானொலி நடிகையும் அறிவிப்பாளருமான இராஜேஸ்வரி சண்முகம் அவர்கள் இலங்கையர்கோன் எழுதிய தொடர் நாடகங்களில் தான் நடித்ததை ஐம்பது வருடங்களுக்குப் பிறகு நினைவுகூர்ந்து கூறியதோடு இலங்கையர்கோன் பிறந்த ஏழாலைக்கு தாம் வந்ததையிட்டு பெருமைப்படுவதாகவும் கூறினார். இத்தகைய நாடக ஆக்கங்களால் அவர் பெற்ற புகழ், பெருமையெல்லாம் அவர் பிறந்த ஊரான ஏழாலைக்குக் கிடைத்த புகழாகும்.

## மொழிபெயர்ப்பு ஆக்கங்கள்

கடந்த நூற்றாண்டுகளில் எமது நாட்டை ஆக்கிரமித்து ஆட்சிபுரிந்த மேலை நாட்டவர்கள் இங்கு தம் மொழி, மத, கலாச்சாரங்களைக் கொண்டு வந்து பரப்பியதுடன் தமது இலக்கியங்களையும் இறக்குமதி செய்தனர். இலங்கையர்கோனைப் போன்ற இலக்கிய தாகம் கொண்டவர்கள் அவற்றிலே ஆர்வம் கொண்டு மேலைத்தேச இலக்கிய நூல்களைப் படித்தனர். அவர்களுடைய உத்திமுறைகளைப் பிரயோகித்து தமிழில் புதிய இலக்கிய ஆக்கங்களைப் படைத்த இலங்கையர்கோன் அவர்களுக்கு “பிறநாட்டு நல்லறிஞர் சாஸ்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்” என்ற சுப்பிரமணிய பாரதியாரின் வேண்டுகோளை நிறைவேற்றும் விருப்பம் ஏற்பட்டது. அவருடைய ஆங்கிலமொழிப் புலமை பன்மொழியாளுமை என்பனவும் மொழிபெயர்ப்புத் துறையில் ஈடுபட அவருக்குத் தூண்டுகோலாய் இருந்தது. தமது மைத்துனரும் சக எழுத்தாளருமான சி.வைத்திலிங்கம் அவர்களுடன் கொழும்பில் ஒன்றாய்த் தங்கியிருந்து ஒருவருக்கொருவர் ஆலோசனைகளும் பரிமாறிக் கொண்டனர். இப்படியான ஒரு சூழ்நிலையில் தாம் படித்துச் சுவைத்த மேலைத்தேச இலக்கியங்களில் சிலவற்றை மொழிபெயர்ப்புச் செய்தார் இலங்கையர்கோன். 1935ஆம் ஆண்டிலிருந்து 1952ஆம் ஆண்டு வரையான பதினேழு வருட காலத்திலேயே மொழிபெயர்ப்புகள் நிகழ்ந்தன.

இவருடைய மொழிபெயர்ப்பு ஆக்கங்களிலே கிளாறாமிலிச், குயிலும் றோஜாவும், ஈனோக் அர்டன், வெறும் கனவுதான், அந்த முத்தம், கூத்து, நீலக் கண்கள், விடியாத இரவு, முதற் காதல் என்பன குறிப்பிடத்தக்கவை. பெரும்பாலும் அவரது மொழிபெயர்ப்புகள் ஈழகேசரி பத்திரிகையிலே தொடராகப் பிரசுரமாகியுள்ளன. முதற்காதல் என்ற ரஷ்ய நாட்டுக் கதையின் மொழிபெயர்ப்பு அலயன்ஸ் கொம்பனியால் 1942ல் நூலாக வெளியிடப்பட்டுள்ளது.


கிளாறாமிலிச் என்பது ரஷ்ய நாட்டுக் கதையாகும். இலங்கையர்கோன் அவர்களுடைய இந்த மொழிபெயர்ப்பு 1940 ஆம் ஆண்டு ஈழகேசரியில் பதினான்கு வாரங்கள் தொடராகப் பிரசுரமானது.

வைலட் எழுதிய குயிலும் றோஜாவும் என்ற மொழிபெயர்ப்பு ஆக்கமும் சிவப்பு றோஜா பற்றிய சிறந்த ரசனைக்குரிய கதையாகும்.

இலங்கையர்கோன் மொழிபெயர்த்த "ஈனோக் அர்டன்" அல்பிறட் லார்ட் றெனிஷன் எழுதிய நூலாகும். இது 1939ஆம் ஆண்டு ஈழகேசரி பத்திரிகையில் ஆறு வாரங்கள் தொடராக வெளிவந்தது. இலங்கையர்கோன் அவர்கள் மொழிபெயர்ப்பு செய்யும்போது பொருத்தமான வார்த்தைகளைப் பயன்படுத்தி ரசிக்கும் படியாக எழுதுவார். இக்கதையில் செல்வச் செழிப்பைக் குறிப்பதற்கு "உண்மையாக அந்த வீட்டில் திருமகள் நர்த்தனம் செய்தாள் என்றுதான் கூற வேண்டும்" என்று அழகாக எழுதியுள்ளார்.

விடியாத இரவு என்ற மொழிபெயர்ப்பு ஆக்கத்தில் அவரது வசனம் இது "ஜூலியட் மற்றப் பெண்களோடு சேர்ந்து ஆடுவது ஒரு மணிப்புறா காகங்களோடு உறவாடித் திரிவது போலிருக்கிறது" இந்த வசனம் இடம்பெறும் "விடியாத இரவு" ஷேக்ஸ்பியர் எழுதிய ரோமியோவும் ஜூலியட்டும் என்ற நாடகத்தின் மொழி பெயர்ப்பாகும். முதலில் இதனைச் சிறுகதையாக எழுதி இரண்டு வாரங்கள் வெளியிட்டார். பின்னர் நாடகமாகவே அமைத்து பத்தொன்பது வாரங்கள் நாடகத் தொடராக இம் மொழிபெயர்ப்பினைப் பிரசுரித்தார். மேலும் தொமஸ்ஷார்டியின் வெறும் கனவுதான்; பிரேஞ்சு புரட்சியின் தந்தை வோல்ட்டயர் எழுதிய "கூத்து" "நீலக்கண்கள்" ஆகியனவும் இலங்கையர்கோன் அவர்களால் மொழிபெயர்க்கப் பட்டவை.

ஒரு மொழிக்கு வளத்தையும், பெருமையையும் கொடுப்பன அம்மொழியி லுள்ள இலக்கியங்களே. தமிழ்மொழி புராணங்கள், ஐம்பெருங் காப்பியங்கள் என்று சிறந்த இலக்கியங்களை தனக்கு அழகு செய்யும் அணிகலன்களாகக் கொண்டுள்ளது. கால ஓட்டத்திலே இலக்கியங்களும் நவீனமயப்பட்டு மாற்றங்களுக்குள்ளாகி பரிணாமம் பெறுவது இயல்பாகும். அவ்வகையில் நவீன யுகத்தின் மக்களுக்கேற்ற வகையில் சிறுகதை என்னும் நவீன இலக்கியத்தின் படைப்பாளியாகி அதன் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவராகி ஈழத்தமிழ் சிறுகதை முன்னோடி என்று புகழ்பெற்று, நாடகம், மொழிபெயர்ப்பு என்று பல துறைப் படைப்புகள் உருவாக்கி ஆக்க இலக்கியகர்த்தா என்று அழியாப்புகழ் பெற்ற இலங்கையர்கோன் என்னும் புனைபெயர் கொண்ட ந.சிவஞானசுந்தரம் அவர்கள் எமது ஊர் பெற்றெடுத்த இலக்கியமாமணியாவார்.



இலக்கிய கலாநிதி பண்டிதர்
மு. கந்தையா அவர்கள்

1900ஆம் ஆண்டுகளில் ஏழாலையின் மேற்குப் பகுதியிலே சடைவரத சுவாமிகள், பொன்னம்மாசாமி, அருளானந்தசிவம் சுவாமிகள் முதலான ஆன்மீக ஞானிகள் வருகைதந்தும் வாழ்ந்தும் இருக்கிறார்கள். சித்தர்கள் சிவனடியார்களின் சமூகத்தினால் ஆன்மீகஞானம் வீறுபெற்றிருந்த அந்தக் காலகட்டத்திலே அந்தச் சூழலிலேதான் கார்த்திகேயர் ஆறுமுகம் என்ற பெயர் கொண்ட மெய்ஞ்ஞானி ஒருவரும் வாழ்ந்து கொண்டிருந்தார். 1850க்கும் 1925க்கும் இடைப்பட்ட காலமே அவருடைய காலமாகும். முகத்திலே சாந்தம் தவழும். நெற்றியிலே நீறு துலங்கும். கட்டும் வேட்டியோ முழங்கால் வரைதான் இருக்கும். தியானம் இருப்பதிலே பெரும் பொழுது கழியும். தியானத்தினிடையே எதையோ கண்டு சிரிப்பு மலரும். இத்தன்மையராக வாழ்ந்து கொண்டிருந்த அவரை எல்லோரும் பூசாரி என்றே அழைப்பார்கள்.

தாமாகவே பாகம் செய்து ஒருவேளை உண்பார். தமக்கென்று எதுவும் வேண்டாமென்ற முடிவில் தமது முதுசமாயிருந்த இரு காணிகளையும் கோயிலுக்கும், வசதியற்றவர்களுக்கும் நன்கொடையாய் வழங்கி விட்டு சிவத்தியானமே தம் வாழ்வின் இலட்சியமென்று வாழ்ந்தார். பிடியரிசி சேர்த்தல் போன்ற இலகுவான வழிகளிலே ஊர்க்கோயில்களுக்கு கற்பூரம், எண்ணெய் போன்றவற்றை உபகரித்து எளிமையான தெய்வீகத் தியானநிலையிலமைந்த பக்திநெறி வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்த பூசாரியார் தமது ஐம்பது வயதிற்குப் பின்னர் சுன்னாகத்தில் வாழ்ந்த செல்லாச்சி அம்மையார் என்னும் ஞானியின் சகவாசத்தைப் பெற்று அந்த அம்மையாரின் ஆன்மீகச் செயல்களுக்குப் பேருதவியாக இருந்து, பின்னர் மீண்டும் ஏழாலைக்குத் திரும்பவும் வந்து 1925ஆம் ஆண்டு இங்கேயே சிவபதப் பேறெய்தினார்.

சுயலாபம் என்பது துளியும் கருதாமல் ஆத்மலாபம் ஒன்றையே இலட்சியமாகக் கொண்டு தெய்வீக நெறியில் வாழ்ந்த அருளாளர்களின் கடைக்கண் நோக்கும், அருட்பார்வையும், அரவணைப்பும் ஒருவருக்குக் கிடைத்துவிட்டால் அவர் செயற்கரும் சாதனைகள் செய்து சிறப்புகள் பலபெற்று தாமும் பெருமையடைந்து தாம் பிறந்த ஊருக்கும் பெருமையும், புகழும் பெற்றுத் தருவார் என்பது கண்கூடாகக் காணப்பட்ட விஷயமாகும். அத்தகையதொரு சிவஞானசெல்வராக வாழ்ந்த பூசாரிக் கிழவனாரின் அருட்கடாட்சமும் அரவணைப்பும் பெற்று, அத்திருவருட் பேற்றியால் நுண்ணிய அறிவும், தாமாகவே எதையும் உய்த்துணரும் ஞானமும் பெற்று விளங்கியவர்தான் பண்டிதர் மு.கந்தையா அவர்கள்.

கந்தையா அவர்கள் பூசாரி என்று அழைக்கப்பட்ட கார்த்திகேயர் ஆறுமுகம் என்ற சிவஞானயோகியின் பேரன் முறையினர் ஆவார். எட்டு வயது வரையும் பூசாரி கிழவனாரின் அருட்பிரவாகத்தில் திளைத்து ஆசியும், அருளும் நிரம்பப் பெற்றவர். தம் தாயாரின் சிறிய தந்தையார் என்ற உறவின் உரிமையிலே பூசாரிக்கிழவனாரின் அருட்கடாட்சம் பெற்ற கந்தையா தம் குடும்பத்தின் கடைக்குட்டிப் பிள்ளையாகப் பிறந்தார்.

ஆலயங்களும், அறிஞர்களும், பக்திமான்களும் குறைவின்றி விளங்கும் வனப்புமிகு ஏழாலையின் மேற்குப் பகுதியிலே முத்தர் அன்னப்பிள்ளை தம்பதியினர் ஆசாரசீலர்களாய் தெய்வபக்தி மிக்கவர்களாய், வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு மீனாட்சி, காமாட்சி, விசாலாட்சி என்ற மூன்று பெண் மக்களும் ஆறுப்பிள்ளை, கந்தையா ஆகிய இரண்டு புத்திரர்களும் பிறந்தனர். இளையவரான கந்தையா 1917ஆம் ஆண்டு யூன் மாதம் 19ஆம் திகதி பிறந்தார். மூத்த சகோதரர்களுக்கு செல்லப்பிள்ளையாக வளர்ந்தார்.

**கல்வியும் கடமையும்**

இவருடைய கல்வியின் ஆரம்பத்தை பொறுத்தவரை இவர் ஓர் அதிஷ்டசாலி என்றே சொல்ல வேண்டும். இவருக்கு இரண்டு வயதாக இருக்கும்போது சாதுசங்கமடத்துச் சூழலில் தமிழ் மணமும் சைவ மணமும் கமழ சைவசன்மார்க்க வித்தியாசாலை ஸ்தாபிக்கப்பட்டது. இவருக்கு வித்தியாரம்பம் செய்து கல்வி பயிலும் பருவம் வந்தபோது பக்கத்திலேயே பாடசாலை தயாராக இருந்தது. படிப்பதற்கு சைவப் பாடசாலை தயாராக இருந்தது இவருடைய அதிஷ்ட மென்றால் இத்தகைய பேறறவு படைத்த ஒருவரை தன் ஆரம்பகால மாணவனாகப் பெற்றது அப்பாடசாலையின் அதிஷ்டமென்றும் சொல்லலாம். கந்தையா அவர்கள் இப்பாடசாலையின் முதன்மை மாணவராகத் திகழ்ந்தார். அக்காலத்தி லிருந்த உயர்வகுப்பாகிய V.S.L.C என்னும் வகுப்பு வரை அப்பாடசாலையில் கற்று பரீட்சையிலே அதிசிறப்பான சித்தி பெற்றார். அதன்பின்னர், மேற்படிப்புக்காக வேறு பாடசாலைகளுக்குப் போவதில் பல சிரமங்கள் இருந்ததால் சுயமாகவே தம் முயற்சியால் கற்று சிரேஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தார். பின்னர் வித்துவான் சிவஸ்ரீ கணேசையரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார்.

அந்நாட்களில் பொன்னம்மாசாமி, சடைவரதர் ஆகியோரால் சாது சங்க மடத்தில் ஏற்றி வைக்கப்பட்ட சித்தாந்த தீபம், அருளானந்தசிவம், ஞானப்பிரகாசம் ஆகிய சித்தாந்தப் பேரறிஞர்களின் பணிகளால் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அத்தீப ஒளியில் திளைப்பதற்கு கந்தையா அவர்களும் இணைந்து கொண்டார். அருளானந்தசிவம் அவர்களுடனான சேர்க்கை கந்தையா அவர்களையும் சித்தாந்த சாகரமாக ஆக்கியது.

*1938ஆம் ஆண்டு ஆசிரிய நியமனம் பெற்று தாம் கற்ற பாடசாலையான ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாசாலையிலேயே பணிபுரிய ஆரம்பித்தார். மாணவர்களுக்குக் கற்பித்ததுடன் தமது கற்றலையும் முக்கிய பணியாகத் தொடர்ந்தார். இயல்பாகவே அவரிடம் பிரகாசித்துக் கொண்டிருந்த நுண்ணறிவினால் தாமாகவே ஆங்கிலமொழி, வடமொழி ஆகியவற்றிலே ஆற்றலை வளர்த்து பன்மொழிப் புலமை பெற்றார். தமிழ் டிப்ளோமா சான்றிதழ் பரீட்சையிலும் சித்திபெற்றார். 1943ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டித பரீட்சைக்குத் தோற்றித் தேர்ச்சிபெற்று பண்டிதரானார்.*

*1952ஆம் ஆண்டு நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியில் பணிபுரிய ஆரம்பித்தார். அங்கேயிருந்த வேளையில் அவருக்குப் பேராதனைப் பல்கலைக் கழகத்துடனான தொடர்பு ஏற்பட்டது. அதனைப் பயன்படுத்தி பட்டப்படிப்புக்கான இடைநிலைத் தேர்வில் அமர்ந்து சித்தியடைந்தார். தான் எங்கெங்கே கற்பித்தல் பணிபுரியச் சென்றாரோ அங்கங்கே தாம் கற்கும் வாய்ப்பினையும் ஏற்படுத்திக் கொள்வார். நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியில் தொடர்ந்து கற்பித்துக் கொண்டிருந்தால் பல்கலைக்கழகத்தில் தாம் கற்க வேண்டியதெல்லாம் கற்கலாம். பெறவேண்டிய பட்டங்களெல்லாம் பெறலாம் என்ற நம்பிக்கையோடு அவர் அங்கே நிலைகொள்ள விரும்பினார். ஆனால் 1958ஆம் ஆண்டு இடம்பெற்ற கலவரங்களால் அவர் இடமாற்றம் பெற்று வரவேண்டியதாயிற்று. 1959ஆம் ஆண்டு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் ஆசிரியப்பணி புரிய ஆரம்பித்தார். இங்கும் அவர் தம் கற்கைநெறியிலிருந்து விலகவில்லை. கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு ஆதலால் வாழ்நாள் முழுவதும் கற்க வேண்டும் என்று எண்ணினார் போலும்.*

*மானிப்பாய் இந்துக் கல்லூயில் படிப்பித்துக் கொண்டிருக்கும் போதுதான் சமஸ்கிருதத்தைச் சிறப்புப் பாடமாகக் கொண்டு இலண்டன் B.A பரீட்சைக்குத் தோற்றி B.A பட்டம் பெற்றார். நூல்நிலையங்களே அவருக்கு நல்ல ஆசான்களான விளங்கின. நூல்நிலையங்களிலே போய் தம் சுயபுத்தியால் ஆய்வுசெய்து கற்று ஒவ்வொரு பரீட்சையிலும் சித்தியடைந்தார். மும்மொழிப் புலமையாளராக, பண்டிதராக, கலைமாணியாக, மரபுவழிக் கவிஞராக, கட்டுரையாளராக நூலாசிரியராக, போதனாசிரியராக, புராணீகராக, பேச்சாளராக, உரையாசிரியராக, ஆய்வாளராக மேலும் பற்பல பரிணாமங்களில் தம்மை இனங்காட்டி அறிவின் சிகரமாய் அறிவுக் கடலாய் விளங்கினார் இலக்கிய கலாநிதி கந்தையா அவர்கள்.*

*1945ஆம் ஆண்டு ஏழாலையைச் சேர்ந்த சீனிவாசகம் தையல்நாயகி தம்பதியரின் அருந்தவப் புதல்வியான ஞானலட்சுமி அவர்களை திருமணம் செய்து இல்லற வாழ்க்கையில் புகுந்த பண்டிதரையா அவர்கள் இரண்டு பெண் பிள்ளைகளுக்குத் தந்தையாகி இனிதே வாழ்ந்தார். சுசீலாதேவி, சத்தியபாமா*

என்று பிள்ளைகளுக்கு அழகான பெயர்களைச் சுட்டியது போலவே புதிதாக ஓர் இல்லம் அமைத்து "சக்தி முற்றம்" என்று பெயர் சூட்டினார்.

தெய்வத்தின் சந்நிதியில் வாழ்வது போலவே தனது சக்திமுற்றத்திலும் ஆசார அனுட்டானங்களுடன் வாழ்ந்தார். சிவநெறியும் சைவப் பண்பாட்டு முறைகளும் கொண்டதாகவே அவரது வாழ்க்கை அமைந்திருந்தது. வேட்டி, சால்வையும் சிவ சின்னப் பொலிவுமாகவே எந்நேரமும் காட்சி தருவார்.

**எழுத்து மூலம் அவர் ஆற்றிய சமய இலக்கியப் பணிகள்**

பண்டிதர் கந்தையா அவர்களின் வாழ்க்கையின் பெரும்பகுதி எழுதுவதி லேயே கழிந்துள்ளது. அந்த எழுத்துப் பணிக்கிடையேதான் அவருடைய குடும்பப் பொறுப்புக்கள், ஆசிரியப்பணி, பொதுச் சேவை, கடவுள் வழிபாடு இத்தனையும் நிறைவேற்றப்பட்டன. எழுத்திலே தமக்கென்று ஒரு பாணியை அமைத்துக் கொண்டார். எங்காவது இவருடைய கட்ரையைப் பார்த்தால் பெயரைப் பார்க்காமலே இவரால்தான் எழுதப்பட்டது என்று சொல்லிவிடலாம். இலக்கண சுத்தமாக அமைந்திருக்கும் அலங்காரமான வார்த்தைப் பிரயோகங்கள் ரசிக்க வைக்கும். நின்று நிதானித்துச் செல்லும் வசனநடை சிந்தனைக் கருவூலமாக இருக்கும். சொல்லும் விஷயம் மிகத் துல்லியமாகப் புரிய வைக்கப்பட்டிருக்கும். இத்தகைய ஒரு பாங்கிலே எழுதி எழுதிக் குவித்தார். தாம் கற்றுக் கற்றுப் பெற்றதை யெல்லாம் எழுத்துக்களாகப் பிறருக்கு ஈயும் எழுத்துலக வள்ளலாக விளங்கினார்.

ஆரம்பகாலத்தில் இவர் "பழையபாணி" என்ற புனைபெயரில் இந்துசாதனம் என்ற பத்திரிகையில் நாவலர் பிள்ளைத்தமிழ் என்ற தலைப்பில் வாரந்தோறும் பாடல்களை எழுதி வந்தார். அவர் தமக்குச் சூட்டிக் கொண்ட பழையபாணி என்ற புனைபெயரை நோக்குமிடத்து அவரது நோக்கத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது. நவீனமயமான இலக்கிய வடிவங்கள் தோன்றினாலும் தாம், சங்கம்மருவிய காலத்துப் புலவர்களைப் போல மரபுநெறி பிறழாத பழைய பாணியிலேயே எழுத வேண்டும் என்ற நோக்கமே அவரிடம் இருந்தது. பாடலாயினும் வசன நடை யாயினும் அவர் பழைய பாணியிலேயே எழுதி வந்தார்.

அச்சுவாகனமேறிய இவருடைய முதலாவது நூல் குழந்தைவேற் சுவாமி களும் குருபரம்பரையும் என்பதாகும். இது ஓர் வரலாற்று நூல். சுவாமிகளுடைய வாழ்வு முறையை எடுத்துக் கூறுவதோடு சீவன்முத்தர்களைப் பற்றிய கட்டுரை களும் இடம்பெற்றுள்ளன. கீரிமலை குழந்தைவேற்சுவாமிகள் சமாதிப் பரிபாலன சபையினர் **1965** ஆம் ஆண்டு இதனை வெளியிட்டுள்ளனர். பண்டிதரையாவின் முதலாவது நூல் வெளியீடு இதுவாகும். இதனைத் தொடர்ந்து பல நூல் வெளியீடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்றன.

1967 ஆம் ஆண்டு இவருடைய இரண்டு நூல்கள் வெளியிடப்பட்டன. மாவைக் கந்தன் மீது பாடப்பட்ட மாவைப் பிள்ளைத்தமிழ் எனும் பிரபந்தத்தினை மாவிட்டபுரம் முத்தமிழ் கலைமன்றம் வெளியீடு செய்தது. இதே ஆண்டில் சேக்கிழார் நாயனார் புராணம் ஆறுமுகத்தம்பிரான் உரைவிளக்கம் என்னும் நூல் யாழ்ப்பாணம் தமிழ்நூற் பதிப்புக் கழகத்தால் வெளியீடு செய்யப்பட்டது.

1976 ஆம் ஆண்டு இணுவில் கிழக்கு பொ.கனகலிங்கம் நினைவு வெளியீடாக வந்தது. கந்தையா அவர்களின் "தேர் மகத்துவம்" எனும் நூல்.

இந்து சாதனத்தில் பழையபாணி என்ற புனைபெயரில் இவர் எழுதி வந்த நாவலர் பிள்ளைத்தமிழ் காரைநகர் தமிழ்ச்சங்கத்தால் நூலாகத் தொகுத்து வெளியீடு செய்யப்பட்டது.

கோயில்களில் நடைபெற வேண்டிய நித்திய, நைமித்திய கிரியைகள், வீட்டில் நடைபெறும் பூர்வ அபரக் கிரியைகள் இவை பற்றிய விபரங்களை விளக்கமாகக் கூறுவது "சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள்" என்னும் நூல். இதனை மானிப்பாய் இந்து சமய விருத்திச் சங்கம் 1978 ஆம் ஆண்டு வெளியீடு செய்தது. இதே ஆண்டில் இன்னொரு முக்கியமான நூலும் வெளிவந்தது.

ஏழாலைக் கிராமம் சித்தாந்தத்தின் விளைநிலமாக விளங்குவது. இங்கே ஸ்தாபிக்கப்பட்ட சாதுசங்கமடம் ஆரம்பத்தில் வேதாந்த பீடமாகச் செயற்பட்டாலும் பொன்னம்மாசாமியின் வருகையின் பின் சித்தாந்த பீடமாகவே முற்று முழுதாக மாற்றம் பெற்றது. அதன் ஸ்தாபகர் ஐ.பொன்னையா (அருளானந்தசிவம்) அவர்கள் வடமொழியும் உபநிடதங்களும் கற்று சித்தாந்தப் பேரறிஞராகவே விளங்கினார். அவருடைய சீடராக விளங்கிய ஞானப்பிரகாசம் அவர்களும் பேச்சு, எழுத்து, கற்பித்தல் மூலமாக அரும்பெரும் சித்தாந்தப் பணிகள் செய்து சித்தாந்த வித்தகர் என்று பட்டமும் பெற்றார். அவரைத் தொடர்ந்து இதே சித்தாந்தச் சூழலில் பிறந்து வளர்ந்த பண்டிதர் கந்தையா அவர்களும் சித்தாந்தப் பணிகளை முன்னெடுத்து அரும்பெரும் ஆக்கங்களைப் படைத்தார். அவரது சித்தாந்தப் பணியின் உச்சக்கட்டமாக "சித்தாந்தச் செழும்புதையல்" என்னும் சித்தாந்த நூல் உருவானது.

சித்தாந்தத் துறைக்கு அரிய பொக்கிசமாகக் கிடைத்த சித்தாந்தச் செழும் புதையல் என்ற நூலானது சதசத்து, ஆணவ விசாரணை, மாயா விவகாரம், திரோதான மான்மியம், ஊழ்ப்பிரச்சனை என்னும் ஐந்து விடயங்களைக் கொண்ட சிந்தனைக் கருவூலமாக விளங்குகிறது. இந்நூல் 1978 ஆம் ஆண்டு ஈழத்துச் சித்தாந்த சைவவித்தியா பீடத்தால் வெளியிடப்பட்டு இந்துசமய காலாசார அமைச்சின் பரிசு பெற்றது.

ஏழாலை மேற்கிலே நீண்டகால வரலாற்றினைக் கொண்ட சைவசமய அபிவிருத்திச் சங்கமானது சிறிதுகால இடைவெளிக்குப் பின் 1980களில் மீண்டும் செயற்படத் தொடங்கிய பின்னர் பண்டிதர் அவர்களின் இரண்டு நூல்களை வெளியீடு செய்தது. அவையாவன "சிவாலய பூசையில் தமிழ்வேதம்", "சிவாலய சேவை ஏன் எப்படி" என்பவையாகும்.

"எமது ஆலயங்களில் பூசையின் போது சமஸ்கிருத மந்திரங்களுக்குப் பதிலாக தமிழ் வேதமாகிய திருமுறைகளை ஓதலாம்" என்ற விஷயத்தை அடிப்படையாகக் கொண்டது சிவாலய பூசையில் தமிழ்வேதம் என்ற நூல்.

"ஆலயமென்றால் என்ன. ஆலயத்தில் ஏன் வழிபட வேண்டும். எப்படி வழிபட வேண்டும்" என்பவற்றை விளக்கிக் கூறுவது சிவாலய சேவை ஏன் எப்படி. இவ்விரு நூல்களும் சைவசமயிகளுக்கு அவசியமான நூல்களாகும்.

சிவனடியார்களின் சரித்திரத்தினைக் கூறும் திருத்தொண்டர் புராணத்தின் மீது பண்டிதர் கந்தையா அவர்களுக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. படித்துப் படித்து மனப்பாடம் செய்து வைத்திருக்கும் அந்நூலில் அரியனவாகவும் பெரியனவாகவும் தாம் கண்டவற்றைக் கட்டுரைகளாக்கி "அரியவும் பெரியவும்" என்று தலைப்பிட்டு மூன்று தொகுதிகளாக்கியுள்ளார். முதலிரு தொகுதிகளும் இரு நூல்களாகத் தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் தேவஸ்தானத்தில் வெளியீடு செய்யப் பட்டுள்ளது. அரியவும், பெரியவும் முதலாம் பாகம் 1984 ஆம் ஆண்டிலும் அரியவும் பெரியவும் இரண்டாம் பாகம் 1986 ஆம் ஆண்டிலும் வெளியிடப்பட்டது. மூன்றாம் பாகம் அச்சிடப்படாமல் கையெழுத்துப் பிரதியாகவே உள்ளது.

அபரக் கிரியைகள் யாவுமே ஏதோ ஓர் அர்த்தத்தோடு காரணகாரியங் களோடுதான் நிகழ்த்தப்படுகின்றன. அவைபற்றிய விளக்கங்களைக் கூறுவதாய மைந்த நூல் "அபரக்கிரியை விளக்கம்" ஆகும். இந்நூல் இணுவில் கிழக்கைச் சேர்ந்த தங்கச்சியம்மா நினைவாக 1985ல் வெளியீடானது.

இவருடைய "சைவ சித்தாந்தத்தில் மாயை" என்ற நூல் இரண்டாம் அனைத்துலக சைவ சித்தாந்தக் கருத்தரங்கின் போது மலேசியா வெளியீடாக 1986 ஆம் ஆண்டு வெளியீடு செய்யப்பட்டது.

மனிதர்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் தம் முன்னோரின் பிதிர்க் கருமங்களைச் சிரத்தையோடு செய்யக் கடமைப்பட்டவர்கள். அவ்வாறு பிதிர்க் கருமங்களைச் செய்யும்போது அதன் கருத்தினை உணர்ந்து பயன்களை அறிந்து ஆன்மாவின் உய்வினைப் புரிந்துகொண்டு செய்தல் விசேட பலனளிக்கும்.

அதனைத் தெரிந்து கொள்ளும் விளக்க நூலாக அமைந்தது "மரணத்தின் பின் அல்லது போகுமாறெங்ஙனே வருமாறேதோ" இந்நூலும் இணுவில் கிழக்கைச் சேர்ந்த தங்கச்சியம்மா நினைவு வெளியீடாக 1986ஆம் ஆண்டு வெளியீடு செய்யப்பட்டது.

வைரவப் பெருமானுடைய தோற்றம் பற்றிய விளக்கங்கள் வைரவரை வழிபாடு செய்யும் முறை என்பவற்றை விரிவாகக் கூறும் நூலான "வைரவ வழிபாடு" மயிலங்கூடல் ஆறுமுகம் நினைவு வெளியீடாக 1987ல் வெளிவந்தது.

"திருக்கேதீஸ்வர மான்மியம்" என்னும் நூல் திருக்கேதீஸ்வர நாதரை நூலின் நாயகராகக் கொண்டு புராண வடிவிலமைந்திருக்கும் நூல். கேதீஸ்வர தலத்துடனான பல வரலாறுகளை உள்ளடக்கியது. பல காண்டங்களாகப் பிரித்து எழுதப்பட்டுள்ளது. புராதன காண்டம் எனப்படும் முதலாவது காண்டமும் பொற்பொளிர் காண்டம் எனப்படும் இரண்டாவது காண்டமும் பண்டிதர் அவர்கள் வாழும் காலத்திலேயே வெளியீடு செய்யப்பட்டன. திருக்கேதீஸ்வர திருப்பணிச் சபையினர் முதலாவது காண்டத்தை 1989 ஆம் ஆண்டிலும், இரண்டாவது காண்டத்தை 1992 ஆம் ஆண்டிலும் நூல்களாக வெளியிட்டனர். திருக்கேதீஸ்வர மான்மியத்தின் மூன்றாவது, நான்காவது காண்டங்களான கரந்துறை காண்டம் நவோதய காண்டம் ஆகியன தமிழ்நாடு காந்தளக வெளியீடாக அவரது மறைவுக்குப் பின் வெளிவந்தன. ஐந்தாவது காண்டமான நித்திய நைமித்திய காண்டம் நூல்வடிவம் பெறாமல் கையெழுத்துப் பிரதியாகவே உள்ளது. முதலிரு காண்டங்களும் பரிசுபெற்ற நூல்களாகும்.

பிரபந்தங்கள் என்ற வகையில் சில நூல்களை இயற்றியுள்ளார். அவை யாவன மாவைப்பிள்ளைத்தமிழ், நாவலர் பிள்ளைத்தமிழ், சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரியம்மை பிள்ளைத்தமிழ், வல்லீபுர மாயவன் பிள்ளைத்தமிழ், நீர்வேலி கந்தசுவாமி பிள்ளைத்தமிழ், மாவைப்பள்ளு ஆகியன.

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரியம்மை பிள்ளைத்தமிழ் என்ற நூலை அந்த ஆலயத்தின் பரிபாலன சபையினர் 1987 ஆம் ஆண்டு வெளியீடு செய்தனர்.

வல்லிபுரமாயவன் பிள்ளைத்தமிழ் என்னும் நூல் "ஆழ்கடலான்" அவர்களால் 1989 ஆம் ஆண்டு வெளியீடு செய்யப்பட்டது.

"ஒல்லுடையப்பதி அருள்மிகு ஞானவைரவர் போற்றித் திருவகவல்" அவ்வாலயத்தின் பரிபாலன சபையால் 1987 ஆம் ஆண்டு வெளியீடு செய்யப்பட்டது.

ஒல்லுடை ஞானவைரவர் போற்றித் திருவகவல் அகவற்பாவில் அமைந்த திருவருக்கமாலை என்னும் வகையைச் சேர்ந்த பிரபந்தமாகும்.

சைவசித்தாந்தத்தை நாம் முழுமையாக அறிந்தும், உணர்ந்தும் கொள்வதற்கு படிக்க வேண்டிய பண்டைய நூல் சிவஞானசித்தியார் ஆகும். அந்த நூலை நாம் சுலபமாகப் புரிந்துகொள்ளும் வகையிலே அதன் கருத்தாழத்தைச் சுருக்கியும் விளக்கியும் தெளிவுபடுத்தியும் பண்டிதர் அவர்கள் ஒரு நூலாக்கம் செய்தார்கள். அந்நூலின் பெயர் "சிவஞானசித்தித் திறவுகோல்" என்பது சிவஞானசித்தியாரைப் பிழிந்தெடுத்த ரசமாக அந்நூல் விளங்குகின்றது. சிவஞானசித்தித் திறவுகோல் சென்னை குமரன் பதிப்பகத்தால் 1991 ஆம் ஆண்டு வெளியீடு செய்யப்பட்டு சாகித்தியப் பரிசு பெற்றது.

இறைவனைத் துயிலெழுப்புவது போன்ற கருத்திலமைந்த பாடல்கள் திருப்பள்ளியெழுச்சி எனப்படும். ஏழாலை மடாலயத்தில் எழுந்தருளியிருக்கும் கருணாகரப் பிள்ளையார் மீது திருப்பள்ளியெழுச்சி பாடியுள்ளார். பண்டிதர் கந்தையா அவர்கள். அந்நூல் 1988ஆம் ஆண்டு மகாத்மா அச்சகத்தினால் வெளியீடு செய்யப்பட்டது. அதில்வரும் இறுதிப் பாடலிது.

நீறுமெய்க்கலன் பொலி நின்மல வேடம்
நித்தலும் நிலவ மெய்ப் பத்திமை பொலிய
நாறு பூஞ்சோலைசூழ் நன்மட வளாகம்
நானிலத்துயர் சிவலோகமதாகப்
பேறு வேறருள் கருணாகரப் பிள்ளாய்
பேதையேம் யாங்கள் செய் பிழை பெரிதுள்ளாய்
ஏறுயர் விரிசடை ஈசன் மாமதலாய்
எம்பொருட்டாற் பள்ளி எழுந்தருளாயே.

இவ்வாறு எங்கள் கருணாகரப் பிள்ளையாரைத் துயிலெழுப்பப் பாடியவர், மணவாளக்கோல விழாவின் போது திருவூஞ்சலில் ஆட்டுவதற்காக திருவூஞ்சற் பதிகங்களும் கேட்போர் மெய்சிலிர்க்குமாறு பாடியுள்ளார்.

இவருடைய எழுத்தின் காத்திரத் தன்மையும், திறனும் கண்டு 1990களில் இவரிடம் பெரும்பணியொன்று ஒப்படைக்கப்பட்டது. பெரியபுராணம் என்பபடும் திருத்தொண்டர் புராண சூசனம் எழுதிக்கொண்டிருந்த ஆறுமுகநாவலர் பெருமான் காரைக்காலம்மையார் புராணம் வரை எழுதி முடித்த நிலையில் இறைபதம் எய்திவிட்டார். பல வருடங்களாக பெரியபுராண சூசனம் அவ்வாறு அரைகுறையாகவே இருந்தது. பண்டிதர் அவர்களிடம் அப்பணியினைப் பூர்த்தி செய்யும் பொறுப்பினை ஒப்படைத்த பின் அவர் மிக நேர்த்தியாக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சூசனத்திற்கு இணையாக எழுதி நிறைவேற்றினார்.

மலேசியாவிலுள்ள கோலாலம்பூர் சைவசித்தாந்த நிலையம் 1993 ஆம் ஆண்டு மிக அழகான நூலாக திருத்தொண்டர் புராண சூசனத்தை வெளியீடு செய்தது.

வருடம்தோறும் பிரபல்யமான அறிவாளிகளைக் கொண்டு திருவாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை நிகழ்த்துவித்து நூலாக வெளியீடு செய்யப்படும். 1994 ஆம் ஆண்டு பண்டிதர் மு.கந்தையா அவர்களது "சைவ சித்தாந்த அறிவு விருத்தியில் யாழ் மேதைகளின் சுவடுகள்" லீலாவதி இராமநாதனின் நினைவுப் பேருரை வெளியீடாக வெளியிடப்பட்டது.

பொ.கைலாசபதி அவர்களின் சிந்தனை முத்துக்களை ஒன்றுசேர்த்து அவற்றிற்கு தெளிவாக விளக்கமளிக்கப் பட்ட நூலொன்றை ஆக்கினார் பண்டிதர் அவர்கள். "சைவ சித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி" என்ற அந்நூலினை 1998 ஆம் ஆண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழகம் வெளியீடு செய்தது.

பண்டிதர் அவர்களுடைய திருக்குறிப்புத் தொண்டர்புராணம் ஆறுமுகத் தம்பிரான் உரைவிளக்கக் குறிப்பு என்ற நூலை யாழ் கூட்டுறவுப் பதிப்பகம் வெளியீடு செய்தது. "பண்டிதர் மு.கந்தையா நூல் வெளியீட்டுக் கழகம்" என்ற அமைப்பு இரண்டாயிரமாம் ஆண்டுகளில் ஏழாலை மேற்கிலே உருவாக்கப்பட்டது. அந்த அமைப்பு "திருக்குறள் ஒழிபியல் பரிமேலழகர் உரைவிளக்கம்" என்ற நூலை 2001ஆம் ஆண்டு வெளியீடு செய்தது. எல்லோரும் எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் பரிமேலழகர் உரையைத் தெளிவுபடுத்தி விளக்கம் செய்திருந்தார் பண்டிதர் கந்தையா அவர்கள்.

The Temple of Durgadevi at Tellipalai என்ற நூல் டெல்கி சற்குரு பதிப்பக வெளியீடாக வந்தது. சில நூல்கள் அச்சேறாமல் கையெழுத்துப் பிரதிகளாக உள்ளன. தருமை ஆதீனத்தவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க 2ஆம், 4ஆம் திருமுறைகளுக்கு சிறந்த உரைவிளக்கம் செய்துள்ளார். முப்பதுக்கு மேல் அவரது நூல்கள் வெளிவந்துள்ளன. ஏழாலைக் கிராமத்தில் எண்ணிக்கையில் கூடிய நூல்களை எழுதியவர் என்ற பெருமையை அவர் பெறுகிறார். அவர் எழுதும் நூல்களை அச்சிடுவித்து நூலாக வெளியிடுவதற்கும் நிறுவனங்களோ அல்லது தனிப்பட்ட மனிதர்களோ தயாராக இருந்தனர். அது அவருடைய எழுதும் திறமைக்குக் கிடைத்த பரிசு என்று சொல்லலாம்.

இத்தனை நூல்களை விட நூற்றுக்கணக்கான அவரது கட்டுரைகள் இலங்கையில் வெளியாகும் சைவசமய சஞ்சிகைகளிலும், மேல்நாடுகளிலுள்ள சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன. அவற்றைத் தொகுத்து நூலாக்கினால் பல

நூல்கள் உருவாகும். அத்தனையும் அற்புதமான கருத்துக் களஞ்சியமான கட்டுரைகள் ஆகும்.

பிரித்தானியாவின் சைவ முன்னேற்றச் சங்கம் வெளியிடும் சைவசமய சஞ்சிகை ஒன்றிலே அவர் எழுதிய "தமிழில் அர்ச்சனை எத்தமிழில்?" என்ற தலைப்பிலான கட்டுரை பிரசுரமாயிருந்தது. அவரது ஆழ்ந்த சிந்தனையின் வெளிப்பாடாக அற்புதமான கருத்துக்களை வெளிப்படுத்தியது அக்கட்டுரை. "சமஸ்கிருத மயமாயிருக்கும் ஆலயக் கிரியைகளில் திருமுறைப் பாடல்களைப் பயன்படுத்தலாம். சாதாரண பகுத்தறிவு நிலை தாண்டி சிவதத்துவ அறிவில் நிலைபெற்ற ஆன்றோரிடம் திருவருள் வாக்குகளாக மந்திரங்கள் தோன்றியது போலவே எமது சமயாசாரியர் காட்சியிலும் திருவருட் காட்சியாய் அமைந்து அவர்களது புத்தியாலன்றி தாமாக வெளிப்பட்டவையே திருமுறைகள். எனவே பொருத்தமான திருமுறைப் பாடல்களை சமஸ்கிருத மந்திரங்களுக்குப் பதிலாக பூஜையில் பயன்படுத்தலாம்" என்ற அரிய கருத்தினைக் கூறியிருந்தார்.

சைவக்காவலன், நாவலர் குரல் ஆகிய சஞ்சிகைகளும், சைவத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கப் பிரசுரங்களும் அவரால் அவ்வப்போது வெளியிடப்பட்டன.

**கல்விப்பணிகள்**

பண்டிதர் மு.கந்தையா அவர்கள் 1938ல் சைவசன்மார்க்க வித்தியாசாலையில் ஆசிரியப் பணியை ஆரம்பித்து, 1952ல் நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியில் ஆசிரியப் பணியைத் தொடர்ந்து பின்னர் 1959ல் மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் பெற்று மானிப்பாய் இந்துக்கல்லூரியில் ஆசிரியப்பணி செய்வதற்கான பொறுப்பினை ஏற்றார். அந்தக் காலகட்டத்திலிருந்து அவர் எவ்வித பிரதி பலனையும் கருதாமல் பிரத்தியேக அமைப்புக்கள் நடத்தும் வகுப்புகளுக்கும் சென்று கற்பித்திருக்கிறார். சைவசித்தாந்த வகுப்புக்களே கூடுதலாக நடைபெற்றாலும் தமிழிலக்கணம், இலக்கியம், சமஸ்கிருதம் ஆகியவற்றிலும் பயிற்சி அளித்துள்ளார்.

மானிப்பாய் இந்துசமய அபிவிருத்திச் சங்கம், மல்லாகம் பண்டிதர் மாணவர் கழகம், நாவலர்மணி மண்டபம், நல்லை ஆதீனம், சிவதொண்டன் நிலையம், கீரிமலை சிவநெறிக்கழகம், அளவெட்டி சுப்பிரமணிய சிவாச்சிரமம், நாவலர் ஆச்சிரமம், ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம், கிளிநொச்சி ஆதாரக் கல்விக் குருகுலம் முதலிய இடங்களில் அவருடைய கல்விப் போதனைகள் நடைபெற்றன. மிகவும் பிரச்சனையான ஒரு காலப் பகுதியில் கிளிநொச்சிக்குச் சென்று அங்கிருந்த குருகுலத்து மாணவர்களுக்கு தூய சைவநெறியை புகட்டியிருக்கிறார். தாம் பெற்ற அறிவொளியை அடுத்த தலைமுறையும் பெற வேண்டும் என்ற பரந்த நோக்கில் ஓய்வின்றி பயன் கருதாது கல்விப்பணி புரிந்திருக்கிறார்.

### பெற்றுக்கொண்ட பட்டங்கள்

*1995ஆம் ஆண்டு ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாசாலையின் பவளவிழா சித்தாந்த வித்தகர் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இப்பாடசாலையின் மாணவனாயும் ஆசிரியராகவும் விளங்கி சித்தாந்தச் செழும் புதையல்கள், சிவஞானசித்தித் திறவுகோல் முதலான சித்தாந்த நூல்களை எழுதிய பண்டிதர் கந்தையா அவர்களுக்கு பவளவிழா மேடையில் ஞானப்பிரகாசம் அவர்களால் சித்தாந்தப் பேரறிஞர் என்னும் பட்டம் வழங்கப்பட்டது.*

*ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கத்தின் தமிழ்விழா மார்ச் 7ஆம் திகதி 1998ஆம் ஆண்டு நடைபெற்றபோது "பண்டிதமணி" என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழா 1998 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 4ஆம் திகதி நடைபெற்றபோது "இலக்கிய கலாநிதி" என்ற பட்டம் வழங்கப்பட்டது.*

*அவருக்கு இலக்கிய கலாநிதி பட்டம் கிடைத்ததையிட்டு 1999 ஆம் ஆண்டு ஏழாலை மக்கள் பெரும் பாராட்டு விழாவினைப் பிரமாண்டமான முறையில் நடாத்தினார்கள். "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்ற தலைப்பினைக் கொண்ட அவ்விழாவில் "மகாமகோ உபாத்தியாயர்" என்ற பட்டத்தினைப் பெற்றுக் கொண்டார்.*

*தம் இயல்பான விவேகத்தினால் குருவை நாடாமல் சுயமாகவே கற்றுணர்ந்து பண்டிதர், வித்துவான், கலைமாணி ஆகிய பட்டங்களைப் பெற்ற கந்தையா அவர்கள் தமது மேம்பட்டிருந்த அறிவுத்திறன், எழுத்துப்பணி கற்பித்தற்பணி முதலியவற்றால் பண்டிதமணி இலக்கிய கலாநிதி, மகாமகோ உபாத்தியாயர், சித்தாந்தப் பேரறிஞர் ஆகிய பட்டங்களும் சூட்டப் பெற்று பெருமையடைந்தார்.*

### எழுத்துப் பணியால் பெற்ற விருதுகள்

*பண்டிதர் அவர்கள் அழகிய வசன நடையிலமைந்த நூல்களும், மரபுவழிக் கவிதைகளாய் அமைந்த நூல்களும் எழுதியுள்ளார். ஓர் எழுத்தாளருக்கு எழுத்துத் துறையில் கிடைக்கக் கூடிய மிக உயர்ந்த விருதானது சாகித்திய மண்டலப் பரிசாகும். இவர் எழுதிய சிவஞானசித்தித் திறவுகோல், நாவலர் பிள்ளைத்தமிழ் ஆகிய இரு நூல்களுக்கும் சாகித்திய உயர்விருது கிடைத்துள்ளது. சித்தாந்தச் செழும்புதையல், சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள் ஆகிய இருநூல்களும் இந்து கலாச்சார அமைச்சின் பரிசினைப் பெற்றதுடன் சித்தாந்தத்துறைக்குக் கிடைத்த அரும்பெரும் பொக்கிஷங்களாகவும் மதிக்கப்படுகின்றன.*

*திருக்கேதீச்சர மான்மியத்தின் முதலாவது காண்டமான புராதன காண்டம் திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச்சபையினரால் வெளியீடு செய்யப்பட்டு வடக்கு, கிழக்கு மாகாணசபையின் சாகித்தியப் பரிசினைப் பெற்றது. மேற்படி திருப்பணிச் சபையால் வெளியிடப்பட்ட திருக்கேதீஸ்வர மான்மியம் இரண்டாம் காண்டமான பொற்பொளிர் காண்டம் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்தநாள் நிதியப் பரிசு பெற்றுள்ளது.*

*ஏழாலைக் கிராமத்தின் பேரறிவு படைத்த மைந்தனாகப் பிறந்து முப்பதுக்கு மேற்பட்ட நூல்களை உருவாக்கி, அந்நூல்களுக்காகப் பல விருதுகள், பட்டங்கள், பாராட்டுக்கள் ஆகியன பெற்றவர் இலக்கியகலாநிதி மு.கந்தையா அவர்கள். ஈழத்தில் மட்டுமன்றி உலகம் முழுவதிலும் பரந்திருக்கும் தமிழரிடையே பிரபல்யமானவர். அவரது எழுத்து ஆக்கங்களும் எல்லா நாட்டுச் சஞ்சிகை களிலும் பிரசுரமானவை, பாராட்டுப் பெற்றவை, புகழப்பட்டவையாகும்.*

*பண்டிதர் அவர்கள் இயல்பிலேயே விவேகமும், புத்திக் கூர்மையும் உள்ளவர். அவர் பிறந்து வளர்ந்த சூழலோ சைவஞானம் ஒளி சிந்திக் கொண்டிருந்த அற்புதமான ஆன்மீகச் சூழல். அவர் பிறந்த அந்தக் காலகட்டமோ சிவனடியார் களின் வருகையும், அருளாளர்களின் தெய்வீக மூச்சுக் காற்றும் சித்தர்களின் பாதச் சுவடுகளுமாக ஒரு தெய்வீகச் சோபை பெற்ற காலம்.*

*தங்கம் என்பது இயல்பாகவே ஒளிரும் தன்மையது. அதிலே வெளிச்சம் பட்டால் அது மேன்மேலும் பிரகாசித்து மினுமினுக்கும். அவ்வாறே ஏழாலைக் கிராமத்தின் ஒரு பொன்மணியாகத் தோன்றிய கந்தையா அவர்களும் இயல்பாக அமைந்த அறிவுத்திறனோடு சூழலும், காலமும் ஏற்படுத்திய ஒளிச்சுடர் பட்டு ஒப்புவமையில்லாத அறிவுச் சுடராகப் பிரகாசித்தார். சமய சம்பந்தமான அரும்பெரும் நூல்களை அதிக அளவில் ஆக்கியவர் என்ற பேற்றினைப் பெற்றார். சுயமாகப் பெற்ற புத்தி, சுற்றாடலின் ஞானப்பின்னணி இவற்றோடு மூதாதையரான பூசாரியாரின் அருள்நோக்கு. அவர்களது குலதெய்வமாகத் தோன்றிய கிணற்றுப் பிள்ளையாரின் அருட்கடாட்சம். இவைகளும் சேர்ந்து கந்தையா அவர்களை பேரறிஞர் என்ற வரிசையில் வைத்துப் போற்றும் வரத்தைத் தந்தன.*

*அவருடைய அறிவுப் பயணத்திற்கு ஊக்குவிப்புச் சக்தியாயிருந்த ஞானப் பின்னணி கொண்ட சாதுசங்கமடத்தில் வீற்றிருக்கும் கருணாகரப்பிள்ளையார் மீது திருவூஞ்சற் பதிகம் பாடும் பெரும் பாக்கியத்தினைப் பெற்றார். பக்தி ரசமும், பரவசமும் தரும் திருவூஞ்சற் பாடல்கள், எச்சரிக்கை, பராக்கு, மங்களம் என்பன பின்வருமாறு,*

## காப்பு

*கானேறு பொற் கொன்றைக் கண்ணி சூடும்*
*கண்ணுதல் மைந்தன் கருணாகரனெம் அண்ணல்*
*ஊனேறு முயிர்ப்பிறவி யூசலாட்டம்*
*ஒய்ந்து பரபதத்தின் பால் உவப்புற்றேறத்*
*தானேறும் பொன்னூசல் தகைமை மேன்மை*
*தமிழிசையி லினிதேறத் தடுதல் வேண்டித்*
*தானே தன் தலைவனுமாம் சீர்ச் செய்ய*
*தாளிணைகள் தலைக்கேறப் பணிந்து நிற்பாம்.*

## ஊஞ்சல்

*01.* *போதவரும் கொன்றைகளும் புன்னை துன்றிப்*
*பொன் சொரியப் புன்கிளவெண் பொரிதூய் வாழ்த்த*
*சீதமலர்ப் பொழிலுடுத்த திருவார் வீதித்*
*திருநெறிய தலைவர் உலாவெழுச்சி கண்டு*
*தீத கலத் திசையணைத்து மீர்க்கும் செவ்வித்*
*தெய்விகநற் சோபைமலி திருவினோங்கும்*
*சாதுசங்க மடாலயம் வாழ் சைவஞானத்*
*தலைவ கருணாகரனே யாடீரூஞ்சல்.*

*02.* *பேராரும் நால்வேதங் கால்களாகப்*
*பெருகுமங்க மாறுமணி வடங்களாக*
*நேராரும் அண்டமுடி விட்டமாக*
*நின்றாடும் பொன்னூஞ்சல் நிமலற் பேணும்*
*சீராரும் சிவாகமப் பொற் பலகை மீதார்*
*சித்தாந்த பீடமொழி தழைப்ப வேறிப்*
*பாராரும் பல்லுயிர்க்கு மருளுமாற்றாற்*
*பரம கருணாகரனே யாடீரூஞ்சல்.*

*03.* *மாலோடு நான்முக னிருபாற் கவிகை தாங்க*
*மற்றவர் தம்துணைவியர் பொற்கவரிவீச*
*மேலாடு முகிலூர்தி தீபமேந்த*
*மெல்லியலார் சயியிரதி அடைப்பை தாங்க*
*நீலாடு கண்ணியர் நல் லரம்பை மாதர்*
*நிருத்தகீதம் புரியநேயர் போற்றத்*
*தோலாடு முடை மகிழச் சிவனார் செல்வத்*
*தோன்றல் கருணாகரனே யாடீரூஞ்சல்.*

04. அம்மையப்பர் கண்களிப்ப அநுஜரான
ஆறுமுகப் பிரான் மகிழ, அருணர் தண்டச்
செம்மை புரி வீரபத்திரர் திருசூலஞ்சேர்
செங்கையினார் பயிரவரும் குதூகலிக்க
வெம்மை புரி உலகிடர்கள் வில விலக்க
வேதசிவாகம நெறிமேல் விளக்கம் கொள்ள
எம்மையருள் கருணை நலம் இலங்கித் தோன்ற
எந்தை கருணாகரனே யாடீருஞ்சல்.

05. ஓங்காரத் துள்ளுறுப்பாம் விந்து நாதத்
துண்மை விக இதமாக வந்து தோன்றி
ஆங்காரக் கஜமுகனை யடத்திட் டாகு
வாகனமாய் அவன் சுமக்க அருளும் நல்கித்
தீங்காரும் ஆணவத்தாற் செருக்குற் றாழ்வோர்
திருந்தி நெறி தோன்றியருள் தேவே என்றும்
ஈங்காரும் அறிவரிய பரமஞான
ஏந்தல் கருணாகரனே யாடீருஞ்சல்.

06. ஈங்குலக முமையன்றி யிலையென்றோர் கால்
இறைவனோடு மீஸ்வரியை வலம் வந்தாங்கே
மாங்கனி கொண்டகிலமெலாம் வியக்க வைத்த
மதி நலத்துக் கறிகரியாங்குழிந்தாழ் கண்ணும்
பாங்கல விரிசெவியும் பாரதத்துப்
பழங்கதைகள் முழுவதும் பொன் மேருச் சாரல்
தீங்ககல எழுதுதுதிக் கொம்புங் கொள்சீர்த்
தேவ கருணாகரனே யாடீருஞ்சல்.

07. மூலாதாரத் தழன்று மூளும் செந்தீ
முன்னோக்கி மேலெழுந்து கபால உச்சிப்
பாலாக உயிர்பரம பதமே மேவிப்
பவந் தவிர்ந்து சிவன் கழலே சேரும் வண்ணம்
காலாற் கொண்டெழுப்பு நெறி காட்டி ஔவை
கருத்தாரப் புகுந்து நிலாங் கருணைமூர்த்தி
மேலான தேவெனும் சீர் விநாயகப் பேர்
விமல கருணாகரனே யாடீருஞ்சல்.

08. மூல முத லாதாரத் தெழுந்து தோன்றி
முறுக்க விழ் நாதழ்க் கமல பீடம் மேவி
மேலெழுநற் குண்டலியின் துணையால் நம்மை
மிளிர் சுழுனை வழியுறக் கொண்டுயர்த்தும் நின்சீர்
ஒலவெம் தௌவையை நீள் துதிக்கைச் சேர்த்தி
எறிற் கயிலைக் குய்த்திடு நினருளாற் காட்டும்
சீலமிரு மெம் பரம தேவே ஞானச்
செல்வ கருணாகரனே யாடீருஞ்சல்.

09. பருமணிப் பொன் முடியினொளி ஆட ஆடப்
பதக்கமொடு முப்புரி நூலாட ஆட
அருகுவிரி அருட்செவிகள் ஆட ஆட
அங்கணமர் கருணையொளி ஆட ஆட
பெரும் பரப்பார் தொந்தி குழைந் தாட ஆட
பேணுபத கிண்கிணியும் ஆட ஆட
திருமுகத்துட் புன்முறுவல் ஆட ஆட
செம்மல் கருணாகரனே யாடீருஞ்சல்.

**வாழி**

10. அந்தணர் ஆனினங்கள் வாழி வாழி
அறவோர்கள் வாழியரு மறைகள் வாழி
சிந்தனையிற் சிவம் வாழி சைவம் வாழி
திருநீறும் மைந்தெழுத்தும் வாழி வாழி
வந்து பெயும் மழை வாழி வையம் வாழி
வானவர்கள் வாழி மனுநீதி வாழி
தந்து புகழ்ச் சிவதொண்டு வாழி வாழி
நங்கள் கருணாகரன் பேரருணாம் வாழி.

**எச்சரிக்கை**

திருவார் தரு கருணாகர தேவே யெச்சரிக்கை
தெளிவார்த் தரு சிவமாற் திருஅருள்வா யெச்சரிக்கை
அருளானந்தசிவம் பூசைகொள் ஐயா எச்சரிக்கை
அகிலாண்டமுந் தொழ நின்றருள் ஆதீ யெச்சரிக்கை.

பெருமோதகப் பிரியா எங்கள் பிரானே யெச்சரிக்கை
பேராதரித் திருவார்க்கருள் பெம்மா னெச்சரிக்கை
குருவாயரு ளுருவாய் வரு கோவே யெச்சரிக்கை
குறையா அருள் நிறைவா யொளிர் குழகா யெச்சரிக்கை.

கரிமா முகமுடையாய் கணபதியே யெச்சரீக்கை
கைலாசரணு றெமக்கீந்தருள் களிறே யெச்சரீக்கை
பெரியா யெமக் கரியா யன்பர்க் குரியா யெச்சரீக்கை
பெருமாதவன் சாபந்தவிர் பிரானே யெச்சரீக்கை.

**பராக்கு**

எழிலார் மடாலயத் தொந்தாய் பராக்கு
ஏழேழ் பிறப்புமெம் வாழ்வே பராக்கு
பழிதீர்பா சாங்குசக் கையாய் பராக்கு
பக்தர்கள் சித்தம் பயில்வாய் பராக்கு

பாகாரு மொழியுமை பாலா பராக்கு
பாலார்க்க சோதிகொள் பரனே பராக்கு
வாகாரு மாகுவாகனனே பராக்கு
வல்லபா தேவி மகிழ்வரனே பராக்கு

விடையூர் பிரானருள் வேந்தே பராக்கு
மிகு சைவ சித்தாந்த விளைவே பராக்கு
சடைவரதர் வரவருள் சாமீ பராக்கு
சங்கமுறு மடியார்கள் தாயே பராக்கு.

**மங்களம்**

மங்களம் மங்களம் மங்களம் ஜெய மங்களம்
ஆனைமுகத் தண்ணலுக்கு அன்பர்க்கன்பராயினர்க்கு மங்களம்
எந்தை கருணாகரற்கு எங்கள் குருவானவர்க்கு மங்களம்
தெய்விக சிந்தாமணிக்கு செழுஞ்சைவ மாமணிக்கு மங்களம்
முதுஞான நாயகர்க்கு மோதக விநாயகர்க்கு மங்களம்
முத்தி தரும் வானவர்க்கு மூல முதலானவர்க்கு மங்களம்

கவிநயம் மிளிரும் இத்திருவூஞ்சற் பாடல்கள் ஏழாலையின் கவிமணி மு.கந்தையா அவர்களின் புலமைத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றன.



ஆத்மஜோதி
நா.முத்தையா அவர்கள்

# ஆத்மஜோதி நா.முத்தையா அவர்கள்

இவ்வுலகில் வாழும் மனிதர்கள் வெவ்வேறு தன்மை கொண்டவர்களாக விளங்குகிறார்கள். சிலர், தானும் தன் குடும்பமும் என்ற குறுகிய வட்டத்திற் குள்ளேயே வாழ்க்கையை வாழ்ந்து முடிக்கிறார்கள். வேறுசிலர் தம் குடும்பத்தைப் பராமரிப்பதோடு வெளியிலும் சில சேவைகளில் ஈடுபடுகிறார்கள். இன்னும் சிலர் தமக்கென்று வாழாமல் சமூகத்திற்கும், நாட்டிற்கும் முழுமையாக தம்மை அர்ப்பணித்து வாழ்கிறார்கள். அத்தகையவர்கள் மிக அரிதாகவே காணப்படு வார்கள். ஏதாவதொரு நெருக்கடியான நிலையிலே சமூகத்தின் தேவை கருதி இறைவனது அருளாக அவர்கள் தோன்றுகிறார்கள்.

அந்நியரின் ஊடுருவலும் ஆதிக்கமும் காரணமாக எமது மண்ணின் மத காலச்சாரங்களின் மீது இருட்படலம் கவிந்த வேளையில்தான் நல்லூரிலே ஆறுமுகநாவலர் அவதாரம் செய்து தம் வாழ்வையே முழுதாக அர்ப்பணித்து நமது மொழி மத கலாச்சாரத்திற்கு புத்துயிரூட்டி அவற்றை வளர்ப்பதற்கு அரும் பணியாற்றினார்.

நல்லை நகர் நாவலரின் காலத்திற்குப் பின் அவரால் ஏற்படுத்தப்பட்ட மறுமலர்ச்சியைப் பாதுகாக்கவும், பணி செய்யவும், தம் வாழ்வை முழுமையாக அர்ப்பணித்துத் தொண்டாற்றவும் தோன்றினார் ஆத்மஜோதி ஆத்மீக வள்ளல் நா.முத்தையா அவர்கள்.

ஏழாலைக் கிராமத்தின் கிழக்குப் பகுதியிலே மல்லாகத்திலிருந்து குப்பிழான் நோக்கிச் செல்லும் பிரதான தெருவிலே இலந்தைகட்டி ஸ்ரீ பாதாள வைரவர் ஆலயம் அமைந்துள்ளது. அதன் முன்னால் பச்சைப்பசேல் என்று காட்சி தரும் தோட்டம் துரவுகளை அண்டியதாக குடிமனைகள் காணப்படும். அக்குடிமனை யொன்றிலே வாழ்ந்து வந்தார் நாகமணி அவர்கள். முருகப்பெருமானுடைய திருக்கோலத்தை அவர் நேரில் காணும் பேறு பெற்றவர். நாகமணி அவர்களுக்கு வாதநோய் ஏற்பட்டு கால் நடக்கமுடியாத நிலை ஏற்பட்டது. ஆயுர்வேத வைத்தியம், ஆங்கில வைத்தியம் எதனாலும் குணப்படுத்த முடியவில்லை. பெரும் வைத்திய அதிகாரிகளும் கைவிரித்து விட்டனர். இந்நிலையில் நாகமணி அவர்கள் கதிர்காமக் கந்தன் மீது பாரத்தைப் போட்டு, அடுத்த ஆடித் திருவிழாவுக்கு நான் கதிர்காமத்துக்கு வந்து உன்னை தரிசிக்க வேண்டும்" என்று நேர்த்திக்கடன் போல வேண்டுதல் செய்தார். அத்துடன் கந்தரலங்காரப் பாடல் நூறினையும் உள்ளமுருகிப் பாடிப் படித்துப் படித்து மனனம் செய்தார். உறங்கும் நேரம் தவிர மற்ற நேரமெல்லாம் கந்தரலங்காரப் பாடல்களை ஓதுவார்.

நோய் படிப்படியாகக் குறைந்தது. முற்றாகக் குணமாகாவிட்டாலும் எழுந்து நடமாடக்கூடியதாக இருந்தது. அடுத்த ஆடித்திருவிழாவின் போது கதிர்காமத்துக் குச் செல்வதற்கான முயற்சியில் இறங்கினார். கதிர்காமத்திற்கு யாத்திரை சென்ற அனுபவமுள்ள பொன்னையா டாக்குத்தருடன் சேர்ந்து புறப்பட்டார். திசைமகராமா வரையும் வாகனத்திலே சென்றார்கள். அந்தக் காலத்தில் திசமகராமாவிலிருந்து பன்னிரண்டு மைல்தூரத்தையும் நடந்து சென்றுதான் தலத்தை அடைவார்கள். காட்டுவழி, ஒற்றையடிப்பாதை பெரும்பாலும் அரோகரா ஒலியுடன் இரவில்தான் நடந்து செல்வார்கள். நாகமணி அவர்களும் ஒரு யாத்திரிகர் கூட்டத்துடன் திசமகராமாவிலிருந்து கதிர்காமத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தார். நிலவு மறைந்து நல்ல இருட்டாக இருந்தது. எவ்வித வெளிச்சமும் இல்லை. அரோகரா என்று ஒலி எழுப்பி அச் சத்தத்தையே அடையாளமாய்க் கொண்டு ஒருவர் பின் மற்றவராய் நடந்து கொண்டிருந்தனர். நாகமணி அவர்கள் கந்தரலங்காரப் பாடல்களை மனமுருகிப் பாடினார். இருளிலே பாதையும் தெரியாமல் நிலைதடுமாறி அவர்கள் தவித்த வேளையிலே தூரத்திலே ஓர் ஒளி தெரிந்தது. யாத்திரீகர் அந்த வெளிச்சத்தை நோக்கி நடந்தனர். இடைவெளிவிட்டு வரிசையாக கற்பூரம் எரிந்து கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தில், காவிஉடை தரித்த அழகான ஒரு வாலிபர் முன்னால் தோன்று வதைக் கண்டார் நாகமணி அவர்கள். "அதோ முருகப்பெருமான்" என்று சொல்லிக்கொண்டு அவர் பின்னே ஓடினார். மினுமினுப்பும் பளபளப்புமாகத் தோன்றிய அந்த வாலிபர் வேகமாக நடந்து மறைந்து விட்டார். மற்றவர்களுக்குத் தெரியாமல் நாகமணிக்கு மட்டுமே காட்சி கொடுத்தார் கதிர்காமக்கந்தன். வரிசையாக கோயில் வரை கற்பூரம் எரிந்து வெளிச்சம் கொடுப்பதைக் கண்ட போது முருகப்பெருமானே அவருக்குக் காட்சி கொடுத்திருக்கிறார் என்பதை அவரோடு சேர்ந்து சென்ற யாத்திரீகர் உணர்ந்தனர். அவர்களெல்லோரும் கற்பூர ஒளியில் பரவசமாக கதிர்காமத்தை அடைந்து மாணிக்ககங்கையில் நீராடினார் கள். கங்கையில் நீராடி மூழ்கி எழுந்ததுமே நாகமணி அவர்களின் வாதநோய் முற்றாக நீங்கியது. அதன்பிறகு வாதநோய் வரவேயில்லை. வருடா வருடம் கதிர்காமத்திற்குப் போய்க் கந்தனைத் தரிசிக்கவும் அவர் தவறவில்லை.

கதிர்காமக்கந்தனின் திருக்கோலக் காட்சியைக் காணும் பேறுபெற்ற நாகமணி அவர்களின் இரண்டாவது புத்திரனாக 1918ஆம் ஆண்டு வைகாசி மாதம் 25ஆம் திகதி முத்தையா அவதரித்தார்.

அவருடைய தாயார் பெயர் பொன்னுப்பிள்ளை, தந்தையார் பெயர் நாகமணி, பொன்னும் மணியும் இணைந்து ஒரு நல்முத்தை உலகத்திற்கு அளித்தனர். அந்த முத்தே ஆத்மீக வள்ளலாக ஆத்மஜோதியாக அஞ்ஞான இருள்போக்கி ஒளி பரப்பிய முத்தையா அவர்களாவார்.

முத்தையா அவர்களின் உடன்பிறந்தோராக கந்தையா, அருமைநாயகம் ஆகிய இரு சகோதரர்களும் செல்லமுத்து, சின்னம்மா ஆகிய இரு சகோதரிகளும் இருந்தனர்.

**படிப்பும் பதவியும்**

முத்தையா வளர்ந்த சூழலில் உள்ளவர்களெல்லாம் அக்கால கட்டத்தில் அண்மையிலிருந்த கத்தோலிக்க பாடசாலையிலேயே தம் ஆரம்பக் கல்வியைத் தொடக்கினர். அவ்வேளையில் அச்சூழலில் சைவப்பாடசாலை இல்லாமையே அதற்குக் காரணமாகும். சிறுபிள்ளைப் பருவமாதலால் அக்கத்தோலிக்க பாடசாலையிலேயே தம் கல்வியை ஆரம்பித்த முத்தையா பின்னர் மயிலணி சைவ வித்தியாசாலையிலே தம் கல்வியைத் தொடர்ந்தார். அங்கே கற்றுச் சித்தியெய்தியபின், திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையில் ஆசிரிய தராதரப் பத்திரப்படிப்பை மேற்கொண்டு சித்தியெய்தினார். 1937ஆம் ஆண்டு திருநெல்வேலி சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்து பயிற்றப்பட்ட ஆசிரியரானார். அங்கே கைலாசபதி அவர்கள், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை ஆகியோரிடம் பயிற்சி பெறும் வாய்ப்பினைப் பெற்று, அவர்களுடைய அன்புக்கும், மதிப்பிற்குமுரிய நன்மாணாக்கனாக, விளங்கும் பெருமையைப் பெற்றார்.

1939ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 15ஆம் திகதி ஆசிரிய சேவையில் இணைந்து கொண்டார். முதலில் நாவலப்பிட்டியிலுள்ள புனிதமேரீஸ் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராக நியமனம் பெற்று ஒன்பது வருடங்கள் அங்கே பணியாற்றினார். 1948ஆம் ஆண்டு நாவலப்பிட்டி கதிரேசன் வித்தியாசாலைக்கு மாற்றம் பெற்று ஓய்வுபெறும் வரை அங்கேயே சேவையாற்றினார்.

முத்தையா அவர்களுடைய ஆசிரிய சேவைக்காலம் முழுவதும் மலையகத்திலேயே கழிந்தது. அவராக முழுமனதோடு விரும்பியே அதனை ஏற்றுக்கொண்டார். அவர் மலையகத்தில் கடமையாற்றத் தொடங்கிய 1940களில் மலையகம் மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்தது.

தமது வாழ்வை சமய, சமூக, பொதுசேவைக்கென்றே அர்ப்பணிப்பது என்று நிர்ணயம் செய்து கொண்ட அவர் மலையகத்தை முன்னேற்றுவது தம் முதற்கடமையென்று தீர்மானித்தார். அவருடைய ஆசிரிய சேவைக்கான களமும் மலையகத்திலுள்ள நாவலப்பிட்டி என்று ஆகிவிட்டதால் இறைவனுடைய திருக்குறிப்பும் அதுவென்றே கருதினார்.

அக்காலகட்டத்தில் மலையகத்தின் பெரும்பாலான மக்கள் தோட்டங்களில் வேலை செய்து தம் வயிற்றைக் கழுவுவதற்கே பெரும்பாடுபட்டனர். அந்த மக்களிடையே கல்வியிலும், பொருளாதாரத்திலும் வளர்ச்சி ஏற்படுத்தி, அவர்

களிடம் கல்வியிலும், ஆன்மீகத்திலும், அறிவிலும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முத்தையா அவர்கள் அயராது உழைத்தார். நாற்பத்தைந்து வருடகாலம் மலையகம் அவரது சேவையைப் பெற்றது.

நாவலப்பிட்டியில் இரு பாடசாலைகளிலும் கடமையாற்றும் போது மாணவர்களிடையே கல்வியில் ஆர்வம் ஏற்படும் வகையில் அன்பாக அவர்களை அரவணைத்து அதிக சிரத்தையுடன் கற்பித்தார். 1960ஆம் ஆண்டு கதிரேசன் வித்தியாலயத்தின் அதிபரானார். தன்னலமற்ற, திறமையான சேவையும், நிர்வாகமும் காரணமாக ஆசிரியர், மாணவர், பெற்றோர் அனைவரிடமும் நன் மதிப்பினைப் பெற்றார். அதிபராக இருந்த காலத்தில் அகில இலங்கை ஆசிரியர் சங்க உபதலைவராகவும், செயலாளராகவும் கடமையாற்றி ஆசிரியர்களுக்கு நல்ல வழிகாட்டியாய் விளங்கினார். கல்வித்துறையில் அவர் ஆற்றிய சேவை மகத்தானதும், அளப்பரியதும் ஆகும்.

**சஞ்சிகைகள் நூல்கள் வெளியீடு**

"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்". 19ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியான ஐயா அவர்களின் சேவைக்காலப் பகுதியில் மனிதர்களிடையே வாசிக்கும் பழக்கம் நிறைய இருந்தது. வாசிப்பினால் புத்தி ஜீவிகளான மனிதர்களும் பலர் காணப்பட்டனர். அக்காலத்தில் கனணி, தொலைக்காட்சி, கையடக்கத் தொலைபேசி போன்றவை மனிதனை அடிமைப்படுத்தி வைத்திருக்க வில்லை. அதனால் வாசிப்பதில் மனிதன் ஆர்வமும், ஈடுபாடும் கொண்டு நூல்களைப் படித்தான்.

அந்நிலையிற்றான், முத்தையா ஆசிரியர் அவர்கள் ஆன்மீகச் சஞ்சிகை யொன்றை மாதாந்தம் வெளியிட்டு மக்களை வாசிக்கச் செய்து அதன்மூலம் ஆன்மீக அறிவொளியைப் பரப்ப முயன்றார்.

இவ்வாறு சஞ்சிகைகளோ, நூல்களோ வெளியிடுவதற்கு அதற்கென்று ஓர் அச்சகம் இருந்தால் அவை தடங்கலின்றி தொடராக வெளிவரமுடியும். ஆறுமுகநாவலர் பெருமானும், ஏட்டிலுள்ள நூல்களை வெளியிடுவதற்காக "வித்தியா பாலன" என்ற அச்சகத்தை அமைத்தார். எமது ஊரின் சைவப் பெரியாரும் சித்தாந்தப் பேரறிஞருமான ஐ.பொன்னையா (அருளானந்தசிவம்) அவர்களும் சஞ்சிகைகள், நூல்களை வெளியிடுவதற்கு ஏதுவாக திருஞானசம்பந்தர் அச்சியந்திரசாலை என்ற பெயரில் அச்சகமொன்றை நிறுவினார்.

முத்தையா அவர்களும் அவர்களைப் பின்பற்றி அச்சகம் ஒன்றை அமைத்தார். ஆசிரியப் பணியின் காரணமாக அவர் நாவலப்பிட்டியையே தமது

சேவைகளுக்கு முக்கிய நிலைக்களமாகக் கொண்டதால், நாவலப்பிட்டியிலேயே அச்சகம் நிறுவப்பட்டது.

ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி என்ற முகவரியிலிருந்து ஆத்மஜோதி என்ற ஆத்மீக சஞ்சிகை மாதந்தோறும் வெளிவந்து கொண்டிருந்தது. ஆத்மஜோதியை அச்சிடும் அந்த அச்சகமும், ஆத்மஜோதி அச்சகம் என்று பெயர் பெற்றது. அதன் ஆசிரியராக விளங்கிய முத்தையா அவர்களுடைய பெயருடனும் ஆத்மஜோதி என்பது இணைந்துவிட்டது.

இராமச்சந்திரன் அவர்களும் முத்தையா அவர்களும் சேர்ந்து உருவாக்கிய ஆத்மஜோதி என்னும் சஞ்சிகை மலையகத்தில் மட்டுமன்றி இலங்கை முழுவதி லும் வாழும் சைவத்தமிழ் மக்களால் படிக்கப்பட்டதோடு இந்தியா, சிங்கப்பூர் முதலான இடங்களிலும் ஆன்மீக ஒளியைப் பரப்பியது. வெளியிடங்களில் வாழும் தமிழர்களும் சந்தாதாரார்களாகச் சேர்ந்து ஆத்மஜோதியைப் பெற்றுக் கொண்டார்கள். அற்புதமான ஆன்மீகக் கட்டுரைகள், ஆலய வரலாறுகள், மெய்யடியார்களின் சரிதங்கள், நீதிக்கதைகள், முதலான விஷயங்களைத் தாங்கி வந்த ஆத்மஜோதி சஞ்சிகை அஞ்ஞான இருள்போக்கி ஆன்மீக ஒளிபரப்பி தெய்வீக மணம் கமழச் செய்தது.

கூட்டுப்பிரார்த்தனைப் பாடல்கள், பஜனைப்பாடல்கள், விரதமகிமைகள், நாமாவளிகள் என்று கையடக்கமான சிறு சிறு நூல்கள் ஆத்மஜோதி அச்சகத்தி லிருந்து அச்சிட்டு மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

ஆத்மஜோதி ஐயா அவர்கள் எழுதிய நூல்களில் "ஏழாலை" என்னும் நூலும் அதிமுக்கியத்துவம் பெற்ற நூலாகும். ஏழாலைக் கிராமத்தில் பிறந்தவர்கள் ஒவ்வொருவரும் அதற்காக நன்றிகூறக் கடமைப்பட்டவர்களாவர். ஏழாலைக் கிராமத்தின் அமைப்பையும், காட்சிகளையும் நாம் கண்ணாற் பார்த்துக் கணித்துக் கொள்ளலாம். ஆனால், அங்கு வாழ்ந்த பழம்பெரும் மகான்கள், பழைய சம்பவங் கள், பாடசாலை மற்றும் ஆலய வரலாறுகள், பழைய மக்களின் வாழ்க்கைமுறை என்பவையெல்லாம் ஏழாலை என்ற இந்த நூலின் மூலமே தற்கால சந்ததியினரும், வருங்காலத்தவரும் அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது. ஆத்மஜோதி ஐயா அவர்கள் இந்த விஷயங்களையெல்லாம் ஆவணப்படுத்தி வைத்ததுபோல் அழியாமல் காப்பாற்றியிருக்கிறார் என்றே சொல்ல வேண்டும்.

ஏழாலை என்ற நூலை அவர் எழுதி வெளியிட்டிராவிட்டால் இந்த ஊரைப் பற்றிய எத்தனையோ விஷயங்களும், சம்பவங்களும் மறைந்தே போயிருக்கும். எமது ஊரைப் பற்றியும், ஊரில் வாழ்ந்த பெரியோர்களைப் பற்றியும் ஆய்வு செய்யும் மாணவர்களுக்கு இந்நூல் ஒரு சிறந்த வழிகாட்டியாக அமைந்துள்ளது.

மலையகத்தில் இருந்து பணி புரிந்தபோதும் தாம் பிறந்த ஊரையும் எந்நேரமும் நினைவில் நிறுத்தி வைத்திருக்கிறார் என்பதற்கு இந்நூல் ஒரு சாட்சியாக விளங்குகிறது. "ஏழாலை" என்ற நூலின் வெளியீட்டு விழா இவ்வூரின் மத்தியிலே அமைந்திருக்கும் ஏழு ஆலயங்களுக்கும் நடுவே 1977ஆம் ஆண்டு பிரமாண்டமான முறையில் நடைபெற்றது. சித்தாந்தவித்தகர் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் நடந்த இவ்வெளியீட்டு விழாவில் அச்சிடுவித்த அத்தனை புத்தகங்களும் விலைப்பட்டது ஓர் ஆச்சரியமான உண்மையாகும். இந்நூலின் இரண்டாம் பதிப்பினை 2003ஆம் ஆண்டு ஆத்மஜோதி ஐயாவின் மருமகனான நா.முருகையா அவர்கள் ஆத்மஜோதி மண்டபசபையின் சார்பாக வெளியீடு செய்தார்.

முத்தையா அவர்கள் சைவநெறியை வளர்ப்பதற்கென்றே தம் வாழ்வினை அர்ப்பணித்து பிரமச்சரிய விரதம் பூண்டு சித்தர், சிவயோகி போல வாழ்ந்தவர். விபூதி, சந்தனம், குங்குமம், உருத்திராக்கம் என்று சிவசின்னப் பொலிவோடு, தம் உள்ளத்தைப் போல் வெள்ளை வெளேரென்ற வேட்டியும், சால்வையுமாய் சிவப்பழமாகக் காட்சி தரும் அவர், ஈழநாட்டில் வாழ்ந்த சித்தர்களைப் பற்றிய நூலொன்றை எழுதி வெளியிட்டார். எமது ஊரிலே ஞானஒளி பரப்பிய அருளானந்தசிவம் சுவாமிகள், சடைவரதசுவாமிகள் உட்பட பல சித்தர்களின் அற்புதம் நிறைந்த வாழ்வினைத் தெளிவாக எடுத்துக்கூறும் "ஈழத்துச் சித்தர்கள்" என்ற நூல் 1980 ஆம் ஆண்டு சாகித்திய மண்டலப்பரிசு பெற்றது.

ஆத்மஜோதி ஐயா அவர்கள் இலங்கை முழுவதிலும் தலயாத்திரை செய்ததுடன் இந்தியா, இந்தோனேசியா முதலிய இடங்களுக்கும் யாத்திரையாகச் சென்றிருக்கிறார். தான் யாத்திரை சென்று அனுபவித்த அந்தப் பேரின்ப அனுபவத்தை மற்றவருக்கும் கிடைக்கும் வகையில் நூல்களாக எழுதி வெளியிட்டிருக்கிறார். யாத்திரை செய்வதற்கே மிகவும் சிரமமான கேதார்நாத் பத்ரிநாத் முதலான இடங்களைத் தரிசித்து வந்தபின் "கேதார்பத்ரி யாத்திரை" என்னும் நூலை எழுதினார். இந்தோனேசிய பயணம் பற்றி "இந்தோனேஷியாவில் இரண்டு வருட அனுபவம்" என்ற நூலை எழுதி வெளியிட்டார்.

"வாழ்க்கையில் தாம் அடைந்த பெரும் பாக்கியம் மகான்களை தரிசித்தது தான்" என்று உணர்வுபூர்வமாகக் கூறும் முத்தையா அவர்கள் கனடாவில் இருக்கும்போது பத்து மகான்களைப் பற்றி பத்து நாட்களில் நூலாக எழுதி கனடாவில் அவரது சீடராக விளங்கிப் பணிபுரியும் சிவ.முத்துலிங்கம் அவர்களிடம் கொடுத்தார். தரிசனம் என்ற பெயர்கொண்ட அந்நூலை 1995 ஆம் ஆண்டு ரொறன்ரோவில் பெரும் விழா எடுத்து வெளியீடு செய்தார்கள். ஆத்மஜோதி ஐயா எழுதிய "தரிசனம்" நூல் வெளியீட்டோடு கவிஞர் கந்தவனம் எழுதிய "முத்தான தொண்டன்" என்ற அவரது வாழ்க்கை வரலாற்று நூலும் அவர் முன்னிலை

யிலேயே வெளியிடப்பட்டது. தரிசனம் என்ற நூலுடன் சாயிபாபா, என்னை எனக்கறிவித்த எங்கள் குருநாதன், சுவாமி சிவானந்தர், துர்க்கை அம்மன், யோகி ராம் சரத்குமார், திருமுறைக் கதைகள் ஆகிய நூல்களையும் எழுதி கனடா இந்து சமயப் பேரவையினரிடம் கையளித்தார்.

ஆத்மஜோதி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட்ட அவரது நூல்களாவன ஏழாலை, ஈழத்துச் சித்தர்கள், கந்தனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வம், திருமுறைச் செல்வம், திருமுறைக் காட்சி, பன்னிருமாத நினைவுகள், இலங்கையில் ஓர் இல்லறஞானி, மாணவருக்கேற்ற மாண்புறு கதைகள், இளைஞர்களுக் கேற்ற இந்தோனேஷியக் கதைகள், பாலயோகேஸ்வரர் சரிதம் முதலியன.

இவற்றிலே "ஏழாலை" என்னும் நூலின் இரண்டாம் பதிப்பும், ஈழத்துச் சித்தர்கள்" நூலின் இரண்டாம் பதிப்பும் ஏழாலையில் அமைந்துள்ள ஆத்மஜோதி ஞாபகார்த்த மண்டப சபையினரின் வெளியீடாக அமைந்துள்ளது. ஆத்மஜோதி என்ற சைவநெறிச் சஞ்சிகையோடு இத்தனை நூல்களையும் எழுதி வெளியிட்ட முத்தையா அவர்கள் ஏழாலைக் கிராமத்தின் சிறந்ததோர் எழுத்தாளராகத் திகழ்கிறார். இவருடைய வசன நடையை வாசிக்கத் தெரிந்த சிறுபிள்ளைகள் கூடப் புரிந்து கொள்வார்கள். அவ்வளவு இலகுவான, எளிமையான, இனிமையான வசன நடையாக எழுதுவார். கடினமான வார்த்தைப் பிரயோகங்கள் இவரது ஆக்கங் களிலே இடம்பெறுவது அபூர்வம். எந்த விஷயமானாலும் அதை நன்கு புரிந்து கொண்டால்தான் அதனைப் பின்பற்றி நடக்க வேண்டுமென்ற ஆர்வம் எழும். ஆத்மஜோதி ஐயாவின் ஆக்கங்களிலுள்ள நற்கருத்துக்கள், உபதேசங்கள் யாவும் வாசிக்கும்போது இலகுவில் புரிந்துகொள்ளக் கூடியதாக இருப்பதால்தான் அவருடைய கொள்கைகளை உபதேசங்களைப் பின்பற்றவும், செயற்படுத்தவும், பெரும்பாலோர் முன் வருகின்றனர். எனவே அவரது நூல்கள் இச்சமுதாயத்திற் குப் பெரிதும் பயன்பாடாக உள்ளன.

**சமய சமூகப் பணிகள்**

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஏற்படுத்திய சமய மறுமலர்ச்சியை மேலும் எழுச்சி பெறச் செய்வதற்காகவே ஆத்மஜோதி முத்தையா அவர்கள் அவதரித்தார். அதற்காகவே அவருடைய முழுவாழ்க்கையும் அர்ப்பணிக்கப்பட்டது. தந்தை யாரின் அற்புதங்கள் நிறைந்த பக்தி வாழ்க்கை இறைதொண்டரான மைத்துனர் முருகேசு உபாத்தியாயருடைய உறவும், பழக்கமும் - இவைகள் காரணமாக முத்தையா அவர்களுக்கு சிறுவயதிலிருந்தே இலௌகீக விஷயங்களில் பற்று ஏற்படாமல் ஆன்மீக விஷயங்களிலேயே நாட்டம் ஏற்பட்டது.

அவருடைய குலதெய்வமான இலந்தைகட்டி ஸ்ரீ பாதாள ஞானவைரவரின் ஆலயமே அவரது வழிபாட்டிற்கும் தொண்டுகளுக்கும் முதற்களமானது. மாணவப் பருவத்தில் அவர் இவ்வாலயத்தில் வழிபாடாற்றினார். முத்தையா அவர்களுக்கு

இருபது வயது நிறைவுற்றபோது ஆசிரியப்பணி புரியும் வாய்ப்புக் கிடைத்தது. இறைவனுடைய திருவுள்ளப்படி மலைநாட்டிலுள்ள நாவலப்பிட்டி என்ற இடத்துக்கு ஆசிரியப்பணி புரிய நியமிக்கப்பட்டார். பிறர்நலம் பேண விழைகின்ற அவரது கருணைமயமான உள்ளம் அங்கு வாழும் மக்களின் நலிவுற்ற நிலைமையைக் கண்டதும் அங்கேயே சேவை புரிதல் அவசியம் என்றுணர்ந்து கொண்டது. அறிவிலும், பொருளாதாரத்திலும் ஆன்மீகத்திலும் மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்த அந்த மக்களுக்காக அங்கேயே தங்கியிருந்து சேவையாற்றினார். கல்வியிலே மேன்மையடைந்தாலே ஒரு சமூகம் முன்னேறும்.

அதனால் மலையகச் சிறார்களின் கல்வி விருத்திக்காக மிகுந்த அக்கறை எடுத்துப் பணியாற்றினார். கல்வியிலே மேம்பாடு காணும்போது ஆன்மீகமும் இணைந்தால்தான் பண்பான ஒரு சமுதாயம் உருவாகும் என்பதை உணர்ந்த ஆத்மஜோதி ஐயா வீடு வீடாச் சென்று அந்த மக்களிடையே உபதேசம் செய்து ஆன்மீக நெறியையும் பரப்பினார். அந்த மக்களை மனதிற்கொண்டுதான் அவ்விடத்திலிருந்து "ஆத்மஜோதி" சஞ்சிகையை வெளியிட்டார். கல்விமான்கள் மட்டுமன்றி சாதாரண படிப்பறிவு கொண்ட மக்களும் ஆன்மீகத்தை விளங்கிக் கொள்ளும் வகையில் கதைகள் மூலமாக ஆன்மீக விஷயங்களைப் புகுத்தினார். எளிமையான ஆக்கப்படைப்புகள் மூலமாக எல்லோரும் புரிந்துகொள்ளும் படியான சிறந்த ஆத்மீக சஞ்சிகையாக ஆத்மஜோதியை வெளியிட்டு அஞ்ஞானத்தில் மூழ்கிக்கிடந்த மக்களை ஆன்மீக வாதிகளாக மாற்றினார்.

மக்களிடையே காணப்படும் தீயபழக்கங்களைப் போக்கவும் அவர் மேற்கொண்ட முயற்சிகள் பலவாகும். வீடு வீடாகச் சென்று மதுவிலக்குப் பிரச்சாரம் செய்தார். மதுவால் வரும் தீமைகளைப் பக்குவமாக எடுத்துச் சொல்லி மதுப்பழக்கத்திலிருந்து பலரை மீட்டிருக்கிறார். ஆத்மஜோதி ஐயா அவர்கள் தூய சைவ உணவையே உண்பவர். அதிலும் கோபம், ஆத்திரம் முதலான துர்க்குணங்களைத் தூண்டக் கூடிய காரம், புளிப்பு இவைகளை நீக்கியே சாப்பிடுவார். உணவு முறையாலும் மற்றும் உயரிய பழக்கங்களாலும் சார்ந்த சொரூபியாக எந்நேரமும் திகழும் அவர் புலால் உணவை விடுத்து சைவபோசனத்தை உண்ணும்படியாக இலங்கையில் மட்டுமன்றி இந்தோனேஷியாவிலும் போதித்து அதிலே வெற்றியும் கண்டிருக்கிறார்.

முத்தையா அவர்கள் எங்கெங்கே ஆன்மீக ஞானிகள், மகான்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் போய் அவர்களைத் தரிசித்து அவர்களுடன் பழகி அவர்களது உபதேசங்களையும், கொள்கைகளையும் பரப்பும் வகையில் அவர்களைப் பற்றிய நூல்களை எழுதி வெளியிட்டார். இலங்கையைச் சேர்ந்த யோகர் சுவாமிகள், விபுலானந்தஅடிகள், சித்தானைக்குட்டிச் சுவாமிகள் முதலியோருடன் பழகி அவர்களது அன்புக்கும் அருளுக்கும் பாத்திரரானார்.

இந்திய தேசத்தில் தோன்றிய ஞானிகளான ரமணமகரிஷிகள், காஞ்சி காமகோடி பீடாதிபதி, பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா, சுவாமி சிவானந்தர், சுவாமி ராம்தாஸ், அன்னை கிருஷ்ணாபாய், சுத்தானந்த பாரதியார், பித்துக்குளி முருகதாஸ், ஹரிதாஸ் சுவாமிகள் ஆகியோருடைய தரிசனமும் அருட்பார்வையும் பெற்று அந்த சக்தியினாலேயே தம்மை ஒருபெரும் தொண்டராக சாதனை யாளராக உருவாக்கினார்.

அமெரிக்காவின் சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் நல்ல நட்பினைப் பெற்றவராகவும் விளங்கிய ஆத்மஜோதி ஐயா அந்த மகான்கள் வழங்கிய உபதேசங்களை சிரமேற்கொண்டு பணியாற்றினார்.

பகவான் சத்யசாயிபாபாவைத் தரிசிக்கப் புட்டபர்த்திக்குச் சென்றபோது, பாபாவைத் தரிசிக்கப் பலர் காத்திருந்த நிலையிலும், இலங்கையிலிருந்து சென்ற இவரை முதலில் கூப்பிட்டு நல்லுபதேசம் செய்தார்.

“இன்றைய மக்களுக்கு கடவுள் நம்பிக்கையும் பக்தியும் இல்லை. ஆதலால் நீ சென்று மக்கள் மத்தியில் கடவுள் நம்பிக்கை பற்றியும் பக்தியைப் பற்றியும் எழுத்தாலும் பேச்சாலும் பணி செய்”. இதுவே ஆத்மஜோதி ஐயா அவர்களுக்கு பகவான் பாபா வழங்கிய செய்தியும் வேண்டுகோளும் ஆகும்.

இதனைத் தமக்கிட்ட அன்புக் கட்டளையாக மதித்து மேலும் மேலும் தம் பணிகளை விரிவுபடுத்தினார் ஆத்மஜோதி ஐயா.

அவருடைய சமய சமூகப் பணிகளும், சமய யாத்திரைகளும் பெரிய அளவில் கூடுதலான காலப் பகுதியில் நிகழ்ந்தது மலைநாட்டில் தான். தமது திறமையான கற்பித்தலாலும், எழுத்தாலும், பேச்சாலும், யாத்திரைகளாலும் ஏழைத் தொழிலாளர் வாழும் மலையகத்திலே மறுமலர்ச்சி ஏற்படுத்தினார். ஏறக்குறைய நாற்பத்தைந்து வருட காலம் நாவலப்பிட்டியைத் தங்குமிடமாகக் கொண்டு மலையக மக்களுக்காகச் சேவை செய்தார்.

நா.முத்தையா என்ற அவரது பெயரின் முதலெழுத்துக் குறிக்கும் நாகமணி என்பதற்குப் பதிலாக அவரது பெயர் நாவலப்பிட்டி முத்தையா என்று அழைக்கப்படும் அளவுக்கு அங்கு அவர் வேரூன்றி இருந்தார். ஆனால் 1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட கலவரத்தின் காரணமாக அரும்பெரும் சமயப் பணியாற்றிய ஆத்மஜோதி நிலையத்திற்கும் அச்சகத்திற்கும் பாதிப்புக்கள் ஏற்பட்டதால், அவர் மலையகத்தை விட்டு தாம் பிறந்த இடத்திற்கு வந்தார். அவலப்பட்டு அமைதி யிழந்து தவிக்கும் மக்களுக்காக நாயன்மாரைப் போல கோயில் கோயிலாகத் தலயாத்திரை செய்தார். வீடு வீடாகச் சென்று கூட்டுப்பிரார்த்தனை நடத்தினார். பஜனைகள் செய்தார்.

இந்தக் காலகட்டத்தில்தான் அவரது குலதெய்வமான இலந்தைகட்டி ஸ்ரீ பாதாள ஞானவைரவருடைய ஆலயத்தில் அவரது தொண்டுகள் கூடுதலாக இடம்பெற்றன. ஆலயச் சுற்றாடலிலுள்ள சிறுவர்களுக்கு ஆலயத்தில் பண்ணிசை வகுப்புக்கள் நடத்த ஒழுங்கு செய்தார். அம் மாணவர்களிடையே பண்ணிசைப் போட்டி, பேச்சுப்போட்டி முதலானவைகளை நடத்திப் பரிசில்களும் வழங்கினார். பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படும் மாணவர்களை ஊக்கப்படுத்து வதற்கு பல புலமைப்பரிசில் திட்டங்களை வகுத்து அவற்றை நடைமுறைப் படுத்தினார்.

"பாத யாத்திரை மூலமாக ஆன்மீக நெறியைப் பரப்புவதோடு இறைவனது அருளையும் பெறலாம்" இது ஆத்மஜோதி ஐயா அவர்களது நம்பிக்கை. அவர் பல பாத யாத்திரைகளை நடத்தியுள்ளார். மலையகம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வலி தெற்கு அரசாங்க அதிபர் பிரிவு என்று பற்பல இடங்களிலும் அவரது பாதயாத்திரை நடந்துள்ளது. அவர் நெறிப்படுத்திய பாதயாத்திரைகளில் மிகவும் பிரசித்தி பெற்ற தாக விளங்குவது நல்லூர்க்கந்தனது தேர்த் திருவிழா பாதயாத்திரையாகும். அப் பாதயாத்திரை ஏழாலை இலந்தைகட்டி பாதாள ஞானவைரவர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகும்.

ஆத்மஜோதி முத்தையா அவர்கள் கூடிய காலம் நாவலப்பிட்டியையே தம் வதிவிடமாக்கி வாழ்ந்தவர். **1960**ஆம் ஆண்டு நல்லூர் கந்தன் தேர்த்திருவிழா பாதயாத்திரை ஆரம்பித்த காலத்திலிருந்து அங்கிருந்து முதல் நாளிரவு யாழ்ப்பாணத்துக்கு வந்து சேருவார். ஏழாலையிலுள்ள அவரது வீட்டில் அவருடைய மைத்துனரான டாக்குத்தர் என்று அழைக்கப்படும் சுப்பிரமணியம் அவர்கள் இருந்தார்கள். யாழ்ப்பாணத்து பாதயாத்திரையில் பங்குபற்ற இத்தனை பேர் வரப்போகிறோம் என்று மைத்துனருக்கு கடிதமூலம் அறிவிப்பார் ஆத்மஜோதி ஐயா. பாதயாத்திரையில் பங்குபற்ற வரவிருக்கும் அடியவர்களுக்கும் பஜனைக் குழுவினருக்கும் இரவு உணவாக இடியப்பமும் கறிகளும் ஆயித்தமாக வைத்திருப்பார். "டாக்குத்தர்" சுப்பிரமணியம் பத்தரை மணிக்கு சுன்னாகத்திற்கு வரும் யாழ்தேவீ வண்டியில் அவர்கள் வந்து சேர்வார்கள். அவர்கள் ஏழாலைக்கு ஆத்மஜோதி ஐயாவின் வீட்டுக்கு வந்தவுடன் அந்தச் சூழல் மிகவும் கலகலப்பாகி விடும் பஜனைக் குழுவினரின் வாத்தியங்களின் இசை மற்றும் மேள தாளங்கள் என்று ஒரு தெய்வீக சோபை அந்த இடத்திற்கு ஏற்பட்டுவிடும். அதிகாலையில் எல்லாரும் நீராடி ஆயித்தமாகி, இலந்தைகட்டி பாதாள ஞானவைரவர் ஆலயத்தி ற்கு வருவார்கள். அங்கு தேங்காயுடைத்து கற்பூரதீபமேற்றி வழிபடுவார்கள். பஜனைப் பாடலுடன் கோயிலை வலம் வந்து வணங்கி பாதயாத்திரையை ஆரம்பிப்பார்கள். ஊர் மக்களும் இணைந்து கொள்வார்கள்.

புன்னாலைகட்டுவன் சந்தி, ஊரெழு, உரும்பிராய் ஊடாக பண்ணிசையும், அரோகரா ஒலியும் ஆனந்த பரவசமுமாக செல்லும் பாதயாத்திரையினர் நல்லூர் கந்தசுவாமி கோயிலை அடையும் போது தேருக்கு ஆறுமுகப்பெருமான் எழுந்தருளி வந்துகொண்டிருப்பார். தேரின் பின்னால் இவர்கள் பஜனை பாடிச் செல்வர்.

வானொலியிலே அஞ்சல் செய்பவர்கள் "ஏழாலையிலிருந்து வந்த பாத யாத்திரையினரின் பஜனை" என்று கூறி ஆத்மஜோதி ஐயாவின் நெறிப்படுத்தலில் நடந்து கொண்டிருக்கும் பஜனையை அஞ்சல் செய்வார்கள். வருடந்தோறும் நல்லூர்க் கந்தனது தேர்த்திருவிழாவின் போது நடைபெற்ற இப்பாதயாத்திரை இன்றுவரை அவரது ஞாபகார்த்தமாக நடைபெற்று வருகிறது. இத்தகைய பாதயாத்திரைகளால் ஆன்மீக நெறியை எங்கும் பரவச் செய்து பெரும்பாலான மக்களை இறைவழிபாட்டில் ஈடுபடுத்தி சமய எழுச்சியை ஏற்படுத்தினார் ஆத்மஜோதி ஐயா அவர்கள்.

**இந்து சமயப் பேரவை ஸ்தாபிதம்**

எமது நாட்டில் பல இந்துமதத் தலைவர்கள் இருக்கிறார்கள். இந்துசமய அபிவிருத்திச் சங்கங்கள் இருக்கின்றன. ஆயினும் எமது சமயத்திற்கென்று ஒரு தலைமையான அமைப்போ நிறுவனமோ இருக்கவில்லை. 1992 ஆம் ஆண்டு ஆத்மஜோதி முத்தையா அவர்களின் பெருமுயற்சியால் நல்லை ஆதீன முதல்வரின் ஆசியுடன் இந்துக்களை ஒன்றுபடுத்தி எல்லா இந்து சமய நிறுவனங் களினதும் கூட்டமைப்பாக இந்துசமயப் பேரவை நிறுவப்பட்டது. அதன் தலைமைப் பொறுப்பினை பெரும் பொறுப்பாக எண்ணி அதனை ஏற்க மற்றவர்கள் பின் வாங்கினர். முத்தையா அவர்கள் துணிச்சலுடன் தாமே தலைமைப் பொறுப்பை ஏற்று அப்பேரவையைச் சிறப்பாக இயங்க வைத்தார். இந்துசமயப் பேரவைக்கு ஆசி வழங்கிய நல்லை ஆதீனத்தின் இரண்டாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள் முத்தையா அவர்களைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்.

"இந்துக்கள் இருள் சூழ்ந்த ஓர் காலகட்டத்தில் இருந்த போது இந்துக்களின் தலைமை அமைப்பாக இந்துசமயப் பேரவையை நிறுவி அதன்மூலம் எமது மதத்திற்கு ஏற்படும் இன்னல்களுக்கு எதிராகக் குரல்கொடுக்கும் ஒரு மாபெரும் சக்தியை வளர்த்தெடுத்த பெருமைக்குரியவராவர்".

"ஆத்மஜோதி ஐயாவின் அவதார நோக்கம் நிறைவேறியது அவரது எழுபத்து நான்காவது வயதிலேதான். இந்துக்கள் நலன்களைப் பேணுவதற்கென கட்டமைப்பான ஒரு தலையமைப்பாக இந்துசமயப் பேரவையை உருவாக்கி

வளர்த்ததே ஐயாவின் அவதார நோக்கம்" என்று முத்தையா அவர்களுடன் இந்துசமயப் பேரவையின் வளர்ச்சிக்காக இணைந்து நின்று செயலாற்றிய சி.சக்திகிரீவன் அவர்கள் கூறுகிறார்.

"1992ஆம் ஆண்டு ஆத்மஜோதி ஐயா இந்துசமயப் பேரவையின் தலைமைப் பொறுப்பை ஏற்றது எமது நாட்டின் சரித்திர வரலாற்றில் செறிவான செயலாகும்" இது பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்களின் கூற்றாகும்.

இத்தகைய மகோன்னதமான செயல்களை ஆற்றிய செயல்வீரராகத் திகழும் ஆத்மஜோதி ஐயா அவர்கள், நாட்டின் பிரச்சனைகள் காரணமாக செயலிழந் திருந்த சைவச்சிறுவர் இல்லத்துக்குப் புத்துயிரூட்டினார். முன்னர் இச்சிறுவர் இல்லம் ஆறுமுகம் கந்தையா அவர்களால் திறமையாக நடத்தப்பட்டது ஆனால் நாட்டிலேற்பட்டிருந்த போரின் காரணமாக அங்கே பராமரிக்கப்பட்ட சிறுவர்க ளெல்லாரும் எங்கெங்கோ சென்றனர்.

கைதடி சைவச்சிறுவர் இல்லத்தால் பராமரித்துப் பாதுகாக்கப்பட்ட சைவச் சிறுவர்களெல்லாரும் அநாதரவான நிலைகண்டு மக்களிடையே கலந்து பேசி சில திட்டங்களை வகுத்து மீண்டும் கைதடி சைவச்சிறுவர் இல்லத்தை செயற்பட வைத்து புதுமெருகுடன் இயங்கச் செய்தார். வெளிநாடுகளுக்குச் சென்ற வேளையில் கைதடி சைவச்சிறுவர் இல்லப் பராமரிப்புக்காகவும் நிதிசேகரித்துக் கொண்டு வந்து அந்த இல்லத்தின் சிறார்கள் வசதியுடன் வாழ்வதற்காக வழங்கிய கருணையாளராகவும் விளங்கினார் ஆத்மஜோதி முத்தையா அவர்கள்.

**வெளிநாடுகளில் ஆற்றிய சமயப்பணிகள்**

சுவாமி விவேகானந்தர் அந்நிய நாட்டில் ஆற்றிய சமயப்பேருரையானது எமது இந்துமதத்தின் பெருமையை அந்நிய நாட்டவரும் அறியும்படி செய்தது. அவ்வாறே ஆத்மஜோதி ஐயா அவர்களும் பல நாடுகளுக்குச் சென்று பேச்சுத்திறனால் எமது மதத்திற்குப் பெருமை சேர்த்தார்.

இலங்கைத் திருநாட்டின் வடபாலுள்ள யாழ்ப்பாணத்தின் கிராமங்களில் ஒன்றான ஏழாலையில் தோன்றிய இவர், 1954ஆம் ஆண்டு புத்தகாயாவில் வினோபாவே நடத்திய சர்வோதய மாநாட்டுக்கு இலங்கைப் பிரதிநிதியாகச் சென்றிருக்கிறார். புத்தகாயா என்பது புத்தபகவான் ஞானம் பெற்ற புண்ணிய தலமாகும். ஆத்மஜோதி ஐயாவுக்கும், புத்தபகவானுக்கும் ஒரு தொடர்புண்டு. வைகாசி விசாகத்தில் ஆத்மஜோதி பிறந்தார். புத்தர் பிறந்ததும் ஞானம் பெற்றதும் அதே வெசாக் தினம்தான்.

*1977ஆம் ஆண்டு இந்தியாவில் சங்கராச்சாரிய சுவாமிகள் நடத்திய அகில உலக இந்துசமய மகாநாட்டில் பங்குபற்றி சமயச்சொற்பொழிவாற்றினார். 1980ஆம் ஆண்டு மலேசியாவில் நடந்த அகில உலக இந்து சமய மகாநாட்டில் பங்குபற்றச் சென்ற இலங்கை அறிஞர் குழுவிற்குத் தலைமை தாங்கிச் சென்று பசுவதையை நிறுத்தும் தீர்மானத்தை முன்வைத்து ஆத்மஜோதி ஐயா அவர்கள் உரை நிகழ்த்தினார். அந்த மகாநாட்டுக்கு வந்திருந்த இந்தோனேஷியப் பிரதிநிதிகள் இவருடைய தெய்வீகத் தோற்றத்தாலும் ஆற்றிய உரையாலும் ஈர்க்கப்பட்டு இந்தோனேஷியாவுக்கு வரும்படி ஆத்மஜோதி ஐயாவுக்கு அழைப்பு விடுத்தனர். அந்த அழைப்பினை ஏற்று 1984ஆம் ஆண்டு இந்தோனோஷியாவிற்குச் சென்று இரண்டு வருடங்கள் அங்கு தங்கி சமயப்பணி செய்தார். எமது வழிபாட்டு முறைகளை அந்நாட்டவர்க்கு ஏற்றமுறையில் அங்கே பரப்பினார்.*

*பஜனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த அவர் மூன்று வகையான வழிபாடுகளை அங்கே அறிமுகப்படுத்தி ஒழுங்காகச் செயற்படுத்தினார். குடும்பப் பிரார்த்தனை, வீட்டுப்பிரார்த்தனை, கூட்டுப்பிரார்த்தனை என மூன்று வகையாக வகுக்கப்பட்டிருந்த பிரார்த்தனையில் குடும்பப் பிரார்த்தனையானது இரவு உணவிற்கு முன் ஒரு குடும்ப அங்கத்தவர்கள் ஒன்று சேர்ந்து நாளாந்தம் செய்யும் பிரார்த்தனையாகும். வீட்டுப் பிரார்த்தனை என்பது பத்துப் பதினைந்து வீடுகளிலுள்ளவர்கள் ஒன்றுசேர்ந்து வாரத்திற்கு ஒருமுறை செய்வது. கூட்டுப் பிரார்த்தனையானது வெள்ளிக்கிழமை தோறும் ஆலயங்களில் நடத்துவது.*

*இத்தகைய வழிபாட்டு முறையில் அந்நாட்டவரும் ஆர்வத்துடன் பங்கு பற்றினர். இச்சந்தர்ப்பத்தில் புலால் உண்ணாமை பற்றியும் பிரசாரம் செய்தார். பலர் அதனைச் சரியென்று ஏற்று அதனைக் கடைப்பிடித்தனர். இவ்வாறு அரும்பெரும் சமயப்பணிகளை இந்தோனேஷியாவில் ஆற்றிய ஆத்மஜோதி ஐயா 1986ஆம் ஆண்டு தாய் நாட்டுக்குத் திரும்பியபின் அங்கு தாம் பெற்ற சமய அனுபவங் களையும் பணியையும் விளக்கி "இந்தோனேஷியாவில் இரண்டு வருடங்கள்" என்ற நூலினை எழுதி வெளியிட்டார்.*

*சுவிற்சலாந்து நாட்டிலும் இவருடைய பெரும்பணிகள் இடம்பெற்றுள்ளன. 1994ஆம் ஆண்டு சைவசித்தாந்த மகாநாட்டில் பங்குபற்றுவதற்காக முதற் தடவையாக கனடாவுக்குச் சென்றார். கனடாவில்தான் புலம்பெயர்ந்த தமிழர்கள் கூடுதலாக இருக்கிறார்கள். ஆனால் அவர்களோ அந்தச் சூழ்நிலைக்கேற்ப தம்மை மாற்றி எமது பண்பாடுகள் கலாச்சாரங்களை மறந்தவர்களாய் வாழ்கிறார்கள். இந்நிலைகண்டு ஆத்மஜோதி ஐயா அவர்கள் கவலைகொண்டு, அங்கு வாழும் எமது நாட்டுத் தமிழரிடையே இந்துசமயத்தில் ஈடுபாடும், எமது சமய கலாசார உணர்வுகளும் ஏற்படும்படியாக பல சமயப்பணிகளை முன்னெடுத்தார்.*

கனடாவில் அவரது சீடராக விளங்கிய சிவ.முத்துலிங்கம் அவர்கள் ஐயாவின் பணிகளுக்குத் துணையாக நின்றார். வீடுவீடாகச் சென்று கூட்டுப் பிரார்த்தனை, ஆலயங்கள் தோறும் அற்புதமான சமயச் சொற்பொழிவுகள், தமிழ்ப் பெற்றோரைச் சந்தித்து பிள்ளைகளுக்கு ஓரளாவது சமய, தமிழ்ப்பண்பாடுகளை ஊட்டி வளர்க்கும்படியான அறிவுறுத்தல் முதலிய பணிகளைச் செய்ததுடன் ஒன்ராறியோவில் இந்துசமயப் பேரவையை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். அப்பேரவையை சிவ.முத்துலிங்கம் முதலானோர் பொறுப்பேற்று நடத்தி வருகின்றனர்.

முத்தையா அவர்கள் ஆற்றிய பணிகளின் காரணமாக பலவிதமான பட்டங்கள் சூட்டப்பட்டவர். ஆக்கபூர்வமான முறையில் "ஆத்மஜோதி" சமய சஞ்சிகையை வெளியிட்டதனால்ஆத்மஜோதி என்ற பெயர் அவரையே குறிப்பிடுவதாக ஆகியது. சுத்தானந்த பாரதியார் இவருக்கு அன்புமணி என்ற பட்டத்தைச் சூட்டினார். பித்துக்குளி முருகதாஸ் அவர்கள் இவரை விலைமதிப் பற்ற முத்து என்று பாராட்டினார்.

பரந்து பட்ட அளவில் எப்போதும் ஆன்மீகநெறியைப் பரப்பும் பணியைச் செய்து கொண்டிருந்ததால் "ஆத்மீகவள்ளல்" என்னும் பட்டம் சூட்டப்பட்டார். அவர் விரும்பாவிட்டாலும் அவர்மீது அன்பும் மதிப்பும் கொண்ட மக்கள் பற்பல பாராட்டு விழாக்களும் மணிவிழாவும் நடத்திக் கௌரவித்தனர்.

1991ஆம் ஆண்டு வைகாசி மாதம் 27ஆம் திகதி ஆத்மஜோதி ஐயாவின் ஜெயந்திவிழா நந்தி அவர்களின் தலைமையில் நல்லை ஆதீனத்தில் நடைபெற்றது. அவருடைய மறைவுக்குப் பின், 2001ஆம் ஆண்டு, அவருடைய எண்பத்து நான்காவது ஜெயந்தி ஞாபகார்த்தவிழா பிரமாண்டமான முறையில் நடைபெற்றது. அவ்விழாவில் ஞாபகார்த்த சிறப்புமலர் வெளியிடப்பட்டதோடு மணிமண்டப கட்டிட ஆரம்பவிழாவாகவும் அமைந்தது.

முத்தையா அவர்கள் பிறந்த ஊரான ஏழாலையில், அவரது குலதெய்வமான இலந்தைகட்டி பாதாள ஞானவைரவர் ஆலயத்துக்கு அருகாக அவரது ஞாபகார்த்தமாக ஒரு மணிமண்டபமும் உருவச்சிலையும் அமைப்பதற்கு பலரும் முழுமனதோடு தமது ஒத்துழைப்பை வழங்கினர். தமது குலதெய்வத்தின் ஆலயம் அழகான வசந்தமண்டபம், சுற்றுமதில் முதலியவற்றோடு சிறப்பான வளர்ச்சி காணவேண்டுமென்று ஆத்மஜோதி ஐயா விரும்பினார். அவரது விருப்பம் நிறைவேறியதுடன் அருகிலேயே அவருடைய ஞாபகார்த்தமாய் தியான மண்டபமும் உருவச்சிலையும் அழகாக அமைந்துவிட்டது. அவருடைய எண்ணக் கருத்தின்படி அம்மண்டபத்தில் தியானம், கூட்டுப்பிரார்த்தனை. சிறந்த நூல் நிலையம் முதலியன ஒழுங்காகச் செயற்படவைத்தால் அதுவே நாம் அவருக்குச் செய்யும் அஞ்சலியாகும்.

ஆத்மஜோதி ஐயா அவர்கள் ஆசைகளுக்கு அடிமையாகாது ஓர் துறவி போலவே வாழ்ந்தாலும் அவர் காவியுடை தரிக்கவில்லை. மற்றவர்கள் போல் வெள்ளை வேட்டியே உடுப்பார். அதற்கு அவர் கூறும் காரணம் அற்புதமாக இருக்கும். "நான் மக்களுக்கு நடுவில் நின்று சேவை செய்ய விரும்புகிறேன். மக்கள் சேவையே மகேசன் சேவை.

காவியுடை தரித்தால் அன்னியப்படுத்தப்பட்ட மாதிரி உணர்வு வரும். இவர் பெரிய சுவாமி என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட அவர்களிடமிருந்து அது என்னைப் பிரித்துவிடும். அவர்களைப் போலவே உடை அணிந்தாற்றான் அவர் களுடைய வீடுகளுக்குச் சென்று தியானம், கூட்டுப்பிரார்த்தனை முதலான வற்றைச் செய்வித்து அவர்களுக்கு நல்வழிகாட்டி சேவை செய்யமுடியும்" இப்படி ஒரு தெளிவான பதில் சொன்னார்.

இறைவன் படைத்த மனிதர்களை இறைபக்தி கொண்டவர்களாக்கி ஆன்மீக நெறியில் வாழ்விப்பதற்காக தம்மையே அதற்கேற்றமுறையில் தயார்ப்படுத்திய ஆத்மஜோதி ஐயா அவர்கள் மக்கள் பின்பற்றுவதற்காகப் பல பொன்மொழிகளை உதிர்த்துள்ளார். அவற்றில் சில.

"தருமத்தின்படி நடப்பவனை தருமம் வழிநடத்திச் செல்லும். மனிதர்கள் எப்படியும் வாழலாம் என்று வாழக்கூடாது. இப்படித்தான் வாழ வேண்டுமென்று இலட்சிய வேட்கையுடன் வாழ வேண்டும். நாம ஜெபமும், நாம சங்கீர்த்தனமுமே கலியுகத்தில் ஆன்ம ஈடேற்றத்துக்குக் கைகண்ட மருந்து. தன்னலமற்ற சேவை செய்பவனுக்கு இறைவனின் கருணை எப்பொழுதும் உண்டு. நாம் உலகத்தில் வாழலாம். ஆனால் உலகத்தை நம்முள் வாழவிடக் கூடாது. ஏழைகளின் வாழ்வில் விளக்கேற்றுபவனுக்கு இறைவன் அவனுடைய வாழ்விற்கு விளக்கேற்றுவார். கூட்டுப்பிரார்த்தனையிலும் கூட்டு வழிபாட்டிலும் வீடுகளில் செய்யும் கூட்டு வழிபாட்டிலுமே ஆன்மீக எழுச்சியின் உயிர்நாடி இருக்கிறது" நூற்றுக்கணக்கில் இத்தகைய பொன்மொழிகளை வழங்கியுள்ளார்.

1994ஆம் ஆண்டு அவர் கனடாவுக்குச் சென்றிருந்த போது, அங்கு வாழ்ந்த மக்களிடையே பெரும் ஆன்மீக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருந்தார். அந்த அன்பர்கள் ஆத்மஜோதி ஐயாவை மீண்டும் கனடாவுக்கு வரும்படி கேட்டுக் கொண்டதால் 1995ஆம் ஆண்டு கனடாவிற்குச் சென்றார். அங்கே அடியார்களின் பெரும் வரவேற்பினைப் பெற்றார்.

கனடாவில் மொன்றியல் துர்க்கையம்மன் ஆலய கும்பாபிஷேகத்தில் பங்கு பற்றவிருந்தார். அதற்கிடையில், கனடா இந்துசமயப் பேரவையின் நிர்வாகிகளான சிவ.முத்துலிங்கம் முதலானோர் ஐயா அவர்கள் எழுதிய தரிசனம் என்ற


நூலையும், ஆத்மஜோதி ஐயாவின் வாழ்க்கை வரலாறான முத்தான தொண்டன் என்ற நூலையும் ரொறன்ரோவில் பெரிய விழாவாகக் கொண்டாடி வெளியீடு செய்தார்கள்.

இவ்விழா நடந்த நான்காம் நாள் ஆத்மஜோதி ஐயாவின் பணிகள் நிறைவுற்ற தென்று இறைவன் கருதினாரோ!

1995ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் எட்டாம் திகதியாகிய அன்று ஆத்மஜோதி ஐயாவை இறைவன் தம்மிடம் அழைத்துக் கொண்டார். ஈழத்திருநாட்டின் ஏழாலைக் கிராமத்தில் பிறந்த அவர் கனடா நாட்டில் இறைபதம் எய்தினார். அவருக்கும் கனடா நாட்டிற்கும் நெருக்கமானதொரு ஆன்மீகப் பிணைப்பு இருந்தது. அவர் மலேசியா, சுவிற்சலாந்து முதலான நாடுகளுக்கு ஆன்மீகப் பயணம் மேற்கொண்டிருந்தபோதும் அவருடைய காத்திரமான பணிகள் கனடாவில்தான் முன்னெடுக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டன.

எமது நாட்டில் பிறந்த சைவத்தமிழ் மக்கள் பலர் கனடாவில் வேலை வாய்ப்புத் தேடிச்சென்று பின்னர் அந்தநாட்டுக் குடிமக்களாகவே ஆகிவிட்டார்கள். அவர்கள் வாழும் அந்த அந்நிய நாட்டுச் சூழலோ எமது பண்பாடுகளுக்கும் கலாச்சாரங்களுக்கும் முற்றிலும் வேறுபட்ட தன்மையது. அத்தகையதொரு அந்நியச் சூழலில் வாழும் சைவத்தமிழ் மக்களும் அவர் களுடைய குழந்தைகளும் எமது மத கலாச்சாரப் பண்பாடுகளை முற்றாக மறந்து விடக் கூடிய நிலைதான் அங்கு உள்ளது. இப்படியான நிலையில் அவர்களுடைய அழைப்பிற்கிணங்கி இரண்டாவது தடவையாகவும் கனடாவுக்குச் சென்ற ஆத்மஜோதி ஐயா அவர்கள், தாம் செய்ய நினைத்த பணிகளைத் தொடர்ந்து செய்வதற்கு திரு.சிவ முத்துலிங்கம் முதலான அன்பர்கள் காத்திருப்பதையும், தாம் திட்டமிட்டவாறு இந்துசமயப்பேரவை கனடாவில் நன்கு செயற்படுவதையும் தமது பெயராகவே ஆகிவிட்ட ஆத்மஜோதி சஞ்சிகை வெளியிடப்படுவதையும், தாம் சந்தித்த மகான்கள் பற்றி எழுதிய "தரிசனம்" என்ற நூலின் வெளியீடு பிரம்மாண்டமான முறையில் நிகழ்ந்ததையும் தமது குலதெய்வமான இலந்தைகட்டி பாதாளஞான வைரவர் ஆலயச் சூழலில் நூல்நிலையம், பூங்கா, தியானமண்டபம் ஆகியனவற்றை அமைப்பதற்கான காணியை கனடாவில் இருக்கும் காணி உரிமையாளர்களுடன் பேசி ஒழுங்கு செய்ததையும் நினைந்து முழுமையான மனத்திருப்தியுடன்தான் இறைவனது திருவடிகளை அவருடைய ஆத்மா அடைந்திருக்கும் என்று நம்பலாம்.

ஆயினும் எமது சமயத்திற்கும் சமூகத்திற்கும் நாட்டிற்கும் அவருடைய இழப்பு பேரிழப்புத்தான். சேவைக்கென்றே தம் முழு வாழ்வையும் அர்ப்பணித்த எங்கள் அன்புமணி ஆத்மஜோதி ஐயாவின் பணிகளைத் தொடர்ந்து செய்வதே நாம் அவருக்குச் செய்யும் அஞ்சலியாகும்.



பதிப்பு : சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ், பலாலி வீதி, கோண்டாவில். 077 3068982